ஸ்ரீ ராம ஜயம்.

வால்மீகிராமாயணவசனம்.

அயோத்தியா காண்டம்.

இது

பண்டித - நடேச சாஸ்திரியாரால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,

சென்னை சர்ச் ஆப் ஸ்காட்லண்ட் மிஷன் காலேஜ்

தமிழ்ப் பிரதமபண்டிதர்

வை. மு. சடகோபராமாநுஜாசாரியரால்

பார்வையிடப்பட்டது.

சென்னை:

வெ. கல்யாணராம ஐயர்.

1903

PRINTED AT THE LAWRENCE ASYLUM STEAM PRESS, MADRAS,

1903.

ஸ்ரீரஸ்து.

அயோத்தியாகாண்டம்.

விஷயஸூசிகை.

உ

ஸ்ரீரஸ்து.

வால்மீகி ராமாயண வசனம்.

இரண்டாவது

அயோத்தியாகாண்டம்.

முதற்சருக்கம் :

இராமருக்குப் பட்டங்கட்டத் தசரதர் விரும்புதல்.

பரதர், நித்திய சத்துருக்களான இந்திரியங்களை அடக்கியாளும் பராக்கிரமமுள்ள தம் தம்பியாகிய குற்றமற்ற சத்துருக்கனனை அன்போடு அழைத்துக்கொண்டு கேகய தேசத்திற்குச் சென்று, அந்தச் செல்வத்தம்பியுடன் அங்குத் தம் மாமனாகிய யுதாஜித்தினிடம் ஒரு குறையுமின்றி வெகு சந்தோஷமாக வசித்துவந்தார். யுதாஜித்தும் அவர்களைத் தம் புதல்வரைப்போலப் பாவித்து அவர்களுக்குப் பிரியமானவைகளை யெல்லாம் கொடுத்து வெகு திருப்திகரமாக நடத்தி அன்புபாராட்டினார். வேண்டியவைகளில் யாதொரு குறைவு மின்றி மகிழ்ச்சியோடு அவ்விருவரும் அங்கிருந்தபோதிலும், வயது முதிர்ந்த தங்கள் தந்தையாரைப்பற்றி அவர்கள் நினையாத நாளே இல்லை. தசரதரும், ஏதோ இவர்கள் மாதாமகர் அவசியமாக இவர்களைப்பார்க்க விரும்புகின்றாரே என்று அனுப்பினாரே யன்றி வேறில்லை. அவர்களை அயல்நாட்டுக்கு அனுப்பின பிறகு, இந்திரனுக்கும் வருணனுக்கும் ஒப்பான தம்

மூடைய அருமைப் புதல்வர்கள் மறுபடி எப்பொழுது தம்மிடம் வந்து சேருவார்கள் என்று அவர்களைப் பற்றித் தசரதர் நினையாத நாளில்லை. ஏனெனில், அவர், தமதுதேகத்தில் தோன்றிய நான்கு கைகள்போல் விளங்கிய தம் குழந்தைகள் நால்வரிடத்திலும் ஒரேவிதமான அன்பும் ஆதரவும் வைத்திருந்தார். ஆனால், இராமர் கொஞ்சம் அதிகமான அன்புக்கு இடமானார்; ஏனெனில், பிராணிகளுக்குள் பிரமதேவர் எவ்வாறு சகல உத்தம குணங்களுக்கும் இருப்பிட மானவரோ அவ்வாறே இராமரும் இந்நால்வர்களுள்ளும் வெகு விசேஷ குணங்கள் பொருந்தியவராக இருந்தார். இராமர், தேவர்கள் வேண்டுகோளின்படி பூமியில் கொடிய இராவணனைக் கொல்லும்பொருட்டு அவதரித்த அநாதியான விஷ்ணுவன்றோ? தேவர்களில் சிறந்த வச்சிரபாணியாகிய இந்திரனைப் பெற்று அதிதிதேவி எவ்வளவு விளங்கினாளோ அவ்வளவு, மநுஷ்யலோகத்தில் இராமரைப் பெற்றுக் கௌசல்யையும் விளங்கினாள். இராமருடைய குணங்கள் சாதாரணமான குணங்கள் அல்ல. அவர் வெகு சௌந்தரியமுள்ளவர்; வெகு வீரிய முடையவர்; பொறுமையில்லாதவர்; அவருக்கு நிகராக உலகத்தில் ஒருவரையும் சொல்லவொண்ணாது; தந்தையாருக்குச் சமானமான குணங்கள் வாய்ந்த குமாரர்; எப்பொழுதும் உள்ளங் குளிர்ந்தவர்; வெகு மிருதுவாகப் பேசுபவர்; பிறர் கோபித்துப் பேசினாலும் கடினமாக உத்தரம் சொல்லார்; ஒருவன் தமக்கு ஒரு சிறிய உபகாரம் செய்திருந்தபோதிலும் அதனை அவர் ஒருபொழுதும் மறக்கவே மாட்டார்; ஒருவன் தமக்கு ஆயிரம் அபகாரம் செய்திருந்தபோதிலும் அவைகளை அவர் ஒருபொழுதும் மனத்தில் வைத்திடார்; இப்படி மனத்தை வசப்படுத்திய ஞானமுடையவர்; ஆயுதப் பயிற்சி செய்யுங்காலத்தில் நேர்கிற இடை

இராமருடைய உத்தமகுணங்கள்.

வேளைகளிலுங் கூட, நன்னடைகளிலும் ஞானத்திலும் வயதிலும் முதிர்ந்த சிலாக்கியமான ஜனங்களுடன் பழகிக்கொண்டும் அவர்களுடன் அநேகவிஷயங்களைப் பற்றிச் சம்பாஷித்துக்கொண்டும் இருப்பார். இராமர் வெகு புத்திமான்; மதுரமாகப் பேசுகிறவர்; எவ்வளவு தாழ்ந்தவர்களைக் கண்டபோதிலும் முதலில் தாமாகவே அவர்களிடம் வார்த்தை யாடுகின்றவர்; யாவர்க்கும் பிரியத்தையே சொல்லுகிறவர்; வெகு பராக்கிரமமுள்ளவரா யிருந்தபோதிலும் அதனால் கொஞ்சமேனும் கருவப்படுகிறவரல்லர்; பொய் என்பதை ஒரு பொழுதும் பேசமாட்டார்; சிறந்த வித்துவான்; பெரியவர்களை எப்பொழுதும் வணங்கி நடப்பவர்; தமது குடிகள் ஒவ்வொருவரிடமும் அந்தரங்கமான அபிமானமுள்ளவர்; அதற்கேற்பவே அவர்களும் அவரிடம் வெகு விசுவாசமாக இருந்தார்கள். இராமர் ஏழைகளிடம் வெகு ஆதரவுள்ளவர்; தமது கோபத்தை முற்றிலுங் காத்துக் கொள்ளுந் தன்மையுடையவர்; வேதியர்களை ஆராதிப்பவர்; கஷ்டப்படுகிறவர்களைக் கண்டால் மனமிரங்கி அவர்களுக்கு உபகாரம்பண்ணி வருபவர்; தருமத்தை அறிந்து நடத்துபவர்; எப்பொழுதும் எல்லாப் பிராணிகளுக்கும் அபயங்கொடுக்கும் நோன்பைக் கைப்பற்றினவர்; பிறர் பொருளை விரும்பாத பரிசுத்தமூர்த்தி; தமது குலத்துக்கு ஒருவகைக் குறைவும் வரக்கூடாதென்ற அபிமானத்தோடு க்ஷத்திரிய தருமத்தைச் சரியாக நடத்தக்கருதிய உத்தமர்; இப்படி நமது இராஜதருமத்தைச் சரியாய் நடத்தினால்தான் நமக்குப் புகழும் புண்ணியமு முண்டாகும் என்று நிச்சயமாக எண்ணினவர்; செய்யத் தகுதியில்லாத தொழில்களில் ஒருபொழுதும் இறங்கார்; அறியவேண்டுவனயாவும் அறிந்தவர்; சொல்லக்கூடாத வசனங்களை ஒரு பொழுதும் சொல்லார்; ஏதாவது ஒரு விஷயத்தை எடுத்து வாதிக்கத்தொடங்கினால், முன்பின் பொருத்தம

கவும் சாஸ்திரப்பிரகாரமாகவும் ஆதாரங்களை விடாமல் பிருகஸ்பதிபோல் வாதிப்பார்; நோயற்ற சரீரமுள்ளவர்; யௌவனபருவமுடையவர்; சபைக்கூச்சமில்லாமல் பேசுபவர்; தேகபலம்பொருந்தியவர்; இடம் காலம் இவைகளையறிந்து நடப்பவர்; ஒவ்வொருவனையும் தராசில்வைத்து நிறுப்பதுபோல் நிறுத்தறியும் சக்தியுள்ளவர்; உலகத்தில் ஒப்புயர்வற்ற பரமசாது.

தசரத சக்கரவர்த்தியினுடைய புத்திரரான இவ்வித உத்தமகுணங்களையுடைய இராமர், தமது சிலாக்கிய குணங்களால், குடிகளுள் ஒவ்வொருவராலும், வெளியில் ஸஞ்சரிக்கும் பிராணன்போல் மிகவும் பிரியராகக் கருதப்பட்டார். மற்றும், இராமர், ஒவ்வொரு வித்தையையும் நன்றாகக் கற்றறிந்து கரைகண்டு அதற்கேற்ப நடப்பவர்; மிகுந்த வேதவொழுக்கமுள்ளவர்; வேதங்கள் எல்லாவற்றையும் சாங்கோபாங்கமாக ஓதினவர்; அஸ்திர சஸ்திர வித்தைகளை அவ்வவைகளின் மந்திரங்களுடன் தமது தகப்பனாரினும் மேலாகக் கற்றறிந்தவர்; நற்குணங்களால், பரதனுக்குத் தமையனாராயிருக்கத் தகுதியுடையவர்; ஒரு தோஷமும் இல்லாத மாதாபிதாக்களின் வம்சத்தை யுடையவர்; மிகுந்த காம்பீரியமும் சத்தியமும் நேரானவழியில் நடக்குங் குணமும் பொருந்தியவர்; தர்மார்த்தங்களை எடுத்துக் காட்டும் பெரியவர்களிடத்தில் பழகினவர்; தருமார்த்தகாமங்களின் இயல்பை நன்றாக உணர்ந்தவர்; ஆச்சரியப்படத்தக்க ஞாபகசக்தி யுள்ளவர்; புதிது புதிதாகத் தோன்றுகிற யுக்திகளோடுங் கூடியவர்; உலக நடைகளில் செவ்வையாகப் பழகி அதற்கேற்ப நடக்க வல்லவர்; எதிலும் வணங்கிப்போகின்றவர்; தமது இரகசியங்களை வெளிவிடாமல் தமக்குள்ளேயே அடக்கிவைத்துக்கொள்ளுபவர்; முகக்குறிகளாலும் அவைகளை வெளிக்

இராமருடைய ராஜகுணங்கள்.

காட்டமாட்டார்; பேர்பெற்ற மந்திரிகளால் சூழப்பட்டவர்; வீண்கோபமாவது வீண்சந்தோஷமாவது அவருக்கு ஒருபொழுதும் வந்ததேயில்லை; பொருளைச் செலவிட வேண்டிய சமயத்தையும் சேர்க்கவேண்டிய சமயத்தையும் செவ்வையாக அறிந்தவர்; அவர் தெய்வத்தினிடத்திலும் குருக்களிடத்திலும் ஒருவித பக்தி வைத்தால் அது ஒருபொழுதும் சலியாது; அங்ஙனமே அவர் ஞானமும் ஒருபொழுதும் அசையாது; கெட்டவர்களுக்கு ஒருபொழுதும் தம்மிடம் அணுக இடங்கொடார்; கெட்டவார்த்தைகளை ஒருபொழுதும் பேசார்; சோம்பல் என்பது அவரிடமில்லை; மிக்க ஜாக்கிரதையுள்ளவர்; தம்மிடத்திலுள்ள குற்றங்களையும், பிறரிடத்திலுள்ள குற்றங்களையும் அறிபவர்; சாஸ்திரங்களெல்லாவற்றையுங் கற்றுணர்ந்தவர்; நன்றி மறவாதவர்; மனிதர்களுக்குள்ள வித்தியாசங்களை நன்றாயறிந்தவர்; முறைப்படி ஆராய்ந்து ஒருவனைத் தம்மைச்சேர்ந்தவனென்று எடுப்பதிலும் அப்படி எடுத்துக்கொள்ளப்பட்டவனை ஆதரிப்பதிலும் வெகுநிபுணர்; நல்லவர்களைச் சேர்ப்பதிலும் அவர்களைத் தக்கபடி ரக்ஷிப்பதிலும் மிகச் சமர்த்தர்; அதேவிதமாகத் துஷ்டர்களை அவர்களுக்குத் தக்கவாறு சிக்ஷிப்பதிலும் மிகவல்லவர்; நியாயமாகத் தனந்தேடுவதில் பலவித உபாயங்களை நன்றாயறிந்தவர்; அதுபோலவே சரியாகச் செலவிடும் வழிகளையும் ஆராய்ந்தவர்; சாஸ்திர சமூகங்களிலும் ஸம்ஸ்கிருதம் பிராகிருதம் முதலிய பாஷைகளிற் செய்யப்பட்டிருக்கும் காவியம், நாடகம், அலங்காரம் முதலிய கிரந்தங்களிலும் உண்மையான தாற்பரியங்களை நன்றாக உணர்ந்தவர். அவர் பொருளையும் தருமத்தையும் நித்தியந் தேடி அவைகளைக்கொண்டு இன்பத்தையும் அனுபவித்து வருபவர்; இப்படி அவைகளை அடைந்துவிட்டோம் என்று அவர் ஒருபொழுதும் சோம்பலாய் இருந்ததில்லை. அவர், விநோதார்த்தமான சில்பங்களின் நுட்பங்களை அறிந்த

வர்; பொருளைப் பகுத்துக்கொடுக்க வேண்டிய முறைமைப்படி பங்கிட்டுச் செலவு செய்பவர்; யானை, குதிரைகளின்மேல் ஏறுவதிலும், ஏறினபின் அவைகளைத் தமக்குள் அடக்கிக் கீழ்ப்படிந்து நடக்கச்செய்வதிலும் மிகுந்த சாமர்த்தியமுள்ளவர்; தநுர்வேதத்தில் உத்தமமான புகழ் பெற்றவர்; அதிரத வீரர்களெல்லாராலும் தம்மைவிட மேன்மை பொருந்தியவராக ஒப்புக்கொள்ளப்படுபவர்; சத்துரு வந்தபின் பார்த்துக்கொள்ளுவோம் என்றிருப்பவரல்லர்; தாமாகவே தைரியமாகச் சத்துருவை நாடிச் சென்று போர்செய்யும் பெருமை தங்கியவர்; அவ்விதம் செல்லும்போதெல்லாம் தமது சேனைகளை அணிவகுத்து ஒருவித அபாயத்துக்கும் உள்ளாக்காமல் நடத்திச் சத்துரு சமூகத்திற் புகுவதில் வெகு திறமையுடையவர்; யுத்தத்தில் கோபத்தைக் கொண்டவர்களான தேவர்கள் அசுரர்கள் இவர்களாலுங்கூட அணுகக்கூடாத பராக்கிரமம் பொருந்தியவர்; அசூயை யில்லாதவர்; கோபத்தை வென்றவர்; செருக்கு அற்றவர்; துவேஷபுத்தி யில்லாதவர்; ஒருபிராணியையும் அவமானப்படுத்துபவரல்லர்; சமயத்துக்குத் தக்கபடி ஒருபொழுதும் அற்பராக நடக்கமாட்டார். தசரத குமாரராகிய இராமர் இவ்வாறு சிலாக்கியமான சகல குணங்களும் பொருந்தியவராய் விளங்கினார். அவர் பொறுமையிற் பூமிதேவிக்குச் சமமாகவும், புத்தியில் பிருகஸ்பதி போலவும், வீரத்தில் இந்திரனுக்கு ஒப்பாகவும் பிரகாசித்து வந்தார். இம்மூவுலகத்திலும் உள்ள ஒவ்வொருவரும் அவரிடம் அன்பு வைத்துவந்தார்கள். பகலில் பதினைந்து நாழிகையளவில் சூரியபகவான் தனது சகலகிரணங்களாலும் எவ்வாறு ஜ்வலிக்கிறானோ அவ்வாறு முற்றிலும் சிலாக்கியமான குணங்களால் இராமர் விளங்கினார். அவரைப்பார்த்து, "இவ்வளவு குணங்களும், பலபராக்கிரமமும், போரில் ஒருவராலும் வெல்லப்படாத தன்மையும், உலகத்தைக்

காப்பாற்றும் வல்லமையும் பொருந்திய லோகபாலர்கள் போன்ற இவர் நமக்கு நாயகராக ஏன் ஆகக்கூடாது" என்று பூதலமடந்தை கருதியவண்ணம் இருந்தாள்.

தம்முடைய புதல்வன் இவ்வளவு அதிகமான ஒப்பற்ற நற்குணங்களோடுங் கூடியிருப்பதைத் தசரதமன்னர் அறிந்து, தமக்குள் தாமே "நாம் உயிருடனிருக்கும் பொழுதே நமது இராமன் ஏன் இராஜாவாகக் கூடாது. ஏன் நாம் இந்தப் பாக்கியத்தை நடத்தி நமது கண்ணால் பார்க்கலாகாது" என்று அடிக்கடி ஆலோசிக்கலானார். இந்தச் சிந்தை அவர் மனத்தில் எப்பொழுதும் சுழன்றுகொண்டேயிருக்க, அவர், "எப்பொழுது நமது மகனை இராச்சியத்தில் பட்டாபிஷேகம் செய்வித்துக் கண்ணால் காண்போம். அவனே இவ்வுலகத்தினுடைய க்ஷேமத்தை எப்பொழுதுங் கருதினவனாக இருக்கிறான்; எல்லாப் பிராணிகளிடத்தும் மிகுந்த அன்பும் ஆதரவுமாக நடக்கிறான்; மழைசொரியுங் கார்மேகமானது யாவர் மனத்தையுங் குளிரப் பண்ணுவதுபோல் நமது குடிகளெல்லாருடைய உள்ளமுங் குளிர நடந்து வருகிறான்; ஒவ்வொரு விதத்திலும் என்னை விட மேலாகவே விளங்குகிறான்; ஆகையால் இவனை இந்த இராச்சியத்தில் பட்டாபிஷேகம் பண்ணிவைத்து அதன்பின் நான் சுவர்க்கலோகஞ் சேருவேன். இவன், பராக்கிரமத்தில் யமனையும் இந்திரனையும் போன்றவன்; புத்தியில் பிருகஸ்பதியோடொத்தவன்; ஒருநிலை நிற்றலில் மலைபோன்றவன்; என்னைக்காட்டிலும் அதிக குணசாலி" என்று நினைத்தார்.

இராமருக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவைக்கத் தசரதர் கருதுதல்.

உடனே அவர் தமது மந்திரிமார்களைச் சபையிற் சேர்த்து, இராமருக்கு இளவரசு முடி சூட்ட நிச்சயித்துவிட்டார். அன்றியும், அக்காலத்தில் ஆகாசத்திலும் பூமியிலும் நடந்த அநேக உற்பாதங்களையும், நாளுக்கு நாள்

தம்மைக் கிழத்தனம் வந்து கிட்டுவதையும் தமது மந்திரிகளிடம் தசரதர் எடுத்துக் காட்டினார்; இவைகளாலுண்டாகும் பயங்களெல்லாம், இராமர் சிங்காசனத்தில் வீற்றிருக்கச் சந்திரன்போற் பிரகாசிக்கும் அவருடைய முகத்தைக் கண்டால் நீங்கும் என்றும், அவ்வாறே எல்லாக்குடிகளும் உடன்படுவார்கள் என்றும் கருதினார். இராமருக்கு இளவரசுப்பதவி பெறுங்காலம் அணுகிவிட்டபடியால் தமது சந்தோஷத்துக்குங் குடிகளுடைய க்ஷேமத்துக்குங் குறைவு வராம லிருக்கும்படி காலதாமத மின்றிப் பட்டாபிஷேகத்தை நடத்திவிட வேண்டும் என்று தசரதர் அன்போடு விரைந்து, அநேக நகர ஜனங்களுக்கும், கிராமத்தில் வசிக்கும் குடிகளுக்கும், அநேக தேசத்தில் உள்ள பெரிய மன்னவர்களுக்கும் பத்திரிகை யனுப்பினார். இராம பட்டாபிஷேகத்தை வெகு விரைவாய் நடத்த எண்ணங் கொண்டபடியால், ஜநகருக்கும் கேகய நாட்டரசருக்கும் தசரதர் இந்தச் சமாசாரத்தைச் சொல்லி யனுப்பவில்லை; அன்றியும், தாம்கொண்ட கருத்தைச் சரியாக நிறைவேற்றிப் பின்னர்ச் சந்தோஷசமாசாரமனுப்பி அவர்களைக் களிக்கச் செய்யவேண்டும் என்றும் ஆலோசித்தார். பிரமதேவரிடுங் கட்டளையைச் சிரசால் வகித்து எல்லாத்தேவர்களும் ஓடிவருவதுபோல, எல்லாமன்னவர்களும் தசரதருடைய பத்திரிகைக்குக் கீழ்ப்படிந்து விரைவில் அயோத்தியாநகரம் வந்துசேர்ந்தார்கள். தசரதரும் அவரவர்களுக்குத் தகுந்த விடுதி முதலானவைகளை முன்னமே ஏற்படுத்தி அவர்கள் வந்தவுடன் அவர்களை வெகு மரியாதையாக உபசரித்து அவைகளிலிருக்கச்செய்து, பலவகை ஆபரணங்களை அவர்களுக்கு வெகுமதி பண்ணினார்.

தசரதர் சபை கூட்டல்.

இவ்வாறு எல்லாரும் சுகமாக வந்தவுடன் தசரதர் அவர்களைச் சபைசேர்த்துத் தக்க ஆசனங்களில் உட்காரச் சொல்லித் தாமும் அவர்கள் மத்தியில் உட்கார்ந்தார்.

இவ்விதமாகத் தம்மால் உபசரிக்கப்பட்ட வணக்கமுள்ள தமது நாட்டுக் குடிகள், பற்பலதேசத்து அரசர்கள், அயோத்திமா நகரத்து ஜனங்கள் ஆகிய இவர்கள் மத்தியில் வீற்றிருந்த தசரதமன்னர், தேவர்களாற் சூழப்பட்ட தேவேந்திரன்போல விளங்கினர்.

இரண்டாஞ் சருக்கம்:

பட்டாபிஷேகத்துக்கு எல்லாரும் சம்மதித்தல்.

இவ்வண்ணஞ் சபைகூட்டி, அங்கு எல்லாரும் வந்து உட்கார்ந்தவுடன், எல்லாருடைய க்ஷேமத்தையும் நிலைநிறுத்துகின்றதும், எல்லாருடைய மனத்தையுங் களிக்கச் செய்கின்றதுமான சமாசாரத்தைத் தசரதர் சபைமத்தியில் நின்றுகொண்டு நான்குபக்கங்களிலேயும் இடிமுழக்கம் போலவும் துந்துபி வாத்திய கோஷம் போலவும் கேட்கும் வண்ணம், உரத்த சத்தத்தோடு வெகு கம்பீரமாகவும், பிரதித்வனியுண்டாகும்படியாகவும் பின் வருமாறு சொல்லத்தொடங்கினர். அவர் அக்காலத்திற் சொன்ன சொல் ஒவ்வொன்றும் அவருடைய இராஜ லக்ஷணங்களுக்கு அமைந்ததாயும், மனோகரமாயும், இனியதாயும், ரஸத்துடன் பொருந்தியதாயும், நிகரற்றதாயும் இருந்தது. "நானும் எனது முன்னோர்களுமான அரசர்கள் விசாலமான இந்த இராச்சியத்தைக் குழந்தையை ரக்ஷிப்பதுபோல் பரிபாலனம் பண்ணினது உங்களுக்கெல்லாந் தெரிந்த விஷயமே. இப்பொழுது இந்த உத்தமமான நாட்டை இதுவரையில் இக்ஷ்வாகு வம்சத்து இராஜாக்களால் அளிக்கப்பட்ட சௌக்கியத்துக்கு மேலான சௌக்கியத்தில் நிலைநாட்டக் கருத்துக்கொண்டிருக்கிறேன். நான் எனது சிரமத்தைக் கொஞ்சமேனும் லக்ஷ

சபைமுன் பட்டாபிஷேக விஷயமாய்த் தசரதர் செய்தபிரசங்கம்.

யம் பண்ணுமல், என்னுற் கூடிய மட்டும் எனது முன்னேர்கள் ஏற்படுத்திய நெறியில் நின்றுகொண்டு எப்பொழுதும் குடிகளை ரக்ஷித்துவந்திருக்கின்றேன். வெண்குடைக்கீழிருந்து உலகத்தைக் காப்பதிலேயே என் ஆயுள் முழுவதையும் கழித்து இப்பொழுது நான் நரை (முதுமைப்பருவம்) அடைந்திருக்கிறேன். எனக்கு இப்பொழுது அநேகமாயிரம் பிராயங்களாயின. இனிமேல் கொஞ்சம் இளைப்பாறவேண்டுமென்ற எண்ணம் வந்திருக்கிறது. இராஜதருமப்பிரகாரம்நடப்பவர்களாலன்றி மற்றவர்களால் வகித்தற்கு முடியாத வெகு கனமான இராச்சியபாரத்தை இத்தனைநாள் வகித்து வெகு சிரமப்பட்டுப்போயிருக்கிறேன். ஆகையால் இனிமேல் இவ்வதிகாரத்தில் உலகத்தை இன்னும் நன்ருய் ரக்ஷிக்கும்பொருட்டு எனது முதற்குமாரனுக்கு இளவரசுப்பட்டஞ் சூட்டி நானும் சௌக்கியமாய்க் கொஞ்சகாலம் கவலையற்றிருக்க எண்ணுகிறேன். இவ்வாறு செய்ய இங்குக்கூடியிருக்கும் பிராமணேத்தமர்கள் எல்லாரும் எனக்கு விடைகொடுக்கவேண்டும். எனது மூத்தகுமாரன் இராமன் இந்திரனுக்கு ஒப்பான பலபராக்கிரமத்துடன் என்னுடைய ஒவ்வொரு குணமும் பொருந்தி விளங்கிவருகிருன் என்பது எல்லாரும் அறிந்த விஷயம். புஷ்ய நக்ஷத்திரத்துடன் கூடி விளங்கும் சந்திரபகவான் போல், தருமசிந்தையுடன் இடைவிடாது சேர்ந்திருக்கும் ஆண்சிங்கமான எனது இராமனுக்கு இளவரசுப்பட்டஞ் சூட்டிவைக்க நினைத்திருக்கிறேன். அவன் வெகு பாக்கியசாலியாகையால் உங்களுக்கெல்லாம் சரியான அரசனுகப் பெயரெடுப்பான் என்பதில் ஆக்ஷேபமில்லை. உங்களுக்கு மட்டுமன்று, இம்மூவுலகங்களுக்கும் அவன் சரியான அரசன் என்பதும், அவைகளும் அவனை மன்னனுகப்பெற்று க்ஷேமமடையு மென்பதும், வெகு நிச்சயம். இவ்வித சௌக்கியத்தை உலகத்துக்குச் செய்து நான் இளைப்பாறப் போகிறேன். நான் சொல்லுவது உங்களுடைய உள்ளத்

துக்கு ஒத்திருந்தால், நீங்கள் எல்லாரும் சேர்ந்து எனக்கு இவ்வாறு செய்ய விடைகொடுக்கவேண்டும். இன்னும் எவ்வாறு இந்தக் காரியத்தை நிறைவேற்றி வைக்கவேண்டுமோ அவ்வாறு ஆலோசித்துச் சொல்லவேண்டும். நான் ஒருகால் எனது சந்தோஷத்தையும் சௌக்கியத்தையும் உத்தேசித்து உங்கள் முன்பாக இப்படிப் பேசியிருக்கலாம். நீங்கள் இந்த விஷயத்தில் பொதுவாக நின்று ஸ்வகாரியம் என்ற கருத்து இல்லாமல், தீர்க்காலோசனை பண்ணுங்கள். ஏனெனில் ஸ்வகாரியத்தை ஒருவன் தனது மனத்தில் வைத்துக்கொண்டு பேசுவது ஒருமாதிரிதான். மத்தியஸ்தர்களாக இருந்து ஒரு விஷயத்தை ஆலோசித்து முடிப்பதிற்றான், பாதகமில்லாத சிலாக்கியமான உண்மையும் நீதியும் நிலைநிற்கும்'' என்றார்.

மழை பெய்கிற மேகத்தை மயில்கள் கண்டு கேகாத்வனி செய்வதுபோல், இவ்விதமாய்ப்பிரசங்கிக்கும் தசமன்னரை எல்லா அரசர்களும் மெச்சினார்கள். அரசர்கள்மட்டுமன்று, எல்லா ஜனங்களும் ஒரே முகமாக இந்தச் சந்தோஷ சமாசாரத்தைக் கேட்டு மெச்சினபடியால் அப்பொழுது அவர்களுடைய சத்தத்திலிருந்து உண்டான எதிரொலியானது அம்மண்டப விமானத்தையே அசைத்தாற்போற் காணப்பட்டது. தருமத்தையும் அர்த்தத்தையும் நன்றாய் உணர்ந்த தசரத மன்னருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய அபிப்பிராயத்தை நன்றாயறிந்துகொண்ட அங்கிருந்த எல்லா வேதியர்களும், மன்னவர்களும், நாட்டார்களும், ஊரார்களும், எல்லாருஞ் சேர்ந்து ஆலோசித்துத் தங்களுக்குள்ளும் தனித்தனியாக ஆராய்ந்து எல்லாருமாக ஒரேவிதமான அபிப்பிராயம் அடைந்து, முதியவரான தசரதரைப்பார்த்து, "அரசரே, அநேகமாயிர வருஷங்கள் இராச்சிய பரிபாலனம் பண்ணித் தாங்கள் முதிர்ந்தவயதை அடைந்திருக்கிறீர்

பட்டாபிஷேகத்துக்குச் சபையார் உடன்படுதல்.

கள் என்பது நிச்சயம். ஆகையால் தாங்கள் இந்த க்ஷணமே இராமரை இளவரசராகப் பண்ணி அவருக்குப் பட்டாபிஷேகம் செய்துவைக்கவேண்டும். ஆஜாநுபாகுவாயும், மிகுந்த பலசாலியாயு மிருக்கும் ரகுவீரரான ராமர், யானையின்மீதேறிக் குடைநிழலின்கீழ் உட்கார்ந்துகொண்டு நமது நகரமார்க்கத்திற் போவதைப் பார்க்க நாங்கள் வெகு ஆவல் கொண்டிருக்கிறோம்" என்றார்கள்.

இப்படி இவர்கள் சந்தோஷமாகச் சொன்னதை அரசர் கேட்டு, இவர்களுடைய கருத்தை நன்றாகத் தாம் அறிந்திருந்தபோதிலும், அறியாதவர்போல மறுபடியும் சபையைப்பார்த்து, "நான் சொல்லி வாய்மூடுமுன், நீங்கள் எல்லாரும், இராமன் இந்தக்ஷணமே அரசனாக வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். இதுதான் எனக்கு வெகு சந்தேகமாகத் தோன்றுகிறது. நீங்கள் நன்றாக ஆலோசித்து உங்களுடைய கருத்தை வெளியிட்டதாக எனக்குப் புலப்படவில்லை. உண்மையை வெளியிடுங்கள். தருமந் தவறாது நான் இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கையில் எனது பிள்ளையான இராமனை இளவரசனாக்க ஏன் இவ்வளவு விருப்ப முள்ளவரா யிருக்கின்றீர்கள்?" என்றார்.

தசரதர் சபையாரை ஆலோசித்துச்சொல்ல வேண்டல்.

இப்படித் தசரதர் சொன்னதைக் கேட்ட சபையார்கள் அவரைப்பார்த்து "வேந்தே, தங்களுடைய புத்திரர்க்குச் சிறந்த கலியாணகுணங்கள் பல இருக்கின்றன. மகா குணசாலியும் தெய்வம் போன்றவரும் புத்திமானுமா யுள்ள இராமருடைய சந்தோஷகரமான இனிய குணங்கள் பலவற்றையும் சொல்லுகிறோம், கேளுங்கள். இராமர் சிறந்த குணங்களில் இந்திரனுக்குச் சமானமானவர்; சத்தியமான பராக்கிரமத்தை யுடையவர்; இக்ஷ

வாகு குலத்து மன்னவர்க ளெல்லாரினும் மேம்பட்டவர். இராமரொருவரே உலகத்தில் சிறந்த சத்புருஷர்; சத்தியத்தையும் தருமத்தையும் முக்கியமாகக் கொண்டவர். தருமம் அர்த்தம் என்ற இரண்டும் இராமரிடமே ஒருங்கு அமைந்துள்ளன. ஜனங்களைக் களிக்கச் செய்வதில் சந்திரனையும், பொறுமைக் குணத்தில் பூமியையும், புத்தியில் பிருகஸ்பதியையும், பராக்கிரமத்தில் இந்திரனையும் போன்றவர். இராமர்; எல்லாத் தருமங்களையும் அறிந்தவர்; பழுதுபடாத பிரதிஜ்ஞை யுடையவர்; நல்ல சீலமுள்ளவர்; அசூயை யில்லாதவர்; பொறுமை யுடையவர்; யாவரையும் சமாதானப் படுத்துபவர்; இனிமையாகவே பேசுபவர்; நன்றியறிவுள்ளவர்; ஜிதேந்திரியர்; மென்மையான தன்மை யுடையவர்; மனவுறுதி பூண்டவர்; எப்பொழுதும் வணக்க முள்ளவர்; பொறாமைக்கு இடங் கொடாதவர்; எல்லாப் பிராணிகளுக்கும் இனியவையும் உண்மையுமான வார்த்தைகளையே உரைப்பவர்; மிக்க கல்வி கேள்விகளை யுடைய பிராயம் முதிர்ந்த பிராமணர்களை வழிபடுபவர்; இக்காரணத்தால், இவருடைய புகழும் பெருமையும் பிரதாபமும் மேன்மேல் வளர்கின்றன; தேவர்கள் அசுரர்கள் மனுஷ்யர்கள் எல்லோரிலும் சிறந்தவர்; அஸ்திரங்களை யெல்லாம் அறிந்தவர்; கல்வியும் அதற்கேற்ற ஒழுக்கமு முடையவர்; வேதங்களைச் சாங்கோபாங்கமாக உணர்ந்தவர்; சங்கீத சாஸ்திரத்திலும் தேர்ந்தவர்; பரதருக்குத் தமையனாரென்னத் தக்கவர்; குல பரிசுத்தி யுடையவர்; சாது; எதற்குங் கலங்காதவர்; மகாபுத்திமான்; தருமார்த்தங்களை யறிந்த சிறந்த அந்தணர்களால் அநேக விஷயங்கள் அறிவிக்கப் பெற்றவர்; எப்பொழுதும் லக்ஷ்மணருடனே கூடியிருப்பவர்; எந்தப் போரிலும் தோல்வி யடையாது வெற்றியையே பெறுபவர்; போரில் பகைவரை வெல்லாது மீளார்; நாள்தோறும் யானைமேலும் தேர்மேலும் ஏறிச் சென்று நகரத்து ஜனங்களை யெல்லாம் தமது ஜனங்களைப்

போல மிக்க அன்புடனே பலவாறு க்ஷேமம் விசாரித்து வருவார். "உங்கள் பிள்ளைகளும் மனைவியரும் பரிஜநங்களும் சிஷ்யர்களும் முதலிய எல்லோரும் சௌக்கியமாக இருக்கிறார்களா? உங்கள் சிஷ்யர்கள் உங்களை முறைப்படி வழிபட்டு வருகின்றனரா? அனைவரும் தங்கள் தங்கள் காரியங்களைச் செய்யச் சித்தரா யிருக்கின்றனரா?" என்று இப்படி யெல்லாம், தகப்பனார் பிள்ளைகளை மிக்க அன்புடன் கேட்பது போல, நமது புருஷசிங்கமாகிய இராமர் யாவரையும் கேட்பது வழக்கம். புத்திருடைய சுகதுக்கங்களைப் பிதா தனது சுகதுக்கங்களாகப் பாவிப்பதுபோலவே, இராமர், ஜனங்கள் விசனப்படும்போது தாமும் விசனப்படுதலும், அவர்கள் சந்தோஷப்படும்போது தாமும் சந்தோஷப் படுதலும் ஆகிய இயல்புள்ளவர்; சத்தியவாதி; சிறந்த வில்லாளி; பெரியோரிடத்துப் பணிவுடையவர்; மனத்தை யடக்கியவர்; புன் சிரிப்போடு பேசுந் தன்மையுள்ளவர்; எவ்வாற்றாலுந் தருமத்தைக் கைவிடார்; பலவகைச் செல்வங்களையும் நன்றாக ஈட்டுபவர்; வெறுக்கத் தக்க சம்பாஷணைகளிற் பிரியப்படாதவர்; பிருகஸ்பதி போல மேன்மேல் யுக்தியோடு கூடிய வார்த்தைகளையே சொல்லுபவர்; அழகிய புருவத்தையும் செவ்வரியோடி நீண்ட கண்களையு முடையவர்; ஸாக்ஷாத் மகாவிஷ்ணுவே போன்றவர்; சௌரிய வீரிய பராக்கிரமங்களால் உலகத்தைக் களிக்கச் செய்கிறவர்; பிரஜைகளைப் பாதுகாக்கும் வகையை உள்ளபடி யறிந்தவர்; ஆசையை வென்றவர்; இந்தப் பூமி ஒன்றை மட்டுமோ, மூன்று லோகங்களையும் தாம் தனியே ஆளவல்லவர். இராமருடைய கோபமும் அநுக்கிரகமும் ஒருபொழுதும் பழுதுபடா; கொல்லத்தக்க கொடியவர்களையே கொல்லுவார்; தண்டிக்கத் தகாதவரிடத்துக் கோபங்கொள்ளார்; தமது சந்தோஷத்துக்கு இடமானவர்களுக்கு வேண்டின பொருள்களை யெல்லாம் அளித்தருளுவர். சாந்தமாயும் சகல ஜனங்களுக்கும் பிரிய

மாய் மகிழ்ச்சியைச் செய்கிறவையாயு முள்ள நற்குணங்களால், இராமர், கோடைக் காலத்துச் சூரியன் கிரணங்களாற் பிரகாசிப்பதுபோல மிகவும் விளங்குவார். இப்படி எல்லாக்குணங்களும் நிறைந்து லோகபாலர்க்குச் சமானராயுள்ள இராமரைப் பூமி தானே தனக்குக் கொழுநராக விரும்புகிறாள். மரீசிமுனிவர்க்குக் காசியபர் தோன்றினாற் போலத் தங்கள் பாக்கிய விசேஷத்தால் குணசாலியான இராமர் தங்களுக்குப் புத்திரராக உலக நன்மைக்காகவே உதித்துள்ளார். இராமர் எங்கள் அதிருஷ்டத்தாலேயே இராச்சியத்தை வகிக்கும் பருவத்தை அடைந்ததாக நாங்கள் எல்லாரும் எண்ணியிருக்கிறோம். இவ்வளவு நற்குணங்களோடும் நற்செய்கைகளோடும் இராமர் விளங்குவதும் எங்கள் பாக்கியத்தின் பெருமை யென்றே நாங்கள் சந்தோஷப்பட்டுக்கொண் டிருக்கிறோம். தங்கள் நாடு நகரங்களிலுள்ள மனுஷ்யர்களான நாங்கள் மட்டுமல்ல, தேவர்கள், அசுரர்கள், கந்தருவர்கள், நாகர்கள் முதலாகிய எல்லாரும் "லோகப் பிரசித்தரான இராமருடைய பலம் நாளுக்கு நாள் இன்னும் அதிகமாகவேண்டும். அவருடைய தேகம் நோயற்றதாக இருக்கவேண்டும். அவருடைய ஆயுள் நீடித்து வளரவேண்டும்" என்று எப்பொழுதும் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறார்கள். உள்ளூராரைப்போலவே அயலூரார்களும், நகரத்தாரைப்போலவே கிராமத்தார்களும், சிறியவர்களும், பெரியவர்களும், புருஷர்களும், பெண்பாலாரும், இராமருக்கு நன்மை வளரக் காலையும் மாலையும் தெய்வங்களைப் பிரார்த்தித்துக்கொண்டு வருகிறார்கள். ஆகையால் அரசரே, தாங்கள் எல்லாருடைய அபிப்பிராயத்தையும் தங்களுடைய மூத்த குமாரருக்கு முடிசூட்டுவதால் நிறைவேற்றிவையுங்கள். அவரை இளவரசராக்கிப் பார்க்கவேண்டுமென்ற ஆசை, எங்களெல்லாருக்கும் ஏகரூபமாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகை

சபை ஒரே நிச்சயமாய்க் காரணத்துடன் பட்டாபிஷேகத்திற்குச் சம்மதித்தல்.

யால் தேவர்களுக்கெல்லாந் தேவர்போல் தமது உத்தம குணங்களால் விளங்கிநிற்கிறவரும் எப்பொழுதும் உலகத்தின் க்ஷேமம் ஒன்றையே மனத்தில் நினைத்துக்கொண்டிருக்கிறவருமான தங்களுடைய குமாரரைத் தாங்கள் வெகு சந்தோஷமாக எங்களுடைய நன்மையின்பொருட்டு இந்தக்ஷணமே பட்டாபிஷேகஞ் செய்து வையுங்கள்" என்றார்கள்.

மூன்றுஞ்சருக்கம்:
பட்டாபிஷேக ஏற்பாடுகள்.

அவ்வாறு சொல்லி அச்சபையார்களெல்லாரும் தங்கள் தங்கள் தலைமேற் கைகூப்பியதை அங்கீகரித்து, தசரதர் அவர்களுடைய க்ஷேமத்தை மேன்மேலும் கருதியவராய் அவர்களைநோக்கி "ஆச்சரியம்! நான் வெகு ஆனந்தத்தை யடைந்துவிட்டேன். எனது பாக்கியத்துக்கு ஒப்பான பாக்கியமும் உண்டோ? நீங்கள் எல்லாரும் எனது மூத்தகுமாரனை இராமனை எப்பொழுது யுவராஜாவாகச் செய்யச் சம்மதித்தீர்களோ அப்பொழுதே எனது விருப்பங்கள் எல்லாம் நிறைவேறின" என்று அன்போடு சொன்னார்.

தசரதர் ஆனந்தம்.

இவ்வண்ணம் அங்கு வந்திருந்தவர்களிடம் மரியாதையாகச் சொல்லிவிட்டு, அவ்விடத்திலிருந்த அந்தணர்களெல்லாருங் கேட்டுக்கொண்டிருக்க, வசிஷ்டர் வாமதேவர் என்ற இரண்டு குருக்களையும் பார்த்து அரசர் "இந்த மாதமோ ரமணீயமான வெகு நல்ல சித்திரை மாதமாயிருக்கிறது; சோலைகள் புஷ்பங்களால் நிறைந்திருக்கின்றன. நீங்கள் வெகு சீக்கிரமாக இராமனுக்கு முடிசூட்டும் உத்ஸவத்துக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும்

உடனே சேர்த்திடலாம்" என்றார். இவர் சொல்லிய வுடனே, அரசர் சொன்னசொல்லை அங்கீ கரித்துக்கொண்டதற்கு அடையாளமாக ஜனங்களுக்குள் பெரிய ஒரு கலகலசத்தம் உண்டாயிற்று. அது நின்றதும் இராஜ சிங்கமான அந்தத் தசரதர் வசிஷ்டராகிய முனிசிங் கத்தைநோக்கி "இராமனுடைய பட்டாபிஷேகத்துக்காக என்ன என்ன வேண்டுமோ அவைகள் எல்லாவற்றையும் கொண்டுவந்து சேர்க்க உடனே கட்டளை யிடுங்கள்" என்றார்.

பட்டாபிஷேகத் துக்கு வேண்டிய வைகளைச் சேர்க் கும்படி மன்னவர் ஏவுதல்.

இவ்வாறு சக்கரவர்த்தி சொன்னதும், அந்த முனி சிரேஷ்டரும், அரசர்முன்னர்க் கைகூப்பிக்கொண்டு நின்ற மந்திரிமார் முதலிய தக்க அதிகாரிகளைப் பார்த்து "நீங் கள் எல்லாரும் நாளைப் பொழுதுவிடியுமுன் நமது அரசரு டைய அக்கினிஹோத்திர சாலையில் பொன் முதலான பொருள்கள், இரத்தினங்கள், பூசனைக்குரிய பண்டங்கள், அநேகவிதமான மூலிகைகள், வெள்ளைப் புஷ்பங்களால் தொடுக்கப்பட்ட மாலைகள், பொரி, தேன், நெய் இவை களைத் தனித்தனியாகக் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். மிகப் பரிசுத்தமான வஸ்திரங்கள், இரதம், ஆயுதங் கள், நால்வகைச்சேனைகள், எல்லாச் சுபலக்ஷணங்களுட னும் பொருந்திய பட்டத்துயானை, இரட் டை வெண்சாமரம், துவஜம், வெண்கொற் றக்குடை, நெருப்புப்போலப் பிரகாசிக்கிற நூறு பொற்குடங்கள், பொற்பூண்பூண்ட கொம்புகளையுடைய ருஷபம், ஊனமில்லாத புலித்தோல் இவைகளையும் இன்னும் என்ன என்ன வேண்டுமோ அவை களையும் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். அந்தப்புரத் திலுள்ள வாயில்களும், மற்றும் எல்லா நகரத்து வாயில் களும், சந்தனத்தாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப்

பட்டாபிஷேக மகோத்ஸவ ஏற் பாடுகள்.

பட்டு நல்ல வாசனை பொருந்திய தூபங்களாற் பூசிக்கப் படவேண்டும். நாளைக் காலையில் தயிர் பால் ஆகிய இவைகள் மிகுதியாகக் கலந்தவையும் மேன்மை முதலிய குணம் படைத்தவையுமான திவ்வியான்னங்களைக் கொண்டு நூறாயிரக்கணக்கான அந்தணர்களைத் திருப்தியுண்டாக உண்பிக்கவேண்டும். அவர்கள் உள்ளங்குளிர, அவர்கள் இஷ்டப்படி அதிகமாக நெய், தயிர், பொரி, பூர்ணமான தக்ஷிணை ஆகிய இவற்றைச் சற்காரஞ்செய்து கொடுக்கவேண்டும். நாளைச் சூரியோதய மாகும்பொழுது ஸ்வஸ்திவாசனம் சொல்லவேண்டும். ஆகையால் எல்லா வேதியர்களையும் அழைத்துவாருங்கள். எல்லாரும் வந்து உட்கார ஆசனங்கள் ஏற்படுத்துங்கள். நகரம் முழுதும் கொடிகள் கட்டுங்கள். வீதிகளிலெல்லாம் ஜலந் தெளியுங்கள். வாத்தியக்காரர்களெல்லாரும், நன்றாக அலங்கரித்துள்ள கணிகையர்களும் இராஜ கிருகத்தின் இரண்டாங்கட்டில் சித்தமாக இருக்கவேண்டும். கோவில்களிலும் நாற்சந்திகளிலும் தனித்தனியாக அபிஷேகமும் அலங்காரமும் நடக்கவேண்டும். அவ்விடங்களில் தக்ஷிணை சகிதமாகப் போசனம் நடக்கவேண்டும். நமது சைனியங்களுள் ஒவ்வொரு போர்வீரனும் நன்றாக ஆடையாபரண மணிந்து, ஆயுதமேந்தி, அரண்மனை முற்றத்தில் வரிசை வரிசையாகக் காத்துக்கொண்டிருக்கவேண்டும்" என்றார்.

பிரீதியுடன்கூடிய வசிஷ்டர் வாமதேவர் என்ற இரண்டு குருக்களும் அதன்மேல் செய்யவேண்டிய காரியங்களைத் தசரதமன்னவரிடம் வந்து தெரிவித்து, செய்து முடித்த பின்னர் அவ்வாறு முடித்ததையும் தெரிவித்தார்கள். தசரதர் சுமந்திரரை நோக்கி "ஐயா, நமது இராமனைச் சீக்கிரம் இங்கு அழைத்து வாரும்" என்றார். சுமந்திரரும் "அப்படியே" என்று சொல்லிச் சென்று அரச

தசரதர் இராமரை வரவழைத்தல்.

ருடைய கட்டளையின்படி இராமரை ஒரு இரதத்தின்மேல் ஏற்றி அழைத்துக்கொண்டு வந்தார். இராமருடைய வரவை எதிர்பார்த்துக்கொண் டிருக்கும்பொழுது கீழைத் தேசம், மேலைத்தேசம், வடதேசம், தென்தேசம் முதலிய தேசங்களிலிருந்து ஆரிய வம்சத்து அரசர்களும், மிலேச்ச வம்சத்து அரசர்களும், காடுகள் மலைகள் இவ்விடங்களில் அரசாளும் அரசர்களும் அநேகர்கள் வந்து, தசரதரைச் சூழ்ந்துகொண் டிருந்தார்கள். அவர்கள்மத்தியில் அயோத்தி வேந்தரும் தேவர்கள்மத்தியில் இந்திரன்போல் விளங்கினர். அப்படி அவர் மேன்மாடத்தி லிருக்கும்போது தூரத்தில் இரதம் வருவதையும், உலகத்தில் பராக்கிரமத்தாற் பெயர்பெற்ற தமது புத்திரன் கந்தர்வராஜன்போல வெகு சௌந்தரியத்தோடு அதில் உட்கார்ந்திருப்பதையும் பார்த்தார். இராமருடைய நீண்ட கைகளும், சிலாக்கியமான வலிமையும், மதயானைநடைபோன்ற நடையும், சந்திரன் போன்ற இனிய முகமும், மேலான அழகும், பார்ப்பவர்கள் கண்களையும் மனத்தையும் கவரத்தக்க உருவமும், உதாரத் தன்மையும், அந்நாட்டுக்குடிகள் மனத்தை, வறண்டகோடையில் கார்மேகம் வருஷித்தால் எவ்வாறு உலகத்தைக் குளிரச்செய்யுமோ அவ்வாறு குளிரச்செய்தன. அத்தன்மையனை தமது புதல்வனைப் பார்த்துப்பார்த்து, தசரதமன்னவர் போதுமென்ற திருப்தியைச் சிறிதும் அடையவேயில்லை.

இரதம் ராஜமாளிகையைச் சேர்ந்தவுடனே சுமந்திரர் இராமரை இரதத்திலிருந்து இறக்கினர். தமது தகப்பனரைப் பார்த்தற்கு அவர் உட்சென்றபொழுதும் தாமும் தமது கைகளைக் கூப்பிக்கொண்டு அவர்பின் தொடர்ந்தார். தமது தகப்பனரைப் பார்த்தற்காக இராமர் சுமந்திரருடன், கைலைமலைபோல் விளங்கும் மேல்மாடத்தின் படிகளில் வெகு வேகமாக ஏறினர். அங்குச்சென்று மரியா

தையாகத் தமது கைகளைக் கூப்பிக்கொண்டு தமது பெய ரைச் சொல்லித் தந்தையாகிய தசரதருடைய பாத தாம ரைகளில் நமஸ்காரம் பண்ணினார். அவ்வாறு தமது சமீ பத்தில் வணக்கத்துடன் வந்து பேர் சொல்லி நமஸ்கரித்து அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு நிற்கும் தமது குமார ரைத் தசரதமன்னர் பார்த்து அவரது கைகளைத் தமது கைகளாற் பற்றி எடுத்து அணைத்துக்கொண்டு, ஆனந்த பரவசரானார். அதன் பிறகு தசரதர் அங்கு அவருக் கென்று இடப்பட்டிருந்ததும் பொன்மயமானதும் சித்திர வேலை செய்து இரத்தினங்க ளிழைக்கப்பட்டதுமான உயர் ந்த ஓர் ஆசனத்தில் இராமரை உட்காரச் சொன்னார். அதில் இராமர் உட்கார்ந்தார். சூரியபகவான் தான் உதய மாகும்போது தனது ஜ்வலிக்கும் கிரணங்களால் மேரு மலைக்கு எவ்வாறு அதிக பளபளப்பை அளிக்கிறாரோ அவ் வாறு அந்த ஆசனத்துக்கு அதிககாந்தியை இராமர் அளித் தார். அவர் அங்குவந்து உட்கார்ந்தவுடன், அச்சபை யும், பல கிரகநக்ஷத்திரங்கள் முன்னதாகவே பிரகாசித் துக்கொண்டிருக்குஞ் சரத்காலத்து ஆகாசத்தில் சந்திர னும் வந்து தோன்றினாற்போலப் பிரகாசிக்கலாயிற்று. தமது பிரிய குமாரர் தமது அருகில் வந்து உட்கார்ந்த தைப் பார்த்த தசரதர், தமது அலங்கரித்த உருவத்தை யே கண்ணாடிக்குள் பார்த்தவர்போல் களித்தார். தசர தர் புன்னகையுடன் இராமரோடு சிலநிமிஷம் பேசிப் பின் னும் அவரைப்பார்த்து, சபையாரும் கேட்க, காசியப மாமுனி தேவேந்திரனைப் பார்த்துச் சொல்லுவது போல,

இராமருக்குச் சபைநடுவில் தசரதர் சொன்ன புத்தி.

"எனது தகுதியான மூத்த பட்டஸ்திரீ வயிற்றில் எனது மூத்தகுமாரனைச் சகல வித உத்தம குணங்களோடும் தகுதியாகப் பிறந்திருக்கும் நீ என்னுடைய கண்ணுக் குக்கண் என்பது சொல்லவும் வேண்டுமோ? உனது நற் குணங்களால் நீ இந்தக் குடிகளுடைய மனங்கள் முழுவதை

யும் கவர்ந்துவிட்டபடியால், புஷ்யநக்ஷத்திரத்தோடு சந்திரன் கூடியிருக்கிற நாளாகிய நாளைய தினம் உன்னை நான் இளவரசனுக்கி முடிசூட்டப்போகின்றேன். இயல்பாகவே நீ மிக்க வணக்கமுள்ளவனும், உத்தம குணங்களெல்லாம் பொருந்தியவனுமாக இருக்கின்றாய். அவ்வித குணங்கள் உன்னிடம் இருப்பதை நான் நன்றாக அறிந்தவனா யிருந்தும், உன்னிடத்தில் வைத்திருக்கும் அன்பால் ஏதோ சில புத்திகளை உனதுக்ஷேமத்தைக் கருதிச் சொல்லுகின்றேன். நீ இன்னும் அதிகமான வணக்கத்தை நாடி, உனது ஐம்புலங்களையும் அடக்கி ஆளவேண்டும். ஆசை, கோபம் இவைகளிலிருந்து சம்பவிக்குந் தீங்குகளுக்கு உள்ளாகாமலிருக்கும்படி நீ உன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். நீயே நேராக அதிகாரம் நடத்தவேண்டிய விஷயங்களில் அவ்வாறு நடத்தியும், அமைச்சர் முதலான மற்ற அதிகாரிகள் மூலமாக நடத்தவேண்டியவைகளை அவர்கள் மூலமாக நடத்தியும், எல்லாவகை உபாயங்களினாலும் உனது குடிகளைச் சந்தோஷப்படுத்தும் வழியை எப்பொழுதும் தேடிக்கொண்டே யிருக்கவேண்டும். அவ்வாறு செய்து உனது கருவூலத்தையும் ஆயுதசாலையையும் வற்றாமல் வைத்துக்கொள்ளவேண்டும். தனது குடிகள் சந்தோஷமடைந்து தன்னிடத்தில் அபிமானம் வைக்கும்படி ஒருவன் அரசாட்சி செய்தால் அப்பொழுதுதான் அதைக் கேட்டு அவனது அன்பர்கள், தேவர்கள் அமிருதபானம் பண்ணிக் களித்தாற்போற் களிப்பார்கள். ஆகையால் மனத்தை அடக்கிக்கொண்டு இவ்வுலகத்தையாளுந் தொழிலை நீ கைப்பற்றுவாய்" என்றார்.

இங்கு இவ்வண்ணம் நடந்ததை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த இராமருடைய சிநேகிதர்கள் தாங்கள் அவரிடம் வைத்திருந்த அபிமானத்தால், விரைந்தோடி இந்தச் சந்தோஷ சமாசாரத்தைக் கௌசல்யைக்குத் தெரி

கௌசல்யையின் ஆனந்தம்.

வித்தார்கள். இந்த ஆனந்தத்தைக் கேட்டவுடனே அந்த உத்தமியும் இவ்வண்ணம் நல்லசங்கதி தெரிவித்தவர்களுக்குப் பொன்னையும் பசுக்களையும் அநேகவித இரத்தினங்களையும் மிகுதியாகக் கொடுத்தாள்.

இராமர் மறுபடியுந் தந்தையை வணங்கி அவரிடம் விடைபெற்று இரதமேறி, ஜனங்கள் கொண்டாடத் தமது மாளிகைக்குச் சென்றார். அங்கிருந்த அரசர்களும்

சபைகலைதல்.

நகரத்துக் குடிகளும் அன்று தசரதர் சொன்ன சங்கதிகளைக் கேட்டுக் களித்து அவர் சொன்ன விஷயங்கள் எல்லாவற்றையும் ஆலோசித்து, தங்களுக்குப் பெரிய இலாபம் கிடைத்ததாக எண்ணித் தசரதரிடத்தில் விடைபெற்றுத் தங்கள் மனைகளுக்குச்சென்று சீக்கிரமாகத் தங்கள் மனோரதம் கைகூடும்படி இஷ்டதேவதைகளுக்குப் பூசைசெய்தார்கள்.

நான்காஞ் சருக்கம்:

தசரதருடைய கனவு.

இவ்வாறு சபை கலைந்தபின்பு, தசரதமன்னர் மந்திரிகளைத் தமது சமீபத்தில் வைத்துக்கொண்டு, மறுபடியும் அவர்களோடு கலந்து ஆலோசித்து, நாளைத்தினம் புஷ்ய நக்ஷத்திரமாகையால் தமது அருமைத் திருமகனுக்குப் பட்டாபிஷேகத்தைச் செய்து முடிக்கிறதென்று நிச்சயஞ் செய்துகொண்டார். பின்னர், அவர், சபையை விட்டெழுந்து தமது அரண்மனைக்குட் சென்று சுமந்திரரைநோக்கி "நீங்கள் சென்று மறுபடியும் இராமனை அழைத்து வாருங்கள்" என்றார். அவர் கட்டளைப்படி

இராமரைத் தசரதர் மறுபடி வரவழைத்தல்.

சுமந்திரரும் இராமருடைய மாளிகைக்கு விரைவாகச் சென்று, தாம் வந்திருப்பதாக அங்கு வாயிலிலிருந்த ஆட்களைக்கொண்டு தெரிவித்தார். இதைக்கேட்டு மறுபடி சுமந்திரர் இவ்வளவு விரைவில் வந்தகாரண மென்னவென்று கொஞ்சம் சங்கித்து, இராமர் உடனே அவரை உட்புகுவித்து அவரைப்பார்த்து, "மறுபடி வந்தகாரணம் என்ன? எல்லாவற்றையும் விடாது சொல்லவேண்டும்" என்று கேட்டார். அதற்குச் சுமந்திரர் "உங்களை அழைத்து வரும்படி சக்கரவர்த்தி கட்டளையிட்டார், அதுதான் எனக்குத் தெரியும்" என்றுசொல்ல, அதைக் கேட்டவுடன், இராமர் மறுபடி தமது தந்தையைக்காண வெகுவேகமாக வந்தார். அவர் வந்ததை அறிந்து, தசரதர் வெகு அன்போடு சில சமாசாரங்கள் சொல்லுதற்காக அவரைத் தமது கிருகத்திற்குள் அழைத்துவரக் கட்டளையிட்டார்.

இராமர் தமது தகப்பனாிருந்த வீட்டில் புகுந்ததும் அவரைக்கண்டு நமஸ்காரஞ் செய்யலானார். அவ்வாறு வணங்கும் தமது அருமை மகனைத் தசரதர் எடுத்துக் கட்டி யணைத்துக்கொண்டு அழகான ஆசனமொன்றில் அவரை இருத்தி, மறுபடி அவரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார். "ராம, நான் வெகு காலம் என் இஷ்டப் பிரகாரம் அநேகவித போகங்களை அனுபவித்து இப்பொழுது முதுமைப் பருவம் அடைந்துவிட்டேன். உன்னை நான் புத்திரனாக அடையும் மகாபாக்கியத்திற்காக, எவ்வளவோ அன்னதானம் சுவர்ணதானம் இவைகளோடு கூடிய யாகங்களைச் செய்தேன். வேண்டுவோரது கருத்தை யெல்லாம் முற்றுவித்தேன். வேதங்களை அத்தியயனம் பண்ணினேன். வேண்டுமென்கிற சுகம் முழுவதும் நானனுபவித்தாய்விட்டது. தேவதைகள், ரிஷிகள், பிதிருக்

விரைவாய்ப்பட்டஞ்சூட்டுங் காரணங் கூறல்.

கள், அந்தணர்கள், ஆத்மா இவர்களுக்கெல்லாம் நான் நிறைவேற்றவேண்டிய கடன்களை நிறைவேற்றிவிட்டேன். இனி, நான் செய்து முடிக்கவேண்டிய காரியங்களில் ஒன்றே ஒன்றுதான் மிச்சமிருக்கிறது; அதாவது உனக்குப் பட்டஞ் சூட்டிவைக்க வேண்டியது என்பதே. அது விஷயமாக நான் உனக்குச் சொல்லப் போகின்றவைகளை நீ கேட்டு அவ்விதமாகவே நடக்கவேண்டும். இன்றைத் தினம் நமது குடிகளெல்லாரும் உன்னை அரசனாக அடைய வேண்டுமென்பதில் தங்களுக்கிருக்கிற ஆவலைத் தெரிவித்துவிட்டார்கள். ஆகையால் உன்னை இளவரசனாகப் பட்டாபிஷேகம் செய்யப்போகிறேன். அன்றியும், இன்றிரவு நான் வெகு பயங்கரமான சில கனவுகள் கண்டேன். மேலும், ஆகாசத்திலிருந்து இடியுடன் கொள்ளிக்கட்டைகள் வெகு சத்தமிட்டுக்கொண்டு பூமியில் விழுகின்றன. எனது ஜன்ம நக்ஷத்திரத்தில் சூரியன், அங்காரகன், இராகு என்ற இம்மூன்று கிரகங்களும் பிரவேசித்து விட்டனவாக ஜ்யோதிஷர்கள் சொல்லுகிறார்கள். இவ்விதமான நிமித்தங்கள் தோன்றின் பெரும்பான்மையாய் அரசனுக்கு மரணமுண்டாகும், அல்லது பெரிய ஆபத்து ஏதாவது சம்பவிக்கும் என்பது நூற்கொள்கை. ஆகையால் என் மனம் உறுதியாக இருக்கும்போதே உன்னை வெகு சீக்கிரமாகப் பட்டாபிஷேகஞ் செய்து வைக்கவேண்டும். இன்றைக்கு இருக்கிற எண்ணம் நாளைக்கும் இப்படியேயிருக்கும் என்று சொல்லமுடியாது. இன்றைக்குப் புனர்வசு நக்ஷத்திரம். நாளைப் பூசம். இப்பூச நக்ஷத்திரத்தைத் தான் ஜ்யோதிஷர் பட்டாபிஷேகஞ் செய்துவைக்கச் சிறந்ததாகக் கூறுகின்றனர். என்மனம் விரைகின்றது. நாளைக்கு உனக்குப் பட்டாபிஷேகம்செய்யவிருக்கிறேன்.

ஆகையால், நீ இன்றிரவு உனது பத்தினியுடன் தருப்பைப் படுக்கையில், ஒன்றும் புசிக்காமல் உபவாச

மாக இருக்கவேண்டும். உன்னைச் சுற்றி உனது அன்பர்களும் பந்துக்களும் உன்னைப் பாதுகாக்கவேண்டும். ஏனெனில், நல்ல காரியத்துக்கு எப்பொழுதும் விக்கினம் எங்கென்று காத்துக்கொண்டிருக்கும். என்றைக்குப் பரதன் அவன் மாமன் வீட்டுக்குப் போனானோ அன்று முதல் உன் பட்டாபிஷேகத்திற்குத் தக்க காலம் என்பது என்கருத்து.

விரதம்செய்ய ஏவுதல்.

பரதன் மிக நல்லவன் என்பதில் ஒருவித சந்தேகமுமில்லை; அவன் தமையனுக்கு அடங்கி நடக்கின்றவன்; தருமசிந்தை யுள்ளவன்; தயை தாக்ஷிணியமுடையவன்; ஐம்புலன்களையும் அடக்கி யாளுபவன். எப்படியிருந்தாலும் மனிதர்களுடைய மனம் ஒரே தன்மை யுடையதன்று. பெரியவர்களுடைய மனமும் ஒரு சமயத்தில் பிறருடைய போதனையால் மாறும்; ஆகையால்தான் நாளைத்தினமே உனது பட்டாபிஷேகத்தை நடத்தவேண்டும் என்று நிச்சயம் பண்ணியிருக்கிறேன். நல்லது, நீ சீக்கிரமாகச் சென்று நான் சொன்னபடி செய்வாய்'' என்றார்.

இராமரும், அப்படியே நடந்துகொள்ளச் சித்தராய்த் தந்தையை வணங்கி விடைபெற்றுத் தமது மாளிகைக்குச் சென்றார். அங்ஙனம் தமது மாளிகைக்குச் சென்றவுடன் அவர் தமது தகப்பனார் கட்டளையைத் தெரிவித்தற்குத் தமது தாயாருடையஅந்தப்புரத்திற்குச்சென்றார்.இராமர், அங்குப் புகுந்து பார்க்கும்போது, தமது தாயாகிய கௌசல்யை வெகு ஆசாரமாக வெண்பட்டு உடுத்துக்கொண்டு பூஜைமனைக்குள் தெய்வத்தின் முன்பு மௌனத்துடன் இருந்து தனது மகனுக்கு க்ஷேமமுண்டாக வேண்டுமென்று வணங்கி வேண்டிக்கொண்டிருக்கக் கண்டார். இம்மங்களச்செய்தியைக் கேட்டு, இவருக்கு முன்னமே லக்ஷ்மணரும் அங்குத் தமது தாயான சுமித்திரையுடன் வந்திருந்தார். சீதாதேவிக்கு அவளுடைய

தமது தாயைக் காண இராமர் அவள்மாளிகைக் குப் போதல்.

புருஷனுக்கு நாளை வரப்போகிற பட்டாபிஷேக சமாசாரத்தைத் தெரிவிக்கக் கௌசல்யை சொல்லியனுப்பியிருந்தபடியால், அவளும் அங்குச் சகிகளால் அழைத்து வரப்பட்டாள்.

இராமர் அங்கு வந்த சமயமானது சுமித்திரை, லக்ஷ்மணர், சீதாதேவி இம்மூவரும் வணக்கத்துடன் பின்னே நிற்கக் கௌசல்யையானவள் தனது கண்களை மூடிக்கொண்டு வாய்திறவாது மனத்துக்குள்ளேயே ஜநார்த்தனக் கடவுளைப் புகழ்ந்து, நாளைத் தனது மகன் இராமனது பட்டாபிஷேகம் இடையூறில்லாமல் நிறைவேற வேண்டும் என்று தியானிக்குஞ் சமயமாக இருந்தது.

கௌசல்யையின் பூஜை.

இவ்வாறு தியானஞ் செய்துகொண்டிருக்குங் கௌசல்யையை, இராமர் நாடி வந்து, அவள் பாதங்களை வணங்கி, அவள் மனங்களிக்க, மதுரமான மொழியால், அவளை நோக்கி "அம்மா, எனது பிதா, குடிகளை ரக்ஷிக்கவேண்டும் என்று எனக்குக் கட்டளை செய்திருக்கிறார். நாளை எனக்குப் பட்டாபிஷேகமாம். இன்றிரவு நானுஞ் சீதையும் உபவாச மிருக்கவேண்டுமென்று, நமது குருக்கள், ரித்துவிக்குகள் இவர்கள் முன்னிலையில் எனது பிதா சொன்னார். எனக்குஞ் சீதைக்கும் நாளைச் சுபத்துக்காக நீங்கள் என்ன என்ன மங்களங்களைச் செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் செய்யுங்கள்" என்றார்.

இதைக் கௌசல்யை கேட்டவுடன், இதுதான் தானும் வெகு நாளாக மனத்தில் வைத்திருந்த வேண்டுகோளாகையால் ஆனந்தக்கடலில் முழுகி, கண்களில் ஆனந்த பாஷ்பம் ததும்ப, தனது மகனைப்பார்த்து "குழந்தாய், நீ நீடூழிகாலம் வாழ்வாயாக. ஏதாவது இடையூறு இருப்பினும் அது நசித்துப்போகட்டும். நீ எப்பொழுதும் என் பந்துக்களையும், சுமித்திரையின் சுற்றத்தார்களை

கௌசல்யையின் வாழ்த்து.

யும் சந்தோஷப்படுத்திவைப்பாயாக. நல்ல நாளில் நல்ல நக்ஷத்திரத்தில் உன்னைப் பெற்றேன். நீயும் உன் தந்தை மனங்களிக்க நடந்து வருகின்றாய். புண்டரீகாக்ஷருக்கு நான் செய்த பூஜை, எனது நோன்பு இவைகளெல்லாம் வீண்போக வில்லை; ஏனெனில், இக்ஷ்வாகு வம்சத்தின் லக்ஷ்மி உன்னை அடையப்போகின்றாளன்றோ" என்றாள்.

இவ்வண்ணம் தமது தாய் சொல்லி நின்றவுடன், இராமர் தமது அருகில் கைகூப்பிக்கொண்டு வெகு வணக்கத்துடனுஞ் சந்தோஷத்துடனும் நிற்கும் தமது தம்பியாகிய லக்ஷ்மணரைப் பார்த்துப் புன்னகையுடன் "லக்ஷ்மணா, என்னுடன் நீயும் இந்தப் பூமியைப் பரிபாலனம் பண்ணுவாய். நீ யார்? எனது இரண்டாவது ஆத்மா. ஆகையால் இந்தப் பட்டமும் உன்னை அடைந்து விட்டது. இந்த இராச்சியத்தை நீ அடைந்து உனது இஷ்டப்படி சகல போகங்களையும் அனுபவிக்கலாம். எனது பிராணனின்மேலும் இராச்சியத்தின்மேலும் நான் ஆசை வைத்திருப்பதெல்லாம் உன்பொருட்டு என்று நிச்சயமாக எண்ணுவாய்" என்றுசொல்லி, பின்பு தமது தாயாரையும் சுமித்திரையையும் வணங்கி அவர்களிடம் விடைபெற்று, சீதைக்கு விடைகொடுப்பித்து அவளுடன் தமது மாளிகைக்குத் திரும்பிவந்தார்.

ஐந்தாஞ்சருக்கம்:

வசிஷ்டர் இராமருடைய மனைக்குச் சென்று உபவாஸமிருக்கச் சொல்லுதல்.

தசரதமன்னர் 'நாளைப் பட்டாபிஷேகத்துக்கு நீ சித்தமாக இரு' என்று இராமருக்குச் சொல்லி விடை கொடுத்து அனுப்பிவிட்ட பிறகு, வசிஷ்டமாமுனிவரை

வரவழைத்து, அவரைப் பார்த்து "தவத்தின் களஞ்சிய மே, தாங்கள் சென்று காகுத்தனை, நாளை இந்த இராச்சியத்தை இரக்ஷிக்கும் பாக்கியத்தை அடையும்பொருட்டும், புகழ்பெறும்பொருட்டும் இன்றிரவு உபவாஸம் இருக்கச் செய்யுங்கள்" என்றார். வேதவித்தான அந்த வசிஷ்டரும் 'அப்படியே' என்று சொல்லி, அரசரிடம் விடை பெற்று, சாஸ்திரப்பிரகாரம் உபவாஸம் முதலிய சடங்குகளை இராமருக்கு நடத்திவைக்கும்பொருட்டு, தாமே அவருடைய மாளிகைக்குச் சென்றார். மந்திரங்களை யுணர்ந்தவரும் விரதத்தை உறுதியுடன் செய்பவருமான வசிஷ்டர், அந்தணர்க்குரிய தேர்மீது ஏறி, இராமருடைய வெண்மேகத்தையொத்த மனையைச் சேர்ந்து, மூன்றுகட்டுக்களிலும் இரதத்துடனேயே சென்றார். அவர் வரவை அறிந்துகொண்ட இராமர், மரியாதைசெய்யும் பொருட்டு விரைந்து வெளிவந்து இரதசமீபத்தையடைந்து கைகொடுத்து அவரை இரதத்திலிருந்து இறங்கச் செய்தார். இராமரிடம் இவ்வளவு வணக்கம் விளங்கக் கண்ட அம்முனிவர் அவரைப்பார்த்துக் குசலப்ரச்நஞ் செய்து தோத்திரத்தால் அவரை அகமகிழ்வித்து உள்ளங்களிக்க "உமது நற்குணத்தால் உமது தகப்பனார் வெகு ஆனந்தத்தை அடைந்திருக்கிறார். உமக்கு இளவரசுப்பட்டங் கட்டிவைக்கப்போகின்றார். இன்றிரவு நீர் சீதையுடன் உபவாஸம் இருக்கவேண்டும். நாளைக்காலையில் உமக்குப் பட்டாபிஷேகம் நடக்கப்போகின்றது. யயாதி மகாராஜனுக்கு நகுஷர் எவ்வாறு முடிசூட்டினரோ அவ்வாறு தசரதர் உமக்கு முடிசூட்டப் போகின்றார்" என்றார்.

விரதத்தை நடத்திவைக்க இராமர் வீட்டுக்கு வசிஷ்டர் போதல்.

பின்பு வசிஷ்டமாமுனிவர், விரதத்தை யுடைய இராமரைத் தமது பத்தினியாகிய சீதையுடன் உபவாஸமிருக்கச் செய்தார். அதன்மேல் வசிஷ்டமாமுனிவர்,

இராமர் செய்த மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு அவருக்கு 'நில்' என்று விடைதந்து அம்மாளிகையினின்றும்போயினர். இராமர் அங்குத் தமது சிநேகிதர்களோடு சிறிதுநேரம் மதுரமாகப் பேசிக்கொண்டிருந்து அவர்களிடம் மரியாதைபெற்று, அவர்களுக்கு அநுமதி கொடுத்துத் தமது மாளிகைக்குட் சென்றார். ஆடவர்களாலும் மகளிர்களாலும் நிரம்பியிருந்த அந்தக் கிருகமானது, களித்த பறவைக்கூட்டங்களையும் பூத்த செந்தாமரை மலர்களையுமுடைய தடாகம்போல விளங்கியது.

பட்டாபிஷேக விரதம்.

வசிஷ்டமாமுனிவர், இராமர்மாளிகையை விட்டுப் புறப்பட்டு, அயோத்திமாநகரத்தின் தெருக்களிலெல்லாம் கூட்டங் கூட்டமாகச் சனங்கள் களித்துக்கொண்டிருக்கக் கண்டார். அந்நகரத்தின் நான்குபக்கங்களிலும் வெகு ஆனந்தத்துடன்கூடிய அலைகளையொத்த ஜனக்கூட்டங்களின் உராய்தலாலும் மகிழ்ச்சியாலும் இராஜமார்க்கத்திலுண்டாகுஞ் சத்தம் சமுத்திரத்தின் முழக்கத்தை ஒத்திருந்தது. அத்தினத்தில் அந்நகரத்து வீதிகளெல்லாம் நீர்தெளிக்கப்பட்டும், நன்றாக விளக்கப்பட்டும், வாழை கமுகுமுதலியன நாட்டப்பட்டும் விளங்கின. வீடுதோறும் துவசம் கட்டப்பட்டிருந்தது. அந்நகரத்திலுள்ள புருஷர்கள், பெண்கள், குழந்தைகள் எல்லாரும் இராமருடைய பட்டாபிஷேகத்தை விரும்பினவர்களாகி, சூரியோதயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்; ஏனென்றால், அவர்களெல்லாரும் ஜனங்கள் அலங்கரித்துக்கொள்வதற்குக் காரணமான அந்தப் பட்டாபிஷேகத்தை ஒரு பெரிய உத்ஸவமாகக் கருதினார்கள்.

நகரத்தின் அலங்காரம்.

இவ்வாறு நின்ற ஜனக்கூட்டத்தை விலக்கிக்கொண்டு வசிஷ்டமாமுனிவர், தசரதமன்னருடைய மாளிகையை மெதுவாகச் சேர்ந்தார். இமயகிரிபோல் விளங்கும் அந்தத்

திருமாளிகையில் ஏறி, அங்கு இந்திரன்போல் வீற்றிருந்த தசரதமன்னரை வசிஷ்டர் மற்றொரு பிருகஸ்பதிபோலக் கண்டார். இவரைப் பார்த்தவுடன் தசரதர் 'எல்லாம் சரிவர முடிந்ததா' என்றுகேட்க, வசிஷ்டர் தாம் எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் நிறைவேற்றி வந்ததாகச் சொன்னார். அப்பொழுது அச்சபையிலிருந்தவர்கள் எல்லாரும் தசரதருடன் எழுந்து அந்தமகாமுனியை வணங்கினார்கள். அரசரும் தமது குருவினிடம் விடைபெற்று அங்கு வந்திருந்தவர்களுக்கும் விடைகொடுத்தனுப்பிவிட்டு, சிங்கம் குகையுட் புகுவதுபோலத் தமது அந்தப்புரத்தினுள் சென்றார். அழகிய பல மகளிரால் நிறைந்த இந்திரனுடைய அந்தப்புரத்தையொத்த அந்தப்புரத்துக்கு அவர் வந்தது, நக்ஷத்திரங்களால் நிறைந்த ஆகாயத்தில் சந்திரபகவான் வந்து தோன்றினதுபோல இருந்தது.

தசரதர் அந்தப்புரம் புகுதல்.

ஆறாஞ்சருக்கம்:
அயோத்தியையை அலங்கரித்தல்.

வசிஷ்டபகவான் சென்றபின் இராமர் ஸ்நானம் பண்ணி, பரிசுத்தமான மனத்தையுடையவராய், தமது பத்தினியாகிய சீதாதேவியுடன் ஸ்ரீமந்நாராயணனை ஆராதிக்கப் போய், தேவர்களை ஆராதிக்கும்பொழுது தலையால் பாத்திரத்தை வகிக்கவேண்டுமென்று வேதத்திற் கூறியிருப்பதால் அவிஸ் வைத்திருக்கும் பாத்திரத்தைத் தலையால் வகித்து, அத்தெய்வத்தை உத்தேசித்து, கொழுந்துவிட்டெரியும் ஹோமத்தீயில், சாஸ்திரப்பிரகாரம் நெய்யை எடுத்து ஹோமம் பண்ணினார். அவ்வாறுசெய்து மிச்சமாய் நின்ற அவிஸை, தமது நன்மையை வேண்டிப் புசித்து, ஸ்ரீமந்நாராயணனைத் தியானம்பண்ணிக்கொண்டு, தாமும் தமது மனை

அபிஷேகவிரதம்.

வியுமாகத் தருப்பசயனத்தில் மௌனவிரதத்துடன் ஐம்புலங்களையும் அடக்கி ஸ்ரீமந்நாராயணனுடைய கோயிலின் முன்பாகப் படுத்துக்கொண்டார்.

பொழுதுவிடிய ஒருயாமம் மிச்சமாய் நின்றவேளையில் இராமர், எழுந்திருந்து, தமது மாளிகைக்குச் செய்ய வேண்டிய சகல அலங்காரங்களையும் செய்வித்துக் காலையில், பௌராணிகர்களும், ஸூதர்களும், மகததேசத்து வைதாளிகர்களும், பாடகர்களும் பாடின இனிய பாட்டுக்களைக் கேட்டபின்பு, ஸ்நானம் பண்ணி, பூர்வ ஸந்த்யா தேவதையைத் தியானித்து வேறொன்றையும் மனத்தில் நினையாது காயத்திரி ஜபத்தை முடித்து, சூரியமண்டலத்தில் வசிக்கும் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியைத் துதித்துத் தலையால் நமஸ்கரித்து, வெகு பரிசுத்தமான வெண்பட்டு உடுத்து அங்கிருந்த பிராமணர்களை ஸ்வஸ்திவாசனம் சொல்லக் கேட்டுக்கொண்டார். அவர்களால் வெகு கம்பீரமாகவும் கேட்பதற்கு இனிமையாகவும் உச்சரிக்கப்பட்ட அம்மந்திரம் வாத்தியத்தின் தொனியோடு சத்தித்துக்கொண்டு அயோத்திமாநகரம் முழுவதும் பரவிற்று. பட்டாபிஷேகத்துக்கு முன்பு நடத்தவேண்டிய நோன்பை இராமர் தமது மனைவியாகிய சீதாபிராட்டியுடன் நடத்தி முடித்தார் என்று கேள்விப்பட்டு அப்பட்டணத்து ஜனங்கள் எல்லாரும் ஆனந்தமடைந்தார்கள்.

ஜபம்.

அந்நகரத்தவரனைவரும் பொழுதுவிடிந்தவுடன் பட்டாபிஷேகத்தின் பொருட்டுப் பட்டணத்தை அலங்கரிக்கத் தொடங்கினார்கள். வெளுத்த மேகத்தையுடைய மலைச்சிகரத்தை யொத்த ஆலயங்களிலும், நாற்சந்திகளிலும், வீதிகளிலும், யாகசாலைகளிலும், கோட்டை மதில்களின்மேலே போர்புரிதற்காகக் கட்டப்பட்டிருக்கும் நாற்கால்

நகரத்தை அலங்கரித்தல்.

மண்டபங்களிலும், பலவகைப் பண்டங்கள் நிறைந்து விளங்குகின்ற கடைத்தெருக்களிலும், செல்வ வீடுகளிலும், சபைகளிலும், உயர்ந்து நிற்கும் விருக்ஷங்களிலும் அந்நகரத்து ஜனங்கள் விசித்திரமான கொடிகளையும் பதாகைகளையும் கட்டினார்கள். நடர்களும் நர்த்தகர்களும் பாடகர்களும் ஆங்காங்கு ஆடிக்கொண்டும் மனோகரமாகப் பாடிக்கொண்டும் இருந்தார்கள். நாற்சந்திகளிலும், வீடுகளிலும் ஜனங்கள் ஒருத்தருக்கொருத்தர் இராமருடைய பட்டாபிஷேகத்தைப்பற்றி எப்பொழுதும் பேசிக்கொண்டிருந்தார்கள். வீட்டு வாயில்தோறும் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து விளையாடிக்கொண்டிருக்குஞ் சிறுவர்களும் இராமபட்டாபிஷேகம் வந்துவிட்டது என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் அயோத்தியா நகரத்து ஜனங்கள் இராஜவீதிகளைப் புஷ்பங்களால் சிங்காரித்துத் தூபங்களால் எங்கு நின்றாலும் கமகம என்று வாஸிக்கும்படி செய்தார்கள்; பட்டாபிஷேகச் சடங்குகள் முடிந்து இராமர் யானையின்மேலேறி ஊர்கோலம் வரும்போது இருட்டாய்விடும், அப்பொழுது அவருடைய திருமேனியை நன்றாகத் தரிசிக்கவேண்டுமே என்ற ஆவலினால் வீதிகள்தோறும் கிளைவிளக்குக்களை அமைத்து வைத்தார்கள்.

இவ்வாறு நகரத்தை அலங்காரஞ்செய்த பின்பு, அந்நகரத்தார்கள், இராமருடைய பட்டாபிஷேகத்தை எப்பொழுதும் எதிர்பார்த்தவர்களா யிருந்துகொண்டு நாற்சந்திகளிலும் சபைகளிலும் கூட்டங் கூட்டமாகக் கூடி, தங்களுக்கு இனி அரசராக வரப்போகின்ற இராமருடைய குணங்களைப்பற்றிப் புகழ்ந்துபேச ஆரம்பித்தார்கள். "தசரதர் மிகப்பெரியவர்; இராஜதர்மத்தை நன்றாயுணர்ந்தவர்; இக்ஷ்வாகு வம்சத்துக்குச் சிறப்பைத்தர நினைத்தார்: எப்படியெனில், தமக்கு வயதாய்விட்ட தென்பதைத் தெரிந்துகொண்டு,

ஜனங்களின் ஆநந்தம்.

தமது மூத்தகுமாரரை நமக்கு அரசராகச் செய்யப் போகின்றூ ரன்றோ! உலகத்தவர்களின் ஏற்றத்தாழ்வை யறிந்த இராமர் இனி நமக்கு அரசராகையால் நாம் எல்லாரும் வெகு பாக்கியசாலிகள். இராமர் கொஞ்சமேனும் கருவமென்பதே இல்லாதவர்; நன்றாகக் கற்றறிந்தவர்; தருமசிந்தையுள்ளவர்; சகோதரர்களிடம் அன்பு பொருந்தியவர்; நம்மையும் தம்முடைய சகோதரர்களைப்போல எண்ணுபவர்; இராம பட்டாபிஷேக பாக்கியத்தை நம்மைக் காணச்செய்த குற்றமற்ற தசரதமன்னர் வெகுகாலம் வாழவேண்டும்'' என்றிவ்வாறான பேச்சுக்கள் எப்புறத்தும் நிகழ்ந்தன. பட்டாபிஷேக சமாசாரம் எங்கும் பரவிவிடவே, பல கிராமங்களிலிருந்து ஜனங்கள் அந்த உத்ஸவத்தைப் பார்த்துக் களிக்க வந்துசேர்ந்தார்கள். இராமரைப்பற்றிக் கிராமங்களிலிருந்து வந்த ஜனங்களால் அயோத்திமாநகரம் நிரம்பியது. அச்சனங்களால் உண்டாகுஞ் சத்தம், பருவகாலத்தில் மிக அதிகமாக ஒலிக்கிற சமுத்திரத்தின் அலைச்சத்தமோ என்று சந்தேகிக்கத் தக்கதாய் அப்பட்டணத்தில் முழங்கிற்று. இந்திரனுடைய நகரத்துக்குச் சமானமான அப்பட்டணம், இவ்வண்ணம் கிராமத்தார்கள், நகரத்தார்கள், மற்றுமுள்ளவர்கள் எல்லோராலும் நிறைந்து, அவர்களுடைய கலகல சத்தத்தால் ஒலித்துக்கொண்டு, திமிங்கிலம் முதலிய ஜலஜந்துக்களாற் கலக்கப்பட்ட சமுத்திரம்போற் காணப்பட்டது.

எழாஞ்சருக்கம்: கைகேயி இராமபட்டாபிஷேகத்தைக் கேட்டுக் களித்தல்.

கைகேயிக்கும் அவள் சுற்றத்தார்க்கும் வேலைக்காரியாயும், தாய்தகப்பன்மார் இன்னாரெனத் தெரியாதவளாயும், சிறுபிராயம் முதல் கைகேயியுடன் இருப்பவளாயு

மிருக்கும் மந்தரையென்பவள், வெண்மதியையொத்தமாளிகையின் உபரிகையின்மேல் தற்செயலாக ஏறினாள். அயோத்திமாநகரத்திலுள்ள

மந்தரை.

இராசவீதிகளெல்லாம் நன்ருக ஜலந்தெளிக்கப்பட்டுப் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பெற்று விளங்குவதை அவள் அங்கிருந்தபடி கண்டாள். எங்கேபார்த்தாலும் தெருக்களெல்லாம் பதாகைகளாலும் விலையுயர்ந்த கொடிகளாலும் விளங்கிக்கொண்டு நின்றன. நகரத்துச் சனங்கள் ஸ்நானம் பண்ணி மாலைகளையும் மோதகங்களையும் தட்டில் வைத்துக் கையிலேந்திக்கொண்டும், வேதியர்கள் துதிகளை ஓதிக்கொண்டும் தெருவுதோறும் நிற்க, மந்தரை பார்த்தாள். அன்று அவ்வூரிலுள்ள கோயில்களெல்லாம் நன்ருய்ச் சுண்ணம் படிக்கப் பெற்றிருந்தன. எங்கும் சகலவித வாத்தியங்களும் கோஷித்துக்கொண்டு விளங்கின. எங்கே பார்த்தாலும் எல்லா ஜனங்களும் சந்தோஷப்பட்டுக்கொண் டிருந்தார்கள். எல்லாப் பக்கங்களிலிருந்தும் வேதகோஷம் எழுந்துகொண்டே இருந்தது. யானைகளும் குதிரைகளுங்கூட வெகு குதூகலத்தை அடைந்தவைகளாகவும் பசுமாடுகளும் எருதுகளும் அங்கங்குப் பெரிய சத்தங்கள் போடுகின்றனவாகவும் அன்று அயோத்திமாநகரில் ஆனந்தித்து நிற்கக் காணப்பட்டன. ஒவ்வொரு வீட்டிலும் அன்றுண்டான சந்தோஷத்தை அங்கு மேலெடுக்கப்பட்ட கொடியானது நன்ருகக் காட்டிற்று.

இவ்வாறு விளங்கும் அயோத்திமாநகரைப்பார்த்து, மந்தரை வெகுவியப்படைந்தாள். அதன்மேல் அவள் தனது சமீபத்தில் வெண்பட்டு உடுத்துக்கொண்டும் தன்னைப்போல் வெகுஆச்சரியத்துடன் கண்களைவிழித்தபடியே பார்த்துக்கொண்டும் நின்ற மற்ருெருதாதியைப்பார்த்து, "அடி, அதோபார்! இராமருடைய தாயாகிய கோசலையானவள் வெகு

மந்தரையின் சந்தேகம்.

ஆனந்தத்துடன் எல்லா ஜனங்களுக்கும் பணத்தை வாரிக் கொடுத்துக்கொண்டிருக்கின்றாளே ! அவள் பணத்தை எப் பொழுதும் இறுகப் பிடிப்பவளாயிற்றே ! இன்று அவள் இப்படிச் செய்வதற்குக் காரணம் என்ன ? இன்று ஜனங் கள் எல்லாரும் இவ்வளவு சந்தோஷப்பட்டுக்கொண்டிருக் கக் காரணம் என்னவோ ? இன்று வெகு சந்தோஷம டைந்த மகாராஜா என்னகாரியஞ் செய்யப்போகின்றார் ? சொல்லு" என்று கேட்டாள்.

இராம பட்டா பிஷேகத்தை மந்தரை கேட்டல்.

அந்தத் தாதி இதைக்கேட்டு வெகுசந்தோஷத்து டன் இராமருக்கு நடக்கப்போகிற பட்டா பிஷேகத்தைப் பற்றி அக்கூனியிடம் பின்வருமாறு சொல்லலானாள்:—"புஷ்ய நக்ஷத்திரத்தில் நமது அரசராகிய தசரதர், கோபத்தை வென்றிருக்கும் இராமருக்கு இளவரசுப் பட் டஞ் சூட்டப்போகின்றார்" என்றாள்.

இவ்வாறு அவள் சொன்னதைக் கேட்டுக் கூனி, பொறாமையடைந்து, கைலாசம்போல் உயர்ந்து நிற்கும் அம்மேன்மாடத்திலிருந்து வெகுவிரைவாய்க் கீழே இறங் கினாள். அதன்பின்பு, கொடிய எண்ணமுடைய அவள், தன்னைக் கோபத்தீ முற்றிலுஞ் சூழ்ந்தபடியால், படுத்துக் கொண்டிருந்த கைகேயியினது முன்பாக நின்று, அவளைப் பார்த்து "புத்தியற்றவரே, எழுந்திரும்; உமக்கு வரப்

மந்தரையின் கடுஞ்சினம்.

போகிற அபாயம் இன்னதென்றுதெரியா மல் ஏன்இப்படிப் படுத்திருக்கிறீர். பெரிய தான துக்கம் உம்மைச் சூழ்ந்ததாக அறி கின்றிலீர். இது தெரியாமல், ஏதோ அதிருஷ்டம் வந்த தென்று நீர் களித்துக்கொண் டிருக்கிறீர். உம்முடைய அதிருஷ்டம், கோடைக்காலத்து வெள்ளம்போல் நிலையில் லாதது" என்றாள். மகாபாவியான கூனியானவள் கடுஞ் சினத்துடன் இப்படிச் சொன்னதைக் கைகேயி கேட்

டுத் துயரமடைந்து அவளை நோக்கி "மந்தரே, என்ன வந்துவிட்டது? இப்பொழுது உன்முகம் வெகுவாய்வாடித் துக்கமடைந்திருப்பதாகக் காணப்படுகின்றதே" என்றாள்.

இதை மந்தரை கேட்டதும், பேசுவதில் வெகு சமர்த்தை யாகையால், கைகேயியினுடைய க்ஷேமத்தை உத்தேசித்தும் அவள்மனத்தை இராமரிடம் வெறுப்படையச் செய்யும்பொருட்டும் வெகு விசனத்துடனும் கோபத்துடனும் கைகேயிக்குத் துயருண்டாகுமாறு அவளைப் பார்த்து "அம்மா, தீர்த்தற்கரிய பெரிய நாசம் உங்களுக்கு வந்துவிட்டது. தசரதர் தமது புதல்வராகிய இராமருக்கு இளவரசுப் பட்டஞ் சூட்டப்போகின்றார். இதைக்கேட்டவுடன், நான், மிக்க துக்கத்தை அடைந்தவளாய்ப் பயக்கடலில்முழுகி, நான்கு பக்கங்களிலுந் தீப்பட்டு எரிகிறவள் போல் துயரடைந்து, உங்கள் க்ஷேமத்தை நாடி, உங்களிடம் வந்திருக்கின்றேன். உங்களுக்கு நேரிட்ட கஷ்டத்தைப் பார்த்து எனக்கு அதிக துக்கம் உண்டாகின்றது. நீங்கள் மேன்மேலும் க்ஷேமமாக விளங்கினால் எனக்கும் மேன்மேலும் க்ஷேமம் என்பது திண்ணம். நீங்களோ இராஜகுலத்திற் பிறந்து அரசர்க்குப் பட்டமகிஷியாகவும் இருக்கின்றீர்கள்; இப்படியிருந்தும் இராஜதருமத்தின் கொடுமையை நீங்கள் உணரவில்லை? உங்கள் நாயகர் பேசுவதெல்லாம் வெளிக்கு வெகு தர்மமாகத்தான் காணப்படும்; உள்ளே தீமையையே கொண்டிருக்கும். அவருடைய பேச்சின் இனிமை கழுத்துக்குமேலேதான். அவர்செய்யுந்தொழிலோ கொடியது. இவ்வளவு தூரம் அவர் உங்களை மோசம் பண்ணியும், உங்களது நல்ல எண்ணத்தால் நீங்கள்மட்டும் அவரைக் குற்றமற்ற தொழிலினரென்றே எண்ணுகிறீர்கள். அவர் வீண்பேச்சுக்களை உங்களிடம் வெகு மதுரமாகச் சொல்லிவிட்டு, இப்பொழுது கௌசல்யைக்குச் செல்வத்தைக்

மந்தரையின் துர்ப்போதனை.

கொடுக்கப் போகின்றார். துஷ்டரான தசரதர், 'பரதர் இருந்தால் பட்டாபிஷேகத்திற்கு ஏதாவது இடையூறு உண்டாகும்' என்று அஞ்சி, அவரை மெதுவாக மாமன் வீட்டுக்கு அனுப்பிவிட்டு அந்தப் பயத்தை விலக்கிக்கொண்டு, இராமருக்குப் பட்டாபிஷேகம் பண்ணிவைக்கப்போகின்றார். நீங்கள் ஒன்றுந் தெரியாமல், நன்மையைச் செய்ய வேண்டும் என்று கருதி, விஷத்தை மறைத்து வைத்திருக்கும் பாம்பை மடியில் வைத்து வளர்ப்பதுபோல், கணவன் என்று பேர்பூண்ட பகையை மடியில் வைத்து இரட்சித்து வந்தீர்கள். சர்ப்பத்தையேனும், அல்லது ஒரு பகையையேனும் உபேக்ஷித்தால் அஃது எவ்வாறு செய்யுமோ, அவ்வாறு தசரதர் உம்மையும் உமது குமாரரையும் செய்திட்டார். அவர் பெரும் பாவி; பொய்யர். இராமரை எப்பொழுது சுகத்தைப் பெறும்படி இந்த நாட்டுக்கு அரசராகப் பண்ணுகிறாரோ, அப்பொழுதே நீங்கள் புத்திரர் மித்திரர் முதலியவர்களோடுங் கேடடைந்தீர்கள். ஆகையால், இதுதான் சமயம்; காலத்திற்குத் தக்க மதியுடையவரே, இப்பொழுதே நீங்கள் உங்களுக்கு வேண்டிய நன்மையைத் தேடிக்கொள்ளவேண்டும். உங்களையும், உங்கள் குமாரரையும், உங்களை அடுத்திருக்கும் என்னையும் காப்பாற்றவேண்டும்" என்றாள்.

மந்தரை இவ்வாறு சொன்னதைக் கைகேயி கேட்டு, சரத்கால சந்திரன்போல் ஆனந்தக்குறிப்போடு தனது முகம் விளங்க, தான்படுத்திருந்த படுக்கையைவிட்டு எழுந்திருந்து, வெகுசந்தோஷத்தைத் தான் அடைந்தபடியால் விலையுயர்ந்த அழகியதோர் ஆபரணத்தை எடுத்து, வெகு ஆனந்தத்தோடு அவளுக்குக் கொடுத்தாள். அதன்பின்னர், அம்மாதுசிரோமணி வெகு களிப்புடன் மந்தரையைப் பார்த்து "மந்தரே, நீ இன்று சொன்ன சமாசாரம் கேட்க வெகு ஆனந்தமாக இருக்கிறது. இந்தச் சந்தோஷ சமா

இராம பட்டாபிஷேகத்தைக் கேட்டுக் கைகேயி சந்தோஷமடைதல்.

சாரத்தைச் சொன்ன உனக்கு நான் என்ன வெகுமதி செய்வேன்? எனக்கு இராமன் என்றும் பரதன் என்றும் வித்தியாசம் ஒருபொழுதுங் கிடையாது. ஆகையால், இராமனுக்குப் பட்டாபிஷேகம் ஆகப்போகிறது என்று வெகு சந்தோஷப்படுகிறேன். இராமனுடைய பட்டாபிஷேகம் என்னும் சமாசாரத்தைவிட உன்னால் சொல்லத் தக்க அதிக சிலாக்கியமான சமாசாரம் வேறொன்றும் இல்லை. இவ்வாறு எல்லாவற்றினுஞ் சிறந்த ஆனந்தமான செய்தியை நீ முதல்முதல் என்னிடம் சொன்னயாகையால் நீ என்ன கேட்டாலும் நான் கொடுக்கச் சித்தமாக இருக்கிறேன். என்ன வேண்டுமோ அதைக் கேட்பாய்" என்றாள்.

எட்டாஞ் சருக்கம்:

இராமருக்குப் பட்டாபிஷேகங் கூடாதென்று மந்தரை கைகேயியினிடங் கூறுதல்.

மந்தரை, இவ்வாறு கைகேயி சொன்னதைக் கேட்டு, அதிக வெறுப்புக்கொண்டு, அவள் தனக்கு வெகுமதியாகக்கொடுத்த அணியை வீசி எறிந்து, வெகு துக்கத்துடனும் கோபத்துடனும் அவளை நோக்கி, "நீங்கள் மடமையால் சமய மல்லாத சமயத்திற் சந்தோஷங் கொண்டிருக்கின்றீர்கள். உங்களைத் துக்கக்கடலின் நடுவில் இருப்பவர்களாக நீங்கள் அறிந்து கொள்ளவில்லை. துக்கம் என்னை வறட்டிக் கொண்டிருந்தபோதிலும் உங்கள் பேதைமையைக் கண்டு மனத்தினல் நகைக்கவேண்டியிருக்கிறது. பெரிய விசனம்

மந்தரை மூட்டிய தீ.

வந்திருக்கையில், நீங்கள் துக்கப்படவேண்டியிருக்கச் சந்தோஷப்படுகின்றீர்களே! உங்களைக் கண்டு நான் இப்பொழுது துக்கப்படவேண்டியிருக்கிறது. புத்தியையுடைய எவள்தான் யமனையொத்த சக்களத்திகுமாரனுடைய க்ஷேமத்தை மெச்சுவள்? இராச்சியத்தில் உரிமையுள்ள பரதரைக் கண்டு 'நமக்கு இராச்சியம் கிடைக்குமோ மாட்டாதோ' என்று அஞ்சும் இராமருடைய அச்சத்திற்கு நான் அஞ்சுகின்றேன். ஏனெனில், பயப்படுபவரிடத்தினின்றும் பயம் உண்டாகுமன்றோ? லக்ஷ்மண சத்துருக்கனர்களுக்கும் இராச்சியத்திற் சம்பந்தமிருப்பினும், அவர்களிடத்தில் இராமருக்கு அச்சம் இல்லை. ஏனெனில், லக்ஷ்மணர் எப்பொழுதும் இராமரிடம் அதிக அன்பும் ஆதரமும் வைத்திருக்கின்றார். இராமரிடம் லக்ஷ்மணர் அன்புவைத்திருப்பதுபோல், சத்துருக்கனர் பரதரிடம் அன்பு வைத்திருக்கின்றார். லக்ஷ்மணர் சத்துருக்கனர் இவ்விருவரும் இராமரையும் பரதரையுஞ் சேர்ந்தவர்களாகையால் அவர்கள் இராச்சியத்தை விரும்பமாட்டார்கள். அன்றியும், பிறப்பினாலும் மற்றைஇருவரைவிடப் பரதரேபெரியவர்; ஆகையால்அரசமுறை இவரையே மற்றை இருவரினுங் கிட்டி யிருக்கின்றது. மற்றை இருவர்க்கும் இவரினும் அவ்வரசமுறை தூரமாயிருக்கின்றது. கல்விப்பயிற்சியுள்ளவராயும் அரச நீதியில் மிகப் பழகியவராயும் காலத்திற்குத் தக்கபடி நடப்பவராயு மிருக்கும் இராமருடைய பயத்தால், உங்களுடைய புத்திரரான பரதரைச் சிந்தித்து நான் நடுங்குகின்றேன். கௌசல்யைக்குப் பாக்கியம் பிறந்துவிட்டது; நாளைத் தினம் புஷ்ய நக்ஷத்திரத்தில் அவளுடைய குமாரரான இராமருக்கு, அந்தணர்கள் சேர்ந்து பட்டாபிஷேகம் பண்ணிவைக்கப்போகின்றார்கள். கௌசல்யை வெகுசந்தோஷமடைந்து 'அரசருடைய தாயார்' என்ற பட்டம் பெற்று, தனது சத்துருக்களை யெல்லாம் தன்கீழ் அடக்கிக்

கொண்டு விளங்கப்போகின்றாள். நீங்கள் கைகளைக் கூப்பிக்கொண்டு அவள்முன்னர் அடிமைபோல் நிற்கப்போகின்றீர்கள். நீங்கள் எங்களுடன் வேலைக்காரியைப்போற் கௌசல்யைமுன் நிற்க, உங்கள் குமாரரான பரதரும் இராமரிடம் கைகட்டி வேலைக்காரன்போல் நிற்கப்போகின்றார். இராமருடைய மனைவியும் அவள் தாதிமார்களும் களித்துக்கொண்டு அதிகாரம் பண்ணுவார்கள். பரதர் வேலைக்காரன்போல் நிற்க அதைப்பார்த்து உங்கள் மருமகளும் அவள் தாதிமார்களும் கண்ணீர் ததும்ப நிற்பார்கள்" என்றாள்.

இவ்வாறு மிகவும் அன்பற்றவண்ணமாக மந்தரை சொல்லுவதைக் கேட்டுக் கைகேயி, இராமருடைய சிலாக்கியமான குணங்களை எடுத்து அவள்முன்னர் வருணித்துச் சொல்ல ஆரம்பித்தாள். "இராமன் வெகு தருமசிந்தையுள்ளவன். பெரியவர்களிடம் பழகி அவர்களால் நல்ல வழிக்குக் கொண்டுவரப்பட்டவன்; செய்ந்நன்றி அறிபவன்; சத்தியசந்தன்; நன்னடக்கையுள்ளவன்; இராமன் மூத்த குமாரனுகையால் அரசநீதிப்படி பட்டத்துக்குத் தக்கவன். அவன் தனது தம்பிமார்களையும் வேலைக்காரர்களையும் வெகுகாலம் தகப்பனுரைப்போல் ரக்ஷிப்பான். இப்படியிருக்கக் கூனியாகிய நீ, அவனுடைய பட்டாபிஷேகத்துக்காக ஏன் துக்கப்படவேண்டும்? இராமன் இராச்சியம் ஆண்ட நூறு வருஷங்களுக்கு அப்பால் அவனிட மிருந்து எனது உத்தமகுமாரனுன பரதன், தலைமுறை தலைமுறையாக வந்த இந்தப் பட்டத்தைப் பெறுவான். இந்தச் சமயம் நாமெல்லாருஞ் சந்தோஷப்படவேண்டியிருக்க, மந்தரே, நீமட்டும் ஏன் இவ்வண்ணம் தவிக்கின்றாய்? எனக்கு இராமன் பரதனைவிடப் பிரியமானவன். இராமன், கௌசல்யையிடம் எவ்வளவு அன்பும்

கைகேயி மந்தரையைக் கண்டித்தல்.

ஆதரமுமாக இருக்கின்றானோ, அதனினும் மேலாகவே என்னிடத்தில் இருக்கின்றான். இராமனுக்கு இராச்சியம் கிடைத்ததென்றால், அது பரதனுக்குக் கிடைத்தாற் போலத்தான்; ஏனெனில், இராமன், தனது தம்பிகளைத் தன்னைப்போலப் பாவித்திருக்கின்றானே யல்லது வேறில்லை" என்றாள்.

இவ்வாறு கைகேயிசொல்ல, அதைக்கேட்ட மந்தரை, வெகு துக்கமடைந்து, உஷ்ணமாகப் பெருமூச்செறிந்து, அவளைப் பார்த்து, "பயனறிந்து தொழில் செய்யாததனால், சோகத்தாலும் விசனத்தாலும் நிறைந்த துக்கக்கடலில் நீங்கள் இப்பொழுதுமுழுகிவிட்டீர்கள். ஆனால், அது உங்களுக்குத் தெரியவில்லை. இப்பொழுது இராமர் பட்டத்துக்கு வரப் போகின்றார். அவருக்குப்பின் அவர்மகன். இராமர் பட்டத்துக்கு வந்துவிட்டாரானால் உங்கள் புத்திரர் பட்டத்துக்கு வருவதிலிருந்து விலக்கப்பட்டவராவார். கோபம் மட்டும் உங்களுக்கு அதிகமே ஒழிய, 'ஓர் அரசனுடைய ஒவ்வொரு குமாரரும் பட்டத்துக்கு வரவேண்டியவர்' என்று நீங்கள் கொள்ளும் அபிப்பிராயம் சரியானதன்று என்று உங்களுக்குப் புலப்பட வில்லையே! எல்லாக் குமாரர்களும் பட்டத்துக்கு வருவார்களானாற் பின்னர் அவர்களுக்குட் சண்டையுண்டாகி நியாயம் மிகக் கெட்டு விடுமன்றோ? அரசர்கள் தங்கள் இராச்சியத்தைத் தங்கள் மூத்தகுமாரனிடம் கொடுப்பதும், அல்லது அவனை விட நல்லவராயிருக்கும் ஏனையோரிடத்துக் கொடுப்பதும் அதனாலேதான். புத்திரவாத்ஸல்ய முடையீர், உங்கள் புதல்வர், பட்டத்தை அடையாவிடில் அநாதராய்ச் சுகமற்றுப் போய்விடுவார். இந்த விஷயத்தைக்குறித்து முன்னதாக உங்களிடம் தெரிவிக்க நான் இவ்வளவு சிரமப் பட்டு வந்தேன். என்னுடைய உட்கருத்தை நீங்கள் அறியவே இல்லை. உங்களுடைய சக்களத்திக்கு வரப்போகிற

மந்தரை மூட்டிய பெருந்தீ.

க்ஷேமத்தை உத்தேசித்து நீங்கள் எனக்கு வெகுமதி அளிக்கின்றீர்கள்! இராமர், இராச்சியத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு பயமில்லாமல் தாம் அரசாளும் பொருட்டுப் பரதரை வேறு தேசத்துக்காவது, அல்லது வேறு லோகத்துக்காவது நிச்சயமாக ஓட்டிவிடப்போகின்றூர். பரதரோ இளம்பருவமுடையவர். நீங்களே இப்பொழுது அவரை மாமன் வீட்டுக்கு அனுப்பி யிருக்கிறீர்கள். அசையாப் பொருள் கூட நமக்குச் சமீபத்தில் எப்பொழுதும் இருக்குமானால் அதனிடத்தில் நமக்கு அன்பு உண்டாகின்றது. பரதர் இப்பொழுது அரசர்சமீபத்திலு மில்லை. சத்துருக்கனரும் பரதருடன் போய்விட்டார். இலக்ஷ்மணர் இராமரிடத்து இருப்பதுபோற் சத்துருக்கனர் பரதரிடத்திருக்கின்றூர். 'ஒரு காட்டாள், வெட்டத்தக்க ஒரு மரத்தைப் பழக்கத்தாலுண்டாகிய நட்பால் வெட்டுதலாகிற அந்த ஆபத்தினின்று விடுவிக்க விரும்பி, அதைச்சுற்றி முட்புதர்போட்டு அதைக் காப்பாற்றினுன்' என்று ஒரு கதையுஞ் சொல்லுகிறூர்களன்றே? இராமரை லக்ஷ்மணர் பாதுகாத்து வருகிறூர். லக்ஷ்மணரும் இராமரைப் பாதுகாத்து வருகிறூர். இவ்விருவருடைய நேசமும் அசுவினி தேவதைகளுடைய நேசம் போன்றது என்பது உலகம் முழுதுந் தெரிந்த விஷயம். ஆகையால், இராமர் லக்ஷ்மணருக்கு ஒரு நாளுந் தீங்கு செய்யப் போகிறதே இல்லை. இராமர் பரதருக்குத் தீங்கு செய்வார் என்பதில் சந்தேகமேயில்லை. ஆகையால், கேகயராஜன்வீட்டிலிருந்தபடியே உங்களுடைய குமாரராகிய பரதர் காட்டுக்கு ஓடிவிடுதல் நல்லவழி; இதுதான் எனக்கு நல்லதாகத் தோன்றுகிறது; உங்களுக்கும் க்ஷேமம். அப்படி இல்லாமல், பரதர் நல்லவழியில் தமது முன்னேர்களுடைய அரசை அடைவதாக இருந்தால் அது உங்களுடைய பந்துக்களுக்கும் நன்மையைத் தரும். இராமருக்குச் சுபாவ சத்துருவாயும், இன்பத்தையே அடையத்தக்கவராயு

மிருக்கும் பரதர், பொருளை இழந்தபிறகு, பொருளையுடைய இராமரிடம் எவ்வாறு வாழப்போகின்றார்? காட்டில் ஒரு சிங்கத்தால் பின்தொடர்ந்தோடி அவமானப்படுத் தப்படும் யானைபோல் இராமரால் அவமானப்படுத்தப் படும் பரதரை நீங்கள்தாம் இரட்சிக்கவேண்டும். நீங்கள் உங்களுடைய அழகினாலுண்டான கருவத்தாற் கௌச லையை இதற்குமுன் அவமானஞ்செய்திருக்கிறீர்கள். அவள் மட்டும் நல்ல பதவிக்கு வந்துவிட்டால் உங்களை ஏன் அவ மானஞ் செய்யமாட்டாள்? இராமர் அநேக சமுத்திரங்க ளாலும் மலைகளாலும் நகரங்களாலும் நிறைந்த இந்த இராச்சியத்தை அடைந்துவிட்டால், நீங்களும் உங்கள் குமாரராகிய பரதரும் மிகவும் இழிவான வெகுவித அவ மானங்களை அடையப்போகின்றீர்கள் என்பது நிச்சயம். இராமர் இராச்சியத்தைக் கைப்பற்றினால் பரதர் அழிந்து போனார் என்பது திண்ணம். ஆகையால், நீங்கள் இப்பொ ழுது தீர்க்காலோசனை பண்ணிப் பாருங்கள். உங்கள் குமாரரை உடனே முடிசூட்டிவைக்க வழி தேடுங்கள். உங்கள் சத்துருவைக் காட்டுக்கனுப்பும் உபாயத்தை ஆலோசியுங்கள்" என்று வற்புறுத்திக் கூறினாள்.

ஒன்பதாஞ் சருக்கம்:

கைகேயி இராமரைக் காட்டுக்கு ஓட்ட நிச்சயித்தல்.

இவ்வாறு மந்தரைசொல்லக்கேட்டவுடன், கைகேயி, தனக்கு வந்த கோபத்தால் முகம் துடிதுடிக்க வெகு உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டு, மந்தரை யைப் பார்த்து, "இன்றைத்தினமே இரா மனை இவ்விடத்திலிருந்து சீக்கிரமாகக் காட்டுக்கு நான் அனுப்பிவிடுகிறேன். எனது புத்திரனை

கைகேயி மந்தரை யின் வசமாகுதல்.

க்ஷேமத்தை உத்தேசித்து நீங்கள் எனக்கு வெகுமதி அளிக்கின்றீர்கள்! இராமர், இராச்சியத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு பயமில்லாமல் தாம் அரசாளும் பொருட்டுப் பரதரை வேறு தேசத்துக்காவது, அல்லது வேறு லோகத்துக்காவது நிச்சயமாக ஓட்டிவிடப்போகின்றார். பரதரோ இளம்பருவமுடையவர். நீங்களே இப்பொழுது அவரை மாமன் வீட்டுக்கு அனுப்பி யிருக்கிறீர்கள். அசையாப் பொருள் கூட நமக்குச் சமீபத்தில் எப்பொழுதும் இருக்குமானல் அதனிடத்தில் நமக்கு அன்பு உண்டாகின்றது. பரதர் இப்பொழுது அரசர்சமீபத்திலு மில்லை. சத்துருக்கனரும் பரதருடன் போய்விட்டார். இலக்ஷ்மணர் இராமரிடத்து இருப்பதுபோற் சத்துருக்கனர் பரதரிடத்திருக்கின்றார். 'ஒரு காட்டாள், வெட்டத்தக்க ஒரு மரத்தைப் பழக்கத்தாலுண்டாகிய நட்பால் வெட்டுதலாகிற அந்த ஆபத்தினின்று விடுவிக்க விரும்பி, அதைச்சுற்றி முட்புதர்போட்டு அதைக் காப்பாற்றினன்' என்று ஒரு கதையுஞ் சொல்லுகிறார்களன்றோ? இராமரை லக்ஷ்மணர் பாதுகாத்து வருகிறார். லக்ஷ்மணரும் இராமரைப் பாதுகாத்து வருகிறார். இவ்விருவருடைய நேசமும் அசுவினி தேவதைகளுடைய நேசம் போன்றது என்பது உலகம் முழுதுந் தெரிந்த விஷயம். ஆகையால், இராமர் லக்ஷ்மணருக்கு ஒரு நாளுந் தீங்கு செய்யப் போகிறதே இல்லை. இராமர் பரதருக்குத் தீங்கு செய்வார் என்பதில் சந்தேகமேயில்லை. ஆகையால், கேகயராஜன்வீட்டிலிருந்தபடியே உங்களுடைய குமாரராகிய பரதர் காட்டுக்கு ஓடிவிடுதல் நல்லவழி; இதுதான் எனக்கு நல்லதாகத் தோன்றுகிறது; உங்களுக்கும் க்ஷேமம். அப்படி இல்லாமல், பரதர் நல்லவழியில் தமது முன்னோர்களுடைய அரசை அடைவதாக இருந்தால் அது உங்களுடைய பந்துக்களுக்கும் நன்மையைத் தரும். இராமருக்குச் சுபாவ சத்துருவாயும், இன்பத்தையே அடையத்தக்கவராயு

மிருக்கும் பரதர், பொருளை இழந்தபிறகு, பொருளையுடைய இராமரிடம் எவ்வாறு வாழப்போகின்றார்? காட்டில் ஒரு சிங்கத்தால் பின்தொடர்ந்தோடி அவமானப்படுத்தப்படும் யானைபோல் இராமரால் அவமானப்படுத்தப்படும் பரதரை நீங்கள்தாம் இரட்சிக்கவேண்டும். நீங்கள் உங்களுடைய அழகினாலுண்டான கருவத்தாற் கௌசலையை இதற்குமுன் அவமானஞ்செய்திருக்கிறீர்கள். அவள் மட்டும் நல்ல பதவிக்கு வந்துவிட்டால் உங்களை ஏன் அவமானஞ் செய்யமாட்டாள்? இராமர் அநேக சமுத்திரங்களாலும் மலைகளாலும் நகரங்களாலும் நிறைந்த இந்த இராச்சியத்தை அடைந்துவிட்டால், நீங்களும் உங்கள் குமாரராகிய பரதரும் மிகவும் இழிவான வெகுவித அவமானங்களை அடையப்போகின்றீர்கள் என்பது நிச்சயம். இராமர் இராச்சியத்தைக் கைப்பற்றினால் பரதர் அழிந்துபோனார் என்பது திண்ணம். ஆகையால், நீங்கள் இப்பொழுது தீர்க்காலோசனை பண்ணிப் பாருங்கள். உங்கள் குமாரரை உடனே முடிசூட்டிவைக்க வழி தேடுங்கள். உங்கள் சத்துருவைக் காட்டுக்கனுப்பும் உபாயத்தை ஆலோசியுங்கள்'' என்று வற்புறுத்திக் கூறினாள்.

ஒன்பதாஞ் சருக்கம்:

கைகேயி இராமரைக் காட்டுக்கு ஓட்ட நிச்சயித்தல்.

இவ்வாறு மந்தரைசொல்லக்கேட்டவுடன், கைகேயி, தனக்கு வந்த கோபத்தால் முகம் துடிதுடிக்க வெகு உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டு, மந்தரையைப் பார்த்து, "இன்றைத்தினமே இராமனை இவ்விடத்திலிருந்து சீக்கிரமாகக் காட்டுக்கு நான் அனுப்பிவிடுகிறேன். எனது புத்திரனை

கைகேயி மந்தரையின் வசமாகுதல்.

பரதனுக்கே இளவரசுப்பட்டம் இதோ சூட்டி வைக்கின்றேன். எவ்வித உபாயத்தால் இவ்விரண்டையும் எளிதிற் செய்து முடிக்கலாம்? இராமன் ஒருபொழுதும் இராச்சியத்தை அடையக்கூடாது; பரதனே அடையவேண்டும். ஆலோசித்துப்பார்" என்றாள்.

இப்படிக் கைகேயி சொல்ல மந்தரையானவள், எப்பொழுதும் இராமருக்கு வரும் க்ஷேமத்தைப் பொறாதவளாகையாலும், கொடிய பாவியாகையாலும், கைகேயியைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானாள்:—"கைகேயி, நான் சொல்லுவதைக் கேளுங்கள். எவ்வாறு செய்தால் உங்கள் குமாரரான பரதர் பட்டத்துக்கு வருவாரோ, அந்தவழி எனக்கு நன்றாகத் தெரியும். அது உங்களுக்குத் தெரியத்தான் இல்லையா? அல்லது, தெரிந்தும் மறைக்கின்றீர்களா? அல்லது, நமது க்ஷேமத்தைக் கருதும் இவள் வாயிலிருந்து கேட்போம் என்று வாயை மூடிக்கொண்டிருக்கிறீர்களா? ஏனெனில், இந்தச் சமாசாரத்தை நீங்களே என்னிடஞ் சொல்லி யிருக்கின்றீர்கள். நல்லது, நான் இப்பொழுது அந்த வழியைச் சொல்லுகிறேன்; கேளுங்கள். கேட்டதன்மேல் நன்றாக ஆலோசித்துப்பாருங்கள்" என்றாள். இப்படி மந்தரை சொன்னதைக் கேட்டவுடன் கைகேயி, தான் படுத்திருந்த படுக்கையிலிருந்து கொஞ்சம் எழுந்திருந்து மந்தரையைப் பார்த்து, "உபாயத்தைச் சொல்லு. எவ்வண்ணஞ் செய்தால் இராச்சியத்தைப் பரதனே அடைந்து இராமன் அடையாமலிருப்பானோ அதைச் சொல்லக்கடவை" என்று கேட்க, அதற்கு அந்தத் துஷ்ட மந்தரையும் இராமருடைய பாக்கியத்தைச் சகியாதவளாய்ப் பின் வருமாறு சொல்லலானாள்:—"முற்காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஒரு யுத்தம் நடந்தபோது அதில் தேவேந்திரனுக்குச் சகாயம் பண்ண உங்க

மந்தரை உபாயம் கூறல்.

ளுடைய நாயகராகிய தசரதர், ராஜரிஷிகளுடன் உங்களையும் அழைத்துக்கொண்டு சென்றார். தென்திசையிலுள்ளதாகிய தண்டகாரணியத்தில் வைஜயந்தம் என்று ஒரு பட்டணம் இருக்கின்றது. அங்குத் திமித்துவசன் என்று பெயர்பெற்ற ஓர் அசுரன் இருந்தான். அவனைச் சம்பரன் என்றும் சொல்லுவார்கள். நூறுவித மாயைகளைக் கற்றறிந்த அசுரனாகிய அவன் அங்கு அரசாண்டு வந்தான். அவன், எந்தத் தேவர் முன்னும் தோல்வி அடையாமல், வெகு உக்கிரமாகத் தேவேந்திரன் முன் நின்று போர்புரிந்து வந்தான். அந்த யுத்தம் நடக்கும் போது, இராத்திரிகாலந்தோறும் அரக்கர்கள், தூங்கிக் கொண்டிருக்கும் புண்பட்டபகைவர்களை வலியுடன் வந்து வெட்டி வதைசெய்வது வழக்கமாக இருந்தது. அந்தத் திமித்துவசனுடன் தசரதர் பெரும்போர் புரிந்தார். அதில் அவர் விரணப்பட்டு மூர்ச்சை அடைந்திருக்கும்பொழுது அவரை நீங்கள் போர்க்களத்திலிருந்து எடுத்துப்போய் ரக்ஷித்தீர்கள். அவர், மூர்ச்சை தெளிந்ததும் கண் விழித்துப்பார்த்து, தம்மைக் காப்பாற்றினதற்காகச் சந்தோஷமடைந்து, உங்களுக்கு இரண்டு வரங்கள் வேண்டிக் கொள்ள விடை கொடுத்தார். "அவைகளை எனக்கு வேண்டிய பொழுது நான் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றும் "அப்பொழுது நிச்சயமாகக் கொடுக்கவேண்டும்" என்றும் நீங்கள் வேண்டிக்கொண்டீர்கள். "அப்படியே ஆகக்கடவது" என்று உங்கள் நாயகர் உங்களுக்கு வாக்களித்தார். இந்தச் சங்கதியை எனக்கு நீங்களே முன்னர்ச் சொல்லியிருக்கின்றீர்கள். நீங்கள் சொல்லித்தான் இந்த விஷயம் எனக்குத் தெரிந்தது. நான், உங்களிடம் வைத்திருக்கிற அபிமானத்தால் இதை மறவாமலிருந்தேன். இதுதான் சமயம். இப்பொழுது நீங்கள் அந்த இரண்டு வரங்களையும் உங்கள் கணவரிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள். இராமருடைய பட்டா

பிஷேகத்துக்காக வந்துகொண்டிருக்கின்ற எல்லாப் பொருள்களையும் நிறுத்தி, 'இராமர் பதினான்குவருஷம் காட்டிற்குப்போய் வசிக்கவேண்டும்' என்று ஒருவரங் கேளுங்கள். 'பரதருக்குப் பட்டாபிஷேகஞ் செய்து வைக்கவேண்டும்' என்று மற்றொருவரம் கேளுங்கள். இராமர், பதினான்கு வருஷகாலம் ஊரில் இல்லாமல் அரண்ணியம் போய்விடுவாரேயானால், ஜனங்கள் பரதரிடம் பற்றுள்ளவர்களாய்விடுவார்கள். அதன் பின்னர்ப் பரதரை இந்த இராச்சியத்திலிருந்து ஒருவராலும் அசைக்க முடியாது. நீங்கள் அசுவபதியின் மகளல்லீரோ? உங்களுக்கு உபாயந் தெரியாதா? இப்பொழுதே நீங்கள் தரித்துக் கொண்டிருக்கும் ஆடையாபரணங்களைக் களைந்தெறிந்து அழுக்குத்துணியைக் கட்டிக்கொண்டு 'கோபகிருகம்' என்ற இடத்திற் சென்று வெறுந்தரையிற் படுத்துக்கொள்ளுங்கள். உங்கள் நாயகர் உங்களை நாடிவந்தால் அவரை முகமெடுத்துப் பார்க்கவேண்டாம். அவருடன் பேசவும் வேணடாம். அவரைக் கண்டால் துக்கத்தை அதிகமாகக்கொண்டு அழுங்கள். அவர் உங்களிடம் அதிக அபிமானம் வைத்திருக்கின்றாரென்பது நிச்சயம்; சந்தேகமில்லை. உங்கள் நிமித்தம் அரசர் அக்கினிப்பிரவேசஞ் செய்யவேண்டுமென்றாலும், அப்படியே செய்வார். உங்களுக்கு அவர் ஒருபொழுதும் கோபம் வர நடந்துகொள்ளார். நீங்கள் கோபித்துக்கொண்டால் அவர் சகிக்கவும் மாட்டார். உங்கள்மேல் அவர் அதிக நேசம் வைத்திருக்கின்றபடியால் உங்களுக்காகப் பிராணனையும் விட்டுவிடுவார். அங்ஙனமாக அவர் உங்களுடைய சொல்லையோ தட்டப்போகின்றார்? ஆகையால் இதுவரையில் இருந்ததுபோல மடப்பத்தன்மை யுடையீர்களாக இராமல் உங்களுடைய சௌபாக்கியத்தைப்பற்றி ஆலோசித்துப்பாருங்கள். உங்களுடைய கோபத்தை மாற்ற அரசர் ஒருகால் அநேகவித இரத்தினங்களையும் முத்

துக்களையும் சுவர்ணங்களையும் வாரிவாரிக் கொடுக்கலாம். அவைகள்மேல் ஆசையென்பதை நீங்கள் வைக்கக்கூடாது. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம் உண்டான காலத்தில் அரசர் உங்களுக்குக் கொடுத்திருக்கும் அந்த இரண்டு வரங்களைமட்டும் நினைவு மூட்டுங்கள். அதனால் உங்களது எண்ணம் முடிந்துவிடும். அவர் உங்களைத் தரையிலிருந்து தூக்கி, நல்வார்த்தை சொல்லித் தேற்றி 'நீகேட்கும் வரங்களைக் கொடுக்கிறேன்' என்று சொல்லுவராயின் அப்பொழுது, 'இராமர் பதினான்கு வருஷம் காட்டிற்குச் செல்லவேண்டும்,' 'பரதர் அரசராக இருந்து இந்தப் பூமியை ஆளவேண்டும்' என்று உங்களுடைய இரண்டு வரங்களையும் கேட்டுக்கொள்ளுங்கள். இவ்வண்ணம் நீங்கள் கேட்டுக்கொண்டால் உங்களுடைய குமாரருக்கு எல்லாவித நன்மைகளும் உண்டாய்விடும். இராமர் பதினான்கு வருஷகாலம் வனத்தில் வசித்தால், பரதர், சினேகிதர்களுடன்வேரூன்றியவராய், பகையொழிந்து மூலபலத்தையும் தமது அதீனமாக்கி, இராமர் காட்டிலிருந்து வந்த பின்னரும் ஆட்சியை வகிப்பர். அன்றியும், மக்கட்கு ராமர் அராமராய்விடுவர். இதுதான் சமயம். ஆகையால் நீங்கள், இந்த நிமிஷமே அச்சமின்றி, இராமருடைய பட்டாபிஷேகத்தை நிறுத்தும் ஏற்பாடுகளைப் பண்ணுங்கள்" என்றாள்.

இவ்விதமாகத் தீமையை நன்மையென்று போதித்த மந்தரையின் சொல்லைக் கேட்டு, கைகேயி, வெகு சந்தோஷமும் ஆச்சரியமு மடைந்து, தப்பானவழியிற் செல்லும் ஒரு பெண்குதிரையைப் போன்று தப்பான வழியிற் செல்பவளாய், மந்தரையைப் பார்த்து, "கூனி, நீ இவ்வளவு சாமர்த்தியமுள்ளவள் என்பது இதுவரையில் எனக்குத் தெரியாது. இவ்வளவுதூரம் என் க்ஷேமத்தை நீ

கைகேயி புத்தி முற்றிலுங் கெடுதல்.

எண்ணியிருப்பதும் எனக்குத் தெரியாது. இவ்வுலகத்தி லுள்ள கூனிகளில் புத்தியால் நிச்சயித்தறியவல்ல உத்தமமான கூனி நீதான். எனது காரியத்தில் நீ ஒருத்திதான் எப்பொழுதும் நன்மையையே தேடிக்கொண்டு இடைவிடாது கவலைகொண்டவளாக இருக்கின்ருய். நீ சொல்லாவிடின் இவ்விஷயம் என்ஞல் அறியமுடியாது. உலகத்தில் வெகுகெட்டகுணமுள்ளவர்களாகவும் அவலக்ஷணங்கள் பொருந்தியவர்களாகவும் பல கொடிய கூனிகள் இருக்கின்றூர்கள். நீயோ, வெகு அழகுள்ள ஒரு தாமரை காற்றுல் ஒரு பக்கம் வளைந்து நிற்பதுபோல், உனது கூஞல் அழகியவளாக விளங்குகின்ருய். உனது மார்பு, தோளுடன் பகைகொண்டு உயர்ந்திருக்கின்றது. கொப்பூழையுடைய வயிறு, உனது மார்பின் உயர்ச்சியைப் பார்த்து வெட்கங் கொண்டதுபோல், இளைத்திருக்கின்றது. உனது முகம், பூர்ண சந்திரன்போல் எவ்வளவு பிரகாசமாக இருக்கின்றது! முழந்தாளோ மிகவும் அழகுடன் விளங்குகின்றது. இரண்டு கால்களும் நீண்டிருக்கின்றன. நீ, வெண்பட்டாடையை அணிந்து, அழகாக என்முன்னே நடக்க நான் பார்க்கும்போதெல்லாம் ஒரு சிலாக்கியமான இராஜ ஹம்ஸப் பேடு போன்று தோன்றுகின்ருய். நீ, அசுரர்க்குத் தலைவஞன சம்பராசுரனைவிட அதிகமாயை வல்லாய். தேரினது கோணம் போல் உயர்ந்து தோன்றும் இக்கூன், புத்திகளையும் அரசவித்தைகளையும் மாயைகளையும் அடக்கிக்கொண்டிருக்கின்றது. இராமன் காட்டிற்குப்போகப் பரதன் பட்டமடைந்தவுடன், நான், ஆணிப்பொன்ஞற்செய்த மாலையை உன் கூனிற் சூட்டுகின்றேன். என்னுடைய காரியம் கைகூடினதும், களிப்போடு உனது கூனுக்கு நான் சந்தனம் பூசுகின்றேன். உனது முகத்துக்கு அழகிய குற்றமற்ற பொற்றிலகத்தையும் கழுத்துக்கு மிகநல்ல அணிகளையுஞ்

மந்தரையைக் கைகேயி புகழ்தல்.

செய்து இடுகின்றேன். நீ, இவைகளை யெல்லாம் அணிந்து கொண்டு நல்லபட்டாடைகளை உடுத்து ஒரு தேவதை போல் என் கண் முன்பாக உலாவிக்கொணடிருப்பாய். சந்திரபிம்பந்தானோ என்று எல்லாருஞ் சந்தேகிக்கும்படியான முகத்துடன் விளங்கிக்கொண்டு நீ சத்துருக்களைப் பார்த்துச் செருக்குற்று நடக்கப் போகின்றாய். என்னிடத்தில் நீ ஊழியம் செய்வதுபோல, அநேக கூனிகள், பட்டாடைகளையும் ஆபரணங்களையும் தரித்துக்கொண்டு உனக்குப் பணிவிடை செய்வார்கள்" என்று புகழ்ந்தாள்.

இவ்வண்ணமாக மந்தரையைப் புகழ்ந்துகொண்டு வேதியி லிருக்கின்ற கொழுந்துவிட்டெரியுந் தீப்போலப் படுக்கையில் கிடக்கும் கைகேயியைப் பார்த்து மீட்டும் மந்தரை, "தண்ணீரெல்லாம் ஓடிவிட்ட பிறகு அணை போடுவதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. ஆகையால் எழுந்திருங்கள்; உங்கள் க்ஷேமத்தைச் சீக்கிரம் நாடிக்கொள்ளுங்கள்; அரசனைச் சந்திக்கும் வழியைப் பாருங்கள்" என்றாள். இவ்வண்ணம் உற்சாகப்படுத்தப்பட்டவளாயும், சௌபாக்கியத்தாலுண்டான மதத்தாற் செருக்குக்கொண்டவளாயு மிருக்கும் பெண்மணியான கைகேயி மந்தரையுடன் தனது கோபகிருகத்தைச் சேர்ந்தவுடன், தான் அணிந்துகொண்டிருந்த விலையுயர்ந்த முத்துமாலை முதலான எல்லா அணிகளையும் களைந்தெறிந்து, பொற்பதுமைபோல் தனது சரீரத்தின் அழகொன்றாலேயே விளங்குபவளாய், வெறுந்தரையிற் படுத்துக்கொண்டு, மந்தரையைப்பார்த்து "அடி கூனி, 'இராமனைக் காட்டிற்கு அனுப்பிப் பரதனுக்கு முடிசூட்டிவைத்தால் நான் பிழைப்பேன். இல்லாவிடின் நான் இங்கு எனது பிராணனை விட்டிடுவேன். இரத்தினங்களாலும், சுவர்ணங்களாலும், ஆபரணங்களாலும் நான் மோசம்போகத்தக்கவ

கைகேயி கோபகிருகத்தில் புகுதல்.

ளல்லேன். இராமனுக்குப் பட்டாபிஷேகம் ஆய்விட்ட தென்றால் என் பிராணனும் அப்பொழுதே முடியவேண்டியதுதான்' என்று நீ அரசனிடம் சொல்லுவாய்" என்றாள். அதைக்கேட்டு மறுபடியும் கூனி, பரதருடைய தாயாகிய கைகேயியைப் பார்த்து, இராமருக்குத் தீமையையும் பரதருக்கு நன்மையையும் விளைவிக்கும்படி அவளுடைய எண்ணம் உறுதிப்படும்பொருட்டு "இராமர் முடிபெற்று அரசராய்விட்டால், நீங்களும்உங்கள்குமாரரும் வெகுவாக வருந்துவீர்கள். ஆகையால், உங்கள் க்ஷேமத்தை நீங்கள் கருதியிருந்தால், உடனே பரதருக்குப் பட்டாபிஷேகம் நடக்கும் வழியைப் பாருங்கள்" என்று சொன்னாள்.

கைகேயியின் துணிவு.

இவ்விதமாக இடித்திடித்துப் பலவாறு மந்தரையாற் போதிக்கப்பட்டு மிகக் கோபம் மூண்ட கைகேயி, அவளுடைய சொற்கள் ஒவ்வொன்றும் பாணங்கள் போலத் தனது நெஞ்சில் தைக்கவே, மார்பிற் கைவைத்துக்கொண்டு, அவளைப்பார்த்து "நீ நான் யமலோகம் சேர்ந்ததை அரசருக்கு அறிவிக்கவாவது நேரிடும். இல்லையாயின் இராமன் காட்டுக்குப்போகப் பரதன் பட்டத்துக்காவது வருவான். இராமன் காட்டிற்குச் செல்லும்வரையில் நான் படுக்கையிற் படுக்கமாட்டேன்; மாலை அணியமாட்டேன்; சந்தனம் பூசுவதில்லை; மைதீட்டுவதில்லை; உணவு கொள்ளமாட்டேன்; தண்ணீருங் குடிக்கமாட்டேன்; எல்லாவித இச்சைகளையும் விட்டவளாக இருப்பேன்; எனது உயிர்மேலும் எனக்கு ஆசையில்லை" என்றாள். கைகேயி, இவ்வாறு சொல்லித் தனது ஆபரணங்களை ஒன்றில்லாமற் களைந்தெறிந்துவிட்டு, வெறுந்தரையிற் கின்னரியென்னும் பறவைபோலச் சுருண்டு கிடந்தாள். இவ்வண்ணம் தனது மாலைகளையும் அணிகளையும் கழற்றி எறிந்து கோபவிருளால் முற்றிலும் மூடப்பட்ட முகத்துடன் வாடிக்கிடந்த

கைகேயி, நக்ஷத்திரங்களெல்லாம் இருளால் மறைய ஒன்றுந் தெரியாமல் இருண்டிருக்கும் ஆகாசம்போற் காணப் பட்டாள்.

பத்தாஞ்சருக்கம்:

தசரதர் கைகேயியைக் காணுதல்.

வெகு பாவியான மந்தரையால் இவ்வண்ணந் தூண்டி விடப்பட்டவளும் அவள் சொல்லால் மோகித்தவளும் சமர்த்தையுமான கைகேயியானவள், நஞ்சுபூசிய பாணத்தால் அடியுண்ட கின்னரியைப்போற் பூமியிற் படுத்து, மந்தரை மொழிந்த காரியத்தைத் தன் மனத்திற்குள்ளேயே ஆலோசித்து, 'நாம் எண்ணியது நன்றாய் இருக்கின்றது. என்று மந்தரையினிடஞ் சொல்லி, காரியத்தின் முடிவைப்பற்றித் தடுமாறுந் தனது மனத்தை ஒருவாறு உறுதிப்படுத்திக்கொண்டு, நாககன்னிகை போல் உஷ்ணமாகப் பெருமூச்செறிந்து, தனக்குச் சுகத்தைக் கொடுக்கும் வழியைச் சிறிது நேரம் ஆலோசித்தாள். இவ்வாறு அவள் கொண்ட நிச்சயத்தை அவளது தோழியும் அவளுடைய நலத்தைக் கருதுபவளுமான மந்தரை பார்த்து, காரியப்பயனைக் கண்டவள்போல் உள்ளங் களித்தாள்.

கைகேயி கோபகிருகத்தில் இருந்த விதம்.

கைகேயி, தனது மனத்தை நன்றாக உறுதிப்படுத்திக் கொண்டு, நெறித்த புருவங்களை யுடையவளாய் அழுக்கு வஸ்திரத்தைத்தரித்து, தலைமயிரை ஒரேமுடியாய்முடிந்து, உயிர்போன கின்னரிபோலக் கோபகிருகத்துத் தரையிற் படுத்தாள். அவளாற் களைந்தெறியப்பட்ட மாலைக

ளாலும் ஆபரணங்களாலும் நிறைந்திருந்த அந்தத்தரை, நக்ஷத்திரங்களால் விளங்கிநிற்கும் ஆகாசம்போற் பிரகாசித்தது.

இங்கு இவ்வண்ணமாக; தசரதமன்னவர், ஸ்ரீராமர் பட்டாபிஷேகத்துக்கு வேண்டுவனவற்றை விரைவிற் சித்தஞ் செய்யும்படி கட்டளையிட்டு, அதற்காகச் செய்யவேண்டிய ஏற்பாடுக ளெல்லாவற்றையுஞ் செய்து முடித்துத் தம்முடைய மந்திரி முதலிய உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் விடைகொடுத்து அனுப்பி, தமது அரண்மனையைச்சேர்ந்து, 'இனித்தான் இராமருடைய பட்டாபிஷேகத்தைத் தமது நட்பிற்குப் பாத்திரமான கைகேயி அறிவாள்' என்று எண்ணியவராய், அந்தப்புரத்திற்குள்ளே நுழைந்து, அவளுடைய மாளிகைக்குள் முதலிற் புகுந்தார். மிக்க புகழ்படைத்த அவர் அம்மாளிகைக்குட் புகுந்தது, வெண்மேகத்தையும் இராகுவையுங் கொண்ட ஆகாயத்திற் சந்திரன் நுழைவதுபோல் இருந்தது. அம்மாளிகை, எவ்விடத்திலும் கிளிகள் கொஞ்ச, மயில்கள் ஆட, கிரௌஞ்சம் ஹம்ஸம் இவைகள் கூவ, அநேகவித வாத்தியங்கள் முழங்க விளங்கிற்று. அதன் எல்லாப் பக்கங்களிலும் கூனர்களும், குறளர்களும் இருந்தார்கள். அங்கங்குச் சம்பகம் அசோகம் முதலிய புஷ்ப விருக்ஷங்களாலும் சித்திரங்களாலும் விளங்கும் அறைகளும், லதாகிருகங்களும் காணப்பட்டன. தந்தங்களினாலும் வெள்ளியினாலும் பொன்னினாலும் இயற்றப்பட்ட மேடைகள் அவ்விடத்தில் விளங்கின. எக்காலத்தும் பூக்கின்றனவும் பலத்தைக் கொடுக்கின்றனவுமாகிய மரங்கள் அங்கிருந்த அநேக வாவிகளுக்குச் சமீபத்தில் வெகு அழகாய் உயர்ந்து விளங்கி நின்றன. அங்குத் தந்தத்தினாலும் பொன்னினாலும் வெள்ளியினாலுஞ் செய்யப்பட்ட அநேக ஆசனங்கள் இடப்பட்டிருந்தன. அந்தமாளிகையில்

தசரதர் கைகேயியைக் காண அவள் மாளிகை புகுதல்.

உண்பதற்கும் குடிப்பதற்கும் யாதொரு குறைவுமில்லாமல் அநேகவித அன்னங்கள், பானங்கள், பக்ஷயங்கள் நிறைந்திருந்தன. அநேகவித ஆபாணங்களும் நிரம்பியிருந்தன. இவ்வாறு பொருள்மிகுதியால் சுவர்க்கம்போல் விளங்கும் அம்மாளிகைக்குள்புகுந்து, தசரதர், அங்கு உயர்ந்த படுக்கையில் அவளைக் காணுமல் வருத்தமடைந்து, 'கைகேயி எங்கே?' என்று விசாரித்தார்; ஏனெனில், அவள் அவ்வேளையில் முன்னர் ஒருபொழுதும் அங்கு இராமலிருந்ததேயில்லை. அரசரும் சூனியமானகிருகத்திற் புகுந்ததேயில்லை. இன்று அவள் புத்திமாறிச் சுவகாரியமாக இறங்கிவிட்டதை அம்மன்னவர் அறியார். பின்னர்,

கைகேயி கோபகிருகத்தில் இருப்பதை மன்னவர் கேட்டல்.

வாயில்காப்பவள் தனது கரங்களைக் கூப்பிக்கொண்டு அச்சத்தோடு "சுவாமி, தங்களுடைய தேவியார் ஏதோ ஒரு காரணத்தால் வெகு கோபங் கொண்டு கோபவறைக்குட் புகுந்திருக்கின்றூர்" என்றுள். அதைக்கேட்டுஅரசர், வெகு துன்பமுற்று, தமது புலன்களெல்லாம் தத்தந்தொழிலை இழக்கத் துக்கக்கடலில் முழுகினவராகி, அவ்வறைக்குட் சென்று தனது வழக்கத்துக்கு விரோதமாய் வெகு துக்கப்பட்டவளாகப் படுத்துக்கொண்டிருக்குங் கைகேயியைக் கண்டு, துக்கத்தால் மிகத்தபித்தார்; ஒருபாவமுமறியாத அந்தக்கிழவர், பாவத்துக்கென்றே தோன்றியிருக்குஞ் சிறுபெண்ணுகிய கைகேயியைத் தமது உயிரினும் அதிகமாக எண்ணியிருந்தார்.

வேர் களைந்து எறியப்பட்ட கொடிபோலவும், சுவர்க்கத்திலிருந்து புண்ணியத்தின்முடிவில் தள்ளப்பட்ட தேவதைபோலவும், துடித்துக்கொண்டிருக்குங் கின்னரிபோலவும், கீழேவிழுந்துவிட்ட தேவகன்னிகைபோலவும், ஏவிவிடப்பட்ட மாயைபோலவும், வலையிலகப்பட்ட பெண்மான்போலவும், ஒரு வேடன் விடுத்த அம்பால் தைக்கப்

பட்டு வெருண்டோடின பெண்யானைபோலவும் கைகேயி யானவள் அவ்விடத்திற் பரிதபித்துக்கொண்டிருப்பதைத் தசரதமன்னர் அன்போடு கண்டார். காட்டினிடத்து மதயானையானது தனது பிடியானையைக் கண்டால் எவ்வாறு தடவிக்கொடுக்குமோ, அதுபோலத் தசரதரும் கலங்கின உள்ளத்துடன் அவளைத் தமது கைகளால் தடவிக் கொடுத்து, அவளைப்பார்த்து, அவள் விசனப்படுங்காரணத்தை விசாரிக்கலாயினர். "தேவி, நீ என்பேரில் யாது காரணத்தாற் கோபம் அடைந்திருக்கின்றாயோ, அது எனக்குத் தெரியவில்லை. உன்னை யாவர் நிந்தித்தார்கள்? அல்லது அவமானம் பண்ணினார்கள்? நீ ஏன் இவ்வண்ணம் பூமியிற் புரண்டுகொண்டிருக்கின்றாய்? உன்னை இந்த நிலைமையிற் பார்க்க எனது மனம் வேகின்றதே! உன்னிடத்திலே அன்புவைத்த என் முன்பு எனது மனந் துடிக்கப் பிசாசு பிடித்தவள்போற் புழுதிபடிந்த பூமியிற் புரளுவது உனக்குத் தக்கதா? சமர்த்தர்களாயும் மனமுவந்தவர்களாயு மிருக்கும் அநேக வைத்தியர்கள் என்னிடத்தில் இருக்கின்றார்கள். உனக்கு ஏதாவது நோய் என்றால் உடனே சொல்லு; அவர்களைக்கொண்டு நான் அதை ஒரு நொடியில் தீர்த்துவைக்கின்றேன். உனக்கு நன்மை செய்தவர் யாவர்? தீமைசெய்தவர் யாவர்? உன்னிடத்திலிருந்து யார் நன்மையைப் பெறவேண்டும்? யார் தீமையைப் பெறவேண்டும்? நீ அழவேண்டாம். உனது தேகத்தை வருத்தாதே. யாருடைய தலையையாவது வாங்கிவிடவேண்டுமா? அல்லது தலை வாங்கக் கட்டளையிடப்பட்ட எவனையாவது அந்தத் தண்டனையிலிருந்து நீக்கிவிடவேண்டுமா? எந்த ஏழையையாவது செல்வவானாக்க வேண்டுமா? அல்லது எந்தத் தனிகனையாவது வறியவனாக்க வேண்டுமா? நானும் என்னைச் சேர்ந்தவர்களெல்லாரும் உன் இஷ்டப்படி நடப்பவர்களே. நீ சொல்லுவதற்குப்

மன்னவர் கைகேயியைக் கோபகாரணம் விசாரித்தல்.

பிரதிகூலமாய் ஒருநாளும் நடக்க நான் பொறேன். என் பிராணனைக் கொடுத்தாவது உனது வேண்டுகோளை நான் முடித்துவைக்கின்றேன். உனக்கு என்னிட மிருக்குஞ் செல்வாக்கு உனக்கே தெரியும்; ஆகையாற் சந்தேகமே வேண்டாம். உனது மனத்தை எப்படியாவது நான் சந்தோஷப்படுத்திவைக்கின்றேன். இதைப்பற்றி எனது புண்ணியத்தின்மேலும் சத்தியம் பண்ணுகின்றேன். சூரியனுடைய தேர்ச்சக்கரம் எதுவரையிற் சுழல்கின்றதோ அதுவரையில் என்னுடையது இவ்வுலகம். கிழ்த்தேசங்கள், சிந்துதேசம், ஸௌவீரம், ஸௌராஷ்டரம், தென்தேசம், வங்கம், அங்கம், மகதம், மத்ஸ்யம், செழுமையாகிய காசி, கோசலம் இத்தேசங்களில் தனதானியாதி அநேகம் பொருள்கள் உண்டாகின்றன. இவைகளுள் உனக்கு எது வேண்டுமோ அதைக்கேட்பாய். நீ கவலையுறாதே. எழுந்திரு, எழுந்திரு; கட்டழகி, அச்சப்படுபவளே, உனக்கு என்ன பயம் வந்தது? சொல்லுவாய்; சூரியன் பனித்துளிகளை அகற்றுவதுபோல அதை ஒருநொடியில் அகற்றிவைக்கின்றேன்" என்றனர். இவ்வாறு தசரதர் சொன்னவுடனே கைகேயி, சற்றுத் தைரியமடைந்து, வருத்தமடைந்திருக்குந் தனது கணவரை மேலும் வருத்தப்படுத்த ஆரம்பித்தாள்.

பதினோராஞ் சருக்கம்:

கைகேயி தசரதரிடத்தில் இரண்டு வரங்களையும் வேண்டுதல்.

மோகவலையிற் சிக்கி இவ்வாறு தன்னை விசாரித்து நின்ற அந்த உலகபாலகரைப் பார்த்துக் கைகேயி "சுவாமி,

எனக்கு ஒரு வியாதியும் இல்லை; என்னை ஒருவரும் அவமதிக்கவும் இல்லை; ஆனால், என் உள்ளத்தில் ஒரு எண்ணம் இருக்கின்றது. அதனை முடித்துக் கொடுக்கத் தங்களுக்குக் கருத்திருந்தால், தாங்கள் சத்தியம் பண்ணிக் கொடுங்கள். அதன்மேல் எனது அபிப்பிராயத்தை நான் வெளியிடுகின்றேன்" என்று, கேட்பதற்கே அச்சமுண்டாகும்படி கூறினாள்.

கைகேயி வரங்களைக் கேட்கத் தொடங்குதல்.

தசரதர், புன்னகைகொண்ட கைகேயியின் தலையைத் தமது கைகளால் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு, புன்னகையுடன் அவளைப்பார்த்து, "கருவமடைந்தவளே, உன்னையன்றி மடந்தையரிற் சிறந்தவர் எனக்கு இவ்வுலகத்தில் ஒருவருமில்லை. 'புருஷசிங்கமாகிய அந்த இராமன் ஒருவனைத் தவிர, மனிதரில் உயர்ந்தவரொருவருமில்லை' என்பது உனக்குத் தெரியாதா? பகைவரால் வெல்ல முடியாதவனும் முக்கியனும் மகாத்மாவாயும் உனக்கு உயிர்வாழ்வினுஞ் சிறந்தவனாயு மிருக்கும் இராமன்மேற் சத்தியம் பண்ணி உன் இஷ்டத்தை முடித்து வைக்கின்றேன். உனது வேண்டுகோளை மட்டும் வெளியிடு. எவனை ஒரு நிமிஷமேனும் காணாவிடில் நான் எனது பிராணனை வைத்துக்கொண்டிருக்க மாட்டேனோ, அந்த இராமன்மீது சத்தியம் பண்ணி நீ வேண்டிக்கொள்வதை நடத்திவைக்கின்றேன். எனது உரிமையாகிய பிராணனினும் எனது மற்றைக் குழந்தைகளினும் சுற்றத்தார்களினும் மேலாக எந்த இராமனை விரும்புகின்றேனோ அந்த இராமன் பெயரைக்கொண்டு, நீ சொல்லுவதை நான் நடத்தி வைககின்றேன் என்று சத்தியம் பண்ணுகின்றேன். எனது மன நிச்சயத்தை எண்ணி என்னைப் பிழைப்பிப்பாய். இதில் நீ சந்தேகங் கொள்ளவேண்டாம். உனது உள்ளத்தை

மன்னவர் சபதம்.

வெளியிடு; அதை நிறைவேற்றிவைப்பதாக நான் இது வரையிலுஞ் செய்திருக்கும் புண்ணியங்களை யெல்லாங் கொண்டு சபதம் பண்ணுகின்றேன்" என்றார்.

இவ்வாறு தசரதர் சொன்ன சொல்லைக் கேட்டுக் களித்து, தனது காரியத்திலேயே கருத்துவைத்த கைகேயி, சந்தோஷமடைந்தவளாய், "தாங்கள் இப்பொழுது சாஸ்திரப்பிரகாரம் சபதம் கூறிவிட்டீர்கள். எனக்கு வரத்தையுங் கொடுத்துவிட்டீர்கள். இதற்கு முப்பத்துமூன்று தேவர்கள், அக்கினி, சந்திரன், சூரியன், ஆகாயம், கிரகங்கள், இரவு, பகல், திக்குகள், உலகம், கந்தருவர்கள் இராக்கதர்கள் ஆகிய இவர்களுடன்கூடிய இப்பூமி, இரவிற் சஞ்சரிக்குங் கணங்கள், வீட்டிலிருக்குந் தெய்வங்கள், மற்றுமுள்ள பூதங்கள் ஆகிய இவர்களெல்லாரும் சாட்சிகள். ஓ தேவதைகளே, மிக்க உண்மையும் உறுதியும் தருமமுமுடைய அரசர் எனக்கு வரங்கொடுக்கிறார். நீங்களெல்லாரும் கேட்கக் கடவீர்கள்" என்று பக்ஷபாதத்தால் கொடிய வார்த்தைகளைக் கூறினாள்.

கைகேயி சாக்ஷி கூறல்.

அதன்பின்னர், கைகேயி, தான் கேட்ட வரத்தைத் தனக்குக் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கும் அவ்வேந்தரைப்பார்த்து "முன்னொருகாலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஒரு யுத்தம் நடந்ததன்றோ! அது தங்கள் ஞாபகத்தில் இருக்கின்றதா? அந்தப்போரில்தங்களுடைய உயிர் ஒன்றைத்தவிரத் தங்களுடைய பலம் முழுவதையும் அசுரர்கள் வாங்கிவிட்டார்கள். அக்காலத்தில், இரவும் பகலும் கண்ணிமையாமல் நான் தங்களைப் பாதுகாத்தேன். அந்த உபகாரத்திற்கு ஈடாக நான் வேண்டும் இரண்டுவரங்களைக் கொடுக்கின்றேன் என்று தாங்கள் எனக்கு அப்பொழுது வாக்குத்தத்தம்பண்ணினீர்கள்.

கைகேயி தனக்கு மன்னவர் கொடுத்த வரத்தை ஞாபகப்படுத்தல்.

உண்மை தவருத அரசரே, நான் இதுவரையில் அவைகளைப் பெற்றுக்கொள்ளாமல் தங்களிடத்தே வைத்திருந்தேன். இப்பொழுது அவைகளை நான் அடைய விரும்புகின்றேன். அவைகளைத் தாங்கள் எனக்குக் கொடாவிடில், நான் மனவெறுப்பை அடைந்து எனது பிராணனை விட்டிடுவேன்" என்ருள்.

மிருகநாதத்தை யொத்ததான வேடன்குரலினுல் வலைக்குள் மான் சிக்கிக்கொள்வதுபோல, தசரதர், இவ்வாறு மொழிந்த கைகேயியினுடைய வார்த்தையைக் கேட்டமாத்திரத்தால், தம்முடைய அழிவின்பொருட்டுத் தருமவலையிற் சிக்கிக்கொண்டார். பின்பு, தன் மோகவலையிற் சிக்கித் தான்கேட்டதைக்கொடுப்பவரான அவரைப் பார்த்துக் கைகேயி, "பூமிபாலரே, அக்காலத்தில் தாங்கள் எனக்கு இரண்டு வரங்களை வேண்டிக்கொள்ள அனுமதி கொடுத்திருந்தீர்கள். அவைகளை நான் இப்பொழுது வேண்டிக்கொள்ளுகின்றேன்; கேட்பீர்களாக. முதலாவது, இராமனுடைய பட்டாபிஷேகத்திற்காக எவ்வெப் பொருள்கள் சித்தப்பட்டிருக்கின்றனவோ, அவைகளைக் கொண்டு பரதனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணிவைக்கவேண்டும். தேவாசுரயுத்தத்தில் மனமுவந்து கொடுத்த இரண்டாவது வரத்திற்கும் இதுதான் சமயம். அது என்னவென்ருல், இராமன் பதினுன்கு வருஷம் தண்டகாரணியத்தில் மரவுரி மான்ருேல் உடுத்துச் சடை யணிந்துகொண்டு முனிவன் போல் வாழவேண்டும். பகையற்றிருக்கும் இராச்சியத்தில் இப்பொழுதே பரதன் இளவரசுப்பட்டம் அடையவேண்டும். இவைகளே எனது வேண்டுகோள்கள். முன்கொடுத்த வரத்தைத்தான் நான் வேண்டுகிறேன். இன்றைத்தினமே இராமன் காட்டிற்குப் போவதை நான் என்னுடைய கண்களாற் பார்க்கவேண்டும். இவ்வரங்களை எனக்கு நிறைவேற்

கைகேயி கேட்ட வரங்கள்.

றிக்கொடுத்துத் தாங்கள் 'அரசர்க்கரசர்' என்ற பெயரை யும் 'சத்தியத்திலிருந்து வழுவாதவர்' என்ற புகழையும் அடையுங்கள். தங்களுடைய குலத்தையும் ஆசாரத்தையும் பிறப்பையும் பாதுகாத்துக்கொள்ளுங்கள். சொன்னசொல் தவருது நடப்பதுதான் பரலோகத்துக்குப் பெரியசாதனம் என்று முனிவர்களுங் கூறுகின்ருர்கள்" என்ருள்.

பன்னிரண்டாஞ் சருக்கம்:

கைகேயியை நோக்கித் தசரதர் சோகத்தாலுங் கோபத்தாலுஞ் சொன்ன சொற்கள்.

அம்மகாராஜர், இவ்வண்ணம் வெகு கொடுமையா கக் கைகேயி சொன்னதைக் கேட்டு, ஒன்றும் சொல்லத் தோன்ருமல் சிந்தாசாகரத்தில்முழுகி முகூர்த்தகாலம்பரி தபித்தார்; அப்பொழுது அவர் மனத்தில் 'இது கனவா? அல்லது சித்தப்பிரமமா? அல்லது முற்பிறப்பில் அநுப வித்த பொருள்களின் பாவனையா? அல் லது இப்பொழுது என் மனத்திற்கு வந் திருக்கும் உபத்திரவமா?' என்று பலவாறு ஆலோ சித்து அற்பசுகமும் அடையாமல் வெகுநேரங் கழிந்த பின்னர்ச் சற்று மயக்கந்தெளிந்து, மனத்தைக் கிளறிக் கொண்டிருக்குங் கைகேயி சொல்லால் நெஞ்சு புண் பட்டு, துக்கத்தால் நடுநடுங்கி, புலியைக் கண்ட மான் போலப் பிரமித்து வெறுந்தரையிலிருந்து பெருமூச்சு விட்டார். அவர், அந்தச் சமயத்தில், மந்திரத்தாற் கட்டப் பட்டு ஒன்றுஞ்செய்ய முடியாமற் சீறிக்கொண்டிருக்கும் மிக்க விஷத்தையுடைய சருப்பம்போற் காணப்பட்டார். அவர், பொறுக்கமுடியாத கோபத்தால் "சீ" என்று சொல்லி, துயர்மிகுந்த மனத்தை யுடையவராய் மறுபடி யும் மூர்ச்சை அடைந்தார்.

அரசர் சோகம்.

மன்னவர், வெகுநேரம் சோகந் தெளியாமலிருந்து, பின்னர் நல்லறிவை அடைந்து, வெகு துக்கப்பட்டவராகிக் கைகேயியைத் தமது கண்ணுல் எரித்துவிட எண்ணங் கொண்டவர் போன்று ஒரு பார்வை பார்த்து, வெகு கோபத்துடன் அவளை நோக்கிச் சொல்லலாயினர்:— "கொடுந்தன்மை யுடையவளே, கூடா வொழுக்கமுடைய வளே, இந்தக் குலத்தை நாசம்பண்ண வந்தவளே, மகா பாவி, உனக்கு இராமன் என்ன தீங்குசெய்தான்? அல்லது நான்தான் என்னசெய்தேன்? இராமன் உன்னைத் தனது பெற்ற தாயைப் போல் எண்ணி நடந்து வருகின்றனே! அவனையே கெடுக்கும்வண்ணம் நீ இவ்வாறு யத்தனிக்கின்றயே! இதற்கு என்ன காரணம்? நான், தெரியாமல் என்னுடைய கேட்டிற்காகக் காலகூட விஷத்தையுடைய பாம்புக்குட்டியை வீட்டில் வைத்துக்கொள்வதுபோல் இராஜ குமாரியாகிய உன்னை எனது வீட்டில் வைத்துக்கொண்டேன்; நிச்சயம். எனது விருப்பிற்கெல்லாம் பாத்திரமான இராமனை அவனுடைய உத்தமகுணங்களுக்காக உலகத்தில் உயிருடன் இருக்கும் ஒவ்வொரு பிராணியும் புகழும்போது எந்தக் குற்றத்திற்காக நான் அவனை அநியாயமாய்க் காட்டிற்கு அனுப்புவேன்? ஒருகால் கௌசல்யையை நீக்கிவிட்டாலும் விட்டிடுவேன்; அவ்வண்ணமே எனது சம்பத்தையும் சுமித்திரையையும் பிராணனையும் விடு என்றலும் விட்டிடுவேன்; என்னிடத்தில் எப்பொழுதும் அன்பும் ஆதரமுங் காட்டிக்கொண்டு என்னையே அடைக்கலமாக அடைந்திருக்கும் இராமனை நான் உயிருடன் இருக்கும்போது எப்படி விடுவேன்? என் மூத்தகுமாரனுன இராமன் விஷயமாக எனக்கு அன்பு மிகுகின்றது. அவனை ஒரு நிமிஷம் காணுவிடினும் எனக்குப் புத்தி போய்விடுகின்றது. ஒருகால், சூரியனில்லாமல் உலகம் வாழும்; தண்ணீரில்லாமற் பயிர்

அரசர் கைகேயியை நிந்தித்தல்.

கள் வளரும். இராமன் இல்லாமல் எனது தேகத்தில் உயிர் ஒருபொழுதும் தங்கமாட்டாது. ஆகையால், அடி பாவி, இந்தக் கெட்ட எண்ணத்தை விட்டிடு. உனது காலில் விழட்டுமா? என்மீது கருணைவை. அடி பாவி, இவ்வாறு நீ ஏன் வெகு கொடுமையாக நினைத்தாய்? ஒருகால், பரதன்மேல் எனது அன்பு எவ்வாறிருக்கின்றது என்று பரீட்சித்தறியவேண்டும் என்ற கருத்துக் கொண்டு நீ சொல்லியிருக்கலாம். ஆயினும், நீயே அநேகம் தடவைகளில் 'தருமநெறியிற் பிறழாது நடக்கும் செல்வவானுன இராமன்தான் எனக்கு மூத்தகுமாரன்' என்று சொன்ன சொல்லோடு 'இராமன் பதினன்கு வருஷம் காட்டில் வசிக்கவேண்டும்' என்கிற சொல் மாறுபடுகின்றதே! இராமனிடத்து அன்புள்ள நீ இராமனுடைய பட்டாபிஷேகத்தைக் கேட்டு வருத்தப்பட்டு எனக்குத் துன்பத்தை வளர்க்கின்றதனுலும், பரவசமாய்ச் சூனியமான கோபவறையிற் புகுந்திருப்பதனுலும், 'என்னைச் சோதித்தற்கு இவ்வாறு சொன்னுய்' என்று எண்ணவுமிடமில்லையே! தேவி, நியாயவழியிலேயே நிற்கும் இக்ஷ்வாகு வம்சத்தில், உனது புத்தி கெட்டுவிட்டபடியால் மிக்க அநியாயம் வந்துவிட்டது. நீண்ட கண்களையுடையாய், இதுவரையிலும் ஒருபொழுதும் நீ தீமையை விளைக்குந் தொழிலையேனும், எனக்கு விருப்பமில்லாத் தொழிலையேனும் செய்ததில்லை; ஆதலால், உண்மையாகத்தான் சொல்லுகிருய் என்று எண்ணவுமிடமில்லையே! நன்மடந்தாய், 'எனக்கு இராமனுஞ் சரிதான்; பரதனுஞ் சரிதான்; ஒரு வித்தியாசமும் இல்லை' என்று பலமுறைசொல்லி யிருக்கின்றுயே. அதருமத்திற்கு அஞ்சுபவளே, அவ்வாறு சொல்லிவிட்டு நீ 'தருமசிந்தையுள்ளவனுயும் புகழ்பெற்றவனுயுமிருக்கும் இராமன் காட்டில் பதினன்கு வருஷம் வசிக்கவேண்டும்' என்று எவ்விதமாக எண்ணங் கொண்டாய்? மிக்க கொடுமையுடையாய், வெகு தருமசாலியா யிருந்து

கொண்டு பெயரும் புகழு மிதற்குள்ளேயே பெற்றிருக்கும் மிக்க சுகுமாரனான எனது இராமன் கொடுங்காட்டினிடத்துப்போய் வசிக்கவேண்டும் என்று எவ்வாறு விரும்பினாய்? ஒவ்வொரு பிராணியினுடைய மனத்தையுஞ் சந்தோஷிப்பிப்பவனும் உனக்கு எப்பொழுதும் பணிவிடை செய்பவனுமான இராமன் காட்டிற்குப் போகவேண்டும் என்று எதற்காக விரும்பினாய்? பரதனைப் பார்க்கிலும் இராமன் உனக்கு அதிகமாகப் பணிவிடைகளைப் புரிகின்றான். இராமன் செய்யும் மரியாதையைவிடப் பரதன் உனக்கு அதிக மரியாதை செய்ய நான் பார்த்ததே யில்லை. பணிவிடை, பெருமை பாராட்டுதல், மரியாதை, சொன்ன சொற் கேட்டல் ஆகிய இவைகளை உனக்குச் செய்பவன் இராமனைத்தவிர வேறு யார்? இங்கிருக்கும் ஆயிரம் பெண்களை நீயே விசாரி; ஆயிரம் வேலைக்காரர்களையும் விசாரி; அபகீர்த்தி அல்லது அபவாதம் ஏதேனும் இராமனுக்குண்டா? புருஷசிரேஷ்டனான இராமன் தனது பரிசுத்தமான மனத்தினால் எல்லாப் பிராணிகளையும் ஆதரித்துக்கொண்டு, அவர்களுக்கு இஷ்டமானவற்றைக் கொடுப்பதனால் இத்தேசத்து எல்லா மக்களுடைய மனத்தையுங் கவர்ந்திருக்கின்றான். உண்மையால் உலகத்தை வெல்லுகின்றான்; ஏழைகளைக் கொடையால் இரட்சிக்கின்றான்; பெரியவர்களைப் பணிவிடைசெய்து தன்வசம் ஆக்கிக்கொள்ளுகின்றான்; முனை முகத்தில் வில்லைப்பிடித்து வீரனாய் நின்று வெற்றி கொண்டு பகைவர்களை அடக்குகின்றான்; உண்மை, தானம், தவம், வரையாது கொடுத்தல், நேசம், ஆசாரம், ஒழுங்காக நடத்தல், கல்வி, பெரியோரிடத்து வணக்கம் இவைகளெல்லாம் எனது இராமனிடந்தான் அசையாமல் இருக்கின்றன. இவ்விதமான நற்குணங்களைப் பொருந்தித் தேவன்போலவும் மகர்ஷிபோலவும் விளங்கும் என்னுடைய இராமனைக் காட்டிற்கு ஓட்டும் வண்ணம் எவ்வாறு கருதுகின்றாய்! இது உனக்கு வெகு பாவமன்றோ? எனது

இராமன் ஒரு பிராணியையாவது கடிந்து சொன்னதை நான் பார்த்ததே இல்லை. அவன், எப்பொழுதும் எல்லா ஜனங்களிடத்திலும் அன்பாகப் பேசுகின்றவனாயிற்றே. அங்ஙனம் இருக்க, என் விருப்பிற்கிடனான அவனிடம் உனக்காக நான் எவ்வண்ணம் கடிந்து பேசுவேன்? மனத்தினால் நினைக்கவும் முடியவில்லையே! எவனொருவனிடத்தில் பொறுமை, ஐம்பொறியடக்கல், தியாகம், உண்மை, தருமம், செய்ந்நன்றியறிதல், கொல்லாமை ஆகிய இத்தனை தருமமும் பொருந்தி இருக்கின்றனவோ, அவனையன்றி எனக்கு வேறு கதி யாவர்? ஆகையால், என்னைப்பார்த்துச் சற்றுக் கருணைசெய். எனக்கோ வயதாய்விட்டது. இன்றைக்கோ நாளைக்கோ என்று நான் மரணத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். துக்கத்தால் நொந்திருக்கின்றேன்; வெகுபரிதாபத்துடன் உன்னை வேண்டிக்கொள்ளுகின்றேன்; கடல்சூழ்ந்த இந்நிலவுலகத்தில் எவ்வளவு பொருள் கிடைக்கின்றதோ, அஃதெல்லாவற்றையும் நான் உனக்கு இதோ கொடுக்கின்றேன்; இராமன் விஷயமான கோபத்தைவிட்டிடு. உன்னைக்குறித்து எனது கைகளைக் கூப்புகின்றேன். உன்னுடைய பாதங்களில் விழுகின்றேன். நீதான் இராமனுக்குப் புகலிடம். என்னை வீணாகப் பாவத்திற்கு உள்ளாக்காதே" என்று பலவாறு வேண்டினார்.

இவ்வாறு துக்கத்தால் மிகவும் பரிதபித்துக்கொண்டும், கதறிக்கொண்டும், அறிவே இல்லாமற் புரண்டுகொண்டும், துயரக்கடலில் முழுகிய தம்மை அதினின்று எவ்விதமாவது கரையேற்றி விடும்வண்ணம் வேண்டிக்கொண்டிருக்குந் தசரதரைப் பார்த்துக் கைகேயியானவள், அதிக கோபமடைந்தவளாய், "அரசரே, முதலில் ஒரு வரத்தைக் கொடுத்துவிட்டு அதன்பின் 'ஐயோ! கொடுத்துவிட்டேனே!' என்று நீர் மனம் வருந்தினால் இனி

கைகேயியின் விடாப்பிடி.

உம்மை 'உண்மையுள்ளவர்' என்று உலகத்தில் எங்ஙனம் சொல்லிக்கொள்ளுவீர்? தருமத்தை அறிந்த அரசரே, உம்மைப்போன்ற மகாராஜர்கள் உம்மைச் சூழ்ந்து நின்று இந்த விஷயத்தைப் பற்றி உம்மை விசாரிக்கத் தொடங்கினுல் அவர்கள்முன்பாக நீர் எவ்வாறு விடை சொல்லுவீர்? 'எவளுடைய அனுக்கிரகத்தால் நான் பிழைத்திருக்கிறேனே, எவள் என்னை முற்காலத்தில் உபசாரங்களினுல் காப்பாற்றினுளோ, அவளுக்கு நான் வாக்குதத்தம் பண்ணி அவ்வாறு செய்யாமல் அவளை மோசம்பண்ணிவிட்டேன்' என்று நீர் துணிந்து சொல்லுவீரா? நீர் ஒரு வரத்தை எனக்குக் கொடுத்து இப்பொழுது அதை இல்லையென்று சொல்லி மன்னவர்களுக்கெல்லாம் அபகீர்த்தியை விளைத்துவைக்கின்றீர்! உமது குலத்தில் உதித்த சிபி சக்கரவர்த்தியானவர் தமது தேகத்தை அறுத்துப் பருந்திற்குப் போட்டு ஒரு புருவைக் காப்பாற்றவில்லையா? அளர்க்கர் என்பவர் தமது கண்களைக் கொடுத்து உத்தமமான கதியை அடையவில்லையா? சமுத்திரமும் தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கிச் சபதஞ்செய்து கரைகடவாமல் தன் நிலையில் நிற்கவில்லையா? ஆகையால், நீர் உமது வாக்கைப் பொய்யாகப் பண்ணிக்கொள்ள வேண்டாம். முன் நடந்திருப்பவைகளை யெல்லாம் ஆலோசித்துப் பாரும். கெடுமதியுடையீர், நீர், சொன்ன சொல்லைத் தவறி இராமனுக்கு முடிசூட்டி வைத்து, கௌசல்யையுடன் கூடிவாழ்தற்கு விரும்புகின்றீர். நான் கேட்டுக்கொண்டது நியாயமோ, அநியாயமோ, நன்ருக இருக்கின்றதோ, இல்லையோ, நீர் சொன்ன சொல்லைமட்டும் தவறக்கூடாது. நீர் மாத்திரம் இராமனுக்குப் பட்டங் கட்டிவைத்தால் உமது கண்முன்பாகவே விஷத்தைக் குடித்து உமது காலில் விழுந்து எனது உயிரை மாய்த்துவிடுவேன். இராமன் அதிகாரத்திற்கு வந்தபின்னர், அவனது தாயாராகிய கௌசலைக்கு

நடக்கும் மரியாதைகளை ஒருநாள் பார்ப்பதைக் காட்டிலும் சாவது உத்தம மன்றோ? பரதன்மீதும் என் மீதும் ஆணையிட்டு நான் சொல்லுகிற தென்னவெனில், இராமன் காட்டிற்குப் போவதா லன்றி வேறொன்றால் நான் ஒருபொழுதுஞ் சந்தோஷம் அடையமாட்டேன் என்பது தான்" என்று இவ்வளவுஞ் சொல்லி ஓய்ந்தாள். அரசர் எவ்வளவு புலம்பினபோதிலும் அவரை அவள் தேற்றவே இல்லை. அவர், 'இராமன் காட்டில் வசிக்கவேண்டும்; பரதனுக்குப் பட்டங் கட்டவேண்டும்' என்ற இவ்வளவு கொடிய கைகேயியினுடைய வரத்தையும் 'இவ்வாறு செய்யாவிடிற் சாவேன்' என்ற சபதத்தையும் செவிசாய்த்துக் கேட்டு, ஐம்புலனுங் கலங்கப்பெற்று, கைகேயியிடம் ஒருவார்த்தையுஞ் சொல்லாமல் சற்றுநேரம் இருந்தார்; இவ்வளவு கடினமாகப் பேசிய தமது மனைவியைக் கோபத்தால் விழித்துப்பார்த்தார்; இடிவிழுந்தாற்போல அவளுடைய வாயினின்றுந் தமது உயிர்மீது விழுந்தவையும், வெறுக்கத்தக்கவையும், துக்கமே நிறைந்தவையுமான கொடுஞ்சொற்களைக் கேட்டு அவர் சுகத்தை அடையவேயில்லை; கைகேயியினுடைய மனவுறுதியையும் அவள்செய்த சபதத்தையும் நினைத்து "ராம" என்று வாய்விட்டு அலறிப் பெருமூச்செறிந்து, வெட்டுண்ட விருக்ஷம்போலக் கீழேவிழுந்தார்; கலங்கின மனத்தையுடையவன் போலவும், பைத்தியம் பிடித்தவன்போல்வும், கள்ளுண்டவன் போலவும், வியாதியால் பிதற்றுபவன் போலவும், மந்திரத்தால் வீரியமற்ற அரவம் போலவும் அவர் அப்பொழுது தோற்றினர்.

தசரதர் துயரம்.

அதிகமாகப் பேசுதற்குச் சக்தியற்றவராய் மெதுவாகக் கைகேயியைப் பார்த்து, அவர், "யார் உனக்கு இந்தக் கெட்டவழியை நல்லவழி என்று உபதேசித்தார்? பேய் பிடித்தவளைப்போல நீபேசுகின்றாயே! உனக்கு இவ்வாறு

கைகேயியின் கொடுமையைத் தசரதர் எடுத்துக் காட்டல்.

என்னிடஞ் சொல்ல வெட்கம் இல்லையா? நீ சிறுபெண்ணாக இருக்கும்போது உனது நடக்கை இவ்வண்ணமாயிருக்க நான் ஒரு பொழுதும் பார்த்ததே இல்லை. இப்பொழுது, நேர் விரோதமாக வன்றோ நீ காணப்படுகிறாய். இப்பொழுது பரதன் அரசாள வேண்டுமென்றும் இராமன் காட்டிற்குப் போகவேண்டு மென்றும் வரங்கேட்கும்படியாக உனக்கு என்ன பயம் வந்தது? உனது நாயகனுடைய நன்மையையும், உலகத்தினது க்ஷேமத்தையும், பரதனுடைய நல்வாழ்வையும் நீ விரும்பி யிருப்பாயாயின் இந்தக் கெட்ட எண்ணத்தை விட்டுவிடு. கருணையற்றவளே, பாவத்தொழிலை விரும்புமவளே, அற்ப புத்தி யுடையவளே, முற்பிறப்பிற்செய்த கொடும்பாவமுடையாய், நானாவது எனது இராமனாவது துன்பத்திற்கு ஏதுவான என்ன கெடுதியை உனக்குச் செய்தோம்? பரதன் இராமனை நீக்கித் தான் அரசனாதற்கு ஒரு பொழுதும் விரும்பான்; ஏனெனில், பரதன், இராமனிலும் அதிக தருமசிந்தை யுள்ளவன். 'காட்டிற்குப் போய் வா' என்று சொல்லும்போது எனது இராமன் முகம் இராகுவாற் பற்றப்பட்ட சந்திரபிம்பம்போல் வாடி நிற்க நான் எவ்வண்ணம் பார்த்துச் சகிப்பேன்? நான் எனது மந்திரிகளுடனும் சிநேகிதர்களுடனும் இராமனுக்கு முடிசூட்ட நிச்சயித்துவிட்டதன் பின்னர் அது இல்லை என்று முடிந்தால் அது எனக்கு ஒரு பகைவனால் நேர்ந்த தோல்வியை விட அதிக அவமானகர மன்றோ? அநேக திக்குக்களினின்று வந்திருக்கும் அரசர்கள் இந்த விஷயத்தைக் கேட்பின் யாது சொல்லுவார்கள்? 'இவ்வளவு மூடன், இத்தனை நாள்வரையில் எவ்வாறு அரசாண்டான்' என்று நகைப்பார்களே! நற்குணங்களால் விளங்குபவர்களாயும் மிக்க கேள்வியை யுடையவர்களாயு மிருக்கும் முதியோர் 'இராமன் எங்கே? ஏன் அவனுக்குப் பட்

டாபிஷேகம் பண்ணவில்லே?' என்று கேட்டால், 'கைகேயியினுடைய கட்டளையின்படி நான் அவனைக் காட்டிற்கு அனுப்பினேன்' என்று சொல்லவேண்டி வருமே! இவ்வாறு செய்வது உண்மைக்காக என்றாலும் "இராமனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யப்போகின்றேன்" என்று முன்னஞ் சொல்லிய சொல் பொய்த்துவிடுமே! இராமனை நான் காட்டிற்கு அனுப்பிவிட்டால் என்னைப் பார்த்துக் கௌசலை என்ன சொல்லுவாள்? அவளுக்கு நான் இவ்வளவு அநியாயஞ்செய்து, யாது பதில் சொல்லுவேன்? அவளோ, எனக்கு வேலைக்காரிபோற் பணிவிடை செய்தும், தோழிபோல் மிக்க இரகசியமானவற்றைச் சொல்லியும், பத்தினிபோல் தருமாநுஷ்டான காலங்களில் துணையாக இருந்தும், உடன் பிறந்தாள்போல் விசுவாசம் வைத்தும், தாய்போல் துன்பமுறும்போதெல்லாம் என்னைக் காப்பாற்றியும் வந்திருக்கின்றாள். என்னிடத்தில் பக்தியும், தனது குமாரனிடம் அன்பும், எல்லாரிடத்தும் ஆதரமும் உடையவளாயிருக்கும் அந்தப் பதிவிரதா சிரோமணிக்கு நான் உன்னிமித்தமாகச் சற்காரஞ் செய்யவில்லை! இடந்தெரியாமல் உன்னிடத்தில் அதிக அபிமானம் வைத்ததற்காக இப்பொழுது வருந்துகின்றேன். நோயாளி தனது உடம்பிற்கு ஒவ்வாத உணவை அருந்தி எவ்வாறு தவிப்பானோ, அவ்வாறு நான் இப்பொழுது தவிக்கின்றேன். 'இராமனுக்கு இராச்சியமில்லை; அவன் காட்டிற்குப் போய்விடுவான்' என்று கேட்டவளவில் நடுங்கிவிடுஞ் சுமித்திரை, பின்னர் எப்பொழுதாவது என்னை நம்புவளா? அந்தோ! சீதை இரண்டு துக்கங்களைக் கேட்கப் போகின்றாள். அவை யாவை என்றால்; இராமன் காட்டிற்கு ஏகலும், எனது பிராணன் போகலுமாம். இவைகளைக் கேட்டுச் சீதையும், இமயமலையின் சாரலில் ஒரு கின்னரப்பேடை தனது ஆணினைவிட்டு நீங்கிய துக்கத்தைப் பொறுக்க முடியாமல் எவ்வண்ணம் இறந்துவிடுமோ, அவ்வண்

ணமே இறந்துவிடுவாள். எனது இராமனும் காட்டிற்குச் சென்று சீதையும் நீரொழுகுங் கண்ணோடு நிற்க எனது பிராணன் ஒருகணமும் நில்லாது. நான் யமலோகஞ் சேர்ந்த பின்னர் நீ விதவையாகத் தங்கியிருந்து உன்னுடைய குமாரனுடன் இந்த இராச்சியத்தை ஆண்டு வரலாம்.

தசரதர் வெறுத்துச் சொல்லுதல்.

இராமனைக் காட்டிற்கு அனுப்பிவிட்டு நான் பிழைத்திருக்க விரும்பேன். விஷங் கலந்த பானத்தை நல்லபானம் என்று எண்ணிக் குடித்தவன்போல், அழகுள்ள உன்னை நல்லவள் என்று நம்பி நான் மணஞ்செய்து, இப்பொழுது கெட்டவள் என்றுதெளிகின்றேன். காதுக்கினிமையான புள்ளாங்குழலூதி வேடன் மானைக்கொல்வதுபோல் நீ அநேகம்பொய்களால் என்னைச்சாந்தப்படுத்திக்கொன்றாய். சாதுக்கள்,கள்ளுண்டு தெருவுதோறுந் திரியும் அந்தணனை எவ்வாறு நிந்திப்பார்களோ, அவ்வாறு, ஒருபெண்ணினது நன்மையின் பொருட்டு இராமனைக் காட்டிற்கு ஓட்டிவிட்டதற்காக என்னை நிந்திப்பார்களே! என்ன துக்கம்! என்ன கஷ்டம்! உன்னுடைய கொடுஞ்சொற்களைக்கேட்டுப் பொறுத்தல், நான் முற்பவத்திற்செய்த வினையினது பயனேயாம். அறியாமையால் உன்னை நான்காப்பாற்றிவந்தது, என்னுடைய கழுத்தில் முடிபோட்டுக்கொள்வதற்கு ஒருகயிற்றை ஏற்படுத்தி வைத்துக்கொண்டதற்குச் சமானமாயிருக்கிறது. உன்னை 'ம்ருத்யு' என்று அறியாது உன்னிடத்தில் நான் அன்போடு பழகி, கிருஷ்ணசர்ப்பத்தைக் குழந்தை தொட்டதுபோலாய்விட்டேன். மகாத்மாவாகிய எனது குமாரன், துராத்மாவாகிய என்னால், தந்தை செய்யவேண்டிய பாதுகாப்பைச் சிறிதும் அடைய வில்லை. மிகக் கொடியனான என்னை எல்லாச்சனங்களும் "அரசனாகிய தசரதன் கிழவனாயிருந்தும் இன்பநுகர்ச்சியிலேயே கருத்துள்ளவன்; பெரியமூடன்; தனது மனைவியின் மனத்தைச்

சந்தோஷப்படுத்திவைக்கும்பொருட்டுத் தன் அருமைக் குமாரனைக் காட்டிற்கு அனுப்பப்போகின்றான்" என்று நிந்திக்கப்போகின்றார்கள்! இராமன், விரதத்தாலும், பிரமசர்யத்தாலும், குருஸேவையாலும் இத்தனைநாளாக எவ்வளவோ சிரமப்பட்டுக் கடைசியிற் சுகப்படுங்காலத்தில் மீண்டும் கஷ்டப்படப்போகின்றான்! ஐயோ!! என் அருமை மைந்தன் 'நீ காட்டிற்குப்போ' என்று நான் சொன்னமாத்திரத்தில் எதிர்வார்த்தைசொல்லாமல் 'நல்லது, கட்டளைப்படி செய்வேன்' என்று உடனே புறப்பட்டுவிடுவானே! 'நீ காட்டிற்குப்போ' என்று நான் சொல்ல, 'நான் காட்டிற்குப் போகமாட்டேன்' என்று எனது இராமன் மறுத்துச் சொல்வனாயின், அது, எனது சந்தோஷத்திற்குக் காரணமாக இருக்கும். அவன் அப்படிச் செய்யானே! நேரான எண்ணத்தையுடைய இராமன் என்னுடைய எண்ணத்தை அறியாமல் 'அப்படியே' என்றே சொல்லுவானே! அவன் காட்டிற்குச் சென்றவுடனே எல்லாருடைய நிந்தையும் என்னை யமலோகத்திற் சேர்க்கும். நானும் இறந்து இராமனுங் காட்டிற்குப் போயிருக்க நீ எனக்கு இஷ்டர்களான மற்றையோரிடத்து எக்கொடுமையைச் செய்யப்போகின்றாய்? என்னையும் எனது இராமனையும் கௌசலையையும் தனது இரண்டு குழந்தைகளையும் இழந்ததால் சுமித்திரையும் துக்கம் பொறுக்கமாட்டாமல் என்னுடன்கூட இறந்துவிடுவாள். கைகேயி, இத்தனைபேரையும் அழித்துவிட்டு, நீ சுகமாய் வாழ்ந்துவா. இவ்வளவு காலமாய் ஒருவகைக் குறைவுமின்றி எல்லாக் குணங்களுடனும் பொருந்தி விளங்கிவந்து இப்பொழுது என்னையும் இராமனையும் இழக்கிற இந்த இக்ஷ்வாகு வம்சத்தை நீ மாசு பொருந்தியதாகச் செய்து காப்பாற்று. இராமன் காட்டிற்குச் சென்றதற்குப் பரதன் உடன்படுவானாயின், நான் இறந்த பின்பு அவன் எனக்கு உத்தரகிரியை செய்ய வேண்டாம். தீயொழுக்கமுடையாய், எனக்குப் பகையே

நீ விருப்பத்தை யடைந்தவளாக இரு. நானும் இறந்து இராமனுங் காட்டிற்குச்சென்றுவிட்டபின்பு, நீ விதவையாக இருந்துகொண்டு, உனது குமாரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவைத்து இந்த நாட்டை அவனுடன் ஆண்டு வருவாய். எனக்கு அபகீர்த்தியும், பரிபவமும், எல்லாப் பூதங்களுக்கும் என்னிடத்தில் அவமதிப்பும் வைக்கவென்றன்றோ நீ 'இராஜபுத்திரி' என்று பேரிட்டுக்கொண்டு அரண்மனையுள் வசித்தது! இதுகாறும் தேரின்மீதும் யானையின்மீதும் குதிரையின்மீதும் ஊர்ந்து பவனிவந்த பிரபுவாயிருக்கத்தக்க எனது குழந்தை காலினால் காட்டில் எவ்வாறு நடப்பான்? எவன் உண்ணவேண்டும் என்று அநேக பரிசாரகர்கள், ஆடையாபரணங்கள் அணிந்து, பார்ப்பதற்கு நல்ல உருவத்தை யுடையவர்களாய், அபிமானத்துடன் அநேகவிதமாகிய உணவுகளைச் சமைத்துப் பரிமாறுகிறார்களோ, அத்தன்மையனாகிய எனது இராமன், காட்டின்கண் கார்ப்பும் துவர்ப்பும் கைப்புமுடையனவான காட்டுக்கனிகளையும் கிழங்குகளையும் எவ்வண்ணம் புசிப்பான்? விலையுயர்ந்த ஆடைகளைத் தரித்துச் சுகமான கீழ்விரியில் வாழ்ந்த எனது குழந்தை எவ்வண்ணம் காவித்துணி உடுத்து வெறுந்தரையில் வசிப்பான்? "இராமனைக் காட்டிற்கு ஓட்டவேண்டும். பரதனுக்கு முடிசூட்டவேண்டும்" என்று இவ்வாறு எதிர்பாராத கொடியதான இது யாருக்குத்தான் பொறுக்கத் தக்கது? பெண்கள் கெட்டார்கள்! வெகு துஷ்டகுணம் உள்ளவர்கள்; தமது காரியத்தையே விரும்புகின்றவர்கள்; ஐயோ! எல்லாப்பெண்களையும் நான் ஏன் வீணாக நிந்திக்கவேண்டும்? பரதனுடைய தாயாகிய உனது குணமே இவ்வண்ணம் இருக்கின்றது. எல்லார்க்குந் தீங்கு விளைக்கவேண்டுமென்றே ஜன்மமெடுத்தவளே, சுவகாரியம் ஒன்றினையே விரும்பிய கொடிய நெஞ்சுள்ளவளே, அன்பற்றவளே,

இராமர் காட்டிற் படுங் கஷ்டத்திற்குத் தசரதர் வருந்தல்.

எனது பரிதாபத்துக்கென்றே தோன்றி யிருப்பவளே, நானும் இதத்தையேசெய்யும் இராமனும் உனக்கு என்ன தீங்கு செய்தோம்? துன்பக்கடலுள் ஆழ்ந்த இராமனைப் பார்த்து, எல்லாருடைய தந்தையரும் தங்கள் மைந்தர் களைத் தள்ளிவிடுவார்களே! மிக்க காதலுள்ள மனைவி யர்களும் தங்களுடைய கணவர்களை விட்டுவிடுவார்களே! உலகமே கோபித்துக்கொண்டுவிடுமே! நான், இயற்கை யழகால் தேவகுமாரன்போல் விளங்குபவனும், அலங்கா ரத்தால் மிக்க அழகுடன் பிரகாசிப்பவனும், கம்பீரமான நடையை யுடையவனுயு மிருக்கும் புதல்வனை மனத்தால் நினைக்கும்போதே களிக்கின்றேன். கண்ணுற்பார்த்த போதோ எனது கிழத்தன்மையும் நீங்கி உற்சாகத்தால் இளையவன்போல் ஆய்விடுகின்றேன்! சூரியன் இன்றி ஜனங்கள் நடையாடலாம்; மழையின்றி உயிருடன் இருக்க லாம்; இராமன் இவ்விடம் விட்டுச் சென்ற பின்போ இவ்வு லகத்தில் ஒருவரும் பிழையார்; இவ்வாறு பிறர்க்கே இருப்பின் என்னைப் பற்றிச் சொல்லவேண்டுமோ?

தன்னைக் கொல்லவே கைகேயி பிறந்ததாகத் தசரதர் சொல்லுதல்.

எனக்குத் தீமைசெய்யுஞ் சத்துருவாகி என்னைக் கொல்லும்பொருட்டே யமன்போல நீ என்னுடன்வீட்டில் இருந்துகொண்டுவந்தாய். கொடிய விஷமுள்ள சர்ப்பத்தை வளர்ப்பதுபோல் நானும் இத்தனைநாள் உன்னை வளர்த்து வந்தேன். அதனால், மிக்கமோகமடைந்து, அந்தோ! கெட்டேன். நானும் இராமனும் இலக்குமணனும் இல்லாமற்போன பின்னர், நீயும் பரத னும் இங்கு நகரத்தையும் தேசத்தையும் சுற்றத்தாரையும் அழித்து நன்றாக அரசாளுங்கள். நீ எனது சத்துருக்களை மகிழச்செய். 'நான் உன்னுடைய நாயகன்; நீ எனக்கு அடங்கவேண்டிய மனைவி' என்ற மரியாதை சற்றேனு மின்றி வெகுகடினமான கருத்துடன் எனது நாசத்தை

எண்ணி இத்தனை வார்த்தைகளைப் பேசினாயே! அன்பற்ற வளே, துயரில் துன்பம் மூட்டுபவளே, ஏன் உனது பற்கள் ஆயிரந்துண்டுகளாகி உனது வாயினின்று உதிரவில்லையோ தெரியவில்லை. இராமன் ஒரு கணத்திலாவது உனக்கு வெறுப்புண் டாக உன்னைக் கடிந்து பேசினது உண்டா? கடிந்து பேசு தல் இன்னதன்மைத்து என்றாவது அவனுக்குத் தெரி யுமா? ஆ! ஆ!! குணத்தில் பக்ஷமுள்ளவனாயும், எப்பொ ழுதும் பிரியமாகவே பேசுகின்றவனாயுமுள்ள இராமனிடத் தில் ஏன் இவ்வண்ணமாகக் கெட்ட எண்ணங்கொண்டு நீ பேசுகின்றாய்? கேகயகுலத்தைக் கெடுக்கவந்தவளே, நீ கெட்டுத்தான் போ! அக்கியினிற்றான்விழு! செத்துத் தான்போ! ஆயிரந் துண்டங்களாகப் பூமியில் வெடித்துத் தான்விழு! உன்னுடையகெட்ட எண்ணத்திற்குநான்உடன் படமாட்டேன். எப்பொழுதும் பொய் சொல்லுபவளும் துஷ்டையும் பிறந்தகுலத்தை நாசம் பண்ணுபவளும் பிராணனாகிற மூலத்தையுடைய மனத்தை எரிக்க விரும் புபவளும் கூரிய வாளை யொத்தவளுமான உன்னுடைய வாழ்க்கையால் யாது பிரயோசனம்? எனது குமாரன் காட்டிற்குச்சென்றபின்னர் எனது உயிர்நில்லாது. இப்படி யிருக்க எனக்குச் சுகம் ஏது? பிள்ளை காட்டிற்குப்போன பிறகு பிழைத்திருப்பவர்க்குச் சந்தோஷ முண்டோ? ஆகையால் எனக்கு விருப்பம் அல்லாததைச் செய்யாதே; என்மீது மனமிரங்கு; உனது பாதத்தில் விழுந்து கும்பிடுகின்றேன்" என்று கூறி, அந்த உலோகபாலரான தசரதர், அநாத னைப்போல் பரிதபித்துக்கொண்டு, கைகேயியினிடத்தில் வைத்த மோகத்தினால் வஞ்சிக்கப்பட்டவராகி, மரியாதை யை முற்றிலும் விட்டு, செய்யும் வழி தெரியாமல், அவளு டைய நீட்டின காலின்கீழ், நோயாளிபோல், விழுந்தார்.

கைகேயியைத் தசரதர் வைதல்.

மீண்டும்கைகேயிக்கு நல்வார்த்தை கூறல்.

பதின்மூன்றுஞ் சருக்கம்:

மன்னவர் கைகேயியை வேண்டுதல்.

ஒருபொழுதும் பார்த்திராத அவ்வித துக்கத்திற்கு ஆளாய் வருத்தமுற்று மிகவும் எளிமையாகத் தமது மனைவியின் காலில் விழுந்துகிடக்கும் தசரதர், புண்ணியங்களையெல்லாம் இழந்ததனால் பூமியின்கண் தள்ளப்பட்ட யயாதிதானோ என்று ஐயப்படும்வண்ணந் தோன்றினர். வடிவெடுத்துவந்தபாவத்தையொத்தவளாயும், அச்சமற்றவளாயும், அரசர்க்கு அச்சத்தினைச் செய்பவளாயுமிருக்கும் கைகேயி, "நீர் உண்மையையே உரைப்பவர் என்றும் உறுதியான விரதத்தை யுடையவர் என்றுஞ் சொல்லிக்கொள்ளுகின்றீர். அங்ஙனமிருக்க நான் கேட்கும் வரத்தைக் கொடுக்க என் விரும்புகிலீர்?" என்று இவ்விதமாக மீட்டுந் தனது வரத்தைக்கேட்க, தசரதர் நடுநடுங்கிச் சற்று நேரம் ஒன்றுஞ் சொல்லத் தெரியாமலிருந்து, அதன்பின் வெகுகோபத்துடன் பதில் சொல்லலுற்றார்.

கைகேயியின் பிடிவாதம்.

"நானும் இறந்து எனது கண்மணியான இராமனுங் காட்டிற்குச் சென்றபின்பு, பாவி, நீ உனது எண்ணத்தை நிறைவேற்றிச் சுகமாக வாழ். சுவர்க்கலோகஞ்சென்றாலும் எனக்குச்சுகம் இல்லையே! அங்கிருக்குந்தேவர்கள் என்னைப் பார்த்து இராமனைக் காட்டிற்கு அனுப்பினதற்காக அவமதிப்பான சொற்களைச் சொல்லுவார்களன்றோ! கைகேயினதுசொற்படி அவளதுமனத்தைச்சந்தோஷப்படுத்தும் வண்ணம் சத்தியம் தவறாது நான் இராமனைக் காட்டிற்கு அனுப்பினேன் என்றால் மற்றொரு பொய் வருகின்றதே! வெகுகாலம் புத்திரன் இல்லாமலிருந்து புத்திரகா

தசரதர் தமக்கு விளையும் அபகீர்த்தியை எடுத்துக்காட்டல்.

மேஷ்டிமுதலிய யாகங்கள் செய்து பெற்ற மகாபாகுவாகிய புதல்வனை நான் எவ்வாறு காட்டிற்கு அனுப்புவேன்? சூரனும், கல்விமானும், கோபமற்றவனும், பொறுமையுள்ளவனும், தாமரையிதழ் போன்ற கண்களையுடையவனுமிருக்கும் இராமனை நான் எங்ஙனம் பிரிவேன்? நீண்ட கைகளையும், கருங்குவளை மலர் போன்ற மேனியையும், மிக்க பலத்தையுமுடைய மனோகரனான எனது இராமனை நான் எவ்வாறு தண்டகாரணியத்திற்கு அனுப்புவேன்? ஒரு நாளும் துக்கம் என்பதையே அறியாது எப்பொழுதுஞ் சுகத்திலேயே இருக்கின்ற புத்திமானான எனது புத்திரன் வருத்தமுற நான் எவ்வாறு பொறுப்பேன்? 'நான் இறந்துவிட்டால் இராமனுக்குச் சுகமுண்டு' என்பது ஒன்றிருந்தால் வெகு சந்தோஷமாக எனது உயிரையும் விட்டிடுவேன். அடிபாவி, சத்திய சந்தனான எனது இராமனுக்கு ஏன் இவ்வாறு தீங்குசெய்கின்றாய்? இராமனை நான் காட்டிற்கு அனுப்பினால், அடையக்கூடாத அபகீர்த்தியும் பரிபவமும் எனக்கு வருவது நிச்சயம்'' என்றார்.

இவ்வாறு தசரதர் மனம் திகைத்துத் துக்கித்துக் கொண்டிருக்கச் சூரியபகவான் அஸ்தமயம்ஆனான். இரவும் வந்தது. பலயாமங்களையுடையதாய்ச் சந்திரமண்டலத்தால் விளக்கப்பட்டிருக்கும் இரவு, சோக சாகரத்தில் மூழ்கியிருக்கும் மன்னவர்க்கு விடியவேயில்லை. முதுமைப் பருவமுடைய தசரதர், உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டு, எளியவர்போல் ஆகாயத்திற் கண்ணைவைத்துக்கொண்டு, கேட்போர்க்குந் துக்கமுண்டாகும்படி, ''நக்ஷத்திரங்களை அணிந்து விளங்குகின்ற இரவே, வெகு நற்குணமுள்ளவளே, நீ பொழுதுவிடியாமல் இரு. என்மீது தயை புரிவாயாக. உன்னைக் கை கூப்பித் தொழுகின்றேன். வேண்டாம், வேண்டாம்; நீ விரைவிற் கழிந்துவிடு. இந்தப் பாதகியாகிய கைகேயி

மன்னவருடைய பெருந் துக்கம்.

தயைஅற்றவள். இவளால் வெகுதுயர் எனக்கு உண்டாயிருக்கின்றது. நான் இவளை இனிப் பார்க்கவேகூடாது'' என்ருர். இவ்வாறு இரவைப்பார்த்துச்சொல்லிப் பின்னரும் தசரதமகாராஜர், தமது இருகரங்களையுங் கூப்பிக்கொண்டு கைகேயியை நோக்கி, அவளது மனத்தைத் திருப்புதற்கு எண்ணங் கொண்டு மீட்டுஞ் சொல்லத்தொடங்கினுர்.

"நானே நன்னடக்கையுள்ளவன்; மிகவும் எளியவன்; உன்னை யடைந்துளேன்; ஆயுளையெல்லாம் அநேகமாகக் கழித்துவிட்டவன்; இவ்வளவுடன் அரசனுகவும் இருக்கின்றேன்; இந்தக்காரணங்களைக்கொண்டாவது நீ இரங்குவாய். அறிவுமயங்கி என்னென்னவோ சொல்லிவிட்டேன்; என்மீது கோபியாதே. நெஞ்சில் இரக்கமுள்ளவளாதலால், நீ என்னிடம் கருணை வைக்கவேண்டும். இராமனுக்கு இராச்சியங் கொடுப்பதாக இராசசபையிற் சொல்லிவிட்டேன்; ஆகையால், தேவி, எனது இராமனுக்கு இராச்சியத்தைக் கொடுத்து நீயேகீர்த்தியைக்கட்டிக்கொள்வாய். கறுத்தகடைக் கண்ணையுடையாய், எனக்கும் இராமனுக்கும் ஜனங்களுக்கும் பெரியவர்களுக்கும் பரதனுக்கும் விருப்பமான இதை நீ செய்துவைப்பாய்'' என்றனர்.

மன்னவரின் வேண்டுகோள்.

வஞ்சனை யற்றவராயும், கண்ணீர் ஆருய்ப் பெருகச் சிவந்தகண்களையுடையவராயும், தனதுகணவராயுமிருக்கும் மன்னவருடைய வெகுபரிதாபமான அழுகையைக்கேட்டும், கடினசித்தமுள்ள துஷ்டையாகிய கைகேயியானவள், அவர் சொல்லிய வார்த்தைகளுக்கு ஒருமறுமொழியும் உரைக்கவில்லை. அதன்மேல் தசரதர், இவ்வளவுகாலமாகத் தாம் அதிக அபிமானம் வைத்த தமது மனைவி தமக்குவிரோதமாய்ச்சொல்வதையும், தமது குமாரனுக்குவரப்போகின்ற வனவாசத்தையும் ஆலோசித்துத் துக்கித்தவராய் மூர்ச்சித்துப் பூமியில் விழுந்தார். இவ்வண்ணம் நல்ல மனத்தை

யுடைய தசரதர் மயக்கமடைந்து துக்கத்தாற் புரண்டு பெருமூச்சு எறிந்துகொண்டிருக்க, இரவுங் கழிந்தது. அவரை நித்திரையினின்று எழுப்பும்வண்ணம் வைதாளிகர்கள் வந்து வழக்கம்போலப் புகழத் தொடங்க, அரசரும், ஒன்றும் வேண்டாம் என்று தடுத்துவிட்டார்.

பதினான்காஞ் சருக்கம்:

தருமத்திற்காகத் தசரதர் இராமரைக் காட்டிற்கு அனுப்ப ஒருவாறு நிச்சயித்தல்.

இக்ஷ்வாகு வம்சத்து மன்னரான தசரதர், இவ்வண்ணம் சோகத்தால் தவித்துக்கொண்டு, மயக்கமடைந்து பூமியிற் புரண்டுகொண்டிருக்கும்பொழுது, அந்தப் பாவியாகிய கைகேயி, பின்னரும் அவரை நோக்கிச் சொன்னதாவது: "வரத்தை எனக்குக் கொடுப்பதாகச் சொல்லி, பிறகு, பாவம் பண்ணினவர் போல் இவ்வாறு பூமியிற் புரளுவது என்ன நியாயம்? நீர் உண்மையை நடத்த வேண்டுமன்றோ! பெரியவர்கள் சத்தியம் என்பதை உத்தமமான தருமம் என்று சொல்லுகின்றார்கள். நானும் அந்தச் சத்தியத்திற்கு உடன்பட்டுத்தான் உங்களைத் தருமத்தில் நிற்க வேண்டிக்கொள்ளுகின்றேன். சிபி சக்கரவர்த்தியானவர் பருந்துக்கு வாக்களித்துத் தமது தேகத்தையே கொடுத்து நற்கதியை அடைந்தார். அதேவண்ணம் அளர்க்கரும், ஒரு பிராமணோத்தமர் வேண்டிக்கொண்டபடி தமது கண்களை அவருக்கு நன்மனத்தோடு கொடுத்தார். சத்தியத்திற்கு அஞ்சியன்றோ சமுத்திரமும் அற்பமான கரையைக் கடவாது நிற்கின்றது! இருவேளைகளும்

கைகேயியின் நியாயம்.

சத்தியத்திற்குக் கட்டுப்பட்டே தங்கள் எல்லையைக் கடவாதுநிற்கின்றன. சத்தியம் என்பது எல்லோராலும் அடையத்தக்க பரம்பொரு ளன்றோ! சத்தியத்தில்தான் தருமம் தங்கி நிற்கின்றது. சத்தியந்தான் ஒருநாளும் அழியாத வேதம். சத்தியத்தாலேதான் நற்பயன் கைகூடுவதும். ஆகையால் உமக்குத் தருமவழியில் ஒழுக மனமிருந்தால் சத்தியத்திற்குக் கட்டுண்டு நடக்கவேண்டும். நான் கேட்ட வரத்தை எனக்குக் கொடுத்துவிட்டீர்; இனி அதை நிறைவேற்றிவைப்பீர். என்னுடைய ஏவுதலால், அந்தத் தருமத்தைச் சரியாய்நடத்துவதனிமித்தம் உமது புத்திரனை இராமனைக் காட்டிற்கு அனுப்பும்! அனுப்பும்!! அனுப்பும்!!! மூன்றுதரஞ் சொல்லிவிட்டேன். பெரியீர், நீர் சொன்னவண்ணம் இராமனை இன்று காட்டிற்கு அனுப்பாவிடில், உபேக்ஷித்த உமது காலின்கீழ் எனது உயிரை விடுகின்றேன்" என்பதாம்.

சத்தியத்தால் கட்டுண்ட மன்னவர் குழப்பம்.

இவ்வாறு, அச்சமின்றிக் கைகேயி சொல்ல, மூன்றடி மண் கொடுப்பதாய் வாக்களித்து மகாபலிசக்கரவர்த்தியானவர் அவ்வரத்தினின்று தம்மை விலக்கிவைத்துக் கொள்ள முடியாதவரானாற்போல், தசரதர், தம்மைத் தருமபாசத்தினின்று விலக்கிவைத்துக்கொள்ள மாட்டாதவராய்க் கட்டுண்டு மயங்கினார். அவர், குழம்பிய மனத்துடன் முககாந்தியுங் குன்றி, நுகத்திற்குஞ் சக்கரங்களுக்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டு கலங்குகின்ற எருதுபோல் ஆனார். தசரதர், தமது துக்கத்தால் மூடிய கண்களால் குருடன்போல் ஆகி வெகு வருத்தப்பட்டுத் தமது மனத்தை அடக்கிக்கொண்டு கைகேயியைப் பார்த்து, "அடி பாவி, அநேகமந்திரங்களுடன் அக்கினி சாட்சியாக நான் பற்றிய உனது கரத்தை இன்றுமுதலாக விட்டேன். உன்னுடன் உனது மகனையும் இன்று முதல் விட்டிட்

டேன். இரவோகழிந்து பொழுதும் விடிந்துவிட்டது. பெரியவர்கள், பட்டாபிஷேகத்திற்காக என்னை விரைவுபடுத்துவார்கள். பட்டாபிஷேகப் பொருள்களைக்கொண்டு இராமன் எனது உத்தரகிரியையை நடத்தட்டும். கூடாவொழுக்கமுடையாய், இராமனது பட்டாபிஷேகத்தைத் தடுத்தனையாகில் நீயும் உனது குமாரனும் எனக்கு உத்தர கிரியை செய்யவேண்டாம். நான், சந்தோஷக்களையுடன் கூடியிருந்த மக்களின் முகத்தைப் பார்த்துவிட்டு, அந்த முகமே ஆனந்தத்திற்குக் காரணம் அழிந்து துக்கத்தால் வாடியிருக்கப் பார்த்துப் பொறுக்கமாட்டேன்" என்றனர். இவர் இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, சந்திரனையும் நக்ஷத்திரங்களையும் அணிந்து விளங்கிய இரவும் கழிந்து பொழுதும் விடிந்தது.

கைகேயியைக் கைவிட்டேன் என்று மன்னவர் சொல்லுதல்.

அதன்மேல் வெகு சாமர்த்தியமாய்ப் பேசவல்ல அந்தப் பாவியாகிய கைகேயி, அரசரைப்பார்த்து, மீண்டும் "அரசரே, விடம்போலவும் நோய்போலவும் நீர் சொல்லுவது என்ன வார்த்தை? விரைவாக இராமனை இங்கு அழைப்பிக்கக்கடவீர். எனது குமாரனை இராச்சியத்தில் நிலைநிறுத்தி, இராமனைக் காட்டிற்கு ஓட்டி, எனக்கு நிகரானவர் ஒருவரும் இல்லாவண்ணஞ் செய்து, 'தருமவழியில் நடக்கின்றவர்' என்ற உம்முடைய பெயரைக் காத்துக் கொள்ளும்" என்று மிக்க கோபமுடையவளாய்க் கொடுமையாகச் சொன்னாள். அரசர், இங்ஙனம் கைகேயி சொல்லச்சொல்ல, கசையால் தூண்டப்பட்ட உயர்ந்த குதிரைபோல் வருந்தி, அவளை நோக்கி, "தருமமாகிய கயிற்றாற் கட்டுண்டேன்; எனது அறிவும் போய்விட்டது. வெகு தருமசீலனும் எனது அன்பிற்குப் பாத்திரனுமிருக்கும் இராமனைப் பார்க்க விரும்புகின்றேன்" என்றார்.

கைகேயியின் கொடுமை.

இங்கு இவ்வண்ணமிருக்க; இரவுங் கழிந்து சூரியனும் உதயமானவுடன் புண்ணிய நக்ஷத்திரத்தோடு சுப லக்கினஞ் சமீபிக்க, எல்லாத் தருமகுணங்களும் பொருந்திய வசிஷ்டமாமுனிவர், தமது சிஷ்யர்களாற் சூழப்பட்டவராய், நல்ல முகூர்த்தங் கிட்டிவிட்டதென்று பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய எல்லா உபகரணங்களையும் விரைவாகச் சேர்த்துக்கொண்டு, ஜலந்தெளித்துச் சோதிக்கப்பட்ட வீதிகளையுடையதும், சிறந்த பதாகைகளால் அலங்கரிக்கப்பட்டதும், விசித்திரமான புஷ்பங்கள் பரப்பப்பெற்றதும், அநேகவித மாலைகளால் விளக்கப்பட்டதும், மகிழ்ந்துகொண்டிருக்கும் ஜனங்களுடன் கூடியதும், நிறைந்த பண்டங்களையுடைய கடைகளுடன் சேர்ந்ததும், திருவிழாக்கள் மலிந்துள்ளதும், இராமர் விஷயத்தில் களிக்கும் ஜனங்களையுடையதும், சந்தனம் அகில் இவைகளால் தூபம் இடப்பெற்றதும், அமராவதியை ஒத்ததுமான பட்டணத்திற் புகுந்து, நாட்டார் நகரத்தார்களால் நிறையப்பெற்றதும், யாகஞ்செய்யும் பிராமணர்களாலும் சபிகர்களான பிராமணர்களாலும் இதர பிராமணர்களாலும் நிறைந்து சிறந்ததுமான அந்தப்புரத்தை யடைந்து அங்கிருந்த ஜனங்களைக் கடந்து அதிற்புகுந்து அதன் வாயிலில் வந்த சமர்த்தரான அழகிய சுமந்திரரென்ற தசரதருடைய மந்திரியைக் கண்டு, "அரசரிடத்திற் சென்று, நான் வந்திருக்கிறேன் என்று சொல்லும். கங்கையினின்றுஞ் சமுத்திரத்தினின்றுங் கொண்டுவந்து பொற்குடங்களில் வைத்துள்ள தீர்த்தங்கள், இன்னும் அபிஷேகத்திற்கு வேண்டிய அத்திக்கட்டையாற் செய்யப்பட்ட பீடம், அநேகவித விதைகள், சகல வாசனைத் திரவியங்கள், பலவகை இரத்தினங்கள், தேன், தயிர், நெய், பொரி, தருப்பை, புஷ்பம், பால், எட்டுக் கன்னிப் பெண்கள், எல்லா இலக்கணமும் பொருந்திய யானை, நான்கு குதிரை

பட்டாபிஷேக திரவியங்கள் சித்தமாயிருத்தலை வசிஷ்டர் கூறுதல்.

கள் பூட்டிய தேர், வாள், வில், சிவிகை, சந்திரனை யொத்த வெண்குடை, இரண்டு வெண் சாமரங்கள், பொற் படிகம், பொற்கயிற்ருற் கட்டப்பட்ட முசுப்பையுடைய வெள்ளிய ரிஷபம், நான்கு பற்கள் வெளியில் விளங்குகின்றதும் பிடரிமயிர்களுடன் கூடியதுமான உத்தமமாகிய குதிரை, சிங்காசனம், புலித்தோல், சமித்து, ஹோமத்தீ, எல்லா விதமான மங்கள வாத்தியங்கள், அலங்கரிக்கப்பட்ட வேசிகள், ஆசிரியர்கள், அந்தணர்கள், பசுக்கள், புண்ணிய மிருகங்கள், புண்ணியப் பறவைகள் ஆகிய இவைகளெல்லாஞ் சித்தமா யிருக்கின்றன. அன்றியும், நாட்டார்கள் நகரத்தார்கள் வியாபாரிகள் முதலான எல்லாச்சனங்களும் தங்கள் பரிவாரங்களுடனும் மன்னவர்களுடனும் வெகு ஆனந்தமாகப் புகழ்ந்துகொண்டும், பேசிக்கொண்டும், 'எப்பொழுது இராமபட்டாபிஷேகம் நடக்கும்? அதைப் பார்த்துக் களிக்கவேண்டும்' என்று எதிர்பார்த்திருக்கின்ருர்கள். ஆகையால், சுமந்திரரே, நீர் விரைவாகச் சென்று தசரதரை விரைவு படுத்தி நல்ல முகூர்த்தந் தவருமல் இராமனுக்கு முடிசூட்டி வைக்கவேண்டும் என்று அழைத்துவாரும்'' என்ருர்.

இவ்வாறு மகாணுகிய அந்தவசிஷ்டமுனிவர் சொன்னவுடன் சுமந்திரர், அதைக்கேட்டுத் தசரதமன்னரைப் புகழ்ந்துகொண்டே அவரிருப்பிடத்தை நாடிவந்தார். சுமந்திரர், வெகு முதுமைப்பருவமும் அரசருடைய அன்பும் படைத்தவராகையால் அந்தப்புரத்து வாயிற் காவலாளர்கள் அவரை ஒரு தடையுஞ் செய்யவில்லை. சுமந்திரரும், அரசரை நாடிச்சென்று அவரிருப்பிடஞ்சேர்ந்து, அவருக்கு வந்த துக்கம் தமக்குத் தெரியாதாகையால் அவரருகிற் கிட்டி அஞ்சலிபந்தஞ்செய்துகொண்டு தோத்திரம் பண்ண ஆரம்பித்தார்.

சுமந்திரர் அரசரைத் துயிலெழுப்பிப் பட்டாபிஷேகத்துக்கு அழைத்தல்.

“பாஸ்கரன் உதிக்கும்பொழுது எவ்வாறு சமுத்திரஞ்

சந்தோஷமடைந்து களிக்கின்றதோ அவ்வாறு தாங்களும் சந்தோஷியுங்கள். மாதலி என்பவன் இந்திரபகவானைக் காலைப்பொழுதில் துதித்தான்; அதனால், இந்திர பகவான் அசுரர்களை வெற்றிகொண்டார்; அவ்வாறு நானும் தங்களைத் துதிக்கின்றேன். வேதங்களும் அதன் அங்கங்களும் மற்ற வித்தைகளும் பரம்பொருளுக்குப் போதிப்பது போன்று நான் இப்பொழுது தங்களுக்குப் போதிக்கின்றேன். சந்திரனுடன்கூடிய சூரியனானவன், அநேகம் பிராணிகள் நிறைந்து நிற்கும் இப்பூமியை உணர்த்துவதுபோல், நானும் இங்குவந்து தங்களை நித்திரை ஒழிந்து எழுந்திருக்கும் வண்ணம் உணர்த்துகின்றேன். எழுந்திரும்; விரைவாக நல்ல ஆடையாபரணங்கள் அணிந்து, மேருகிரியின் சிகரத்தை விட்டுச் சூரியபகவான் எழுவதுபோல இவ்விடத்தைவிட்டுத் தாங்கள் வரவேண்டும். சூரியன், சந்திரன், சிவன், குபேரன், வருணன், அக்கினி, இந்திரன் ஆகிய இவர்களெல்லாரும் தங்களுக்கு வெற்றியைக் கொடுக்கக் கடவர்கள். இரவோ கழிந்தது; இனி எழுந்திருந்து செய்யவேண்டிய காரியங்களைச் செய்யுங்கள். இராமாபிஷேகத்திற்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் வந்துவிட்டன. நாட்டார், நகரத்தார், வணிகர் ஆகிய எல்லாராலும் அஞ்சலி செய்யப்பட்டவராய் மகாமுனிவராகிய வசிஷ்டரும் அநேக அந்தணர்களுடன் தங்களுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார். சீக்கிரமாக இராமருடைய பட்டாபிஷேகத்தை நடத்த விடைகொடுங்கள். அரசன் காணப்படாத நாடு, இடையனில்லாத பசுக்கூட்டம் போலவும் நாயகனில்லாத சேனை போலவும் சந்திரனில்லாத இரவுபோலவும் ஆய்விடும்" என்று உரைத்தனர்.

சுமந்திரர் இவ்விதமாகச் சொன்ன பொருள்பொருந்திய நயச்சொல்லைக் கேட்டவுடன், தசரதருடைய துக்கம் மீட்டும் புதிதாகப் பொங்கிற்று. பின்னர், தார்மிகரான

அவ்வரசர், புத்திரர் விஷயமான மகிழ்ச்சி அற்றவராய், அந்த மந்திரியைத் தமது சோகத்தாற் சிவந்தகண்களினுற் பார்த்து, "சுமந்திரரே, நீர் செய்த தோத்திரம், பிளந்திருக்கும் மனத்தை மீண்டும் பிளக்கின்றதே!" என்ருர். இவ்வளவு தீனமாகிய ஸ்வரத்தோடு அரசர் சொன்னதைக் கேட்டு, சுமந்திரர், அவரிருந்த பரிதாபநிலைமையையுங்கண்டு, தாம் சமயம் அறிந்துகொள்ளாது நடந்ததாகத் தெரிந்துகொண்டு அஞ்சி, கூப்பிய கையராய், அவ்விடத்தை நீங்கிச் சற்று ஓதுங்கிஞர். அரசர், சோகத்தால் ஒரு வார்த்தை சொல்லுதற்கும் சக்தியே இல்லாமலிருந்தார்.

சுமந்திரருடைய அச்சம்.

மன்னவர் அவ்வாறிருக்கையில், ஆலோசனையில் சமர்த்தையான கைகேயி, சுமந்திரரைப்பார்த்து, "சுமந்திரரே, இராமனுக்கு நாளைத்தினம் பட்டாபிஷேகம் என்ற சந்தோஷத்தால் இரவு முழுவதும் அரசர் விழித்துக்கொண்டே இருந்தார். அதனுல் அவருக்கு இன்னும் தூக்கந் தெளியவில்லை. ஆகையால், நீர் சென்று புகழ்பெற்ற அந்த இராமனை இங்கு அழைத்துவாரும். உமக்கு மங்களம் உண்டாகுக; ஒன்றும் ஆலோசிக்கவேண்டாம்" என்ருள். அவரும், இராமருக்கு நன்மை வந்துவிட்டது என்றே எண்ணிக்கொண்டு அகமகிழ்ந்து, அரசர் ஆணை என்றெண்ணி அவ்விடம் விட்டு நீங்கிஞர். "போம், போம்" என்று வேகமாக அவளால் அனுப்பப்பட்ட சுமந்திரர், இராமரைப் பட்டாபிஷேகத்திற்குத்தான் அரசர் வரவழைக்கின்ருர் என்று எண்ணி, இராமரைக் காண வெகு ஆநந்தத்தோடு சென்ருர். சுமந்திரர், சமுத்திரத்தினுள் அடங்கிநிற்கும் மடுவைப் போன்ற அந்தப் புரத்தினுடைய ஜனங்கள்சூழ்ந்தவாயிலினின்றும் வெளியில்வந்து, இராமருடைய பட்டாபிஷேகத்தை ஆவலுடன்

இராமரை அழைத்துவரக் கைகேயி ஏவுதல்.

எதிர்பார்த்துக்கொண்டு அக்காலத்தில் மரியாதை செய்ய வேண்டியதற்காகத் தங்கள் கையில் மிக்கபொருள்களை எந்திக்கொண்டிருக்கும் அநேகதேசத்து அரசர்களையும் பட்டணத்தார்களையும் நாட்டார்களையும் மற்றுமுள்ள ஜனங்களையும் பார்த்தார்.

பதினைந்தாஞ் சருக்கம்:
சுமந்திரர் இராமரை நாடிச் செல்லுதல்.

இரவு கழிந்தவுடன், வேதங்களின் கரையைக் கண்ட பிராமணர்களும், ராஜகுலத்துப் புரோகிதர்களும், மந்திரிகளும், சேனைத் தலைவர்களும், பட்டணத்திற் பிரதான மானவர்களுஞ் சேர்ந்து இராமருடைய பட்டாபிஷேகத்தைப் பற்றி மகிழ்ந்தவர்களாய்ச் சபையை அடைந்தார்கள். சூரியன் உதயமாக, பூசநக்ஷத்திரத்துடன் கூடிய இராமருடைய ஜந்மலக்கினமாகிய கடகலக்கினம் வந்தது. அந்தணத் தலைவர்கள் பட்டாபிஷேகத்திற்காக வேண்டியபொருள்களைச் சித்தப்படுத்தினார்கள்.

பட்டாபிஷேகப் பொருள்களெல்லாம் சித்தமாதல்.

பொன்மயமான தீர்த்த கும்பங்கள், அலங்கரித்திருக்கும் மங்கள பீடங்கள், புலித்தோல் பரப்பிய இரதம், கங்கையும் யமுனையுங் கூடுமிடத்தினின்று கொண்டுவரப்பட்ட புண்ணிய தீர்த்தம், இன்னும் வேறு புண்ணிய நதிகளிலிருந்தும் மடுக்களிலிருந்தும் கிணறுகளிலிருந்தும் பொய்கைகளிலிருந்தும் கிழக்குமுகமாக ஓடும் கோதாவரி காவேரி முதலியவைகளிலிருந்தும் மேற்குநோக்கி எழும் பிரவாகங்களையுடைய பிரமாவர்த்தம் முதலியவைகளினின்றும் தெற்காகவும் வடக்காகவும் ஓடும் கண்டகி சோணபத்திரை முதலியவைகளினின்றும் கொண்டுவரப்பட்ட தீர்த்தங்கள், பொரிகளை உடையனவாயும் விளாமுதலியவற்றால் மூடப்பெற்றனவாயும் பொன்னினாலும் வெள்ளியினாலுஞ் செய்

யப்பட்டனவாயும் தாமரை நீலோற்பலம் இவைகளுடன் கூடிய தீர்த்தங்களை யுடையனவாயு மிருக்கும் பூர்ணகும்பங்கள், தேன், தயிர், நெய், பொரி, தருப்பை, மலர், பால், தமது ஒழுக்கத்தினின்றும் தவிராதவராயும் எல்லா ஆபரணங்களையும் பூண்டு விளங்குகின்றவராயு மிருக்கும் வேசியர், இரத்தினங்கள் இழைத்த பொன்மயமான காம்புகளை யுடையதும் சந்திர கிரணங்கள்போல் பரவிய காந்திகளையுடையதும் இரத்தினங்களால் அலங்கரிக்கப் பெற்றதுமான பொற்சாமரை, சந்திரமண்டலத்தை யொத்தவெண்கொற்றக்குடை, வெள்ளிய ருஷபம், வெள்ளிய குதிரை, பட்டத்துயானை, எல்லா ஆபரணங்களையும் அணிந்த எட்டு மங்களகன்னிமார், அநேகவிதமான வாத்தியங்கள், வந்திகள் முதலிய பட்டாபிஷேகப்பொருள்கள் இக்ஷ்வாகுவம்சத்தில் பிறந்தவர்களுக்கு எவ்வாறுசேர்க்கப் படுமோ, அவ்வாறான சிறந்த பொருள்களை இராமருடைய பட்டாபிஷேகத்தின் பொருட்டுத் தசரதருடைய கட்டளையின்படி கொண்டுவந்து ஒன்றாகச்சேர்ந்த அரசர்கள், தசரதரைக் காணமல் தங்களுக்குள் "நாம் சித்தமாக இருப்பதை அரசரிடம் இப்பொழுது யார் தெரிவிப்பார்? சூரியனே உதயமாய்விட்டான்; அரசரை இன்னுங் காணேம். எல்லா உபகரணங்களுஞ் சித்தமாயிருக்கின்றன" என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, அரசருடைய மதிப்பைப் பெற்ற சுமந்திரர், அங்கு வந்து அவர்களைப் பார்த்து, "அரசருடைய கட்டளையின்படி இராமரை விரைவாக அழைத்துவர நான் போகின்றேன்; ஆயினும், அரசருக்கும் இராமருக்கும் நீங்கள் மிகவும் பூஜிக்கத் தக்கவர்களாகையால், சிரஞ்சீவிகளான நீங்கள் கேட்டதாகத் தசரதருடைய க்ஷேமத்தையும், விழித்திருந்தும் அவர் இங்கு வருவதற்குத் தாமதிப்பதன் காரணத்தையும் விசாரித்துவருகின்றேன்" என்றுசொல்லி மீட்டும் தசரதர் இருந்த கைகேயியின் மாளிகைக்கு வந்

தார்; அதனுட் புகுந்து, இக்ஷ்வாகுவம்சத்தைப்புகழ்ந்து கொண்டே, மன்னர் படுத்திருக்கும் அறைக்குட் சென்று, அங்கு இடப்பட்டிருந்த திரைக்குவெளியில் நின்று மறு படியும் தசரதரைநோக்கி "ககுஸ்த வம்சத்தில் பிறந்தவரே, சூரியன், சந்திரன், சிவன், குபேரன், வருணன், அக்கினி, இந்திரன் ஆகியஇவர்கள் தங்களுக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும். நல்ல இராத்திரி கழிந்தது. அபிஷேகத்திற்கு வேண்டியவை சித்தமாக இருக்கின்றன. கண் விழித்துச் செய்யவேண்டிய காரியத்தைச் செய்யுங்கள். பிராமணோத்தமர்களும், சேனாதிபதிகளும், ராஜ சிரேஷ்டர்களும், பட்டணத்துப் பிரதானிகளும் காத்திருக்கின்றார்கள்" என்று கூறினார்.

சுமந்திரர் மீண்டும் தசரதரை உணர்த்தல்.

அவரது சத்தத்தினால், அவ்வாறு கூறியவர் பேசுவதில் வல்ல சுமந்திரர் என்று தசரதர் அறிந்துகொண்டு, "சுமந்திரரே, 'இராமனை அழைத்துவாரும்' என்று கைகேயிசொல்லியிருக்க, யாதுகாரணத்தால் எனது வார்த்தையை மீறி நடந்தீர்? நான் தூங்கவில்லை. சீக்கிரமாக எனது இராமனை அழைத்து வாரும்" என்று கட்டளை யிட்டார். மன்னவர் இவ்வாறு சொன்னவுடனே, சுமந்திரர், தலையால் வணங்கி, பெரிய நன்மை வந்துவிட்டதென்று நினைத்தவராகி அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, ராஜவீதியை அடைந்து அங்கங்குப் பதாகைகள் த்வஜங்கள் கட்டியிருப்பதைக் கண்டு உடல்புளகித்துக் களித்தவராய்த் தாம் சென்ற வழிகளி லெல்லாம் ஜனங்கள் இராமபட்டாபிஷேகத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டு மகிழ்ந்தார். பின்பு சுமந்திரர், இந்திரனது மாளிகை போலவும் கைலாயமலையின் சிகரம் போலவும் ஆகாயத்தை அளாவி நிற்கும் இராமருடைய மாளிகையைக் கண்டார். அம்மாளிகைபெரியகதவு அமையப்பெற்றதும், நூறுதிண்ணைகள்

தசரதர் கட்டளை.

பொருந்தப்பெற்றதும், பொற்பதுமைகள் அங்கங்குவைக்கப் பட்டதும், இரத்தினங்களாலும் பவழங்களாலுஞ் செய்த வாயிலேயுடையதும், சரற்காலத்து மேகம் போல வெள்ளியதும், வெகு பிரகாசமாய் விளங்குவதும், மேருமலேயின் குகைபோலத் தோன்றுவதுமாக இருந்தது. அது, இடையில் இரத்தினம் இழைத்த விலேயுயர்ந்த சுவர்ண மாலேகளால் அலங்கரிக்கப்பட்டுமிருந்தது. அவ்வீடு, முத்து மாலேகளால் அலங்கரிக்கப்பெற்று, சந்தனம் அகில் இவைகளின் தூபங்களே அடைந்ததாய், சந்தனம் பிறக்கும் இடமான தர்த்தர பருவதத்தின் சிகரம்போல் வாசனே வீசிக்கொண்டிருந்தது. அதில் அன்னப் பறவைகளும், மயில்களும், களித்துக்கொண்டும், கூத்தாடிக்கொண்டும் இருந்தன. அது, கண்ணேப் பறிக்கத்தக்க அழகிய தொழில் அமைந்த செந்நாயால் விளங்கிற்று. அதில் எங்குப்பார்த்தாலும் கோலங்கள் இடப்பட்டிருந்தன. அம்மாளிகையின் காந்தி, பார்ப்பவர்கள் மனத்தையும் கண்களேயும் தன்னிடம் இழுப்பதாக இருந்தது. குபேரனது மாளிகையோ, மகேந்திரனது அரண்மனேயோ என்று கண்டார் சந்தேகிக்கும்படி இருந்த சந்திர சூரியர்களேயொத்த அந்தக்கிருகம், அநேகவித பட்சிகளுடைய சத்தங்களே யுடையதாய் விளங்கிற்று. அவ்விதமாய் விளங்குகின்றதும் மேருவின்சிகரத்தைப் போல்வதுமான இராமருடைய மாளிகையில் இராமாபிஷேகத்திற்காகக் களிக்கும் அநேக ஜனங்கள் அஞ்சலிபந்தம்பண்ணிக்கொண்டும், அநேககிராமஜனங்கள் காணிக்கைப்பொருள்களேச் சித்தமாய் வைத்துக்கொண்டும், இராமரைக் காணும்பொருட்டு மிக்க ஆவலுடன் நின்றுகொண்டிருந்தார்கள். குள்ளர், வேடர் இவர்களால் சூழப்பெற்ற அவ்வரண்மனே, அநேகவித ரத்தினங்களால் நிறைந்து உயர்ந்து நன்ருக அலங்கரிக்கப்பெற்று மேக மண்டலம்போல விளங்கிற்று. குதிரைகட்டியதாயும், மறை

இராமர் திருமாளிகை.

யிடத்தைப் பெற்றதாயுமுள்ள இரதத்தோடு, ஜனங்கள் நிறைந்த இராமரது மாளிகையைக் குறித்து வருகிற சுமந்திரர், நகரத்துச் சனங்களெல்லாருடைய மனத்தையுஞ் சந்தோஷப்படுத்தினர்; அவ்விடத்தைச் சேர்ந்தவுடன், மிக்கசம்பத்தை யுடையதும் சிறந்த பொருள்களெல்லாந் தங்குதற்குரியதுமான இராமகிருகத்தைப் பார்த்து மனம் உவந்து, தேவேந்திரன் மாளிகையை நிகர்த்ததான அதனுட் புகுந்தார். அவர், கைலாசபருவதத்தையும் தேவதைகளின் மாளிகையையுமொத்ததாயும் அலங்கரிக்கப்பட்டதாயு மிருக்கும் அம்மாளிகையின் கட்டுக்களிற் புகுந்து, இஷ்டராயும் இராமர்மீது அன்புள்ளவராயு மிருக்கும் அனேக ஜனங்களைக் கடந்து, இராமருடைய அந்தப்புரத்தினருகிற் சேர்ந்து, அங்கு ஜனங்கள் கூட்டங் கூட்டமாக நின்றுகொண்டு இராம பட்டாபிஷேகத்தைப்பற்றிச் சந்தோஷமாக மங்களவார்த்தைகள் பேசிக்கொண்டிருக்கக் கேட்டுச் சந்தோஷமடைந்தார். இராமருடைய மாளிகையோ, இந்திரன் அரண்மனைபோல அநேக பட்சிகளாலும் மிருகங்களாலும் நிறைந்து, மேருவின் சிகரம்போல் வெகு காந்தியுடன் மனோகரமாக விளங்கிற்று. அதன்வாயிலில் கோடிக்கணக்காகச் சனங்கள் காணிக்கைகளுடன் அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு தங்கள் தங்களுடைய வண்டிகளையும் குதிரைகளையும் வெகு தூரத்தில் நிறுத்தி இராமருடைய தரிசனத்தை எதிர்பார்த்தவர்களாய் நின்றுகொண்டிருந்தார்கள், சுமந்திரர், அம்மாளிகையின் முன்னர் இராமர் ஏறுவதற்காக நிறுத்தப்பட்டிருந்ததும் மேகம்போலவும் மலைபோலவும் தோன்றும் தோற்றத்தையும் உயர்ந்தமுன்வடிவத்தையும் உடையதும் அங்குசத்துக்கும் அஞ்சாததுமான மதித்த 'சத்துருஞ்சயன்' என்ற இராமரது வாகனமாகிய அழகிய யானையையும் கண்டார்.

சுமந்திரர், நல்ல ஆடையாபரணங்களை அணிந்து குதிரைபூட்டிய வண்டிகளின்மேலும் யானைகளின்மேலும் ஏறி

வந்த இராமருடைய பிரதான மந்திரிகளையும் நூற்றுக் கணக்காய் வந்த அன்பர்களையும் கடந்து, விலையுயர்ந்த அநேக ரத்தினங்களைத் தனக்குள் அடக்கிக்கொண்டிருக்குஞ் சமுத்திரத்தில் தடையில்லாமல் முதலையானது முழுகுவதுபோல, மலையினது சிகரங்களையும் அசையாத மேகங்களையு மொத்ததாயும், உயர்ந்த விமானங்களைக்காட்டிலுஞ் சிறந்த மாடங்களையுடையதாயும், சம்பத்துக்களை அடைந்ததாயுமிருக்கும்அந்தப்புரத்தில் தடையில்லாமற்புகுந்தார்.

சுமந்திரர் இராமகிருகத்தினுட் செல்லல்.

பதினாறுஞ் சருக்கம்:
சுமந்திரர் இராமரைத் தசரதர் அழைப்பதாக அழைத்தல்.

சுமந்திரர், ஜனங்கள் நிறைந்து நிற்கும் அந்தப்புரத்து வாயிலைக் கடந்து, யௌவனமுடையவர்களும், அழகிய குண்டலங்களைத் தரித்தவர்களும், அரசரிடத்தில் அன்புள்ளவர்களும், கையில் வாளும் வில்லும் பிடித்தவர்களும், வெகு ஜாக்கிரதையாகத் தங்கள் காவற்றொழிலில் முழுமனத்தையும் வைத்தவர்களுமா யிருப்பவர்கள் நிறைந்த கட்டை அடைந்தார்; அதில், காவித்துணி உடுத்துக்கொண்டு, கையிற் பிரம்பு பிடித்து, நல்ல ஆடையாபரணங்கள் அணிந்து வாயிலில் இருந்துகொண்டு மாதர்களைக் காக்கும் முதியவர்களைக் கண்டார். இராமருடைய விருப்பத்தைச் செய்யவிரும்புகின்ற அவர்களெல்லோரும், சுமந்திரரைக் கண்டவுடன் பரபரப்புடன் தாங்கள் இருந்த இடத்தை விட்டு எழுந்துநின்று மரியாதை பண்ணினார்கள். மிகவும் வல்லமை பொருந்தியவரும் வணக்கமுடையவருமான சுமந்திரர், அவர்களைப் பார்த்து "நான் வாயிலில் வந்து காத்திருக்கின்றேனென்று இராமரிடம் விரை

வாகச்சொல்லுங்கள்" என்றார். அவர்கள், தங்கள் தலைவருக்கு விருப்பமானதைச் செய்வதில் கருத்துள்ளவர்களாகையால், உடனே உட்சென்று சீதாதேவியுடன் இருக்கும் இராமரிடம் அவ்வாறே விரைவாகச் சொன்னார்கள். இராமர், தமது தந்தைக்கு அந்தரங்கரான சுமந்திரர் வந்திருப்பதாகக் கேட்டவுடன், 'தசரதருக்கு விருப்பத்தைச் செய்யவேண்டும்' என்ற எண்ணத்தால் அவரைத் தாமிருந்த அவ்விடத்திற்கே அழைப்பித்தார். சுமந்திரர், உட்புகுந்தவுடன், நல்ல விரிப்புப் பரப்பப்பட்டிருந்த பொற்கட்டிலில் இராமர் நல்ல ஆடையாபரணங்கள் அணிந்துகொண்டு குபேரன்போல்வீற்றிருக்கக் கண்டார். வராகத்தின் இரத்தத்தை ஒத்ததாயும், சுத்தமானதாயும், இயற்கை மணம் பொருந்தியதாயு மிருக்கும் சிறந்த சந்தனத்தை அணிந்தவரும், கையிற் சாமரம் ஏந்திப் பக்கத்தில் நிற்குஞ் சீதாபிராட்டியுடன் கூடியவரும், சத்துருக்களைக் கொல்லுந் தன்மை வாய்ந்தவருமான இராமர், சித்திராதேவியுடன் கூடியிருக்குஞ் சந்திரன் போல் விளங்கினர். வணக்கத்தையுடைய சுமந்திரர், சூரியன்போல் தமது காந்தியால் விளங்கிக்கொண்டிருப்பவரும் கேட்பவரது இஷ்டத்தைக் கொடுப்பவருமான இராமரைக் கண்டு வணங்கினர். பின்பு, தசரதருடைய ஏகாந்த சமயத்திலும் அருகிலிருக்குமவரான சுமந்திரர், அஞ்சலிபந்தஞ் செய்துகொண்டு இராமரைப் பார்த்து க்ஷேமத்தை வினவி, "ராம, கௌசலை உம்மைப் பெற்றதால் வெகு பாக்கியசாலி. உம்மை உம்முடைய தமப்பனர் கைகேயியுடன் பார்க்க விரும்புகின்றார். விரைவாக அவ்விடம் வரவேண்டும்" என்றார். இதைக் கேட்டவுடன், புருஷசிரேஷ்டராயும் மிக்க காந்தியை யுடையவராயு மிருக்கும் இராமர், சுமந்திரரைக் கொண்டாடி, தமது தந்தை

இராமர் சுமந்திரரை வரவழைத்தல்.

சுமந்திரர் இராமரை அழைத்தல்.

யாரின் கட்டளைப்படி நடப்பதற்கு விரைந்து, தமது மனைவியைப் பார்த்து, "சீதே, சந்தேகமில்லை; என்னுடைய பிதாவும் மாதாவும் எனது பட்டாபிஷேக விஷயமாக ஏதோ ஆலோசனை பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். கண்ணழகுடையவளே, எனக்கு நன்மை செய்ய விரும்பினவராயும், மிகச் சமர்த்தையாயும், நான் பொருளைப் பெறுவதில் விருப்புடையவராயும், எனது மாதாவாயுமிருக்கும் கைகேயி, தமது கணவருடைய அபிப்பிராயத்தை நன்றாக அறிந்துகொண்டு சந்தோஷமடைந்து, எனது அபிஷேகத்தைச் சீக்கிரமாக நடத்திவைக்க அரசரைத் தூண்டிக்கொண்டிருக்கின்றார். அரசரும் கைகேயியும், அந்தப்புரத்திலிருந்து என்னை அழைத்து வருதற்கு, அர்த்தகாமங்களை விருத்தி செய்பவரான சுமந்திரரைத் தூதுஅனுப்பினார்கள். தூதரும் அந்தப்புரத்தி லிருப்பவர்கள்போல் நமது க்ஷேமத்தை நாடி இங்கு வந்திருக்கின்றார். நிச்சயம்; இன்றைத்தினமே மகாராஜர் எனக்கு இளவரசுப்பட்டங் கட்டப்போகின்றார். ஆகையால், நான் சீக்கிரத்தில் அவரைக் கண்டு வருகின்றேன். நீயும் இவ்விடத்திலேயே உனது பரிவாரங்களுடன் சுகமாக மகிழ்ச்சியுடன் இரு" என்றார்.

இராமர் தாம் செல்லுதலைச் சீதைக்குக்கூறல்.

கணவனால் கொண்டாடப்பட்டவளும் கறுத்த கண்களை யுடையவளுமான சீதை, இவ்விதமாகச் சொல்லிவிட்டுப் புறப்படுகின்ற இராமரைப் பார்த்து, "பிரமதேவர் இந்திரனுக்குப் பட்டங் கட்டுவதுபோல், தசரதமன்னர் தங்களுக்கு இன்று அந்தணர்கள்நிரம்பியஇந்தஇராச்சியத்தில், ராஜசூய யாகத்தில் செய்யும் அபிஷேகத்திற்குத் தகுதியை உண்டாக்கும் அபிஷேகத்தைப் பண்ணி வைக்கவேண்டும். அந்த ராஜசூய யாகத்திற்காகத் தீக்ஷை செய்து

சீதை வாழ்த்துதல்.

கொண்டும் மான்தோல் தரித்தும் மான் கொம்பைக் கையில் வைத்துக்கொண்டும் சுசியோடு விரதத்தை நன்கு செய்பவரான தங்களை அடியேன் பார்த்து மகிழ்ச்சி அடைய வேண்டும். தங்களைக் கிழத்திசையில் இந்திரனும், தென் றிசையில் யமனும், மேற்றிசையில் வருணனும், வட திசையிற் குபேரனும் காக்கக் கடவர்கள்" என்று மங்க ளங்களை மனத்தினுற் கருதியவளாய் வாயில் வரையும் பின் சென்றுள். அபிஷேகத்திற்கு வேண்டிய மங்களங் களைச் செய்து முடித்தவரான இராமர், பின்பு சீதைக் குச் செல்ல விடைகொடுத்து விட்டு, ஒரு மலையினது குகையில் வசிக்குஞ் சிங்கம் அம்மலையை விட்டுப் புறப் படுவதுபோல், சுமந்திரருடன் அம்மா ளிகையை விட்டுப் புறப்பட்டார். ராஜ குமாரரான இராமர், வாயிலில் லக்ஷ்ம ணர் அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு நிற் பதைப் பார்த்தவராய், அன்பர்களுடன் நடுக்கட்டிற் சேர்ந்து, அங்கே தமது சேவைக்குக் காத்திருக்குமவர் களைப் பார்த்துக் கிட்டிச் சந்தோஷித்து, அக்கினிபோற் காந்தியால் விளங்குகின்றதும் வெள்ளியாற் செய்யப் பட்டுப் புலித்தோலாற் போர்க்கப்பட்டதுமாகிய சிறந்த தேரின்மீது ஏறினர். மேகம்போற் சத்திப்பதாயும், மிக்க பரப்பை யுடையதாயும், இரத்தினம் பொன் இவைகளால் அலங்கரிக்கப் பெற்றதாயும், சூரியகாந்திக்கொப்பாகிய தனது பிரகாசத்தினுல் பார்ப்பவருடைய கண்களைக் கவர் வதாயும், யானைக்குட்டிகளைப் போன்ற சிறந்த குதிரைகள் கட்டப் பெற்றதாயும் விரைவாகச் செல்வதாயு மிருக்கும் இரதத்தின்மீது ஏறி இராமர் இந்திரன்போல் வெகு அழ குடன் விளங்கியவராய்ப் புறப்பட்டார். அந்த இரதத் தின்மீது ஏறித் தேககாந்தியினுல் விளங்கும் இராமர், ஆகாயத்திலுள்ள மேகம்போலத் தமது இரதத்தால் திக் குக்களைச் சத்தமுண்டாகும்படி செய்துகொண்டு, உதய

இராமர் தேரேறிச் செல்லுதல்.

பருவதத்தினின்று சந்திரன் வெளிப்படுவதுபோல் வீட்டினின்று வெளிப்பட்டார். லக்ஷ்மணர் இரதத்தின் பின்புறத்தில் ஏறிக் கைகளில் வெண்குடை சாமரம் இவைகளைப் பிடித்துக்கொண்டு தமது தமையனாரை வெயில் முதலியவற்றினின்று காப்பாற்றினார். அவர் வெளியில் எழுந்தவுடன் அங்கிருந்த சனக் கூட்டத்தினின்று ஒரு பெரிய ஆனந்த முழக்கம் உண்டாயிற்று. நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் குன்றுகள் போன்ற யானைகளும் குதிரைகளும் இராமருடைய பின்னே சென்றன. அவருக்கு முன்பாக, ஆயுதபாணிகளாயும், தங்களுடைய சரீரங்களிற் சந்தனத்தையும் அகிலையும் பூசியவர்களாயும், கைகளில் வாள் வில் இவைகளைப் பிடித்தவர்களாயும் இராமருக்கு மங்களத்தைப் பிரார்த்திப்பவர்களாயுமுள்ள சூரர்களான ஜனங்கள் நடந்தார்கள். செல்லும் வழிகளில், மங்களவாத்தியங்கள் கோஷிக்க, வந்திகள் புகழ்ப்பாட்டுக்களைப் பாட, வீரர்கள் சிங்கநாதங்களைச் செய்துகொண்டு நின்றார்கள். நன்றாக அலங்கரித்துக் கொண்டு பட்டாடைகளை அணிந்துள்ள மகளிர், உபரிகையில் நின்றுகொண்டு, அவர் செல்லும்போது, சத்துருக்களை அடக்கும் அவர்மீது, பலகணி வழியாகப் புஷ்பங்களை வாரித்தூவினார்கள். மேன்மாடங்களில் உள்ளவர்களும், கீழ்த்தலத்தில் இருப்பவர்களுமாகிய குற்றமற்ற அங்கத்தையுடைய மாதரெல்லோரும், அவர் மனத்தைக் களிப்பிக்க விரும்பினவர்களாய், குற்றமற்ற சொற்களால், அவரைப்பார்த்து "மாதாவைக் களிப்பிக்குமவரே, உமது தந்தையிடமிருந்து பட்டத்தைப் பெற்றுக்கொள்ளுதற்கு நீர் போவதைப் பார்த்து உமது தாயாராகிய கௌசலையானவள் ஆனந்தக்கடலில் முழுகுவாள்" என்று துதித்தார்கள். இம்மங்கையர்கள், 'இராமருடைய மனத்தைக் கவருஞ் சீதை, எல்லா மாதருள்ளும் சிறந்தவள்' என்று எண்ணினபடியால் மேன்மாடத்திலிருந்து கூறிய "சீதாதேவி எவ்வளவோ தவம் புரிந்திருக்கவேண்டும்; இல்லா

விடில் அவள், ரோகிணி சந்திரனைக் கணவனாக அடைந்தது போல இராமனைக் கணவனாக எவ்வாறு அடைந்திருக்கக் கூடும்?" என்றுற்போன்ற பற்பல இஷ்டமான வார்த்தைகளை ராஜமார்க்கத்திற் செல்லும்இராமர் கேட்டார். அன்றியும், இராமர், நான்கு பக்கங்களினின்றும் தம்மைப் பார்க்க வந்த ஜனங்கள் சொல்லும், லோகத்தில் நிகழுங் கதைகளையும், வெகு ஆனந்த மடைந்துள்ள பட்டணத்து ஜனங்கள் தம்மைப்பற்றி "இதோ போகின்றாரே இராமர்; இவர் தமது பிதாவினிடமிருந்து இன்றைக்கு மிக்க செல்வத்தை அடையப் போகின்றார். நம்மை ஆள்பவராக இவரை நாம் பெறப்போகின்றதால், நமது எண்ணமெல்லாங் கைகூடின. இவ்விராமர் தேசங்களையெல்லாம் அடைவது, மக்கட்கே இலாபம். இவர் அரசரா யிருக்கும்பொழுது, ஒருவனும் எப்பொழுதும் தனக்கு விருப்பமல்லாதவற்றையும் துக்கத்தையும் பாரான்" என்றிவ்வண்ணம் புகழ்ந்து சொல்வதையும் கேட்டார். இராமர், மங்கள வார்த்தையைக் கூறும் வந்திகள் அநேக இராகங்களால் தம்மைப் புகழ்ந்துபாட அவர்களுடைய பாட்டுக்களைக் கேட்டுக்கொண்டு, தமது முன்பு அழகான சத்தமிட்டுக்கொண்டு யானைகளுங் குதிரைகளுஞ் செல்ல, வாத்தியங்கள் முழங்க, குபேரன்போற் போனார். குதிரைகளும், பெண் யானைகளும், ஆண் யானைகளும், இரதங்களும் நிறைந்திருக்கப் பெற்றதும், மஹா ஜனக்கூட்டங்கள் நிறைந்த சதுக்கங்களையுடையதும், மிக்க இரத்தினங்களையுடையதும், அனேக கடைப்பொருள்கள் விளங்கப்பெற்றதுமான பெரியவழியை இராமர் கண்டார்.

பதினேழாஞ் சருக்கம்:

இராமர் தசரதரிருந்த இடத்தைச் சேர்தல்.

செல்வவானான இராமர், தமது நேசர்களெல்லாருடைய மனமும் களிக்கும் வண்ணம் இரதம் ஏறி, பதாகை

களும் கொடிகளும் அசையப் பெற்றும், மிகச்சிறந்த தூபங்க ளால் பரிமளித்துக்கொண்டும், ஜனங்களால் நிறைந்தும், வெண் மேகத்தை நிகர்த்த மாளிகைகள் இருபக்கங்களில் விளக்கமடைந்திருக்கப் பெற்றுமுள்ள நகரத்தின் மத்தி யில், வாசனைத்தூபம் எழும்பிக்கொண்டிருக்கும் இராஜ வீதிவழியாகச் சென்றார். உத்தமமான அந்த இராஜவீதி வெகு விசாலமாயும், வாசனை வீசிக்கொண்டும், பட்டு வஸ்திரங்கள் விரிக்கப்பட்டும், தூளியிடப்படாத நல்ல முத்துக்களினாலும் உயர்ந்த படிகங்களினாலும் அலங்கரிக் கப்பட்டும், விதம் விதமான பொருள்களையும் பண்ணி யாரங்களையுமுடைய கடைகளாற் சூழப்பெற்றும், ஆகா சத்திலுள்ள தேவேந்திர வீதி போல் இருந்தது; அன்றி யும், அங்கங்கே தயிர், அக்ஷதை, நெய், பொரி, அகில் சந்தனம் இவைகளினின்றும் உண்டான தூபம், நாநா வித மாலைகளினின்றும் உண்டான வாசனை இவைகளால் பூஜிக்கப்பெற்ற நாற்சந்திகளை உடையதுமாக இருந்தது. இராமர், ஆங்காங்குத் தம்மைக் குறித்து நண்பர்கள் கூறு கின்ற ஆசிகளைப் பெற்றுக்கொண்டு, தாம் எவரெவர்க்கு எவ்வெவ்விதமாகிய மரியாதை செய்யவேண்டுமோ அவ் வித மரியாதையைச் செய்பவராய்ச் சென்றார். மக்களெல் லாரும், இராமர் இரதம் ஏறிச் சென்றபோது “இராக வரே, இன்றைத்தினம் நீர் அபிஷேகம் பெற்று, உம் முடைய பாட்டனார் முதலியோர் எவ்வாறு எங்களைக் காப்பாற்றினார்களோ அவ்வாறு காப்பாற்றக் கடவீர். உம்முடைய பிதாவினாலும் பாட்டனார் முதலிய முன் னோர்களாலும் களிப்பிக்கப்பட்டு நாங்கள் எவ்வாறு சுக மாக வசித்தோமோ, அதனினும் மிக்க சுகத்துடன் நீர் அரசராக இருக்கும்பொழுது வசிப்போம். எங்களுக்கு இப்பொழுது ஒருவிதமான சுகத்திலும் விருப்பமில்லை. தந்தையாரிடமிருந்து இராச்சியத்தை அடைந்த இரா

மர் வெளியில் வரும்பொழுது பார்ப்பதினும் விருப்பத்திற்கு இடமானது வேறொன்றுமில்லை" என்றும் இன்னும் வேறுவிதமாகவும் தம்மைக் கௌரவிக்கும் வார்த்தைகளை எவ்விடத்திலும் நண்பர்கள் சொல்லிக்கொண்டிருக்கக் கேட்டு விருப்புவெறுப்பில்லாதவராய்ப் போய்க்கொண்டிருந்தார். அவரைப் பார்த்த ஒவ்வொருவரும், அவர் வெகு தூரம் கடந்தபொழுதும் அவரைவிட்டுத் தமது கண்களையும் மனத்தையும் பெயர்த்து இழுத்துக்கொள்ள முடியாமல் நின்றனர். எவன் இராமரைப் பார்க்கவில்லையோ, எவனை இராமர்பார்க்கவில்லையோ, அவன் உலகத்திலுள்ள எல்லாராலும் நிந்திக்கப்பட்டவனாய் வசிப்பான்: அவனைத் தன்னுடைய ஆத்மாவும் நிந்திக்கும். தருமாத்மாவான இராமர் வித்தியாசம் என்பது சற்றேனுமின்றி எல்லாச் சாதியாரிடத்திலும் நான்குபருவங்களையுடையவர்களிடத்திலும் தயைசெய்பவர்; ஆகையால் அவரை எல்லாரும் அநுசரித்திருந்தார்கள். இராமர் தாம் செல்லும் வழியிலிருந்த நாற்சந்திகள், தேவாலயங்கள், யாகசாலைகள், சபைகள்முதலியவைகளை வலஞ்செய்துகொண்டு வழியைக்கடந்து, மேகமண்டலம்போல் ஆகாயத்தை அளாவிக் கைலை மலையின் உச்சிபோலவும் விமானம்போலவும் விளங்கும் அனேகவித உபரிகைகளின் சிகரங்களாலும் இரத்தினங்கள் இழைத்துக் கட்டப்பட்டுவரும் மாடங்களாலும் விளங்குவதும் இந்திரனுடைய மாளிகைபோல் பிரகாசிப்பது மாகிய தமது தந்தையாருடைய அரண்மனையை, மிக்க காந்தியுடன் விளங்கிக்கொண்டு சேர்ந்தார். இராமர் தேரினின்று இறங்கி, அந்த மாளிகைக்குள், கையில்வில்லேந்திய காவற்காரர்களாற் காக்கப்பட்டிருக்கும் மூன்று கட்டுக்களைக் குதிரையின்மேலேறிக் கடந்து, மற்றிரண்டு கட்டுக்களையுங் காலினால் நடந்து கடந்து, பின்பு எல்லா ஜனங்களையும் அனுப்பிவிட்டு, தந்தையா ரிருக்கும் அந்தப்

புரத்திற்குள் போனார். பின்பு, இராமர் தமப்பனார் சமீபத்தைச் சேர, சமுத்திரராசன் சந்திரபகவான் வரவை எதிர்பார்ப்பதுபோல வெளியிலிருந்த ஜனங்கள் அவ்விராமர் திரும்பி வரப்போகின்றதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள்.

பதினெட்டாஞ் சருக்கம் :

கைகேயி 'வனத்துக்குப் போகவேண்டும்' என்று இராமரிடஞ் சொல்லுதல்.

விலையுயர்ந்த ஒருஆசனத்தில் கைகேயியுடன் இருந்த தமது தந்தையாரது முகம் வெகுபரிதாபமான நிலைமையில் இருப்பதை இராமர் கண்டார். அவர், தமது தந்தையாரது சரணாரவிந்தங்களில் வெகு வணக்கத்துடன் முதலில் நமஸ்காரம் பண்ணி அதன் பிறகு வெகு மரியாதையுடன் கைகேயியின் பாதங்களில் வந்தனஞ்செய்தார். இவரைக் கண்டவுடன் எளிய தசரதர், "ஏ ராம!" என்று சொல்லி, நீர் நிரம்பிய கண்களையுடையவராய் இவரைப் பார்த்தற்கும் பேசுதற்கும் வல்லவராகவில்லை. ஒரு நாளிலும் அவ்வாறு இராத தமது தந்தையார் அன்று அவ்வாறு இருந்ததையும், மனத்தில் பயத்தை உண்டாக்கும் அவருடைய உருவத்தையும் கண்டு இராமர், காலினால் ஒரு சர்ப்பத்தை மிதித்தவர்போல் நடுங்கிவிட்டார். மிக்க துன்பமடைந்த இந்திரியங்களினால் அதிகமாய்ப் பொங்குந் துக்கத்தீயால் வாடியும், அடிக்கடி பெருமூச்சு எறிந்துகொண்டும், நொந்து குழம்பிய மனத்துடன் கூடியு மிருந்த தந்தையாரான தசரதமகாராஜர், கலங்குந்தன்மை யற்றிருந்தும் கலக்கமடைந்த கடல்போலவும், இராகுவாற் பிடிக்கப்பட்ட சூரியன்போலவும், பொய்யைச் சொல்லிவிட்டு

மனங் கலங்கிநிற்கும் மாமுனிவர்போலவும் இராமருக்குத் தோன்றினர். இராமர், காரணந் தோன்ருத தசரதருடைய சோகத்தை நினைத்து, பருவகாலத்திற் கடல் பொங்குவதுபோல் துக்கத்தால் மிகப்பொங்கினர். அன்றியும், இராமர், எப்பொழுதும் தமது தந்தையாருடைய க்ஷேமத்தையே விரும்பியவராகையால், தமக்குள்ளேயே 'என் தந்தை இன்றைக்கு என்னைப்பார்த்து ஏன் ஆனந்திக்கவில்லை? என்னைக்காணுதபொழுது கோபித்துக்கொண்டிருந்தபோதிலும் என்னைக்கண்டவுடன் தமது கோபத்தை மறந்து புன்னகையோடு அன்பாக இருப்பரே! அப்படிப்பட்ட இவருக்கு இன்றைக்கு என்னைக் கண்டவுடன் வருத்தம் வரவேண்டிய காரணம் என்ன?'' என்று எண்ணினர்.

தசரதர்நிலைமையைக்கண்டு இராமர் வருந்தல்.

இராமர், பின்பு ஏழைபோற் சோகத்தால் வருந்தி முகத்தின் ஒளி குறையப்பெற்று, கைகேயியை நமஸ்காரம் பண்ணி, அவளைப்பார்த்து, "அறியாமையாலேனும் நான் எனது தந்தைக்குக் குற்றம்பண்ணினதில்லையே! ஏன் என் தந்தை கோபித்துக்கொண்டிருக்கிறார்? அதைச் சொல்லும். அவரைச் சமாதானப்படுத்தும். எப்பொழுதும் என்னைக் கண்டால் ஆசையுடன் இருப்பவர், இப்போது ஏன் இவ்வாறு மனக்கலக்கமுடையவராய் இருக்கின்றார்? இவர், என்னைக் கண்டும் முகம் வாடிப் பரிதபித்துக்கொண்டு ஏன் பேசாமல் இருக்கிறார்? இவர் தேகத்தை நோய் வருத்துகின்றதா? இவர்க்கு மனவருத்தம்உண்டாக ஏதேனுங் காரணம் உண்டா? சுகமென்பது எப்பொழுதும் ஒருவனுக்கு ஒரேவண்ணமே இருந்துகொண்டிருக்கு மென்பது வெகு அருமை. அழகிய தோற்றத்தையுடைய பரதன், மிக்க வலியுள்ள சத்துருக்கனன், என்னுடைய தாய்மார்கள் ஆகிய இவர்கள் குறைவின்றி இருக்கின்றனரா? என் தந்தையாரின் மனத்திற்கு மகிழ்ச்சியை உண்டாக்காம

இராமர் கைகேயியை விசாரித்தல்.

னும், அவருடைய சொற்படி நடவாமலும், அவர் என்மேற் கோபிக்கவும் நான் ஒரு இமைப்பொழுதும் பிழைத்திருக்க மாட்டேன். தன் கண்ணுக்குப்புலனுகுந் தனது தோற்றத் திற்குக் காரணமா யிருக்குந் தந்தைக்கு விரோதமாக எவ னுயினும் நடப்பானே? அல்லது, அம்மா, நீர்கோபத்தினு லாவது செல்வாக்கினுலாவது பிதாவைப்பார்த்துக் கடிந்து பேசினபடியால் அவர்மனம் இவ்வாறு குழப்பம் அடைந் திருக்கின்றதா? யாது காரணம்? தெரியவில்லையே! இந் தப்பூபாலருடையமனமானது இவ்வாறு இதுவரையுமின்றி இன்றைத்தினம் ஏன் குழம்பிநிற்கின்றது? இதை உண் மையாகச்சொல்லும்" என்று வினவினர். மகாத்துமா வாகிய இராமர் இவ்வண்ணங் கேட்க, கைகேயி, சற் றேனும் வெட்கமில்லாமல் தனக்கு நன்மையைத் தரும் மொழியைக் கம்பீரமாகச் சொல்லத் தொடங்கினள். "ராம, அரசருக்கு ஒருவிதகோபமும் இல்லை. அவருக்குத் துக்கமும் இல்லை. ஆனல் அவருடைய மனத்தில் ஒன்றிருக் கின்றது. அதை உனக்குப் பயந்து வெளியிடாதிருக்கின் றூர். எப்பொழுதும் உன்னிடத்தில் அதிக அன்பாயிருந்து இப்பொழுது அன்பற்ற சொல்லைச் சொல்லுவதற்கு அவருடைய நா எழவில்லை. எனக்குத் தசரதர் வாக்களித்திருக்கின்றூர். அதை நீ அவசியம் முடித்துக் கொடுக்கவேண்டும். உன் தந்தை முன்னொருகால் என்னைக் கௌரவித்து எனக்கு "வரத்தைக்கொடுத்தேன்" என்றுசொல்லிவிட்டு, இப்பொ ழுது சாதாரணமான மனிதன்போல் பச்சாத்தாபப்படுகி றூர். இவ்வெட்டுத் திசைகளையும் தமக்குள் அடக்கி ஆளு கின்ற மன்னவர், நான் வரம் கேட்க "கொடுத்தேன்" என்று முதலிற் சொல்லிவிட்டு, இப்பொழுது, வெள்ளம் கடந்துபோன பின்னர் அணை கோலுகின்றூர். ராம, 'சத் தியம் தருமத்திற்கு மூலம்' என்பது எல்லாரும் அறிந்த விஷயமே. ஆகையால், 'உனக்குக் கேடாக முடிகின்றது'

கைகேயிவார்த் தை.

என்று என்மேற் கோபங் கொண்ட மன்னவர் சத்தியத்தைத் தவிராதவாறு செய். அரசர் உன்னைப்பார்த்துச் சொல்லப் போகின்றது, உனக்கு நன்மையைத் தருவதோ தீமையைத் தருவதோ, எப்படி யிருந்தாலும், அரசர் சொல்லை வீணாக்காமல் அவசியம் செய்வேனென்று நீ ஒப்புக்கொள்ளுவாயாகில், நானே அதைச்சொல்லுகின்றேன். அவர் ஒருபொழுதும் உன்னிடத்திற் சொல்லமாட்டார்" என்றாள். இவ்வாறுஇவள்சொன்னதைக்கேட்டு, இராமர், மிகவும் மனம் நொந்து, தமது தந்தையாருடைய எதிரில் அவளைப்பார்த்து, "சீ! சீ!! என்னைப் பார்த்து இவ்வாறு நீர் சொல்லக்கூடாது. என்னை 'நெருப்பில் குதி' என்றாலும் உடனே குதிப்பேன். 'விஷத்தைக் குடி' என்றாலும் குடிப்பேன். 'சமுத்திரத்தில் முழுகு' என்றாலும் முழுகிவிடுவேன். என் பிதாவின் கட்டளை என்றால் எனக்குப்போதும். அவர் எப்பொழுதும் எனக்குக் குரு; தந்தை; அரசர்; எனது க்ஷேமத்தையே விரும்புபவர்; ஆகையால், அம்மா, தந்தையாருடைய கருத்தைச் சொல்லும்: அவசியம் நான் செய்து முடிக்கிறேன். பிரதிஜ்ஞை செய்கின்றேன். இதுவரையிலும் இராமன் இருவகையாகச்சொன்னதேயில்லை" என்றார்.

இராமர் உடன்பாடு.

நேர்மை யுடையவரும் சத்தியத்தைக் கூறுகின்றவருமான இராமரைப் பார்த்து, மகாபாவியாகிய அந்தக் கைகேயி, தனது எண்ணத்தை வெளியிடுபவளாய், "முன்னொரு காலத்தில் தேவர்களுக்கும அசுரர்களுக்கும் உண்டான சண்டையில் பாணத்தாற் புண்பட்ட உனதுதந்தையாரை நான் காப்பாற்றினபடியால், அவர் எனக்கு இரண்டுவரங்கொடுத்தார். அவைகளில் ஒன்றால் 'பரதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவைக்கவேண்டும்' என்றும், இரண்டாவதால் 'இன்றைத்தினமே இராமன் தண்டகாரணியத்திற்குப் போகவேண்டும்' என்

இராமரைக் கைகேயி காட்டிற்குப்போகச் சொன்னது.

றும் கேட்டுக்கொண்டேன். நீ, உன்னையும் உனது தந்தையையும் உண்மையில் நடப்பவர்களாகச் செய்யவேண்டுமென்று எண்ணினையாகில், நான் சொல்லுகின்ற வண்ணஞ் செய்யக்கடவாய். உனது தந்தையாரின் சொற்படி நீ பதினன்கு வருஷம் தண்டகாரணியத்திற்குச் சென்று அங்கிருக்கக்கடவாய். உனது அபிஷேகத்திற்காக வந்திருக்கும் பொருள்களினல் பரதனுக்கு அபிஷேகத்தை நடத்த இசைவாய். அபிஷேகத்தை விட்டுப் பதினன்கு வருஷகாலம் நீ தண்டகாரணியத்தில் உனது தலைமயிரைச் சடைகளாகத் திரித்துக்கொண்டும், மான்தோல் உடுத்துக்கொண்டும் வாழ்ந்து வரக்கடவாய். சகலவித ரத்தினங்களும் நிறைந்து, குதிரைகள், இரதங்கள், யானைகள் இவைகளுடன் கூடிய இப்பூமியைப் பரதனே இந்தக் கோசலநாட்டில் அரசாளட்டும். இவ்விரண்டு வரங்களைக் கொடுத்த காரணத்தினலேதான் மன்னர், பரிதபித்துக்கொண்டு துக்கத்தால் முககாந்தி குன்றி, உன்னைக் கண்ணெடுத்துப் பார்ப்பதற்கும் மனம் பொருதவராக இருக்கின்றார். தசரதருக்குப் பிள்ளாய், நீயும் உனது தந்தையாரின்சொற்படி நடந்து, அவரையும் சத்தியத்தின் கரையை அடைந்தவராகச் செய்துவைப்பாயாக'' என்றனள்.

இவள் இவ்வண்ணம் வெகு கடினமாகச் சொன்னதைக் கேட்டு இராமர் சற்றேனுந் துக்கப்படவே யில்லை. ஆனல், மகானுபாவரான அவருடைய பிதாவாகிய தசரதர், 'இவள் சொன்னதைக் கேட்டுத் தமது புத்திரன் தம்மை விட்டுப் பிரிந்து போகின்ற சமயம் வந்துவிடும்போல் இருக்கின்றதே!' என்று நினைத்து முன்னையினும் அதிகமாக வருந்தினர்.

தசரதர் வருத்தம்.

பத்தொன்பதாஞ் சருக்கம்:
கைகேயியின் சொற்படி காட்டிற்குச் செல்ல இராமர் சம்மதித்தல்.

இவ்விதமாக மரணத்துக்கொப்பான கடுஞ்சொற்களைக் கைகேயி சொல்லக் கேட்டு, பகைவெல்லும் வலி படைத்த இராமர், சற்றும் வருத்தமடையாது, அவளைப் பார்த்து, "பரதனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கட்டும். நான் எனது தந்தையார் உமக்கு வாக்குக் கொடுத்தபடி தலைமுடியை ஜடையாகத் திரித்துக்கொண்டும் மான்தோல் உடுத்துக்கொண்டும்வசிக்க, இவ்விடத்தைவிட்டுக் காட்டிற்குப் போகின்றேன். ஆனால், இது மாத்திரம் எனக்குத் தெரியவேண்டும்; பிறரால்வெல்ல அரியராயும்பகைவரை வேருடன் களைபவராயுமிருக்கும் அரசர் எப்பொழுதும் போல ஏன் என்னிடம் மகிழ்ந்திருக்கவில்லை? நீர் எளிமையடைய வேண்டாம். உமது முன்பாக நான் அவசியம் காட்டிற்குச்சென்று ஜடைதரித்து மரவுரி யுடுத்து வசிக்கின்றேன். நீர் மகிழ்ச்சியடையும். எனக்கு நன்மை செய்பவராயும், பிதாவாயும், நன்றியறிந்தவராயும், குருவாயும், அரசராயுமிருக்கும் இவரால் விருப்பத்தோடு ஏவப்படின், நான் எதைத்தான் அச்சமின்றிச் செய்யமாட்டேன்? இது ஒன்றுதான் என் மனத்தை மிகவும் வருத்துகின்றது; என்னிடத்தில் நேராக என் தந்தையார் 'பரதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவைக்கவேண்டும்' என்று ஏன் சொல்லக்கூடாது? நானே சீதையையும் இராச்சியத்தையும் விருப்பத்திற்கிடனான உயிரையும் பொருளையும் ஒருவருடைய ஏவலுமில்லாமல் மனமுவந்து எனது சகோதரர்களுக்குக் கொடுத்துவிடுவேன். உமது வாக்கைக் காக்கும்படி உம்முடையவேண்டுகோளை நிறைவேற்றிவைக்கும்

இராமர் காட்டிற்குச்செல்லச் சம்மதித்தல்.

பொருட்டு அரசர் என்னை ஏவினல் பரதனுக்குநான்கொடுப் பதைப்பற்றிக் கேட்கவேண்டுமோ? ஆகையால், நீர் இனி அரசரைத் தேற்றிவைப்பீராக. எதற்காக அவர் தலை குனிந்து தரையில் தாரையாகக்கண்ணீர்வடிக்கவேண்டும்? தூதர்கள் அரசருடைய கட்டளையால் இப்பொழுதே அதிவேகமாகச்செல்லும் குதிரைகளிலேறி மாமன்வீட்டி லிருந்து பரதனை அழைத்துவரச் செல்லட்டும். இக்கணமே நானும் ஆலோசியாமல் இங்கிருந்து தண்டகாரணியத்தில் எனது தந்தையார் ஆஜ்ஞைப்படி பதினன்கு வருஷகாலம் வசிக்கச் செல்கின்றேன்" என்றார்.

இதைக்கேட்டுக் கைகேயி, இராமர் காட்டிற்குப் போய் விடுவார் என்ற நம்பிக்கையால் களிப்படைந்து, அவரை விரைவிற் போகும்படி சொல்லலுற்றாள். "ராம, ஆகட்டும்; பரதனை மாமன்வீட்டிலிருந்து விரைவில் அழைத்து வர, வெகுவேகமுள்ள குதிரைகளின்மேல் இக்கணமே தூதர்கள் போகின்றார்கள். நீயும் இவ்வளவு ஆவலுடன் இருப்பதால் தாமதிக்காமற் சீக்கிரங் காட்டிற்குப் போ. அரசர் வெட்கத்தினல் உன்னிடத்திற் பேசுதற்கு மனம் எழாமல் இருக்கின்றார். இதற்கு வேறுகாரணஞ் சிறிது மில்லை. ஆகையால் இதைப்பற்றி நீ கவலைப்படவேண் டாம். நீ இந்த நகரை விட்டுக் காட்டிற்குப் போகின்ற வரையில் உனது தந்தையார் ஸ்நானஞ் செய்யமாட்டார்; போசனமுஞ் செய்யார்" என்று இவ்வாறு சொன்ன கைகேயியின் அசத்தியமான வார்த்தையைக் கேட்டுத் தச ரதர், 'எனக்கு என்ன கஷ்டம்!' என்றுசொல்லிப் பெரு மூச்செறிந்து பரிதபித்து மூர்ச்சை அடைந்து, பொன் ஞல் அலங்கரிக்கப்பட்ட கட்டிலில் விழுந்தார்.

கைகேயி விரைவு படுத்துதல்.

இராமர், அவரை உடனே எடுத்து இருத்தி, உயர்ந்த குதிரையைச் சம்மட்டியால் அடித்தால் அது ஓடுதற்கு

எவ்வளவு விரையுமோ அதுபோல் கைகேயியினது சொல்லென்றசம்மட்டியால் காட்டிற்குச்செல்ல விரைந்து, அவள் சொல்லிய கடினமாயும் அப்பிரியமாயுமுள்ள சொற்களாற் சற்றேனும் மனவருத்த மடையாது, அவளைப் பார்த்து, "அம்மா, என்னைப் பொருளாசை கொண்டு உலகத்தில் வாழ்தற்கு எண்ணங் கொண்டவனாக நீர் நினைக்கவேண்டாம். தருமம் என்பதையே எப்பொழுதுங் கைப்பற்றியிருக்கின்ற என்னை ரிஷிக்கொப்பானவன் என்று எண்ணுவீர். எனது தந்தைக்கு மகிழ்ச்சியை விளைவிக்கப் பிராணனைக் கொடுக்கவேண்டுமென்றாலும் அவ்வண்ணமே செய்வேன். இவ்வுலகத்தில் ஒருவனுக்குத் தந்தையாரிடத்துப் பணிந்து பணிவிடைசெய்து அவரது சொற்படி நடப்பதினும் உயர்ந்த தருமம் வேறொன்றும் இல்லை. நான் அவர் சொல்லாமலிருந்தாலும் உமது சொற்படி ஜனங்களற்ற காட்டில் பதினான்கு வருஷம் வசிப்பேன். அம்மா, கைகேயி, என்னை அடிமைபோல் ஏவ உமக்கு அதிகாரமிருந்தும் 'பரதனுக்கு அபிஷேகஞ் செய்யவேண்டும்' என்று அரசரிடத்திற் கூறினீர். ஆதலால், என்னிடத்தில் நீர் பண்பு உள்ளதாகக் கருதவில்லைபோலும். நான், எனது தாயாராகிய கௌசலையிடம் விடை பெற்று, சீதைக்கு நல்வார்த்தை சொல்லிவிட்டு, இப்பொழுதே தண்டகாவனத்திற்குப் போகிறேன்; விரைவிற் பரதன் இராச்சியத்தை யடைந்து பிதாவுக்குப் பணிவிடைகளைச் சரியாய் நடத்திவரும்படி நீர் செய்வீர். இதுதான் என்றும் அழியாத தருமம்" என்றார்.

இவ்வாறு இராமர் சொன்னதைக் கேட்டுத் தசரதர், சிறிதும் பொறுக்கக்கூடாத துக்கத்தினால் வாய்விட்டுப் பேச நா எழாமல் உரத்த சத்தத்துடன் அழுதார். மிக்க ஒளியையுடைய இராமர், மனமயங்கிய தசரதரையும் நீதி

இராமர் தந்தையை விட்டுப் புறப்படுதல்.

யற்ற கைகேயியையும் வலம்வந்து நமஸ்காரஞ்செய்து அவ்வந்தப்புரத்தைவிட்டு வாயிலில் வந்தவுடன் தமது சிநேகிதர்களைக்கண்டார். சுமித்திரைக்கு ஆனந்தத்தை வளர்ப்பவரான லக்ஷ்மணர் வெகு சினங்கொண்டவராய் நீர் ஒழுகுங் கண்களுடன் அவ்விராமர்பின்னே நடந்துபோனார். இராமர், அபிஷேகத்திற்குரிய பொருள்களெல்லாம் நிறைந்திருந்த மண்டபத்தை வலம்வந்து அதிற் கண்வைக்காமல் பரதனுடைய பட்டாபிஷேகத்தைப் பிரார்த்தித்தவராய் மெல்ல நடந்தார். உலகத்திலுள்ள ஜனங்களெல்லாருக்குங் குளிர்ந்தவரா யிருக்கும் இராமருக்கு உண்டான இராச்சியநஷ்டமானது, சந்திரனுடைய ஒளியை இரவு குறைக்காததுபோல், அவர் முகத்தில் விளங்கிய ராஜலக்ஷ்மியின் அழகைக் குறைக்கவில்லை. இராச்சியத்தை விட்டுக் காட்டிற்குப் போய்விடுவதால், அவருடைய மனத்தில், யாதொருவிகாரமும் துறவிக்கு எவ்வாறு தோன்றாதோ அதுபோல் தோன்றவில்லை. தம் மனத்திலிருக்கும் வருத்தத்தை ஒருவாற்றானும் வெளியிற் காட்டாத இராமர், சுபமான குடை, அலங்கரிக்கப்பெற்ற சாமரை இவைகளை அகற்றி, தேர், தம்முடன்வந்த அன்பர்கள், நகரத்தார், மற்றுமுள்ள சாதாரண ஜனங்கள் இவர்களெல்லாரையும் அனுப்பிவிட்டு, கேட்பதற்கு வருத்தத்தை யுண்டாக்குஞ் சங்கதியைத் தமது தாயாருக்குத் தெரியப்படுத்த அவள்மாளிகைக்குப் போனார்.

இராமர் கௌசல்யையின் மனையிற் புகுதல்.

நான்கு பக்கத்திலுமிருந்த செல்வவான்களான ஜனங்களுள் ஒருவராவது, சத்தியவாதியாயும்காந்தியுடையவராயுமிருக்கும் இராமரது முகத்தில் ஒருவிதமான விகாரத்தையும் அறியவில்லை. சரத்கால சந்திரன் இயற்கையான காந்தியை விடாதவாறுபோல் தமது இயற்கையான மகிழ்ச்சியை இராமர் ஒரு சமயத்திலும் இழக்கவே இல்லை. இயல்

பாகவே தைரியமுள்ள இராமர், தமது மதுரமாகியவாக்கி ஞல் ஒவ்வொருவரிடமும் மரியாதையாகப் பேசிக்கொண்டே தமது தாயாரின் சமீபத்திற் புகுந்தார். ஒவ்வொரு குணத்திலும் அவருக்கு ஒப்பானவரும் மகாவீரருமான லக்ஷ்மணரும், தமது துக்கத்தை அடக்கிக்கொண்டு அவர் பின்னே சென்ருர். இராமர், புகுந்து, அங்கிருந்த ஆனந்தத்துடன் கூடிய ஜனங்களேயும், தமக்குவந்திருக்குந் துன்பத்தையும் ஆலோசித்து, 'தமது நண்பர்கள் துக்கப்பட்டுப் பிராணனே விட்டிடுவார்களோ!' என்ற அச்சத்தால் ஒரு விதமான விகாரத்தையும் அடையாதிருந்தார்.

இருபதாஞ் சருக்கம்:
கௌசல்யாதேவியின் விலாபம்.

ஆண்சிங்கம்போன்ற அந்த இராமர் தமது கைகளேக் கூப்பிக்கொண்டு கைகேயியினுடைய அந்தப்புரத்தை விட்டு வெளியில் வந்தவுடன், அந்த அந்தப்புரத்தில் தீனமான ஒரு பெரிய சத்தம் எழும்பிற்று:—"ஐயோ! இவ்வந்தப்புரம் முழுவதுக்கும் கதியாயும், சரணமாயு மிருக்கும் இராமர் தமது பிதா சொல்லவேண்டும் என்பதே யின்றி இன்றைத் தினம் நகரைவிட்டு வெளியேபோகின்ருர். ஐயோ! பிறந்ததுமுதல் இராமர், தாயாகிய கௌசல்யையிடம் எவ்வாறு வணக்கமாக இருக்கின்ருரோ, அதே விதமாய் எங்களிடத்தும் இருக்கின்ருரே! கொடுமையாகச் சொன்னுலும் சிறிதும் கோபங் கொள்ளாமல், கோபத்திற்குக் காரணங்களேக் கைவிட்டும், கோபித்திருப்பவர்களேச் சமாதானப்படுத்தியும் வரும் இராமர், இன்றைத் தினம் காட்டிற்குப் போகின்ருரே! நிச்சயமாக நமது அரசருக்கு அறிவே அழிந்துவிட்டது. அரசர், எல்லாப் பிராணி

(அந்தப்புரம் புலம்புதல்.)

களுக்கும் ஒரே பற்றுக்கோடாயிருக்கின்ற இராகவரைக் கைவிடுகின்றார் என்றால் இனி உலகங்களை யெல்லாம் நாசஞ்செய்வார்."

இவ்வாறு அங்கிருந்த தசரதருடையமனைவிமாரெல்லாரும், கன்றை இழந்த பசுக்கள் கதறுமாறுபோலக் கதறி, அரசரை நிந்தித்தார்கள். தசரதர், அந்தப்புரத்தில் இவ்வாறு வெகு பரிதாபமாய்க் கதறுகின்றதைக் கேட்டு, முன்னமே புத்திர சோகத்தில் ஆழ்ந்திருக்கையால் தமது படுக்கையோடு படுக்கையாகக் கிடந்தார்.

இங்கிவ்வாறிருக்க இராமர், இவ்வந்தப்புரத்துத் துக்கத்தால் துன்பமுற்றவராய் அதை வெளிக்காட்டாமல், ஒரு யானைக்குட்டி போல் பெரு மூச்செறிந்துகொண்டு, தம்பியாகிய லக்ஷ்மணருடன் தமது தாயாருடைய அந்தப்புரத்தை அடைந்தார்; அதன் வாயிலில் முதுமைப்பருவமுள்ளவனும் மரியாதை பெற்றவனுமான ஒரு வாயில் காப்பானும் இன்னும் அனேகரும் இருக்கக் கண்டார். அவர்களெல்லாரும் இராமரைக் கண்டவுடன் எழுந்து "உமக்கு எந்நாளும் வெற்றியுண்டாகக்கடவது" என்று வாழ்த்தினார்கள். முதற் கட்டிடத்தைக் கடந்த இராமர், இரண்டாங்கட்டில், அரசரால் மரியாதை செய்யப்பட்டவர்களும் வேதத்தின்கரையைக் கண்டவர்களும் முதியவர்களுமான அந்தணர்கள் இருக்கக் கண்டு, அவர்களை வணங்கி, மூன்றாங்கட்டிற் புகுந்தார். அந்தப்புரத்தைக் காத்துக்கொண்டு நின்ற சிறுமியரும், கிழவிகளும், இராமர் அங்குவரக்கண்டு களிப்படைந்து வாழ்த்தி, விரைந்தோடி, அதை இராமருடைய தாயாராகிய கௌசலைக்குத் தெரிவித்தார்கள். எப்பொழுதும் விரதத்தைக் கைக்கொண்டவளும் மங்களத்தைச் செய்பவளுமான கௌசலை, தனது புத்திரனுடைய நன்மையை நாடி, இரவு முழுதும்

கௌசல்யை நோற்கும் நோன்பு.

நியமத்தோடிருந்து, காலையில் ஸ்ரீமந்நாராயண மூர்த்திக்குப் பூஜைசெய்து, மனமுவந்து, வெண்பட்டு உடுத்து, அக்கினியில் மந்திரத்தோடு பிராமணரைக்கொண்டு ஹோமம் பண்ணிக்கொண்டிருந்தாள். இராமர், அங்கு ஓமஞ் செய்துகொண்டிருக்குந் தாயாரைப் பார்த்தார். தெய்வங்களை ஆராதிக்கும் பொருட்டுத் தயிர், அக்ஷதை, நெய், மோதகங்கள், அவிசு, பொரி, வெண்மையாகிய மாலைகள், பாயஸம், எள்ளுடன் சேர்ந்த சோறு, சமித்து, பூர்ணகும்பங்கள் ஆகிய இவைகள் அவளது சமீபத்தில் சித்தமாக இருக்கவும், வெண்பட்டு உடுத்துக்கொண்டும், விரதாநுஷ்டானத்தால் தேகம் வாடியும், தேவதாசரீரம் போன்ற மேனியைப் பெற்றும் இருக்கும் அக்கௌசல்யை தனது இஷ்டதேவதையை நீரால் திருப்தி செய்வித்துக் கொண்டிருக்கவுங் கண்டார். அவள், தனக்கு எப்பொழுதும் ஆனந்தத்தையே கொடுக்கின்ற தனது அருமைக் குமாரன் வருவதைக் கண்டு, ஒரு பெண்குதிரை தனது இளங்குட்டியைக் கண்டாற்போல், வெகு சந்தோஷத்துடன் இராமருக்கு எதிராகச் சென்றாள்.

தமது தாயைக் கண்டவுடன் இராமர், அவளுடைய பாத கமலங்களில் அபிவாதனம் பண்ணினார். கௌசலையும் அவரை அணைத்து உச்சிமோந்து பகைவரால் அணுக ஒண்ணாத பலத்தையுடைய தன் புத்திரரான அவரைப் பார்த்து, வெகு பிரியமாயும் இதமாயுஞ் சொல்லலுற்றாள்.

கௌசல்யை இராமரைப் பாராட்டல்.

"என் குழந்தாய், நீ வெகு தருமவான்களும், முதியவர்களும் மகான்களுமான இக்குலத்துதித்த இராஜ ரிஷிகளுடைய ஆயுளையும், கீர்த்தியையும், அறத்தையும் அடைவாயாக! உனது தந்தையாரைச் சொல்தவறாதவராக அறி. அந்தத் தருமப்ரபுவானவர், இன்றைத்தினமே உன்னை இராச்சியத்தில் இளவரசனாகப் பட்டாபிஷேகஞ் செய்து

வைக்கப்போகின்றார்" என்று சொல்லி இராமர் இருத்தற்கு ஒரு ஆசனம் இட்டு அவரைப் போஜனத்திற்கு அழைக்க, இராமர் வெட்கித் தமது கைகளைக் குவித்துக் கொண்டு ஆசனத்தைத் தொட்டுச் சொல்லலானார்.

இராமர் தமக்கு வந்த வனவாசத்தைத் தாயிடம் தெரிவித்தல்.

இயற்கையாகவே வெகு வணக்கமுள்ளவ ராகையாலும், தமது அன்னையிடத்தில் தாம் வைத்திருந்தகௌரவத்தினாலும், இராமர், மிக்க வணக்கத்துடன், தண்டகாரணியத்திற்குப் பிரயாணப்பட்டவராய் விடைபெற்றுக்கொள்ள ஆரம்பித்தார். "அம்மா, இப்பொழுது வந்திருக்கும் பயம் இன்னும் நிச்சயமாகத் தெரியாது. இப்பயம் உமக்கும் சீதைக்கும் லக்ஷ்மணனுக்கும் அதிகமாகத் துக்கத்தைத் தரும். நான் தண்டகாரணியத்திற்குச் செல்லப் போகின்றேன். எனக்கு இந்த ஆசனம் எதற்கு? இனி நான் இருக்கவேண்டியது, முனியோடிருக்கும் இருபத்தைந்து தருப்பைகளாற் செய்த முனிவனுக்குரிய ஆசனத்திலன்றோ! நான், ரிஷிபோல் மாம்ஸத்தை நீக்கிக் காய், கிழங்கு, தேன் இவைகளை உணவாகப் புசித்துக்கொண்டு, மநுஷ்ய சஞ்சாரமற்ற காட்டில் பதினான்கு வருஷம் வசிக்கப்போகின்றேன். மகாராஜர், பரதனுக்கு இளவரசுப்பட்டத்தைக் கொடுத்து என்னைத் தண்டகாரணியத்தில் ரிஷிபோல் வசித்திருக்கக் கட்டளையிட்டார். ஆகையால், நான், ஜனங்களில்லாத காட்டில் ஆறெட்டு வருஷம் வாநப்பிரஸ்தர்களுடைய அநுஷ்டானத்தைக் கைக்கொண்டு, காய் கனிகளைப் புசித்துக்கொண்டு, வசிக்கப்போகின்றேன்" என்றார்.

கோசலையின் துக்கம்.

அவள், அதைக் கேட்டவுடன், காட்டில் கோடரியால் வெட்டப்பட்ட ஆச்சாமரத்துக் கிளைபோலவும், ஆகாயத்தினின்று தவறி வீழ்ந்த தேவதைபோலவும் பூமியில் திடீர் என்று

விழுந்தாள். இராமர், ஒருநாளும் துக்கம் என்பதையே அறியாதவளான தமது தாயார் வாழைமரம் போல விழுந்து அறிவு போயிருக்கப் பார்த்து அவளைத் தூக்கி, பாரஞ்சுமக்குங்குதிரை பூமியிற் புரண்டால் அதன் தேகம் எவ்வண்ணம் இருக்குமோ, அவ்வண்ணம் அவளது தேகம் புழுதி படிந்திருக்கக் கண்டு அதனைக் கைகளால் துடைத்தார். பின்பு, சௌக்கியத்தையே அநுபவிக்கத் தக்கவளாயும் துக்கத்தால் மெலிபவளாயுமிருக்கும் கௌசலை, வீற்றிருக்கும் இராமரைப் பார்த்து, லக்ஷ்மணருங் கேட்கும் வண்ணம் சொல்லலுற்றாள். "என் மைந்த, ராகவ, நீ எனக்குத் துக்கம் விளையும்படி பிறவாமலே இருந்தால், பிள்ளைபெறாத நான், பிள்ளையின்மையால் உண்டாகுந் துக்கத்தைவிட வேறு துக்கத்தைக் காணாமல் இருக்கலாம். பிள்ளாய், புத்திரப் பேறு அற்றவளுக்கு ஒரே துக்கம். அதென்னவென்றால், 'புத்திரனில்லை' என்பதுதான். அதைப்பார்க்கிலும் வேறு ஒரு துக்கமும் அவளுக்கு இல்லை. கணவருடைய அநுகூலத்தினால் உண்டாகுஞ் சிறப்பையும் சௌக்கியத்தையும் முன்னர் ஒருபொழுதும் நான் கண்டதேயில்லை. ராமனாலாவது சுகத்தைக் காணலாமென்று நினைத்திருந்தேன். எல்லாரினும் பெரியவளாக இருந்தும் ஒருநாளுஞ் சுகத்தையே கண்டிராத நான், கணவரின் கருத்தைக் கெடுக்கின்றவர்களும் என்னிலும் இளையவர்களுமான சக்களத்திகளுடைய மிகக்கொடிய வார்த்தைகளைக் கேட்க வேண்டியவளாகப் போகின்றேனே! இதைவிட ஸ்திரீகளுக்கு மிக்க துயரை விளைப்பது என்ன இருக்கிறது? எனது சோகமும் அழுகையும் என்றும் அளவிட அரியனவாய்க் கரையில்லாமல் இருக்கின்றன. நீ இங்கு இருக்கும்போதும் இத்துயரம் இருப்பினும், அது உன்னால் மறைக்கப்பட்டிருந்தது. குழந்தாய், நீ புறப்பட்டுப்போன பின்பு உண்டாகுபவற்றைப்பற்றிச் சொல்லவேண்டுமோ? ஆகையால் எனக்கு

மரணம் என்பது நிச்சயம். பார்த்தாவினால் அவமதிக்கப் பட்ட யான் தலைமையை இழந்தேன்; கைகேயியின் வேலைக்காரிகளோடு ஒத்தவளாகச் செய்யப்பட்டேன்; அன்றி, அவர்களுக்குந் தாழ்வான நிலைமையில் கருதப் பட்டேன். இது வரையிலும் எனக்கு அடங்கிப் பணி விடை செய்தவர்களும், பரதன் பட்டத்திற்கு வந்தபின் னர் என்னைப்பார்த்துப் பேசவும் மாட்டார்களே! புதல் வனே, கதியற்ற நான், எப்பொழுதும் மிக்க சினத்தோடு கடிந்து பேசுங் குணமுள்ள கைகேயியினது முகத்தை எவ்வாறு பார்ப்பேன்? உனக்கு உபநயநஞ் செய்தபின்னர் இந்தப் பதினேழு வருஷங்களாக "எப்பொழுது என் னுடைய துக்கம் போகப்போகின்றது? எப்பொழுது உன் னுடைய பட்டாபிஷேகத்தை நான் காணப் போகின் றேன்" என்று காத்திருந்தேன். இவ்வளவு முதுமைப் பருவத்தை அடைந்த என்னால், இந்தத் தீராத் துக்கத்தை யும் சக்களத்திகளின் அவமதிப்பையும் இனி ஒரு கண மேனும் பொறுக்கமுடியாது. பூர்ணசந்திரனுக்கு ஒப்பான உனது முகத்தைக் காணாது பேதைபோல் நான் எவ்வாறு வாழ்வேன்? பாக்கியமற்ற நான், பயனற்ற உபவாசம் தவம் விரதம் இவைகளை அநுஷ்டித்து உன்னைப்பெற வெகு கஷ்டப்பட்டேன். என்மனம், கார்காலத்துப் புதுவெள்ளத் தால் தாக்கப்பட்ட நதியின்கரை உடைவதுபோல், துக்கத் தாற்பிளவாததனால், வெகுகடினமானது! எனக்கு மரணமே இல்லை; யமலோகத்தில் எனக்கு ஒருசாண் இடமும்இல்லை; ஏனெனில், பயத்தால் அலறிக்கொண்டிருக்கும் ஒருமானைச் சிங்கம் வலிய இழுத்துப்போவதுபோல், இன்றைத் தினமே யமன் என்னை இழுத்துப் போகவில்லை யன்றோ! இந்தத் துக்கத்தைக் கேட்டுப் பிளவுபடாததால், எனது நெஞ்சு வெகு உறுதியானது; நாசமற்றது. எனது தேக மும், கீழேவிழுந்து சிறிய தூளாகாததால், இரும்பினால் ஆனது. 'போகின்றவேளை வந்தாலன்றிப் பிராணன் போ

காது' என்பது திண்ணம். புத்திரனை அடைய நான் செய்த விரதங்களும், தானங்களும், தியானங்களும், தவமும், உவர் நிலத்தில் விதைத்த விதைபோல் பயனற்றவையாயின என்ற இந்தத் துக்கந்தான் எல்லாத் துக்கங்களினும் இப்பொழுது எனக்கு வெகு அதிகமான துக்கம். மிக்க துக்கம் அடைந்த ஒருவர் தாம்விரும்பியகாலத்தில் மரணத்தை அடையக் கூடுமானால், கன்றை விட்டுப் பிரிந்து பசு வருந்துவதுபோல வருந்தாமல் நான் இக்கணமே யமலோகஞ் சென்றுவிடுவேன். சந்திரனை ஒத்த முகத்தையுடையவனே, நீ இன்றி இனி நான் பிழைத்திருப்பது வீண். வலியற்ற பசு தனது இளங்கன்றைத் தொடர்வதுபோல அன்பினால் உன்னுடன் நானும் காட்டிற்கு வருகிறேன்'' என இவ்வண்ணம் பலவாறாகக் கௌசலை, ஒரு கின்னரிபோல, இராமர்பிரிந்துபோவதால் உண்டாகிய பெரிய துக்கத்தை நினைத்துப் புலம்பினாள்.

இருபத்தோராஞ் சருக்கம்:

லக்ஷ்மணருடைய கோபம்.

இவ்வண்ணம் வருந்துகின்ற இராமருடைய தாயாகிய கௌசலையைப் பார்த்து, லக்ஷ்மணர், பரிதபிக்கும் அக்காலத்திற்குத் தக்கபடி பின்வருமாறு சொல்லலுற்றார்:— "அம்மா, இராமர் பெண்சொற்கேட்டு இராச்சிய லக்ஷ்மியை விட்டுக் காட்டிற்குப் போகின்றது எனக்குஞ் சம்மதம் அன்று. மனந் தடுமாறியும், முதுமைப் பருவ மடைந்தும் உலகவின்பங்களில் முழுகியு மிருக்கும் அரசர், மன்மதனுக்கு அடிமைப்பட்டிருக்கிறபடியால் எதைத்தான்சொல்ல

இலட்சமணர் கைகேயியின் செருக்கைத் தாம் கெடுப்பதாகச் சொல்லல்.

மாட்டார்? நாட்டை விட்டுக் காட்டிற்கு அனுப்பிவிடும் படியான தோஷமாவது குற்றமாவது இராமரிடம் என்ன இருக்கின்றது? இராமருடைய கொடிய பகைவர் அல்லது இராமரால் ஊரைவிட்டு நீக்கப்பட்டவர் ஆகிய இவர்களை விசாரித்துப் பார்த்தால் அவர்களும், 'இராமரிடத்திற் குற்றம் உண்டு' என்று இரகசியமாகவும் சொல்லமாட்டார்களே! எந்தத் தகப்பன் தான், தேவனுக்கு ஒப்பானவனும் நல்வழியில் நடப்பவனும் பொறியை அடக்கினவனும் சத்துருக்களுக்கும் அன்பனுமான தனது புத்திரனைக் காரணமின்றிக் கைவிடுவான்? அரசரே மன்மதனுக்கு அடிமைப்பட்டு இவ்வாறு சொல்லி விட்டால் இராஜ நீதியை யறிந்த எவன்தான் அதை ஒரு பொருளாக மனத்தில் எண்ணி அவ்வாறு நடப்பன்? இராம, இந்தவிஷயம் எல்லாருக்குந் தெரியு முன்னரே நீர் இந்த இராச்சியத்தை எனது துணையால் உமது கைவசப்படுத்திக்கொள்ளுவீர். நான் கையில் விற் பிடித்து உமது பக்கத்தில் இருக்க, பிறர்க்கு யமன்போல் அச்சத்தை விளைக்குமவரான உமக்கு எவன் இடையூறு செய்வான்? மனிதரிற் சிறந்தவரே, இந்நகரம் நமக்குப் பகையாக இருப்பின், நான், என் பாணங்களினால் மனிதப்பூண்டே இல்லாமல் செய்துவிடுகின்றேன். பரதருடைய பக்ஷத்தைச் சேர்ந்தவனாவது அவருக்கு நன்மையைத் தேடுகின்றவனாவது இருப்பின், அவன் இருந்த இடமே தெரியாமற் செய்துவிடுகின்றேன். நாம் அடக்கமுடையவராக இருப்பதனாலேதான் பிறர் நம்மை அலட்சியஞ் செய்கின்றார்கள். கைகேயியின் சொற்கேட்டு நமது தந்தை நமக்கே பகையாய் இருப்பாராயின், அவரையும் 'சத்துரு' என்றே எண்ணி, விசாரியாமலே கொல்லவாவது கொல்லுவோம்; சிறையிலாவது இடுவோம். செருக்குக்கொண்டு 'இது நற்செய்கை இது தீச்செய்கை'

என்று பகுத்தறியுந் திறமை யின்றிக் கெட்டவழியில் இறங்குபவர் குரவராயிருப்பினும் அவரையுந் தண்டிக்கவேண்டியதுதான். புருஷசிங்கமே, நியாயமாக உம்முடையதான இராச்சியத்தை இப்பொழுது என்னபலத்தால் என்ன ஏதுவைக்கொண்டு அரசர் கைகேயிக்குக் கொடுக்க விரும்புகின்றார்? இவ்விராச்சியமோ உம்முடையது. பகைவரை வெல்லுந் திறல் உடையீர், உம்மையும் என்னையும் விரோதித்துக்கொண்டு பரதருக்கு இராச்சியத்தைக்கொடுக்க இத்தசரதருக்கு என்ன சக்தி இருக்கிறது? அம்மா, நான் எனது தமையனரிடம் உண்மையாக அன்பு வைத்திருக்கின்றேன். அதற்குச் சத்தியத்தைக்கொண்டும், வில்லைக்கொண்டும், தானத்தைக்கொண்டும், உமக்கிஷ்டமானவற்றைக்கொண்டும் ஆணையிடுகின்றேன். கொழுந்துவிட்டெரியுந் தீயிலேனுங் காட்டிலேனும் இராமர் செல்வாராகில் அவ்விடத்தில் அவருக்கு முன்னர் நான் போவேன் என்று நீர் எண்ணும். அம்மா, சூரியன் இருளைப்போக்குவது போல, நான் எனது வீரத்தினால் உமது துக்கங்களை நீக்கி வைக்கின்றேன். இராமரும் நீரும் எனது வலிமையைப் பார்க்கக்கடவீர்கள்" என இவ்வாறு அம்மகானாகிய லக்ஷ்மணர் சொன்னதைக் கேட்டுக் கோசலை, வெகு துக்கத்துடன் அழுதுகொண்டு இராமரைப் பார்த்துச் சொல்லலாயினாள்.

"உன் தம்பி லக்ஷ்மணன் சொன்னதைக் கேட்டாயா? அது உனக்கு நியாயமாக இருந்தால் அவ்வண்ணமே செய். என் சக்களத்தி அநியாயமாகத் தூண்ட அவளுடைய வார்த்தையைக் கேட்டுக்கொண்டு, என்னைப் பரிதபிக்கவிட்டு நீ காட்டிற்குப் போவது நியாயமன்று. நீ தருமத்தை அறிந்தவனாய் அதன் வழியிலேயே நடப்பவனுமாக இருந்தால், இங்கேயே யிருந்து எனக்குப் பணிவிடைகளைப் புரிந்துகொண்டு, மிகச் சிறந்த தரு

தம்பி சொன்னபடி ஏன் செய்யக் கூடாதென்று இராமரைக் கோசலை கேட்டல்.

மத்தை நடத்திவா. 'காசியபர், தமது கிருகத்திலேயே இருந்துகொண்டு தமது தாயாருக்குத் தவருது பணி விடைசெய்து நல்லுலகம் அடைந்தார்' என்று தெரிகிறது. உனக்கு அரசர் எவ்வளவு கொண்டாடத் தக்கவரோ, அவ்வளவு நானும் கொண்டாடத் தக்கவளன்ருே! இவ்விடத்தை விட்டு நீ காட்டிற்குப்போக நான் விடைகொடுக்கமாட்டேன். நீ காட்டிற்குப் போன பின்னர் எனக்கு உயிரினுலும் இன்பத்தினுலும் யாதொரு பயனுமில்லை. உன்னுடன் நான் புல்லைத் தின்றுகொண்டிருந்தாலும் எனக்கு அதுதான் நல்லது. பரிதபிக்கும் என்னை விட்டு நீ காட்டிற்குச் சென்ருல் நான் இங்கேயே பட்டினியாகக் கிடந்து என் பிராணனை விட்டிடுவேன். அதருமத்தால் சமுத்திரராஜனுக்குப் பிரமகத்தி வந்ததுபோல, அதனுல் உலகத்தில் மிகப் பேர்பெற்ற நரகம் உனக்கு வந்துவிடும்" என்று கௌசலை சொல்லிப் பரிதபித்தாள்.

இராமருடைய நீதிச்சொற்கள்.

தருமசிந்தையுள்ள அந்த இராமர் இதைக் கேட்டு, தருமத்தை யொட்டிப் பின்வருமாறு மறுமொழி உரைக்கலுற்ருர்:—"அம்மா, நான் எனது தந்தையார் சொல்லைத் தவறி நடக்கக்கூடாது. ஆகையால், உம்மைத் தலையால் வணங்கி வேண்டிக்கொள்ளுகின்றேன். நான் காட்டிற்குப் போக விரும்புகின்றேன். 'தந்தையினது கட்டளை' என்ற ஒரே கௌரவத்தினுல், தருமத்தை யறிந்தவரும் மிக்க விரதத்தை மேற்கொண்டவருமான கண்டுமகர்ஷியும் 'கோகத்தியானது மிகப்பாவம்' என்று தெரிந்தும் அதைச் செய்தார். நமது வம்சத்திலும், பிதாவான சகரமகாராஜருடைய கட்டளைப்படி அவருடைய அறுபதினுயிரம் புத்திரர்கள் பூமியைத் தோண்டி வதத்தையும் அடைந்தார்கள். ஜமதக்கினிமகர்ஷியின் புத்திரரான பரசுராமர், காட்டில் தந்தையின்சொல்லைத் தவருதவராய்த் தம்மைப்

பெற்ற தாயான ரேணுகையைக் கோடரியால் வெட்டினார். தேவர்கட்கு ஒப்பான இவர்களும் வேறுபலரும் 'தந்தையின் சொல்லை நீக்கக்கூடாது' என்று அதைச் செய்து முடித்திருக்கின்றார்கள். ஆகையால், அவ்வண்ணமே நானும் தந்தையின் சொல்லைக் காப்பாற்றுகிறேன். இவ்வண்ணஞ் செய்யப்போகின்றவன் நான் ஒருவன் என்று நீர் எண்ணவேண்டாம். நான் சொல்லிய அந்தப் பெரியவர்களுஞ் செய்திருக்கின்றார்கள். உம்முடைய மனத்திற்கு விரோதமாக நான்மட்டும் அபூர்வமாக இப்பொழுது இவ்வாறு செய்யவில்லை. பூர்வர்களின் கருத்தே இவ்வாறு செய்வது. செல்லத்தக்கது, பலர்செல்லும் மார்க்கமன்றோ! ஆகையால், நான் இவ்வாறுதான் செய்யவேண்டும். உலகத்தில் வேறுவகையாகச் செய்யப்படுகின்றதில்லை. ஒரு காலத்திலும் தந்தைசொற் கேட்டுக் குறைவடைந்தவர் இல்லை" என்று இவ்வாறு தமது தாயாரிடஞ் சொல்லி, அதன்பின்னர் லக்ஷ்மணரைப் பார்த்து, வார்த்தை சொல்வதில் வல்லவரும் வில்லாளிகளெல்லாரினுஞ் சிறந்தவருமான இராமர் பின்வருமாறு சொல்லலானார்.

"லக்ஷ்மண, உனக்கு என்னிடமிருக்குஞ் சிநேகம், உனது பராக்கிரமம், பலம், பிறராற் கிட்டுவதற்கு அரிய வீரம், உனது துயரம், மாதாவின் மிக்கதுயர் இவைகளையெல்லாம் நான் நன்றாக அறிந்திருந்தும், சத்தியம் அடக்கம் இவற்றின் உண்மையைத் தெரிந்திருப்பதால் சத்தியத்திலேயே நடக்கின்றேன். தருமந்தான் இவ்வுலகத்தில் எல்லாப் புருஷார்த்தங்களினுஞ் சிறந்தது. அந்தத் தருமத்திலேதான் சத்தியமும் விளங்குகின்றது. மாதாவின் வாக்கியத்தினும் உத்தமமான பிதிருவாக்கியத்தின்படி நடப்பதும் தருமத்தைச் சேர்ந்ததே. தருமத்தைத் தஞ்சமாக அடைந்

தருமமே உத்தமம்.

திருப்பவன், தந்தை தாய் அந்தணர் இவர்கள் சொன்ன சொற்களுக்கு வாக்களித்து அவ்வாறு நடவாமல் இருத்தல்கூடாது. ஆகையால், நான், என் தந்தையின் சொல்லைத் தள்ளச் சக்தியுடையவன் அல்லேன். எனது தந்தையார் கட்டளைப்படியே கைகேயி என்னைக் காட்டிற்குப் போக ஏவினள். ஆதலால் நீ, பெருமைக்குணமற்ற க்ஷத்திரிய தருமங்களைக் கைக்கொள்ளும் புத்தியை விட்டிடு. தருமப்படி நட; கொடுமையென்பது வேண்டாம். நீ என் புத்தியைப் பின்சென்று நடக்கக் கடவாய்'' என்று இராமர் தாம் வைத்திருந்த அன்பால் தமது தம்பியைப் பார்த்து இவ்விதமாகச் சொல்லி அதன் பின் மறுபடியும் கௌசல்யையைப் பார்த்துத் தமதுகைகளைக் கூப்பிக்கொண்டு நமஸ்காரஞ் செய்து, "அம்மா, காட்டிற்குப்போக எனக்கு விடைகொடுத்து அனுப்புவீர். என்பிராணன்மேல் ஆணையிட்டு வேண்டிக்கொள்ளுகிறேன். எனக்கு ஸ்வஸ்த்யயனம் பண்ணும். யயாதி என்னும் ராஜரிஷி எவ்வாறு தேவலோகத்தை விட்டு வந்து மீண்டும் அவ்வுலகைச் சேர்ந்தாரோ, அதுபோல, நான் காட்டுக்குச்சென்று அங்கு என் தந்தை சொற்படி வாசம்பண்ணி, அவர்வாக்கை உண்மையாகச் செய்து விட்டு, இந்நகரத்திற்குத் திரும்பிவருவேன். உமது துக்கத்தை அடக்கிக்கொள்ளும்; விசனப்படவேண்டாம்; நான் என் தந்தையின் வாக்கைக் காப்பாற்றிவைத்து மறுபடி இந்நகரம் வந்தடைவேன். நீர், நான், சீதை, லக்ஷ்மணன், சுமித்திரை ஆகிய ஐவரும் எனது தகப்பனார்சொற்படி நடக்கவேண்டியவர்கள். இதுதான் தொன்றுதொட்டு வருந் தருமம். அம்மா, என் பட்டாபிஷேகத்துக்காக நீர் செய்துகொண்டிருக்குங் காரியங்களை நிறுத்தும். துக்கமென்பதை உமது மனத்தை விட்டு அகற்றும். நான் காட்டில் வசிப்பதற்காகக் கொண்டிருக்கும் எண்ணத்தை நிறைவேற்றிவையும்'' என்றார்.

இராமருடைய தருமமும், தைரியமும், பயமின்மையும் தோற்றும் பேச்சைக் கேட்டு, கௌசல்யை, மூர்ச்சித்தவள்போல் பிரஜ்ஞையை யடைந்து, தனது குமாரனை அன்புடன் பார்த்து, "உனக்கு உன் தந்தை எப்படி குருவோ, அப்படியே அன்றோ நானும். அவர் எவ்வளவு சிரமப்பட்டு உன்னை வளர்த்தாரோ, அதுபோலவன்றோ நானும் வளர்த்தேன். அவரவ்வளவு சம்பந்தம் எனக்கும் இருக்கின்றது. ஆகையால், நீ காட்டிற்குப் போக நான் இசைய மாட்டேன். மிகவுந் துக்கித்துக்கொண்டிருக்கும் என்னை விட்டு நீ போவதும் நியாயமன்று. நீ போனபின்பு எனக்கு என் பிராணனாலே தான் என்ன பிரயோசனம்? பரலோகத்தினாலேதான் என்ன பலன்? பிதிருலோகத்தில் பெறும் ஸ்வதையால் தான் பயன் என்ன? அமிருதத்தால்தான் பலன் என்ன? இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பிராணிகளையும் பார்ப்பதை விட ஒரு முகூர்த்தகாலம் உன் முகத்தை நான் பார்த்திருந்தால் அது போதுமே என் ஆனந்தத்திற்கு" என மீண்டுங் கூறினாள். இவ்வாறு கௌசல்யை சொல்ல, இராமர், மனிதர்களால் கொள்ளிக்கட்டையைக் கொண்டு வெருட்டப்பட்டபோதிலும் பெரிய யானை தான் செல்லும் மார்க்கத்திலேயே செல்வதுபோல், தமது தாயின் எளிய அழுகையைக் கேட்டும் தமது எண்ணத்திலேயே இருந்தார்.

கோசலை இராமரைக் காட்டுக்குப் போகவேண்டாம் என்று தடுத்தல்.

வெகு தருமவழியில் நடப்பவரான இராமர், அப்போது குற்றுயிராயிருக்குந் தாயையும், மிகவும் எளிமையை யடைந்து துக்கத்தால் பரிதபித்துக்கொண்டிருக்கும் லக்ஷ்மணரையும் பார்த்து, "லக்ஷ்மணா, இடைவிடாத உனது பக்தியையும் பராக்கிரமத்தையும் நான் நன்றாக அறிந்திருக்கிறேன். எனது உண்மையான எண்ணத்தை அறியாமல், மிகவும்

இராமர் தம்பிக்குச்செய்த தர்மோபதேசம்.

வருந்தும் எனது தாயாரைப்போல் என்னை நீயும் வருத்துகின்றாய். தருமத்தின் பயன்களாகிய சௌக்கியங்களை அடைவதற்குக் காரணமாக நிச்சயிக்கப்பட்டவைகள், தருமார்த்தகாமங்கள் என்ற மூன்றே. சுவாதீனையாயும் விருப்பிற்கிடமானவளாயும் நற்புதல்வனைப் பெற்றவளாயு மிருக்கும் மனைவி யொருத்தியே தருமார்த்தகாமங்களை யுண்டாக்குவதுபோல், தருமம் ஒன்றே இம்மூன்றையும் உண்டாக்குகின்றது. இவ்விஷயத்தில் எனக்கு ஐயமில்லை. ஒரு தொழிலில் தருமார்த்தகாமங்கள் மூன்றுஞ் சித்தியாது தருமம் ஒன்றே சித்தித்தபோதிலும் அத்தொழிலே செய்யத்தக்கது. பொருளை மாத்திரம் உத்தேசித்து முயற்சி செய்கின்றவன், உலகத்தில் பகைவனாகின்றான். காமத்தையே மேற்கொண்டொழுகுவதும் நல்லதன்று. குருவாயும் அரசராயும் பெரியவராயுமிருக்கும் தந்தை, கோபத்தினாலோ ஸந்தோஷத்தினாலோ காமத்தினாலோ ஒரு தருமகாரியஞ் செய்யும்படி கட்டளையிட்டால், மெய்யான வழியில் நடக்கும் எவன்தான் அதை மறுப்பன்? எனது தந்தையின் பிரதிஜ்ஞையை அவ்வாறே முடித்துவைக்கமாட்டேன் என்று சொல்ல ஒருபொழுதும் எனக்கு முடியாது. அவரோ, பரதனுக்கும் எனக்கும் கட்டளையிடத்தக்க பிரபு; நமது தாய்க்கும் பர்த்தா; அவர்சொற்படிதான் நாம் செய்யவேண்டும். அவர்சொற்படி நடப்பதுதான் தருமம். தரும நெறியிற் சிறிதும் வழுவாது நடப்பவராயும் பர்த்தாவாயு மிருக்கும் அரசர் உயிருடன் வாழ்ந்துகொண் டிருக்கும்பொழுது, பட்டமகிஷியான எனது தாயார், விதவைபோல, எவ்வாறு என்னுடன் காட்டிற்கு வரலாம்? ஆகையால், அம்மா, எனக்கு வனஞ்செல்ல விடைகொடும். நாங்கள் வனவாசத்தை முடித்துக்கொண்டு, யயாதி மீண்டுஞ் சுவர்க்கத்தை யடைந்ததுபோல் சீக்கிரம் சத்தியத்தால் திரும்பிவரும்படி ஸ்வஸ்த்யயனம் பண்ணும்: வெகு

அற்பமான மண்ணாசையால், எனக்குக் கிடைக்கப் போகின்ற 'பிதிருவாக்கிய பரிபாலனம் பண்ணினவன்' என்ற புகழை நான் இழத்தல் தக்கதன்று. நமது வாழ்நாட்கள் வெகு கொஞ்சம்; ஆகையால், இப்பொழுது அதர்மமாய் இந்தப் பூமியை அடைய எனக்கு மனமேயில்லை" என்று, தருமநெறியிற் பிறழாது, வேறொருவர்க்குச் சொல்லவரியவையான மொழிகளைக் கூறினார்.

ஆண்சிங்கமான அந்த இராமர், கைகேயியின் ஏவலால் தண்டகாரணியத்திற்குப்போக விரும்பினவராய், இவ்வாறு தமது தாயாரைத் தேற்றித் தம்பியான லக்ஷ்மணருக்குத் தமது கொள்கையை நன்றாகத் தெரிவித்து, தம் தாயாரைப் பிரதக்ஷிணஞ் செய்ய எண்ணினார்.

இருபத்திரண்டாஞ் சருக்கம்:
'தெய்வச்செயல் நம்மால் தடுக்கமுடியாது' என்று இராமர் லக்ஷ்மணருக்கு உபதேசம் பண்ணுதல்.

அதன்பிறகு இராமர், தமது மனத்தை அடக்குந் தன்மையுடையவராகையால், தைரியத்தால் தமது வலியையடக்கிக்கொண்டு, தமது அன்பான தம்பியும் சுமித்திரையின் புதல்வருமான லக்ஷ்மணர் துக்கத்தால் பரிதபித்துப் பொறுமையை முற்றிலும் இழந்து கோபங்கொண்டு பெருமூச்செறியும் கரிராஜன்போலாகித் தமது தமையனாருக்கு வந்த கஷ்டதசையைக் கொஞ்சமேனுஞ்சகிக்காமல் கோபத்தால் கண்கள்விரிய நிற்பதைக்கண்டு, அவரைநோக்கி, "உன் கோபத்தையும் துக்கத்தையும் அடக்கி, கேவலந் தைரியத்தைத் துணையாகக்கொண்டு, அவமானத்தைச் சகித்து, இப்

லக்ஷ்மணருக்கு இராமர் விதியின் பயனை எடுத்துக் காட்டல்.

பொழுது நமக்குப் பிதிருவாக்கிய பரிபாலனம்பண்ணும்படியான பாக்கியம் வந்ததே என்று சந்தோஷ மடைந்து, இதுவரையில் என் பட்டாபிஷேகத்திற்கென்று சேர்க்கப்பட்ட எல்லாப் பொருள்களையும் விட்டு, இனிமேல் காட்டுக்குப் போகவேண்டியதற்கு என்ன செய்யவேண்டுமோ அவைகளை விரைவிற்செய். சுமித்திரையின் புதல்வனே, பட்டாபிஷேகப் பொருள்களைச் சேர்க்க எவ்வளவு விரைந்தாயோ, அவ்வளவு விரையவேண்டும், காட்டிற்கு வேண்டிய பொருள்களைச் சேர்ப்பதிலும். என்னுடைய பட்டாபிஷேகத்தைப் பற்றிப் பரிதபிக்கும் எனது சிறிய தாயார் சிறிதேனும் ஐயப்படாத வண்ணம் நீ இப்பொழுது நடக்கவேண்டும். லக்ஷ்மணா, அவள் மனம் இந்த விஷயமாகச் சங்கித்தலாகிற துக்கத்தை நான் ஒரு நிமிஷமும் பார்க்கச் சகிக்கமாட்டேன். தெரிந்தாவது தெரியாமலாவது இதுவரையில் என் தாய்க்காவது தந்தைக்காவது விருப்பில்லாத தொழிலை நான் செய்தேனென்று எனக்கு நினைவில்லை. உண்மையையே பேசுபவராயும், சொன்ன சொல் தவறாது நடப்பவராயும், எங்குந் தடைப்படாத பராக்கிரமத்தை யுடையவராயும், பரலோகத்தின் பொருட்டு அஞ்சுபவராயு மிருக்கும் எனது தந்தை, அச்சமற்றவராகட்டும். பட்டாபிஷேக ஏற்பாடுகளை உடனே நிறுத்தாவிட்டால், 'தமது சொல் பொய்யாய்விடுமோ!' என்று நமதுதந்தை மனம் தபிப்பார். அத்தாபம் என்னையும் தபிக்கச்செய்யும். ஆகையால், இந்த க்ஷணமே பட்டாபிஷேக யத்தனங்க ளெல்லாவற்றையும் நிறுத்தி, நான் அரண்ணியத்திற்குப்போக விரும்புகிறேன். நான் காட்டிற்குப் போய்விட்டேன் என்ற சமாசாரம் கேள்விப்பட்டால் கைகேயியம்மாவும் 'நமது எண்ணம் முடிந்துவிட்டது' என்று சந்தோஷ மடைந்து மனக்கலக்க மில்லாமல் பரதனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணிவைப்பார். நான், தலை மயிரைச் சடைசெய்துகொண்டு, மான்தோல்

மரவுரி இவைகளை அணிந்து காட்டுக்குப்போனபிறகுதான், கைகேயியின்மனம் சுகத்தை அடையும். காட்டிற்குப்போக வேண்டும் புத்தியைக் கற்பித்து மனத்தையும் உறுதியாகச் செய்த என்னை நான் வருத்தவிரும்புகின்றிலேன். ஆகையால், நான் காட்டிற்குச் செல்லப்போகின்றேன். விளம்பம் வேண்டாம். கையிற்கிடைத்த இராச்சியம் நழுவி நான் இப்பொழுது காட்டிற்குப் போகிறதற்குக் காரணம் விதியே. காலத்தினுல் உண்டான இவ்வபிப்பிராயம் தெய்வத்தால் உண்டாகாமல் இருக்குமாயின், கைகேயியின்புத்தி, உன்னுல் கஷ்டமானதாக மதிக்கப்படும் வனவாசத்தைச் செய்விக்க எவ்வாறு உடன்படும்? என் மாதாக்களிடத்தில் எனக்குப் பேதமில்லை என்பது உனக்குத் தெரியாதா? 'இராமன் வேறு; பரதன் வேறு' என்று கைகேயி ஏதாவது வித்தியாசம் பாராட்டியது உண்டா? அப்படி யிருந்தவர் இன்றைத்தினம் என் பட்டாபிஷேகம் கூடாதென்று தடுத்து இவ்வளவு அன்பில்லாமலும் கொடுமையாகவும் பேசினதற்குக் காரணம் தெய்வச்செயலன்றி வேறுண்டோ? அப்படி யில்லாவிடில், அவர், ஒரு மகாராஜாவயிற்றிற் பிறந்து, நன்னடக்கையும் நற்குணமும் எப்பொழுதும் அடைந்திருந்தும், இப்பொழுது தமது புருஷன்முன் நின்று, ஓர் அற்பப்பெண்பிள்ளைபோல், எனது பீடையைச் சொல்லுவாரா? எண்ணுதற்கரிய மகிமைபொருந்தின விதி, எல்லாப் பூதங்களிடத்திலும் தடையின்றிச் செல்லும் வலியுள்ளது. இவ்விஷயம், என்னிடத்தும் தாயாகிய கைகேயியினிடத்தும் நன்கு விளங்குகின்றது; இருவர்க்கும் மாறுதல் உண்டாயிற்றன்றோ!

விதியுடன் போரிட முடியாதென்றல்.

பயன் விளைதற்குமுன் அறியமுடியாத விதியோடு மாறுகொள்ள யாருக்குத்தான் திறன் இருக்கின்றது? ஒருவனுடைய சுகமும் துக்கமும், சாந்தியும் கோபமும், லாபமும் நஷ்டமும், உத்பத்தியும் விநாசமும், காரணங் கருதமுடியாத மற்ற எல்லாவித காரியங்களும் அத்தெய்வச்செயலால்

தான் நிகழ்கின்றன. கடுந்தவம் புரியும் ரிஷிகளும், இவ்விதியாற் பீடிக்கப்பட்டவராய், செய்தற்கரிய நியமங்களையுங் கைவிட்டுக் காமக்ரோதங்களால் அவமானமடைகின்றனர். நாம் மேற்கொண்ட தொழில் முடியாமற் போவதும் அதற்குப்பதிலாக மற்றொரு தொழில் நிறைவேறுவதும் தெய்வத்தின் செயலன்றி வேறன்று. இவ்விதமாக எண்ணுந் தத்துவபுத்தியை யடைந்து மனத்தை யடக்கியிருக்கும் எனக்கு, பட்டாபிஷேகம் நின்றதற்காகத் துக்கஞ் சிறிதுமில்லை. நீ இத்தத்துவபுத்தியால் பரிதாபம் அற்று, என்னை அநுசரித்து, சீக்கிரமாக என் பட்டாபிஷேக ஏற்பாடுகளைத் தடுப்பாய். லக்ஷ்மண, நான், பட்டாபிஷேகத்தின்பொருட்டு வந்திருக்கும் புண்ணியதீர்த்தங்களைக்கொண்டு தவசிகளுடைய தொழிலில் மூள்வதற்கு விரதஸ்நானஞ் செய்யப்போகின்றேன். இல்லாவிடின், அரசரது பொருளாக மதிக்கப்பெற்ற இதுதான் எதற்கு? ஸ்வயமாய் எடுத்த ஜலத்தால் விரதஸ்நானஞ் செய்யலாம். லக்ஷ்மண, நீ 'இராச்சியம் போயிற்றே' என்று துன்பப்படாதே. இராச்சியத்தையடைதல், காட்டுக்குப்போதல் இவையிரண்டையுஞ் சீர்தூக்கிப் பார்த்தால் வனவாசந்தான் சிறந்தது. லக்ஷ்மண, பட்டாபிஷேகத்திற்கு விக்கினஞ் செய்ததில் இளையவரான மாதா ஐயுறத்தக்கவரல்லர்; ஏனெனில், தெய்வத்தாலன்றோ அவர் அங்ஙனம் உரைத்தார். தெய்வம் அவ்வளவு வலியுள்ளதென்று நீ அறிவாய்" என்றார்.

இருபத்துமூன்றாஞ் சருக்கம்:
'அபிஷேகஞ்செய்துகொள்ளவேண்டும்' என்று லக்ஷ்மணர் சொல்ல, இராமர் அதை மறுத்தல்.

இராமர் இவ்வாறு அடிக்கடிசொல்ல, லக்ஷ்மணர், தமது தலையை வணக்கிக்கொண்டு கேட்டு, தம்மனத்தில் 'தருமத்தில் நிலையாக இருக்கின்றார்' என்று மகிழ்ச்சி

யையும் 'இராச்சியத்தை விடப்போகின்றாரே!' என்று துக்கத்தையும் அடைந்தவர்போல் காணப் பட்டார். அப்போதே புருஷசிரேஷ்ட ரான லக்ஷ்மணர், புருவங்களை நெற்றியி லேற்றி வளைத்து, பெட்டிக்குள்ளிருக்குஞ் சினங்கொண்ட பெரிய சர்ப்பம்போல் பெருமூச்செறிந்தார். அவ்வாறு அவர் புருவத்தை நெறித்துக்கொண்டு கோபித்து நின்ற பொழுது, பார்ப்போர்க்கு அச்சத்தை விளைக்கும் அவ ருடைய முகம், கோபித்துநிற்குஞ் சிங்கத்தின் முகம் போலக் காணப்பட்டது. ஒரு யானை தனது துதிக்கையை ஆட்டுவதுபோல், தமது முன்கைகளை ஆட்டிக்கொண்டு, சினத்தின் மிகுதியால் கழுத்தைச் சரீரத்தில் கீழாகவும் மேலாகவும் குறுக்காகவும் அசைத்து, கடைக்கண்ணால் குறுக்காகத் தமது தமையனாரைப் பார்த்து, 'நான் இத்த ருமத்தைச் செய்யாதிருப்பின், பிதிருவசன பரிபாலன மாகிற தருமத்துக்குக் குறைவு நேரும்' என்றும், 'உலக மும் இதைச் செய்யாதுவிடும்' என்றும் எண்ணிக் காட் டிற்குப்போக விரைவது சரியன்று. க்ஷத்திரியவீரரே, சமர்த்தரே, உம்மைப்போன்றவர்கள் புத்திமயக்கம் இல் லாமல் இருக்கும்பொழுது, வலியற்ற விதியை வலியுள்ள தென்று இவ்விதமாக எப்படிச் சொல்வார்கள்? எளிய தாயும், முயற்சியை வெல்லும் வலி யற்றதாயு மிருக்குந் தெய்வத்தை ஏன் புகழ்ந்து பேசுகின்றீர்? மிகக்கொடி யவர்களான கைகேயி தசரதர் ஆகிய இருவரும் நம் மிடத்து வெகு கெட்ட எண்ணங் கொண்டிருக்கிறார்க ளென்று ஏன் நீர் எண்ணவில்லை? தருமநெறியில் நடப் பவர்களென்று வேஷம் பூண்டு தமது குற்றத்தை மறைப் பவர்களை நாம் பார்த்ததில்லையா? தருமவழியில் நடப்ப வரே, மறைவாகத் தீங்கு புரியுங் குணத்தால், பட்டா பிஷேகத்தை நீக்கக் கருதிய கைகேயிதசரதர்களுடைய நல்லொழுக்கத்தை அறியீரோ? இரகுகுலத்திற் பிறந்த

இலட்சுமணர் கடுஞ்சினம்.

வரே, இவ்வண்ணம் அவர்கள் கெட்டஎண்ணங் கொண்டிராவிடில், முன்னரே தந்த வரம் முன்பே நிறைவேறியிருக்கும். மூத்தகுமாரராகிய உம்மை அகற்றி இளையகுமாரராகிய பரதருக்குப் பட்டாபிஷேகம் பண்ண அரசர் இப்பொழுது யத்தனித்திருப்பது, இவ்வுலகத்தாரால் ஒப்புக்கொள்ளப்படாத காரியம். இதை நான் பொறுக்கமாட்டேன். இவ்விஷயத்தில் என்னைத் தாங்கள் க்ஷமிக்க வேண்டும். மகாபுத்தியுள்ளவரே, 'பட்டாபிஷேகஞ் செய்துகொள்ளப்போகின்றேன்' என்று எண்ணிய புத்தியைக் கெடுத்ததும், 'இவ்வாறு செய்யாவிடின் குற்றமுண்டாகும்' என்று உம்மை மோகிக்கச் செய்கின்றதுமாகிய தருமம் எனக்கு உடன்பாடானதன்று. நமது தந்தையார், கைகேயியின் வலையிற் சிக்கிக்கொண்டு, எல்லாரும் 'சீச்சீ' என்று சொல்லும்படியான தருமமற்ற வார்த்தையைச் சொல்லிவிட்டால், வீரத்தன்மையால் எதிர் செய்யவல்ல நீர், மோகமில்லாவிடின், அதைச்செய்ய எவ்வாறு உடன்படுவீர்? உமது பட்டாபிஷேகத்துக்கு உண்டான தடை இவர்களுடைய கபடத்தால் தோன்றியிருந்தும், நீர் அவ்வாறு கொள்ளாததை நினைக்க நினைக்க எனக்குத் துக்கம் மிகுதியாகப் பொங்குகிறது. இவ்வாறு தருமத்தை நடத்துவது, உலகத்தாரால் பழிக்கப்படுகிறது. தாய்தந்தையர்களென்று பெயரிட்டுக்கொண்டு, நமக்குச் சத்துருக்களாயும், பொல்லாங்கையே புரிபவர்களாயும், தங்கள் விருப்பின்படி செல்பவர்களாயு மிருக்கும் அவர்களுடைய மனக்கருத்தின்படி நடக்க நீர் மனத்தினுற் கருதுதலுங்கூடாது. 'அவர்கள் அப்படிக் கொண்ட எண்ணம் தெய்வத்தால் நிகழ்ந்தது' என்று நீர் எண்ணவேண்டாம்; அவ்வாறு கருதுவதைச் சிறிதேனும் நான் விரும்பேன். வீரமற்றவனும், அஞ்சியவனுமா யிருப்பவனே தெய்வத்தைத் தொடர்ந்து நடப்பான். வீரத்தையும் மனவுறுதியையுமுடையவர், தெய்வத்தை ஒரு பொருளாகக் கொள்

ளார். தெய்வத்தை முயற்சியால் வெல்பவன், 'தானெடுத்த கருமம் இடையூறடைந்துவிட்டதே' என்று ஒருபொழுதும் துன்பமடையான். தெய்வச்செயல் மனிதச்செயல் இவ்விரண்டிற்கு முள்ள ஏற்றத்தாழ்வுகளை இப்பொழுது எல்லாரும் பார்க்கப்போகின்றார்கள். உம்முடைய பட்டாபிஷேகத்திற்குத் தடைசெய்த தெய்வம் என்னுடைய பராக்கிரமத்தால் தோல்வியடைவதை எல்லாரும் பார்க்கப்போகின்றார்கள். அங்குசத்துக்கு அடங்காததும் கட்டுச்சங்கிலியையும் முறித்துக்கொண்டு ஓடுவதும் மதத்தையும் மிக்கபலத்தையு முடையதுமான யானையைப்போலவிருக்குந் தெய்வத்தைப் பராக்கிரமத்தால் திருப்புகின்றேன். மிக்க வலியுள்ள அரசர்களாலும், இராமருடைய பட்டாபிஷேகத்தைத் தடுக்கமுடியாது. மூவுலகத்திலுள்ளவர் ஒருங்குதிரண்டாலும் இவ்விஷயத்தில் வலியுடையவரல்லர்; பிதாவையும் ஒரு பொருளாக எண்ணி எடுத்துக் கழிக்கவேண்டுமோ? எவர்கள், ஒன்றுசேர்ந்து இரகசியமாக ஆலோசித்து, 'பதினான்கு வருஷகாலம் காட்டில் வசிக்கவேண்டும்' என்று உமக்குக் கட்டளையிட்டார்களோ, அவர்கள்தாம் பதினான்குவருஷம் காட்டில் வசிக்கப் போகின்றார்கள். உமது பட்டாபிஷேகத்தைக் கெடுத்துப் பரதருக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவைக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்குந் தந்தைதாயர்களுடைய ஆசையைக் கத்தரித்துவிடுகிறேன். என்னுடையபலம் பகைவர்களுக்கு எவ்வாறு துன்பஞ்செய்யுமோ, நண்பர்களுக்கு எவ்வாறு இன்பஞ்செய்யுமோ, அவ்வாறு தெய்வபலம், துன்பத்தையேனும் இன்பத்தையேனும் செய்யமாட்டாது. பெரியவரே, ஆயிரம்வருஷம் நீர் இந்த இராச்சியத்தை ஆண்டு, பின்பு உமது புதல்வரிடம் கொடுத்துவிட்டுக் காட்டிற்குப் போகலாம். ஜனங்களைப் புதல்வரிடம் பிள்ளைகளைப்போல் போற்றவைத்திட்டு, அநேக ராஜரிஷிகள் காட்டிற்குப் போனதுபோல், காட்டிற்குப்

போதலன்றோ தக்கது. நீர் இப்பொழுது 'தகப்பனார் சஞ்சலமான மனத்தையுடையவரா யிருப்பதால் இராச்சியம் நிலையாயிராது' என்று எண்ணி இராச்சியத்தை விரும்பாதிருக்கவேண்டாம்; சமுத்திரத்தைக் கரை காப்பது போல் நான் இராச்சியத்தை அப்பால் அசையவொட்டாமற் காக்கின்றேன்; 'இவ்வாறு காவாதிருப்பின் வீரலோகம் போகேன்' என்று பிரதிஜ்ஞை செய்கின்றேன். நீர் இராச்சியத்தில் பட்டாபிஷேகஞ் செய்துகொள்ள விரும்பினவராய், வசிஷ்டாதி முனிவர்களைக்கொண்டு மங்கள வஸ்துக்களால் பட்டாபிஷேகஞ் செய்துகொள்ளச் சித்தராகவிரும். உமக்கு விரோதமாக வரும் அரசர்களெல்லாரையும் பலத்தால் தடுக்க நான் ஒருவனே போதும். இவ்விரண்டு கைகளும் எனக்கு அழகுக்காக இருக்கவில்லை; பூஷணமாக இருத்தற்கென்று நான் வில்லை ஏந்தவில்லை; அலங்காரத்திற்கென்று உத்தேசித்துக் கத்தியை நான் வைத்திருக்கவில்லை; சும்மா இருத்தற்கென்று நான் பாணங்களைத் தரிக்கவில்லை; சத்துருக்களைக் கொல்லும் பொருட்டே இந்நான்கும் இருக்கின்றன. எனக்குப் பகையாக எவன் இருக்கிறானோ, அவன் உயிரோடிருக்க நான் பொறுக்கமாட்டேன்; சத்துரு என்று வந்தவன் வச்சிராயுதத்தைப் பிடித்த இந்திரனாக இருந்தபோதிலும், மின்னல்போல் மின்னுவதும் கையிலேந்தியதுமான இந்தக் கூரியவாளால், அவனையும் ஒரு பொருளாக மதியாது வெல்லுவேன். நான், யானைகளுடைய துதிக்கைகளையும் குதிரைகளுடைய துடைகளையும் போர்வீரர்களுடைய தலைகளையும் குன்றுகள்போல் என்வாளால் அறுத்துக் குவித்துப் போர்க்களத்தை நிரம்பியதாகவும் புகுதற்கு அரியதாகவுஞ் செய்துவிடப்போகின்றேன். என் கத்தியின் நுனியால் அறுபட்டு, கிளம்பிய பொறியால் எரிந்துகொண்டு, பூமியில் விழும் மின்னற்கொடியுடன்கூடிய மேகம்போலவும் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் குன்று

போலவும் யானைகள் இப்பொழுது போர்க்களத்தில் விழப்போகின்றன. நான், கையில் வில்லேந்தி, விரல்களில் அடிபடாமற் காக்குங் கவசத்தைத் தரித்துக்கொண்டு, போர்க்களத்தில் நின்றால், என் பராக்கிரமத்துக்கு முன் எந்தமனிதன்தான் வீரனென்று சொல்லிக்கொண்டு எதிர்நிற்பன்? மிகவுஞ் சூரனை ஒருவனைப் பலபாணங்களாலும், அற்பரான பலரை ஒரு பாணத்தாலும் தோல்வியுறச் செய்யச் சித்தனாய், போர்க்களத்தில் நிற்கும் வீரர்கள், யானைகள், குதிரைகள் இவைகளை என் அம்பால் கொன்று வீழ்த்துவேன். இன்றைத்தினம் நமது தந்தையின் தலைமையைக் குலைத்து உம்மை அரசராக்குவதற்காக, அஸ்திரவித்தையில் நான் அடைந்திருக்குஞ் சாமர்த்தியம் முழுவதும் வெளியாகப்போகின்றது. இதுவரையில் சந்தனங்களையும் தோள்வளைகளையும் அணிந்தும் சினேகிதர்களைப் போற்றியும் கேட்பவர்களுக்குப் பொருளைக் கொடுத்தும் வந்த இவ்விரண்டு கைகளும், இப்பொழுது உம்முடைய பட்டாபிஷேகத்துக்கு விக்கினம் புரிபவர்களைத் தடுக்குந் தொழிலைச் செய்யப்போகின்றன. எந்தச் சத்துருக்கள் இப்பொழுதே தம்முடைய பிராணனை விட்டும், புகழை விட்டும், பந்துக்களை விட்டும் பிரிய வேண்டும்? சீக்கிரஞ் சொல்லும். எவ்விதம் நான் செய்தால் இந்தப் பூமி உம்முடையதாகுமோ, அவ்விதத்தை எனக்குக் கட்டளையிடும். அவ்வாறு செய்ய உமது வேலைக்காரனாக நான் காத்து நிற்கிறேன்" என்று லக்ஷ்மணர் சொன்னார். இரகுகுலத்தை விளங்கவைக்கும் இராமர், இலக்குமணருடைய ஆறுய்ப்பெருகுங் கண்ணீரைத் துடைத்து, நல்வார்த்தையால் தேற்றி, அவரைப் பார்த்து, "நற்குணமுடையாய், தந்தை சொல்லை நிறைவேற்றுவதில்தான் எனது கருத்துச் செல்கின்றது; இவ்வழிதான் நல்வழி" என்றார்.

இருபத்துநான்காஞ் சருக்கம்:
வனவாசஞ்செய்ய இராமருக்குக் கௌசல்யை விடை கொடுத்தல்.

கௌசல்யை, இராமர் தமது தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு நிச்சயித்திருப்பதைக் கண்டு கண்களில் நீர் ததும்ப அவரைப் பார்த்து, "எனக்கும் தசரதருக்கும் பிறந்து, தருமத்தைத் தவறாது நடத்திக்கொண்டு, எல்லோர்க்கும் விருப்பமானதையே விளம்பி, துக்கமென்பதை அறியாமலிருக்கும் நீ, எவ்வாறு உஞ்சவிருத்தியால் பிழைப்பாய்? உனது அடிமைகளும் வேலைக்காரர்களும் இங்கு மிகச்சிறந்த அன்னத்தை உண்டுகொண்டிருக்க, இவர்களுக்குத் தலைவனான நீ, காட்டுக்குப்போய் எவ்வாறு வேர்களையும் பழங்களையும் உண்பாய்? 'குணநிதியும் எல்லாருடைய அன்புக்கும் இடமுமான நீமன்னவரால் காட்டுக்கு ஓட்டப்படுகிறாய்' என்றால் யார்தான் இதை நம்புவார்? யார்தான் இதைக்கேட்டு நடுங்கார்? ராம, உலகத்துக்கெல்லாம் பிரியனான நீயே காட்டுக்குப் போவாயேயானால் 'தெய்வமே எல்லாவற்றையும்நிகழ்த்துகின்றது' என்பதும், 'அதைக் கடத்தல் முடியாது' என்பதும் நிச்சயமன்றோ! பனிக்காலம் நீங்கினபின்பு காட்டுத்தீ புதரை எரிப்பதுபோல், உன்னை விட்டுப் பிரிந்த பிறகு எனக்கு உண்டாகும் பொறுக்கமுடியாத பெரிய துக்காக்கினியானது, உன்னைக் காணாமையாகிய காற்றையும், அழுகையாகிய சமித்தையும், கண்ணீராகிய ஆகுதியையும், எண்ணமிடுதலா லுண்டாகும் ஆவியாகிய புகையையும், பெருமூச்சாகிய முயற்சியையும் பெற்று, என்னை மெலியச்செய்து கொளுத்தும். ஆகையால், முன் செல்லுந் தனது கன்றினைத் தொடர்ந்து பசு போவதுபோல், நானும் உன்னைத் தொடர்ந்து வருவேன்" என்று நியாயமாகக்

கௌசலை உடன் வருவேனென்றல்.

கூறினள். புருஷ சிரேஷ்டரான இராமர், இவ்வண்ணம் வெகு துக்கத்துடன் சொல்லும் தம் தாயாரைப் பார்த்து, "கைகேயியால் வஞ்சிக்கப்பட்ட நமது மன்னவரை, நான் காட்டுக்குப் போய்விட நீரும் கைவிட்டால் அவர் உயிரோடிருக்க மாட்டார். மனைவி தனது கணவனை விட்டிடுவது வெகு கொடிய பாதகமன்றோ! எல்லாராலும் மிகவும் பழிக்கப்பட்ட இப்பாதகத்தை நீர் மனத்திலும் எண்ணக்கூடாது. எனது தந்தையாகிய மகாராஜா எதுவரையில் இவ்வுலகத்தில் உயிருட னிருக்கிருரோ, அது வரையில் நீர் அவரிடம் பணிவிடை செய்துகொண்டு இருக்கவேண்டும். இதுதான் தருமங்களுள் உத்தமமான தருமம்" என்ருர். இராமர் இவ்வாறுசொல்ல, நன்னெறியிற்செல்லுந் தன்மை வாய்ந்த கௌசல்யை, "அப்படியே ஆகட்டும், என் குழந்தாய்" என்ருள்; ஒருவர் மனமும் நோவாதபடி நடத்தும் தன் குமாரனுடைய பெருந்தன்மையைக் கண்டு மகிழ்ந்தாள்.

இராமர் தசரதரிடத்திலிருக்க வேணுமென்று நியாயங் காட்ட, கௌசலை உடன்படுதல்.

தருமநெறியில் தப்பாமல் நடக்கும் இராமர், இவ்வாறு ஒப்புக்கொண்டு சோகம் என்பதுமட்டும் நீங்காமல் நிற்கும் தமது தாயைப் பார்த்து, "நீரும் நானும் தந்தை சொற்படி நடக்கவேண்டியவர்கள். எனது தந்தை, எல்லார்க்கும் அரசர்; உமக்குப் பர்த்தா; எனக்குக் குரு; வெகு உத்தம குணங்களுள்ளவர்; எல்லாரையும் நல்வழியில் நடக்குமாறு நியமிப்பவர்; பிரபு; நான் அவர் சொற்படி பதினன்கு வருஷகாலம் மகாரணியத்தில் வெகு மகிழ்ச்சியோடு விளையாடி, உமது வசனத்தைப் பின்பு செய்கிறேன்" என்ருர். இவ்வாறு தனது அன்பனுன புத்திரன் சொல்ல, கௌசல்யை, கேட்டு கண்ணீர் தனது முகத்தில் விழுந்தோட வெகு பரிதாபமாகத் தனது குமாரன்மேல் தான் வைத்திருந்த அன்பினல் மறுபடியும் "இராம, என்சக்களத்தி

இராமர் தேற்றரவு.

மீண்டும் கௌசலை உடன்வர வேண்டல்.

கள் மத்தியில் என்னால்வசிக்கமுடியாது. பிதாவின் விருப்பின்படி நடக்கவேண்டுமென்று எண்ணினையே யானால் என்னையும் ஒரு காட்டுப்பெண்மானைப்போலக் காட்டுக்கு அழைத்துப்போ'' என்றாள்.

இராமர் கௌசலைக்கு நியாயமெடுத்துக்காட்டல்.

இவ்வாறு அழுதுகொண்டு சொன்ன தமதுதாயாரைப்பார்த்து இராமர், தாமும் அழுதுகொண்டு, மீண்டும் "உயிருடன் இருக்கிறவரையில் மனைவிக்கு அவள் கணவன்தான் தெய்வம்; அவன் தான் பிரபு; நமது அரசர் உமக்கும் எனக்கும் கட்டளையிடுபவர். நாம் நாதனற்றவர்கள் அல்லோம். லோகநாதராயும் புத்திமானாயும் இருக்கும் அரசர் நமக்கு நாதராக இருக்கின்றனர். மேலும், பரதன் வெகு தருமகுணமுள்ளவன்; எல்லாருக்கும் விருப்பமானவற்றையே விளம்புபவன்; அவன் எப்பொழுதும் உம்மிடம் வணங்கி உமக்கு அநுகூலமாக நடந்துகொள்வான். எப்பொழுதும் அவன் அறத்தையே விரும்பினவனன்றோ! நான், அரணியத்துக்குப் போனபிறகு, என்னை விட்டுப் பிரிந்த துக்கத்தால் அரசர் மெலிந்துவிடாதபடி எவ்வண்ணம் அவரைக் காப்பாற்றவேண்டுமோ, அவ்வண்ணம் ஜாக்கிரதையாய்க் காப்பாற்றிவாரும். புத்திரசோகம் என்பது மிகக்கொடிய பெரியசோகம். அதனால், ஒருகால் உடம்புக்கு அழிவு வந்தாலும் வந்துவிடும்; ஆகையால், கணவர்க்குப் பணிவிடை செய்வதிலேயே கருத்தூன்றியவராய் முதுமைப்பருவம் அடைந்திருக்கும் அரசர்க்கு நன்மையையே புரிந்திடும். தனது புருஷனுக்குப் பணிவிடை செய்யாமல் விரதங்களையும் உபவாசங்களையும் பண்ணிக்கொண்டிருக்கும் மிகவும் உத்தமையான ஸ்திரீயும் நரகத்தைத்தான் சேர்வள். ஒரு ஸ்திரீ நல்லகதியை யடையக்கருதினால் அவள், ஆலயங்களுக்குப்போய் வழிபாடு செய்யவேண்டாம்; அந்தணர்

முதலியோரை வணங்கவேண்டாம்; தனது கணவனுடைய நன்மையையே எப்பொழுதும் நாடி அவனுக்குச் சரியாகப் பணிவிடை செய்தால் அதுவே போதும். இது தான் மாதர்களுடைய கடமையென்று வேதங்கள் சொல்லுகின்றன; உலகமும் இதனையே மதிக்கின்றது. அம்மா, நீர், எனது நன்மையைக் குறித்து அக்கினியில் ஹோமங்கள் செய்துகொண்டு நல்லமலர்களாலும் சந்தனதாம்பூலங்களாலும் தெய்வங்களையும் நல்லொழுக்கமுடைய அந்தணர்களையும் பூஜியும். இவ்வண்ணம் நோன்புகளையும் உபவாசங்களையும் நடத்தி, எனது வருகையை விரும்பினவராய், ஆஹாரநியமத்தையும் வைத்துக்கொண்டு, பார்த்தாவுக்குப் பணிவிடை செய்வதில் கருத்தூன்றியவராயிருப்பின், அவற்றின் பலத்தாலேயே நானும் திரும்பி வரக் கணவரும் பிழைத்திருப்பின், உமது விருப்பமெல்லாவற்றையும் பின்பு பெறலாகும்" என்றார்.

கௌசலை இராமருக்கு விடை கொடுத்தல்.

புத்திரனைப் பற்றிய சோகத்தை மிகுதியாகவுடைய கௌசலை, கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருக, இராமரைப்பார்த்து, 'காட்டுக்குப் போவதில் வெகு உறுதியோடிருக்கும் உன் மனத்தை என்னால் திருப்ப முடியாது. இது, காலத்தின்கொடுமைதான். வீரனே, உறுதியுடன் போய்வா. என் குழந்தாய், உனக்கு மங்களம் உண்டாகக்கடவது. மறுபடி உன்னைக் கண்டபிறகுதான் என் துயரம் நீங்கும். மிக்க பாக்கியவானும் விரதத்தையநுஷ்டிப்பவனும் கிருதார்த்தனுயு மிருக்கும் நீ, உன் பிதாவின்கடனை அவர் வாக்கியப்படி காட்டில் வசிப்பதால் நீக்கித் திரும்பி வந்த பிறகுதான் நான் மிக்க சுகத்தை யடைவேன். தெய்வத்தின்செயல் உலகத்தில் ஒருகாலும் அறியமுடியாது; என்னுடைய வாக்கும் வேறு தன்மையை யடைந்து உன்னைக் காட்டுக்குப் போகும்படி ஏவுகின்றதன்றோ! என் வீரசிங்கமே, நீ காட்டுக்குப்போய், க்ஷேமமாகத் திரும்பி

வந்து மிக அழகிய நல்ல உன் வாக்குகளால் என் மனத்தைக் களிக்கச்செய்வாய். என் குமாரனாகிய நீ சடை முடித்த தலையுடனும் மரவுரி யுடுத்த இடையுடனும் காட்டிலிருந்து திரும்பிவர நான் பார்க்கும் அக்காலமும் இப்பொழுதே வருமா?" என்றாள். இவ்வண்ணம் காட்டுக்குப் போக நிச்சயித்திருக்கும் தனதுகுமாரராகிய இராமரைப்பார்த்துக் கௌசலை வெகு அன்போடு நல்ல குணங்கள் பொருந்திய பேச்சைப் பேசி அவருக்கு ஸ்வஸ்தியயனஞ் செய்ய விரும்பினாள்.

இருபத்தைந்தாஞ் சருக்கம்:
கௌசல்யை இராமரை வாழ்த்தி யனுப்புதல்.

நல்ல மனத்தையுடைய அந்தக்கௌசல்யை, தனது துக்கங்களை யடக்கிக்கொண்டு, ஆசமனம் பண்ணி, இராமருக்கு மங்களத்தைச் செய்யலானாள். "இராம, உன்னைத் தடுக்க முடியாது. நீ போய்ச் சீக்கிரம் திரும்பிவருவாய்; நல்லவர்கள்வழியில் நடப்பாய். என் வீரசிங்கமே, உனது மனோதைரியத்தாலும் நியமத்தாலும் எந்தத் தருமத்தை நீ நடத்திவருகிறாயோ, அந்தத் தருமம் உன்னைக் காக்கட்டும். நாற்சந்திகளிலும் ஆலயங்களிலும் எந்தத் தெய்வங்களை நீ வணங்கிநிற்கிறாயோ, அந்தத் தெய்வங்கள், காட்டிலுள்ள மகர்ஷிகளோடு உன்னைப் பாதுகாக்கட்டும். விசுவாமித்திரமகர்ஷியால் உனக்குத் தரப்பட்ட அஸ்திரங்களெல்லாம், குணக்குன்றாகிய உன்னை எப்போதும் காப்பாற்றட்டும். மிகுந்த தோள்வலி யுடையவனே, நீ உன் தந்தைக்குச்செய்த பணிவிடையும், உன்தாய்க்குப் பண்ணின சுச்ரூஷையும், நீ கைக்கொண்டிருக்குஞ் சத்தியமும் உனக்கு நீண்ட ஆயுளை யளித்து உன்னை யிரட்சிக்கட்டும். மனிதரில் உத்தமனே, சமித்துகள், தருப்பைகள், பவித்திரங்கள், அக்கினிவைக்கும் வேதிகள், ஆலயங்

கள், விசித்திரமான பூஜாஸ்தானங்கள், மலைகள், மரங்கள், செடிகள், மடுக்கள், பறவைகள், பாம்புகள், சிங்கங்கள் இவைகளெல்லாம் உன்னைப் பாதுகாக்கட்டும். ஸாத்தியர்கள், விசுவ தேவர்கள், மருத்துக்கள், மகர்ஷிகள், தாதா, விதாதா இவர்கள் உனக்கு க்ஷேமத்தைக் கொடுக்கட்டும். துவாதசாதித்தியர், இந்திரன் முதலான லோகபாலர்கள் உன்னைப் பாலனம் பண்ணட்டும். ருதுக்கள், பட்சங்கள், மாதங்கள், வருஷங்கள், இரவு, பகல், முகூர்த்தங்கள் இவையெல்லாம் உனக்கு எப்பொழுதும் க்ஷேமத்தை யுண்டாக்கட்டும். தியானமும், சமாதியும், தருமங்களும் உன்னை எப்பொழுதும் போற்றக்கடவன. சநத்குமாரபகவான், சுப்பிரமணியக் கடவுள், சந்திரன், பிரஹஸ்பதி, ஸப்தரிஷிகள், நாரதர் இவர்களெல்லாரும் உன்னை எப்பொழுதும் காப்பாற்றட்டும். மிகப் பிரசித்தர்களான திக்பாலகர்களோடு கூடின எட்டுத்திக்குக்களும், உன்னை நித்தியமும்பாதுகாக்கட்டும். இவர்களெல்லாரையுங்குறித்து நான் ஸ்தோத்திரஞ்செய்கிறேன். அஷ்ட குலபருவதங்களும், சமுத்திரங்களும், குபேரனும், வருணனும், தமது தேவதைகளோடுஞ் சேர்ந்த சுவர்க்கம் ஆகாசம் பூமி நதிகள் நட்சத்திரங்கள் கிரகங்கள் இவைகளும் உனக்கு நன்மையைக் கொடுக்கட்டும். இராப்பகலின் தேவதைகளும், இரண்டுசந்தியாகாலங்களும், காட்டில் உறையும் உன்னைக் காக்கட்டும். புண்ணியமான ஆறுருதுக்களின் தேவதைகள், மாசத்தின் தேவதைகள், வருஷத்தின் தேவதைகள், கலாகாஷ்டாதிகாலங்களின் தேவதைகள், உனக்கு க்ஷேமத்தை யளிக்கட்டும். முநிவேஷம் பூண்டு பெரியகாட்டில் வசிக்கும் புத்திமானுன உனக்குத் தேவ தானவர்கள் சுகத்தைக் கொடுப்பார்களாக. குரூரமான காரியங்களையே பண்ணும் கொடியரான ராக்ஷஸர்களிடத்திலிருந்தும், பிசாசங்களிடத்திலிருந்தும், இன்னும் மாமிசங்களைப் புசிக்கும் மற்றைப் பிராணிகளிடத்திலிருந்தும் உனக்கு ஒரு

பொழுதும் பயமென்பதே உண்டாகாமலிருக்கக்கடவது. காட்டில் குரங்குகளும், தேள்களும், காட்டீக்களும், கொசுகுகளும், மலைப் பாம்புகளும், புழுக்களும் உனக்குத் தீங்கு செய்வனவாக இருக்கவேண்டாம். பெரிய யானைகளும், சிங்கங்களும், புலிகளும், கரடிகளும், பன்றிகளும், எருமைகளும், கொம்புள்ள கொடிய மற்ற மிருகங்களும் உனக்குத் துன்பஞ் செய்யாமலிருக்கக் கடவன. மனிதமாம்சத்தையே புசித்துக்கொண்டு பயங்கரமான தொழிலுடன் காட்டில் வசிக்கும் ஜந்துக்கள், நான்செய்யும் பூஜையினால் உனக்கு ஒருவித தீங்கையும் பண்ணாமலிருக்கட்டும். நீ போகும் வழிகளெல்லாம் உனக்கு நல்லவழிகளாக இருக்கட்டும். உனது பராக்கிரமம் வீண்போகாமலிருக்கட்டும். காட்டிலுள்ள வழிகளெல்லாம் பலமூலாதிகள் நிரம்பினவாக இருக்கக்கடவன. ஆகாயத்திலிருக்கும் எல்லாத் தெய்வங்களும் பூமியிலிருக்கும் எல்லாத் தெய்வங்களும் உனக்கு எப்பொழுதும் மங்களத்துடன் நன்மையையே உண்டுபண்ணட்டும். சத்துருக்களும் உனக்கு நன்மையையே செய்யட்டும். ராம, தண்டகையில் வசிக்கும் உன்னை, ப்ருஹஸ்பதி, சூரிய சந்திரர்கள், இந்திரன், குபேரன், யமன் முதலாகிய எல்லாத் தேவர்களும் அர்ச்சிக்கப்பட்டவர்களாய்க் காப்பாற்றட்டும். நீ ஸ்நாநம் பண்ணும்போது அக்கினி, வாயு, தூமம், ரிஷிகள் உனக்குக்கொடுப்பதற்காக உச்சரிக்கும் மந்திரங்கள் இவைகள் உன்னைப் பாதுகாக்கட்டும். உலகத்திலுள்ள எல்லாரையும் படைத்துப் பாதுகாக்கும் பிரமதேவனும் காத்தற்றொழிற்குத் தலைவனான ஸ்ரீமந்நாராயணனும் மற்றத் தெய்வங்களும் ரிஷிகளும் காட்டில் வசிக்கும் உன்னைக் காப்பாற்றட்டும்" என்று சொல்லி, மாலைகளினாலும் வாசனைத்திரவியங்களினாலும் அவ்வவைகளுக்குத் தக்க துதிகளாலும் தெய்வங்களை அர்ச்சித்தாள். அன்றியும் அவள், பிராமணர் மூலமாய்த் தீ வளர்த்து இராமருக்கு மங்களமுண்டாவ

தற்காக ஓமம் பண்ணினுள். அந்த உத்தமி, நெய்யையும் வெண்மாலைகளையும் வெண்கடுகுகளையும் சமித்துக்களையும் ஓமத்திற்காகச் சேர்த்தாள். ஓமம் பண்ணுகிறஉபாத்தியாயர், எல்லாத் தீங்கும் நீங்கவும் ஆரோக்கியம் உண்டாகவும் ஓமஞ்செய்து, மிச்சமான அவிஸினுல் வெளியில் லோகபாலாதியர்க்குப் பலியை ஈந்தார்.

கௌசலை, இராமருக்கு வனத்தில் மங்கள முண்டாகும்பொருட்டு ஸ்வஸ்திவாசனஞ் செய்வதனிமித்தம் அந்தணர்களைத் தேன், தயிர், அக்ஷதை, நெய் இவைகளுடன் கூடினவர்களாகச் செய்து, ஸ்வஸ்திவாசனமந்திரத்தை யோதச்செய்தாள். பின்பு, மிக்க புகழ்படைத்தகௌசலை, அவ்வுபாத்தியாயர்க்கு வேண்டியவளவு தக்ஷிணை கொடுத்து, இராமரைப் பார்த்து, "எல்லாத் தேவர்களாலும் நமஸ்கரிக்கப்பெற்ற இந்திரபகவானுக்கு விருத்திராசுரனைக்கொல்லுவதற்காக எந்தமங்களம் உண்டாயிற்றோ, அந்த மங்களம் உனக்கும் உண்டாகட்டும். முற்காலத்தில் அமிருதத்தைக் கொண்டுவருதற்குக் கருடபகவான்சென்றபொழுது அவர் தாயாகிய விநதை அவர்க்கு எந்தமங்களத்தைச்செய்தாளோ, அந்த மங்களம் உனக்கும் உண்டாகட்டும். திருப்பாற்கடலைக் கடைந்து அமிருதத்தை எடுக்கச் சென்றகாலத்தில் அசுரர்களை வதைப்பவனுன இந்திரபகவானுக்கு அதிதிதேவி எந்தமங்களத்தை வேண்டினுளோ, அந்த மங்களம் உனக்கும் உண்டாகட்டும். மூவுலகங்களையும் மூன்றடியில் அளந்த வெற்றிபொருந்திய விஷ்ணுபகவானுக்கு உண்டான மங்களம் உனக்கும் உண்டாவதாக. ருதுக்களும், சமுத்திரங்களும், தீவுகளும், வேதங்களும், உலகங்களும், திசைகளும், மங்களத்திற்கு அதிசயத்தை விளைக்கும் மங்களங்களை உனக்குஅளிக்கட்டும்" என்றுஇவ்வண்ணம் மங்களங்களைச்சொல்லி, இராமர்தலையில் அக்ஷதையை இட்டு அவருடம்பில் கந்தத்தைப் பூசி, கைகண்ட

பலனை யுடைய விசலியகரணி என்னும் மூலிகையை மந்திரித்து ரக்ஷைகட்டி, மந்திரங்களால் ஜபித்தாள். அவள், தனது குமாரனைக் கட்டி யணைத்து உச்சிமோந்து, மனத்தில் துக்கம் மிக்கிருந்தபோதிலும் வெளியில் சோகந் தெரியாதவாறு மிகமகிழ்ந்தவள்போலிருந்து, அவரை நோக்கித் தழுதழுத்த வாக்கால் சொல்லலுற்றாள். "இராம, பலன் கைகூடப் பெற்றவனாய் நீ காட்டிற்குச் சுகமாகப் போய்வா. தொழிலை நிறைவேற்றிக் காட்டில் நின்று அயோத்திக்குத் திரும்பிவந்து இராஜமார்க்கத்தில் அழகாக நிற்பவனும் பதினாறுகலைகளுட னுதித்த சந்திரன்போன்றவனுமான உன்னை, மனத்தில் துக்கமற்று மகிழ்ச்சியால் விளங்கும் முகத்தையுடையவளாய் நான் பார்க்கப்போகின்றேன். காட்டினின்று திரும்பி வந்தவனாயும் அழகிய ஆசனத்தில் வீற்றிருப்பவனாயும் பிதிருவாக்கியபரிபாலனம் பண்ணினவனாயு மிருக்கும் உன்னைப் பார்க்கப்போகின்றேன். குழந்தாய், நீ காட்டுக்குச் சென்று க்ஷேமமாகத் திரும்பிவந்து அரசர்க்குரிய ஆடையாபரணங்களை யணிந்து, என்னுடைய இஷ்டத்தையும் என்மருமகளின் இஷ்டத்தையும் எப்பொழுதும் நிறைவேற்றுவாய். என்னால் பூஜிக்கப்பட்ட பரமேச்வரன்முதலானகடவுளர்களும், மகர்ஷிகளும், பூதங்களும், மகாசுரர்களும், நாகர்களும், நான்கு திக்குக்களும், காட்டில் வசிக்கச்செல்லும் உனக்குநன்மையைத் தேடட்டும்" என்று சொல்லி, கௌசல்யை தன் கண்களில் நீர்ததும்ப முறைப்படி ஸ்வஸ்தியயனஞ்செய்து, இராகவரைச் சுற்றிவந்து அவரை அடிக்கடி கட்டி யணைத்துக்கொண்டாள். மிக்க புகழையுடைய இராமரும், தமதுதாயை அடிக்கடி தாளில் வணங்கித் தமது காந்தியால் விளங்குபவராய்ச் சீதையின் மாளிகையை நோக்கிப் போனார்.

இருபத்தாறுஞ் சருக்கம்:

இராமர் தாம்காட்டிற்குப் போவதைச் சீதைக்கு அறிவித்தல்.

தருமநெறியிற் பிறழாது நிற்கும் இராமர், காட்டிற்குப் போவதற்காகக் கௌசலையைவணங்கி அவளால் ஸ்வஸ்தியயனஞ் செய்யப்பட்டவராய், ஜனங்கள் சூழ்ந்து நிற்கும் இராஜமார்க்கத்தைத் தமது ஒளியால் விளக்கிக்கொண்டு, பண்புடைமையால் மக்களின் மனத்தைக் கலக்கினர்போலும். அபிஷேகத்தின் பொருட்டுக் கொண்ட விரதத்துடன் கூடியவளும் இராஜ தருமத்தை யறிந்தவளும் செய்யவேண்டிய மாதிரியை யுணர்ந்தவளும் மகிழ்ந்த மனத்தை யுடையவளுமான சீதாதேவிக்குப் பட்டாபிஷேகந் தடைப்பட்ட சமாசாரந் தெரியாதாகையால், அவள், தன்மனத்தில் தனது கணவருக்குப் பட்டாபிஷேகம் நடக்கப்போகிறதென்ற எண்ணமுடையவளாய், இஷ்டதேவதைகளுக்குப் பூஜைகளைச் செய்து, தனது பர்த்தாவின் வரவை எதிர்பார்த்திருந்தாள். பின்பு இராமர், வெட்கத்தால் கொஞ்சம் தாழ்ந்தமுகத்தினராய், களித்துக்கொண்டிருக்கும் ஜனங்கள் நிரம்பியதும் நன்ருக அலங்கரிக்கப்பட்டிருப்பதுமாகிய தமது மாளிகைக்குட் புகுந்தார். பின்பு சீதை, துக்கத்தால் மெலிவடைந்தவரும் சிந்தையாற் கலங்கிய இந்திரியங்களை யுடையவருமான கணவரைப் பார்த்து, தனது ஆசனத்தினின்று எழுந்து நடுநடுங்கி நின்ருள். அவளைக் கண்டவுடன் வெகு தருமாத்மாவாகிய இராமர், மனத்திலிருந்த துக்கத்தைப் பொறுக்க முடியாதவரானர்; அதனல், அத்துயரம் வெளிப்பட்டது.

சீதையின் நிலை.

இராமர் சீதையை யடைதல்.

முககாந்தி குன்றி வேர்வையுண்டாகப்பெற்றுப் பொறுக்கமுடியாத சோகத்தை யடைந்திருந்த தனதுபர்த்தா

இராமருடைய நிலையைக்கண்ட சீதையின் வினா.

வைக் கண்ட சீதை, வெகு துக்கத்தை யடைந்து "மகாபிரபுவே, மகிழ்ச்சியடைய வேண்டியகாலத்தில் துயரப்படுவதென்ன? அபிஷேகத்திற்காக ஏற்படுத்தியதும் பிரஹஸ்பதியைத் தெய்வமாகக் கொண்டதுமான புஷ்ய நட்சத்திரம் இன்றைக்குத்தான் என்று நன்குணர்ந்த வேதியர்கள் சொல்லுகிறார்களே! தாங்கள் ஏன் துக்கப்படுகிறீர்கள்? நீர்நுரைபோல் வெண்மை நிறமுள்ளதும், நூறு சலாகைகளையுடையதுமான குடையின்கீழ்த் தங்களுடைய சுந்தரமான முகம் ஏன் விளங்கவில்லை? நூற்றிதழ்க்கமலத்தையொத்த திருக்கண்களையுடைய தங்கள்முகம், சந்திரன் போலவும்ஹம்ஸம்போலவும்விளங்கும் வெண்சாமரையால் ஏன்வீசப்படவில்லை? புகழ்வதில்வல்ல ஸ்துதிபாடகர்களும் ஸூதர்களும் மாகதர்களும் மனமுவந்து மங்களங்களால் தங்களை ஏன் துதிக்கவில்லை? பட்டாபிஷேகஞ்செய்த தங்களுடைய சிரசில், வேதத்தை நன்குணர்ந்தவர்களான அந்தணர்கள், தேன் தயிர்களை முறைப்படி ஏன் அபிஷேகஞ் செய்யவில்லை? தங்களுடைய அமைச்சர் முதலிய பிரகிருதிகள், அவ்வவ் வீதிகளிலுள்ள முக்கியர்கள், நாட்டார்கள், நகரத்தார்கள் ஆகியஎல்லோரும், ஆடையாபரணங்களினால் சிங்காரித்துக்கொண்டு, தங்களைப் பின்தொடர்ந்துவர ஏன் விரும்பவில்லை? புஷ்யரதம் என்ற ஒருவகைத் தேர், நன்றாகச் சிங்காரிக்கப்பட்டு வேகமுள்ள நான்கு குதிரைகள் பூட்டப்பெற்றுத் தங்கள் முன் ஏன் ஓடவில்லை? கறுத்தமேகந் தங்கிய குன்றுபோன்றதும் சகலலட்சணங்களும் பொருந்தியதுமான தங்களுடைய பட்டத்துயானை, ஏன் தங்களுடைய பிரயாணத்தில் முன்னே போகவில்லை? அழகிய தோற்றத்தை யுடையீர், வீரர்களால் ஏந்தப்பட்டதும் பொன்வேலை யமைந்ததுமான சிங்காசனம் முன்னர்ச் செல்லத் தாங்கள் பின் நடக்கக் காணேன்!

அபிஷேகஞ் சித்தமா யிருப்பதா லுண்டாகவேண்டிய அபூர்வமான முகத்தின் நிறமும், மகிழ்ச்சியும் காணப்படவில்லையே!! இதென்ன ?" என்று வினவிப் புலம்ப, இராமர், அவளைப்பார்த்து, "சீதே, பெரியவரான எனது தந்தையார் என்னைக் காட்டுக்குஅனுப்புகிறார். உத்தமகுலத்திலுதித்தவளே, தருமத்தை நன்றாயறிந்தவளே, தருமந் தவறாது நடப்பவளே, ஜானகி, எவ்வண்ணம் இப்படி வந்ததென்பதைப்பற்றி முறையாகச்சொல்லுகிறேன்; கேள். சத்தியசந்தரும் எனது தந்தையுமான தசரதசக்கரவர்த்தியார், முன்னொருகாலத்தில், எனது தாயாரான கைகேயிக்கு இரண்டு வரங்களைக் கொடுத்திருந்தார். எனக்குப் பட்டாபிஷேகம் பண்ணிவைக்க அரசர் சித்தராகவிருந்த இப்பொழுது, அவ்வரங்களைக் கைகேயியம்மா கேட்க, அத்தந்தையார் தருமத்தால் வெல்லப்பட்டார். அதனால், நான், பதினான்கு வருஷகாலம் தண்டகவனத்தில் வசிக்கவேண்டும். எனது தந்தையார், பரதனுக்கு இளவரசுபட்டங் கட்டப்போகிறார். நான், உன்னைப்பார்த்துவிட்டு, மனிதசஞ்சாரமில்லாத காட்டுக்குப்போக வந்தேன். நீ, பரதன்முன் என்னை ஒருபொழுதும் புகழ்ந்து பேசாதே. புத்தியுடனிருக்கும் புருஷர்கள் பிறருடைய துதியைப் பொறார்களன்றோ! ஆகையால், பரதன்முன் என் குணங்களை நீ எடுத்துரைக்கவே வேண்டாம். நீ, பரதனால் விசேஷமாக எண்ணிப் போற்றத்தக்கவளன்று. அவனுடைய சமீபத்தில் நீ, அநுகூலையாகவே யிருக்கவேண்டும். நெடுங்காலமாக வந்திருக்கும் இந்த இளவரசுபட்டம் எனது தந்தையாரால் பரதனுக்குக் கொடுக்கப்பட்டது; ஆகையால், சீதே, பரதன் இப்பொழுது அரசனாகையால், நீ அவனுக்கு அநுகூலையாகவே நடந்துவரவேண்டும். நல்ல மனமுடையவளே, நீ, உன் மனத்தைத் தைரியம் பண்ணிக்கொண்டு இவ்வி

இராமர் மறுமொழி.

டத்தில் வசித்திரு. நான் புறப்பட்டு எனது தந்தைசொல்லைக் காப்பாற்ற இப்பொழுதே காட்டுக்குப் போகிறேன். குற்றமற்றவளே, நற்குணமுடையாய், மகர்ஷிகள் வசிக்கும் வனத்தில் நான் வசித்துக்கொண்டிருக்கும்போது, நீ, இங்கு விரதங்களையும் உபவாசங்களையும் அநுஷ்டித்துக் கொண்டுவரவேண்டும். தினந்தோறும் காலையில் எழுந்து விதிப்படி தெய்வங்களைப் பூசித்துவிட்டு என் பிதாவாகிய தசரதசக்கரவர்த்தியை வணங்கிவா. எனதுதாயாரான் கௌசலைக்கு வயசாய்விட்டது; அன்றியும் அவர், என்னை விட்டுப்பிரிந்த துக்கத்தாலும் மெலிந்துவிடுவர்; ஆகையால் அவர்க்குப் பணிவிடை செய்வதுதான் மேலான தருமமென்று நீ கருதுவாய். என்னுடைய மற்றைத் தாய்மார்களையும் நாடோறும் நீ வணங்கிவா. அவர்களெல்லோரும் என்னிடத்தில்சமமான அன்பும் சினேகமும் வைத்து என்னைப் போற்றுகிறார்களன்றோ! எனது தம்பியாகிய பரதன் சத்துருக்கனன் இவ்விருவரும் எனக்குப் பிராணனை விட அதிகமானவர்கள். அவர்களை நீ புதல்வர்போலவும் சகோதரர்போலவும் எண்ணி விசேஷமாகப் பார்த்துக்கொள்வாய். பரதனுக்கு விருப்பமல்லாததை நீ, ஒருபொழுதுஞ் செய்யாதே; ஏனெனில், அவன்தான் குலத்துக்கும் தேசத்துக்கும் அரசன். நன்னடக்கையால் மகிழ்விக்கப்பட்டவராயும்முயற்சியோடு உபசரிக்கப்பட்டவராயுமிருக்கும் அரசர் மனமுவந்திருப்பார்: விரோதமாய் நடந்தால் கோபிப்பார். அவர், தம்வயிற்றிற்பிறந்த குமாரரானாலும் தமக்குத் தீங்கு செய்கிறவரென்று கண்டால், விட்டிடுவார். தமக்கு ஒருவிதமான உறவுமில்லாத வேற்றுமனிதர்களையுந் தமக்கு அநுகூலராகநடக்கக் கண்டால், சேர்த்துக்கொள்ளுவார். ஆகையால், நீ அரசனுக்கு அநுகூலையாக நடந்துகொண்டு, உனது தருமங்களையும் விரதங்களையும் சரியாகச் செய்பவளாய் இங்குத்தானே வசிப்பாய். நான்காட்டுக்குப்போய்வருகிறேன். நீ இங்குத்தான்

இருக்கவேண்டும். நீ ஒருவர்க்கும் விருப்பமல்லாததைச் செய்யாததுபோல, எனது இந்தச்சொல்லேயுந் தவருது செய்வாய்" என்ருர்.

இருபத்தேழாஞ் சருக்கம்:

சீதை, காட்டிற்கு உடன்வருவேன் என்றல்.

விருப்பத்தையே சொல்லத் தக்கவளாயும் எப்பொழுதும் இனிய வசனங்களேயே பேசுகிறவளாயுமிருக்குஞ் சீதை, இவ்வாறு தனது பர்த்தா தன்னேப்பார்த்துச் சொன்னதைக் கேட்டுத் தான் அவர்மேல் வைத்திருந்த அதிக அன்பினுல் கோபமடைந்து அவரைப்பார்த்துப் பின் வருமாறு சொல்லலானுள் :— "சக்கரவர்த்தித் திருமகரே, நீங்கள் இலேசாகவும் உறுதியாகவும் என்ன இப்படிச்சொல்லுகிறீர்கள்? நானும் உங்கள்வார்த்தையைக்கேட்டுப் பரிகசிக்கும்படியாக விருக்கிறது. எனது நாதரே, தந்தை, தாய், சகோதரன், புத்திரன், மருமகள் ஆகிய இவர்களெல்லாரும் தங்கள் தங்கள் புண்ணியபாவங்களின்பயனேத் தாங்களே தனிமையில் அநுபவிக்கிருர்கள். புருஷசிரேஷ்டரே, மனேவி ஒருத்திதான், தனது கணவன் செய்த புண்ணியபாவங்களின்பயனேப் பகுத்துக்கொண்டு அநுபவிக்கிருள். ஆகையால், 'காட்டில் வசிக்கவேண்டும்' என்று உங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளே எனக்குங் கொடுக்கப்பட்டதுதான். இம்மையிலும் மறுமையிலும் ஸ்திரீக்கு, அவள் தந்தை, பிள்ளே, தான், தாய், தோழிமார் ஆகிய இவர்கள் கதியாக மாட்டார்கள்; கணவன் ஒருவன் தான் எப்பொழுதும் கதி. ஆகையால் மனிதர்களால் இட்டுதற்கரிய காட்டுக்குத் தாங்கள் இப்பொழுது புறப்பட்

சீதையின் நியாயம்.

டால், நான் புற்களையும் முட்களையும் மிதித்துக்கொண்டு தங்களுக்கு முன் நடந்து போவேன். 'என்னை அநுசரித்து நடந்தால் இவள் கிருதார்த்தை யாய்விடுவாளே' என்று உண்டாகும் பொறுமையையும் 'சொன்னபடிகேட்கமாட்டேனென்கிருள்' என்று உண்டாகும் கோபத்தையும், சாஸ்திரத்தில் இழிவுடையதாகச் சொல்லப்படுங் குடித்து மிகுந்தஜலத்தைப்போல் விட்டிட்டு, கொஞ்சமேனும் ஐயப்படாமல் என்னைத் தங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். என்னை விட்டுப்போகும்படியாக நான் ஒருவித பாபமும் பண்ணவில்லையே! பர்த்தா, அரசமாளிகையின் உச்சியிலிருந்தாலும், விமானத்திலூர்ந்து சென்றாலும், யோகபலத்தால் ஆகாயத்திலேயே சென்றாலும், அன்றி வேறு எவ்வித நிலையிலிருந்தாலும் அவனுடைய திருவடிநிழல் தான் மனைவிக்குச் சிறந்தது. என் தாய்தந்தையர்கள் கணவனிடம் நடந்துகொள்ளுவதைப்பற்றி எனக்கு நன்றாகக் கற்பித்திருக்கிறார்கள். இப்பொழுது அதைப்பற்றி எனக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. நான், அநேக மிருகங்களின் கூட்டங்களும் புலிகளும் செந்நாய்களுஞ் சஞ்சரிப்பதும் மனிதசஞ்சாரமற்றதுமான அடர்ந்த காட்டுக்குத் தங்களுடன் வருவேன்; இம்மூவுலக ஐசுவரியத்தையும் மதியாமல், கணவருக்குப் பணிவிடைசெய்வதிலேயே கருத்துக்கொண்டு, பிறந்த வீட்டில் எவ்வளவு சுகமாக வசிப்பேனோ, அவ்வளவு சுகமாக வனத்தில் வசிப்பேன். மகாசூரரே, நான், நியமத்தோடுகூடி ஐம்புலன்களையும் வென்றவளாய், தேன்மணம் வீசிக்கொண் டிருக்குங் காட்டில் தங்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு தங்களுடன் கூடிக்கலந்து மகிழப்போகிறேன். பகைவரின்செருக்கையழிப்பவரே, தாங்கள், காட்டில் வேறு ஜனங்களைக்காப்பாற்றுவதிலும் வல்லமை பெற்றிருக்கிறீர்கள்; என்னைக் காப்பாற்றுவதில் வல்லமையைப் பற்றிக் கேட்கவேணுமோ? இப்பொழுதே தங்களுடன் நான் காட்டுக்கு வரப்

போகின்றேன். இதில் சந்தேகம் சிறிதேனுமில்லை. காட்டிற்குப்போகச் சித்தையாக இருக்கும் என்னைத் தங்களால் தடுக்கமுடியாது. நானும் தங்களைப்போல் தினந்தோறும் கனிகளையும் கிழங்குகளையும் புசிப்பேன். காட்டில் தங்களுடன் நான்வசிப்பதால், தங்களுக்கு ஒருவித சிரமமு மில்லாதபடி நடந்துகொள்வேன். நான், புத்திமானும் கணவராயுமுள்ள தங்களுடன் நதிகளையும், மலைகளையும், ஓடைகளையும், காடுகளையும் பயமில்லாமற் பார்க்க விரும்புகிறேன். ஹம்சங்களும் நீர்ப்பறவைகளும் விளையாடிக்கொண்டிருக்கும் நன்றாய்ப்புஷ்பித்த தாமரையோடைகளைத் தங்களுடன்கண்டு களிக்க நான் ஆசைப்படுகிறேன். நீண்டகண்களையுடையவரே, அவைகளில் நான், தங்களுடன் தினந்தோறும் ஸ்நானம்பண்ணி, விரதங்களை அநுஷ்டித்தவளாய், தங்களுடன் கூடிக்கலந்து விளையாடி, தங்களுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கப்போகிறேன். இவ்வாறு பதினாயிரம் வருஷங் கழிந்தாலும் அதைநான் அறியேன். இவ்வாறிருப்பதைவிட்டுச் சுவர்க்கத்தில் வசிப்பதும் எனக்கு இஷ்டமன்று. எனக்குச் சுவர்க்கங் கிடைத்தாலும் அங்குத் தங்களுடைய சேவைகிடையாதாயின் அச்சுவர்க்கத்தையும் விரும்பேன். நான், அநேக மிருகங்களும், குரங்குகளும், யானைகளு மிருக்கும் புகுதற்கரியகாட்டிற்குத் தங்களுடன் வரப்போகின்றேன். அங்குத் தங்கள் பாதங்களைத் தழுவிக்கொண்டு, எனதுதகப்பனார் வீட்டிலிருப்பதுபோலச் சுகமாகவிருப்பேன். வேறொன்றையுங் கருதாது தங்களிடத்திலேயே ஆசை முழுவதையும் வைத்து, தங்களை விட்டுப்பிரியின் மரணமடைய நிச்சயித்திருக்கும் என்னைத் தாங்கள் அழைத்துப்போகவேண்டும். எனது இவ்வேண்டுகோளை நிறைவேற்றுங்கள். இதனால் தங்களுக்குச் சிறிதுபாரமும் உண்டாகாது" என்றாள். தருமங்களை நன்றாயுணர்ந்து அவைகளின்மேல் அன்பு பாராட்டிவரும் இராமர், தமது மனைவி இவ்வாறு சொல்லக்கேட்டும் அவளைக் காட்டுக்கு

அழைத்துப்போக இஷ்டப்படாமல், அவளுடைய எண்ணத்தை மாற்றும்பொருட்டு, காட்டில்வசிப்பதிலிருக்குங் கஷ்டங்களை வெகுவாகச் சொல்லலானார்.

இருபத்தெட்டாஞ் சருக்கம்:
வனவாசதுக்கத்தைச் சீதைக்கு இராமர் எடுத்துச் சொல்லுதல்.

இராமர், காட்டிலிருக்குங்கஷ்டங்களை நினைத்து, சீதையைத் தம்முடன் அழைத்துப்போகத் துணியாமல், கண்ணீருடன் நிற்கும் அவளுக்கு நல்லவார்த்தை சொல்லி அவளைக் காட்டுக்குப்போவதிலிருந்துதிருப்பும்பொருட்டு, அவளைப்பார்த்து, "சீதே, நீயோ நற்குலத்திற்பிறந்தவள்; எப்பொழுதும் தருமத்தையே செய்துகொண்டிருப்பவள்; இவ்விடத்தில் இருந்துகொண்டு நீ தருமத்தைச் செய்துவா; மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம். சீதே, நீ வலியற்றவள்; நான் சொல்லுவதைக் கேட்கவேண்டியவள்; காட்டில் வெகு சங்கடங்க ளிருக்கின்றன. அவைகளை நான் சொல்லுகின்றேன்; கேள். சீதே, காட்டில் வசிக்கவேண்டுமென்ற எண்ணத்தை விட்டிடு. 'காடு' என்று சொல்லப்படுவது, அநேக கஷ்டங்கள் நிறைந்த மகாரணியமன்றோ! நான் இப்பொழுது சொல்வதெல்லாம் உன்னுடைய நன்மையைக் கருதியே. காட்டில் சுகலேசமுங் கிடையாது; துக்கந்தான் உள்ளது. குகைகளில் வசிக்குஞ் சிங்கங்களின் கர்ச்சனைகள், மலையருவிகளின் ஒலியால் வளரப்பெற்று, கர்ணகடோரமாய்க்கேட்கும்; ஆகையால், காட்டில் துன்பம் வெகு அதிகம். நிர்மாநுஷமான காடுகளில் அச்சமில்லாமல் மதித்து விளையாடிக்

வனவாசத்தின் கொடுமை.

கொண்டு திரியும் அநேக மிருகங்கள், மனிதர்களைக் கண்டால் துரத்திக்கொண்டு வரும். ஆகையால், காட்டில் துன்பம் வெகு அதிகம். காடுகளில் முதலைகளுடன் கூடியனவும் சேற்றினையுடையனவும் மதயானைகளாலுந் தாண்ட முடியாதனவுமான நதிகள் இருக்கின்றன; ஆகையால், காட்டில் துன்பம் வெகு அதிகம். நடக்கிற இடங்களெல்லாம் கொடிகளாலும் முட்களாலும் அடர்ந்திருக்கும்; எங்குப் பார்த்தாலும் காட்டுக்கோழிகள் பயங்கரமாகக் கூவிக் கொண்டிருக்கும்; சில இடங்களில் குடிக்கச் சலம் அகப்படாது; சில இடங்களில் வழியேயிராது; ஆகையால் காட்டில் துன்பம் வெகு அதிகம். பகலெல்லாம் அலைந்து களைத்து, மரங்களிலிருந்து தானாக உதிரும் சருகுகளையுடைய தரையிற் படுத்து உறங்கவேண்டும்; ஆகையால் காட்டில் துன்பம் வெகு அதிகம். இரவும் பகலும் மரத்திலிருந்து விழுங் கனிகளைப் புசித்து ஐம்புலனை யடக்கி வேறொன்றைநினைக்கும் ஆசை யற்று இருக்கவேண்டும்; ஆகையால், காட்டில் துன்பம் வெகு அதிகம். சக்திக்கு ஏற்றபடி உபவாசம்பண்ணவேண்டும்; தலைமயிரைச் சடையாக்கிக் கொண்டு மரவுரி தரித்திருக்கவேண்டும்; சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கும்வண்ணம் தெய்வங்களுக்கும் பிதிருக்களுக்கும் பூசை பண்ணவேண்டும்; தினந்தோறும் நாடி வரும் அதிதிகளை ஆராதிக்கவேண்டும்; நாடோறும் மூன்றுவேளை ஸ்நானஞ் செய்யவேண்டும்; வெகு நியமத்துடன் இருக்கவேண்டும்; ஆகையால், காட்டில் துன்பம் வெகு அதிகம். தானாகவே சென்று புஷ்பங்கள் எடுத்துவந்து அவைகளால் வேதிகளில் வானப்ரஸ்தர்களுக்கு உரிய முறைப்படி பூஜை செய்யவேண்டும்; ஆகையால், சிறு பெண்ணே, காட்டில் துன்பம் வெகு அதிகம். காட்டில் வசிப்பவர் நியமத்துடன் கூடியவர்களாய்க் கிடைத்ததை யுண்டு சந்தோஷப்படவேண்டும்; ஆகையால், எப்பொழுதும் காட்டில் துன்பம் வெகு அதிகம். காட்டில், காற்று

அதிகமாக வீசும்; இருட்டும் அதிகமாக இருக்கும்; பசியும் அதிகமாக உண்டாகும்; அச்சமும் அதிகமாக இருக்கும்; ஆகையால், காட்டில் துன்பம் வெகு அதிகம். காட்டில், பருத்த உடலையுடைய பலமலைப்பாம்புகள் செருக்கிச் சஞ்சரிக்கின்றன; ஆகையால், காட்டில் துன்பம் வெகு அதிகம். நதியோரங்களை இருப்பிடமாகக் கொண்டனவும் நதிகளைப்போல வளைந்து ஓடுந்தன்மையுள்ளனவுமான ஸர்ப்பங்கள், போகும் வழிகளில் குறுக்காய்க் கிடக்கும்; ஆகையால், காட்டில் துன்பம் வெகு அதிகம். சலபங்களும், தேள்களும், புழுக்களும், காட்டீக்களும், கொசுக்களும், வருத்தும்; ஆகையால், வனம் முழுமையும் துன்பமே. முள்ளுள்ள மரங்கள் அசையுங் கிளைகளுள்ளனவாகவும், தருப்பைப் புற்களும் நாணற் புற்களும் அசையும் நுனிகளையுடையனவாகவும் இருக்கும்; ஆகையால், வனத்தில் துன்பம் மிகுந்திருக்கும். வனத்தில் வசிப்பவர்க்கு, தேகத்துக்கு உபத்திரவம் வெகு அதிகம்; அன்றிப் பலவிதமான பயங்களும் உண்டாகும். ஆகையால் வனமென்பது துன்பமே. காட்டில் வசிக்கும்போது ஆசை கோபம் இவைகளை முழுதும் விட்டிடவேண்டும்; தவத்திலேயே மனத்தைச் செலுத்தவேண்டும்; எவற்றைக் கண்டால் பயமுண்டாகுமோ, அவற்றைக் கண்டும் அஞ்சாமலிருக்கவேண்டும்; ஆகையால், எப்பொழுதும் வனவாசம் வெகு துக்கமானது. ஆகையால், நீ வனத்துக்கு வரவேண்டாம். உனக்கு வனவாசம் ஒவ்வாது. நான், நன்றாக ஆலோசித்துச் சொல்லுகிறேன்; வனத்தில்வெகுவித பயங்களிருக்கின்றன" என்றார். இவ்வண்ணம் மகாத்மாவாகிய இராமர், சீதையைக் காட்டுக்கு அழைத்துப்போகச் சம்மதப் படாமற் பேச, அவள் அதைக் கேட்டு வெகு துயரமடைந்து அவர்சொல்லியவைகளை அங்கீகரியாமற் பின்னுஞ் சொல்லலானாள்.

இருபத்தொன்பதாஞ் சருக்கம்: சீதை, காட்டிற்குத் தன்னை அழைத்துப் போம்படி இராமரை வேண்டல்.

இவ்வாறு இராமர் சொல்லியதைக் கேட்டுச் சீதை, துக்கமடைந்து கண்களில் நீர்பெருகத் தனது கணவரைப் பார்த்து, "தாங்கள் எடுத்துக்கூறிய வனவாச துக்கங்களெல்லாம் தங்களிடத்தில் அன்பு வைத்திருக்கும் என்னால் பார்க்கப்பட்டவைகளாய், இன்பங்களாகவே தோன்றுமென அறியக்கடவீர்கள். ரகுவம்சத்திற் பிறந்தவரே, மான்கள், சிங்கங்கள், யானைகள், புலிகள், சரபங்கள், பறவைகள், காட்டுப் பசுக்கள், காட்டில் சஞ்சரிக்கும் ஏனைய பிராணிகள் இவைகளெல்லாம், இதற்குமுன் பார்த்திராதபடியினால் தங்கள் உருவத்தைக் கண்டமாத்திரத்தில் ஓடிவிடும்; அச்சத்திற்குக்காரண முண்டாயிருப்பின், எல்லாரும் அஞ்சுவார்களன்றோ! பெரியவர்கள் கட்டளைப்படி நான் தங்களுடன் புறப்படத்தான் வேண்டும். தங்களை விட்டுப் பிரிந்தால், என்பிராணன் போய்விடும். தங்கள்சமீபத்தில் நான் இருந்தால், என்னைத் தேவர்களுக்கெல்லாந் தலைவனான இந்திரபகவானாலும் தனது தேஜஸால் ஒன்றுஞ் செய்யமுடியாது. 'கணவனை விட்டுப் பிரிந்த ஸ்திரீ பிழைத்திருக்கமாட்டாள்' என்று அநேகதரம் தாங்கள் எனக்கு உபதேசித்திருக்கிறீர்கள்.

காட்டில் துன்பந்தோன்றாது என்றல்.

மேலும், நான் எனது பிறந்தகத்தி லிருந்தபொழுது 'காட்டில் வசிக்கும்படி வரும்' என்று ஜ்யோதிஷமறிந்தபிராமணர்கள் உண்மையாகச்சொல்லக் கேட்டிருக்கிறேன். மிகுந்த பலமுள்ளவரே, சாமுத்திரிகசாஸ்திரங்களை நன்றாகக் கற்றறிந்த வேதியர்கள் 'கொஞ்சகாலம் வனவாசம்பண்ண வேண்டிவரும்' என்று என்றுசொன்னார்களோ, அன்று

சீதையின் இளமைப்பருவத்து நிகழ்ந்தகதை.

முதல் நான் 'காட்டுக்குப் போகவேண்டும்' என்ற ஆசையு டனிருக்கிறேன். காட்டிற்குப் போகவேணுமென்றவிதியை வெல்ல முடியுமோ? பிரியரே, நான் தங்களுடன்சேர்ந்தே போவேன்; தனியாய்ப் போகமாட்டேன். பெரியோர்கள் கட்டளைப்படி நான் தங்களுடன் காட்டிற்குவருவேன். இது தான் வனவாசத்திற்குத் தக்ககாலம். சாமுத்திரிகசாஸ்திர மறிந்த அந்தணர்களுடைய சொற்கள் உண்மையாக முடி யட்டும். வனவாசத்தில் கஷ்டங்கள் வெகுஅதிகமென்பதை நான் அறிவேன். ஆனால், அவைகளெல்லாம், திருத்தம்பெ ருத மனத்தையுடையவர்களுக்கன்றோ! சிறு குழந்தை யான என்னால், பிதாவின் வீட்டிலிருக்கும்போது, நன்ன டக்கையுள்ள பிச்சையெடுப்பவளொருத்தி, என்தாயாரின் முன்பு 'இவள் கொஞ்சநாள் காட்டில் வசிப்பள்' என்று சொல்லக் கேட்கப்பட்டது. ப்ரபுவே, முன்னமே வெகு வாக நல்லவார்த்தைசொல்லித் தங்களுடன் காட்டுக்கு வர நான் தங்களை வேண்டியிருக்கிறேன். இராகவரே, நான் முந்தியே தங்களுடன் அரணியத்திற்குப் போகக் காலத் தை எதிர்பார்த்திருந்தேன். சூரராயும் வனத்தில்வசிப்பவ ராயுமிருக்கும் பர்த்தாவுக்குப் பணிவிடை செய்வதுதான் என் மனத்திற்கு ஒத்ததா யிருக்கிறது. வெகு பரிசுத்தமா னவரே, தங்களிடம் வைத்த அபிமானத்தால் நான் தங் களைத் தொடர்ந்து காட்டுக்கு வந்து பாவமற்றவ ளாவேன். எனக்குக் கணவன் தான் தெய்வம். பரலோகத்திலும் தங்க ளுடன்சேர்ந்துவாழ்வதே எனக்குச் சுபம். மிக்கபுத்தியுடையீர், 'இவ்வுலகத்தில் எந் தப் புருஷன்கையில் தகப்பனுதியோர் தீர்த்தத்தை வார்த்துக் கன்னிகாதானம் பண்ணிக்கொடுத்து விடுகின்றனரோ, தனது ஒழுக்கத்தில் தவருத அவள், அந்தப்புருஷனுக்கே பரலோகத்திலும் மனைவி' என்று வேதங்கூறுவதாகப் புகழ்பெற்ற அந்தணர் கள் சொல்லுகிருர்க ளன்றோ! இவ்வாறு வேதங் கூறவும்,

உடன் அழைத் துப்போகக் கார ணம்.

நல்லொழுக்கமுடையவளாயும் பதிவிரதையாயும் தங்களது பத்தினியாயுமிருக்கும் என்னை, இப்பட்டணத்திலிருந்து உடனழைத்துப்போக இப்பொழுது விரும்பாமலிருத்தற்குக்காரணமென்ன? நான், தங்களிடம் பக்தியைவைத்து, தங்களுக்குப் பணிவிடை செய்வதையே என் கடமையாகக் கொண்டு, தங்களையே தஞ்சமாக எண்ணித் தங்களைத் தவிர வேறு சரணில்லாமல், தங்களுக்கு வருஞ் சுகதுக்கங்களை எனக்கு வந்த சுகதுக்கங்களாகக் கருதியிருக்கிறேன். ஆகையால், தாங்கள் என்னை அழைத்துக்கொண்டே போகவேண்டும். இவ்வாறு துயரப்பட்டுக்கொண்டிருக்கும் என்னைத் தாங்கள் அரணியத்துக்கு அழைத்துப்போகாவிடில், நான், விஷமோ அக்கினியோ, அல்லது ஜலமோ இவைகளிலொன்றின்மூலமாக என்பிராணனை நிச்சயமாய் விட்டிடுவேன்" என்று பலவிதமாகச் சொல்லித் தன்னை அழைத்துப்போக வேண்டுமென்று யாசித்தாள். ஆயினும், அவர், மனிதசஞ்சாரமற்ற காட்டுக்கு அவளையழைத்துப்போக விரும்பாமல் தடுத்துச்சொன்னார். அவ்வாறு தடுத்துச்சொன்னபோது சீதை, சிந்தித்து, துக்கத்தால் வெப்பமடைந்திருக்குங் கண்ணீரால் பூமியை முழுகுவிப்பவள் போல் நின்றாள். இவ்வாறு சிந்திக்கும் இவள் மனத்தை எப்படியாவது மாற்றவேண்டுமென்று தம்மாலியன்றவளவு இராமர் பற்பலவிதமாக நல்லவார்த்தை சொல்லினர்.

முப்பதாஞ் சருக்கம்:

இராமர் சீதையைக் காட்டுக்கு அழைத்துப் போகச் சம்மதித்தல்.

'காட்டுக்கு வரவேண்டாம்' என்று இராமர் எவ்வளவு தடுத்துச் சொல்லியும் அதைக் கேளாமல் ஜநகராஜபுத்

திரியான மைதிலி, தனது பர்த்தாவைப் பார்த்து, காட்டிற்கு உடன்வர அநுமதி கொடுத்தற்காகச் சூரரான அவரிடம் தான்வைத்திருந்த அபிமானத்தாலும் காதலினுலும் பின்வருமாறு பழிக்கலானுள்:—" இராமரே, விதேகவம்சத்திற் பிறந்தவராயும் மிதிலையின் மன்னவராயுமிருக்கும் எனது தந்தையார், மருமகரான தங்களை எண்ணிப் பெண்ணின் தன்மையும் புருஷவேஷமு முடையவராக நிச்சயிக்கமாட்டாரா? 'தபிக்குஞ் சூரியனிடத்திற் போல், இராமரிடத்தில் தேஜஸ் இருக்கிறது' என்று உலகம், அறியாமையாற் பொய் சொல்லுகின்றது; அவ்வாறு கண்கூடாக அறியப்படாமையால் இராமரிடத்தில் அது இல்லவேயில்லை. தாங்கள் செய்யக் கூடாத எத்தொழிலைச் செய்துவிட்டுத் துயரப்படுகின்றீர்? தங்களுக்கு என்னை யழைத்துப் போவதால் எவ்விதத்தில் அச்சப்படவேண்டிவரும்? இவ்வாறு ஒன்று மிராதிருப்பின், வேறொரு கதியில்லாத என்னை இங்கேவிட விரும்புவானேன்? த்யுமத்ஸேநனுடைய குமாரனுகிய சத்யவான் என்ற தன்கணவனை அநுசரித்து விரதஞ் செய்பவளான சாவித்திரியைப்போல், தங்கள் வசத்திலிருக்கும் என்னைத் தாங்கள் கருதுங்கள். குலத்தைக் களங்கமுறச்செய்யும் ஸ்திரீயைப்போல், நான் குற்றமற்ற தங்களைத்தவிர வேறொருவரையும் மனத்தினுல் எண்ணினது மில்லை. ஆகையால் நான் காட்டுக்குத் தங்களுடன் வருவேன். குமாரியாயும், பார்யையாயும், வெகு காலமாக உடனுறைபவளாயும், பதிவிரதையாயுமிருக்கும் என்னை, மனைவியைப் பிறருக்குக் கொடுத்து ஜீவிப்பவர் போல், மற்றவர்க்குக் கொடுக்க விரும்புகின்றீர்களே! குற்றமற்றவரே, தாங்கள் யாருடைய நன்மையைச் சொல்லுகிறீர்களோ, யாருடைய நிமித்தமாக அபிஷேகத்திலிருந்து தடுக்கப்பட்டீர்களோ, அவருடைய விருப்பின்படி செல்பவர்களாகவும், இட்டவேலை புரிபவர்

சீதை இராமரைப் பழித்தல்.

களாகவுந் தாங்க ளிருங்கள். என்னைத் தாங்கள் உட னழைத்துக்கொண்டு போகாமற் காட்டுக்குப்போதல் தக் கதன்று. தவம்புரிதலும் காட்டில்வசித்தலும் சுவர்க்கத் திலிருத்தலும் எனக்குத் தங்களுடன் உண்டாகவேண்டும். தங்களை நான் அநுசரித்துநடந்தால், உத்யானத்தில் நடத் தல்போல், அதில் எனக்குச் சிறிதேனும் வருத்தமுண்டா காது. வழியில் எந்தமுள் பொத்தினலும் எந்தத் தருப்பை அறுத்தாலும் தங்களுடன்நான் இருந்தால், அவைகள் என் தேகத்தைப் பஞ்சாலும் மான்தோலாலும் துடைப்பதை யொத்திருக்கும். கணவரே, நான், காட்டில் பெருங் காற் றுக்கிளப்பும் புழுதியைத் தங்களுடன் கூடியிருக்கையில் சிறந்த சந்தனமென எண்ணுவேன். வனம் புகுகின்றவரே, வனமத்தியில் இளம்புல்லில் தங்ளுடன் படுத்தால் அதி லுண்டாகுஞ் சுகம், குஸும்பாசாயம்போட்ட மேல்விரியை யுடைய விசித்திரமான கம்பளத்தில் படுத்தால் உண்டாகு மோ? இலேயோ, கனியோ, கிழங்கோ, அதிகமோ, குறை வோ எப்படி யிருந்தாலும், தாங்கள் கைகளால் எடுத்து வந்து கொடுப்பதே எனக்கு அமிருதரஸமாகும். நான், அவ் விடத்தில் அந்தந்தக்காலத்தி லுண்டாகும் புஷ்பங்களையும் பலங்களையும் சந்தோஷமாகப் புஜித்துக்கொண்டு, தாய், தகப்பன், வீடு இவைகளொன்றையும் நினையேன். தாங்கள் காட்டில் ஒருவிதமான தீங்கையும் நினைக்கவேண்டாம். என் பொருட்டுத் தங்களுக்குச் சோகமுண்டாகாது. நான், கஷ் டப்பட்டுப்போற்றத் தக்கவளாக இருக்கமாட்டேன். தங் களுடன் சேர்ந்திருப்பதுதான் சுவர்க்கம்; தங்களை விட்டுப் பிரிந்திருப்பதுதான் நரகம்; இவ்வாறுநான் இருப்பதைமுன் னைய அநுபவங்களைவிட அதிகமாக அறிந்து, என்னுடன் தாங்கள் காட்டில் வாசஞ்செய்யுங்கள். வனத்திற்கு உடன் வர அஞ்சாது நிற்கும் என்னைத் தாங்கள் அழைத்துக்

உடனழைத்துப் போகாவிடில் மரணம் நிச்சய மென்பது.

கொண்டு போகாவிடில், இன்றைத்தினமே விஷத்தை நான் குடித்துவிடுவேன். பகைவரின்கீழ் நான் ஒருபொழுதும் ஜீவித்திருக்கமாட்டேன். தாங்கள் என்னை விட்டுப் போனவுடன் உயிர் போய்விடும்; ஆகையால், தாங்களிருக்கும் இந்தக்ஷணமே மாண்டுவிடுதல் நலமன்றோ! இத்துயரத்தை ஒருமுகூர்த்தமுஞ் சகிக்கமுடியவில்லை; துக்கித்துக் கொண்டிருக்கும்என்றால் ஒருபத்துவருஷமும், அதனுடன் மூன்று வருஷமும், பின்னும் ஒரு வருஷமும்சகித்தல்முடியாதென்பதைப்பற்றிச் சொல்லவேண்டுமோ?'' என்றாள்.

சீதை, இவ்வாறு சோகத்தால் பரிதபித்துக்கொண்டு, பலவாறு எளிமையாகப் புலம்பி, தனது கணவரைத் தழுவிக்கொண்டு, ஆயாசத்தை யடைந்தவளாய், ஸ்வரத்தோடு கதறத் தொடங்கினாள். அவள், நஞ்சு பூசிய பாணங்களால் அடிக்கப்பட்ட ஒருபெண் யானையைப் போல், இராமருடைய அநேகவித சொற்களால் அடிக்கப்பட்டு, வெகு காலமாகத் தன்னுள் வைத்திருந்த அக்கினியை அரணிக்கட்டைவெளிப்படுத்துவதுபோல், வெகு காலமாக அடக்கியகண்ணீரை வெளிப்படுத்தினாள். தாமரையிலிருந்து நீர் வடிவதுபோல், அச்சீதையின் கண்களிலிருந்து பளிங்கினையொத்த நீர் துக்கத்தால்வடிந்தது. களங்கமற்ற சந்திரனை யொத்ததாயும் நீண்ட இருகண்களை யுடையதாயுமிருக்கும் அவளதுமுகம், கண்ணீரினால், நீரிலிருந்து எடுத்துவிட்ட தாமரைபோல் வாடிவிட்டது. அறிவிழந்தவள் போல் துக்கத்தால் வாடிக்கிடந்த அச்சீதையை இரகுநாதர் கண்டு, தமது கைகளால் அவளைத் தழுவிக்கொண்டு தேறுதலடையப் பின்வருமாறு மொழியலானார்:—

இராமருடன்பாடு.

"உனக்குத் துயரம் விளைவதாயிருப்பின் நான் ஸ்வர்க்கத்தையும் விரும்பேன். சுயம்புவான கடவுளுக்கு எவ்வாறு ஒருவரிடத்திலிருந்தும் அச்சமில்லையோ, அவ்வாறே எனக்கும் அச்ச

மில்லே. அழகிய முகத்தை யுடையவளே, உன்னைப் பாது காப்பதில் எனக்குத் திறமிருந்தாலும், உனது அபிப்பிரா யத்தை யறியாமல், காட்டில் நீ வசித்தலே நான் விரும்ப வில்லே. நீ என்னுடன் காட்டில்வசிப்பதற்காகப் பிறந்திருக் கிறபடியால், நற்குலத்துதித்தவன்கீர்த்தியை விடாதவாறு போல், இனி நான் உன்னே விட்டுப்போக வல்லனல்லேன். துதிக்கையை யொத்த துடையுடையாய், பெரியவர்கள் நடந்த தருமவழியில் நானும் இதோ நடக்கிறேன் ; சுவர்ச் சலாதேவி சூரியபகவானைத் தொடர்வதுபோல, நீயும் என்னுடன் காட்டுக்கு வரலாம். ஜநககுலரத்நமே, நான் காட்டுக்குப்போகாதிருக்கமாட்டேன்; ஏனெனில், என்றுந் தவறாத தந்தையினுடைய வாக்கானது, என்னே வனத் துக்குப் போகச்செய்கின்றது. தந்தைதாய்சொற்படி நடத் தல் முக்கியமான தருமம் ; ஆகையால், நான், அதைக் கடந்து பிழைத்திருக்கப் பொறேன். நேராகக் கட்டளே யிடும் தந்தை தாய் குரு என்பவர்களே ஆராதியாது, நேராகக் கட்டளேயிடாத தெய்வத்தை அநேகபிரகாரங் களால் எவ்வாறு ஆராதிக்க முடியும்? அழகிய கடைக் கண்ணுடையாய், அல்லாமலும், இம்மூவரையும் ஆரா தித்தலால் மூவுலகங்களிலுள்ள தெய்வங்களே ஆராதித்த பயன் உண்டாகும்; இவர்களோடொத்த பரிசுத்தியுள் ளது வேறென்று மில்லே ; ஆகையால்தான் இம்மூவரும் ஆராதிக்கப்படுகின்றனர். நன்மையைத் தரும் பிதாவின் ஆராதனம், பரலோகத்துக்குச் செல்லப் பலத்தைத் தரு வதுபோல், சத்தியமும், தானமும், மானமும், மிகுந்த தக்ஷிணையையுடைய யாகமும் பலத்லைதக் கொடுக்கின்றன வல்ல. சுவர்க்கம், தனம், தானியம், வித்தை, புத்திரர், சுகம் ஆகிய இவைகள், தந்தை தாய் குரு இவர்களுடைய மனங்கோணுமல் நடப்பதால் கைகூடும். தேவலோகம், கந்தருவலோகம், பிரமலோகம் முதலிய எல்லா வுலகங் களேயும் தாய்தந்தைசொற்படி நடப்பவரே அடைகின்

றனர். நன்னெறியிலொழுகும் எனது தந்தை எனக்கு எவ்வாறு கட்டளை யிடுகின்றாரோ, அவ்வாறே நான் நடக்க விரும்புகின்றேன்; இது பழமையான தரும மன்றோ! எப்பொழுது நீ என்னுடன் காட்டுக்குவந்து வசிப்பேனென்று உறுதியாகச் சொன்னாயோ, அப்பொழுதே நான் 'தண்டகாரணியத்துக்கு உன்னை அழைத்துப் போவதில்லை' என்ற எனது அபிப்பிராயத்தை மாற்றிவிட்டேன். வண்டை யொத்த கண்ணையுடையாய், குற்றமற்ற அங்கத்தையுடைய நீ, வனத்தில் வசிப்பதற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றாய். 'இராமர் கைவிடுவரோ' என அஞ்சுபவளே, நீ, என்னைப் பின்தொடர்ந்து காட்டிற்கு வந்து, என்னுடன் தருமங்களைச் செய்வாய். நீ என்னுடன் காட்டுக்கு வருவதாக நிச்சயஞ் செய்தது, எனது குலத்துக்கும் உனது குலத்துக்கும் ஒத்ததாயிருக்கிறது. நாயகியே, நீ கணவனை அநுசரித்து நடக்குங் கருத்தை மிகக் கொண்டிருக்கின்றாய்; வனவாசஞ் செய்தற்குச் சாதனமான காரியங்களைத் தொடங்குவாய். சீதே, உன்னுடனன்றிச் சுவர்க்கலோகத்திலிருக்கவும் எனக்கு ஆசையில்லை. இரத்தினங்களை அந்தணர்களுக்கும் போஜனத்தைப் பிட்சுகர்களுக்கும் அளிப்பாய்; விரைவாய்; தாமதம் வேண்டாம்; விலையுயர்ந்த அணிகள், சிறந்த வஸ்திரங்கள், உனது விளையாட்டுக்காகவும் சந்தோஷத்துக்காகவும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் பொருள்கள், படுக்கைகள், வாகனங்கள் முதலானவைகளை யெல்லாம் பிராமணர்களுக்குத் தானம் பண்ணி மிகுந்தவற்றை நமது வேலைக்காரர்களுக்குக கொடுப்பாய்" என்றனர்.

சீதை, 'தான் உடன் வருதல் பர்த்தாவுக்கு விருப்பம்' என அறிந்து, மிகச் சந்தோஷமடைந்து, விரைநது தானஞ் செய்யத் தொடங்கினாள். புகழ் பெற்றவளாயும் நன்மனத்தை யுடையவளாயு மிருக்குஞ் சீதை, பர்த்தாவின் சொல்லைக் கேட்டுச் சந்தோஷமடைந்து, மனம் பூரித்துச் சற்பாத்

திரத்தில் இரத்தினங்கள் முதலியவைகளைத் தானம் பண்ணலானாள்.

முப்பத்தோராஞ் சருக்கம்:
லக்ஷ்மணனும் காட்டுக்குவர வேண்டிக்கொள்ளல்.

முன்னமே அவ்விடம் வந்து காத்திருப்பவரும் மிக்க புகழையுடையவருமான லக்ஷ்மணர், இவ்வண்ணம் இராமருக்கும்சீதைக்கும்நடந்த சம்பாஷணையைக் கேட்டுத் தமக்குவந்த துக்கத்தைச் சகிக்க முடியாதவராய், கண்களில் நீர் ததும்ப, மிக்கவிரதத்தை யுடைய தமையனாது கால்களை உறுதியாகப் பிடித்துக்கொண்டு, அவரையும் சீதையையும் நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார் :—"மான்களாலும் யானைகளாலும் நிரம்பிய காட்டுக்குப் போகவேணுமென்று தாங்கள் நிச்சயித்துவிட்டால், நானும் என் கையில் விற்பிடித்துத் தங்களுக்கு முன்பாகவும் பின்பாகவும் நடந்துகொண்டு காட்டுக்குத் தங்களுடன் வருவேன். பட்சிகளும் தலைமை பூண்டமிருகங்களும் எப்புறமும் சத்தம் பண்ணிக்கொண்டிருக்கும் அநேக அரணியங்களில் தாங்களும் என்னுடன் சஞ்சரிக்கப்போகிறீர்கள். நான், தங்களை விட்டுத் தேவலோகத்தை யடைவதையும் சாவில்லாத வாழ்வையும் விரும்பேன்; எல்லா வுலகங்களுக்கும் அரசனாய் ஆள்வதிலும் எனக்கு விருப்ப மில்லை" என்று கூறினர்.

இலக்குமணர் உடன்வருவேனென்றல்.

இவ்வண்ணஞ் சொல்லுகின்றவரும் காட்டில் வசிக்க உறுதியான கருத்துக்கொண்டிருப்பவருமான லக்ஷ்மணர், இராமரால் அநேகவித நல்வார்த்தைகள் சொல்லித்தடுக்கப்பட்டவராய், மறுபடியும் தமது தமையனாரைப்பார்த்து,

"இதற்கு முன்பே உடன்வர எனக்கு அநுமதிகொடுத்திருக்கிறீர்கள். அப்படியிருக்க இப்பொழுது என்னை ஏன் தடுக்கின்றீர்கள்? இப்பொழுது நான், 'வரவேண்டும்' என்று வேண்டிக்கொள்ளத் தாங்கள் 'வரவேண்டாம்' என்று சொல்லக் காரணத்தை அறிய விரும்புகிறேன். குற்றமற்றவரே, 'என்னபிழை செய்தேனோ?' என்ற சந்தேகம் எனக்கு இருக்கின்றது" என்றூர். இவ்வண்ணம் அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு முன்னே யிருந்து யாசிப்பவரும் தமக்கு முன்செல்லச் சித்தராகவிருப்பவரும் வீரருமான தமது தம்பியைப் பார்த்து, அதிக காந்தியுடன் விளங்கும் இராமர், "நீ என்னிடத்தில் அன்பு வைத்தவன்; எப்பொழுதும் நன்னெறியில் ஒழுகுபவன்; எனக்கு இஷ்டன்; என்உயிருக்கு உயிரானவன்; எனக்கு அடங்கி நடப்பவன்; எனக்கு உடன் பிறந்தவன்; என் தோழன். சுமித்திரையின் புதல்வா, நீயும் என்னுடன் இன்று காட்டுக்கு வந்துவிட்டால், நமது அன்னையரான கௌசலையையாவது மிக்க புகழுடைய சுமித்திரையையாவது யார் காப்பாற்றுவார்? மேகம் உலகத்தை மகிழ்விப்பதுபோல எல்லாருடைய விருப்பையும் நிறைவேற்றிவைப்பவரும் மிக்க காந்தியையுடையவருமான அரசராகிய நமது தந்தை இப்பொழுது மன்மதன்வலையிற் சிக்கியிருக்கிறூர். அசுவபதியின் குமாரியாகிய அக்கைகேயியும் இத்தேசத்தை யடைந்த பின்னர், வருத்தமடைந்திருக்கும் தமது சக்களத்திகளுக்கு நன்மையை நடத்தமாட்டார். கைகேயியின் வசத்தில் நிற்கும் பரதனும் இராச்சியத்தை யடைந்த பிறகு, மிகவும் துக்கத்தை யடைந்த கௌசலையையும் சுமித்திரையையும் நினைக்கவும் மாட்டான். ஆகையால், நீ இவ்விடத்திலிருந்துகொண்டு சுயமாயாவது அரசனுடைய உதவியி

இராமரை இலக்குமணர் வனத்திற்கு உடன் வரவேண்டாமென்றற்குக் காரணங்கேட்டல்.

இராமருடைய காரணம்.

ளுலாவது ஆர்யையான கௌசலையைப் பாதுகாப்பாய். நான் சொன்ன இதைத் தவறாது செய்வாய். இவ்வாறு செய்தால், நீ என்னிடத்தில் வைத்திருக்கும் பக்தியை வெளிப்படுத்தியதாகும். தருமத்தை யறிந்தவனே, பெரியவர்களைக் காப்பாற்றுதலால் மிக்க தருமமும் உண்டாம். இரகுவம்சத்தைக் களிக்கச் செய்பவனே, சுமித்திரையின் குமாரனே, எனக்காக நீ இப்படிச் செய்யவேண்டும். நாமெல்லாரும் பிரிந்து போய்விட்டால் நமது தாய்க்குச் சுகம் உண்டாகாது'' என்றனர்.

இராமர் இவ்விதமாகச் சொல்ல, பேசுவதில் தேர்ச்சியுள்ளவரான இலட்சுமணர், வார்த்தைசொல்லவல்லவரான அந்த இராமரைப்பார்த்து அழகாகப் பின்வருமாறு சொல்லலானர் :—"வீரரே, தங்கள்பராக்கிரமத்தால், பரதர், நியமம் பூண்டவராய்க் கௌசலைக்குஞ் சுமித்திரைக்கும் மரியாதை செய்வார்; இதில் சந்தேகமே வேண்டாம். அன்றியும், தம்மை யடுத்தவர்களுக்கு அநேகமாயிரங் கிராமங்களை முன்பு விட்டிருக்கிற கௌசல்யை, என்னைப்போன்ற அநேகம் பெயர்களைத் தாமாகவே ஒருவருடைய உதவியின்றிக் காப்பாற்றுவார்; அந்தத் தகுதியுடையவரான கோசலையார் தம்மையும் சுமித்திரையையும் என்னைப் போன்றவர்களையுங் காப்பாற்றும் வல்லமையுடையவரே. ஆகையால் என்னை உடன்வருபவனாகச்செய்யுங்கள்; இதில் ஒருவிதமான தவறுமில்லை. நானும் கிருதார்த்தனாவேன்; உங்களுடைய தொழிலும் நன்றாகக் கைகூடும். நான், கையில் பாணத்தோடு கூடின விற்பிடித்து, மண்வெட்டியையும் சிறுகூடையையும் எடுத்துக்கொண்டு, தங்களுக்கு வழிகாட்டிக்கொண்டு தங்கள்முன்னே நடந்துபோவேன். தினந்தோறும் கிழங்குகள், பழங்கள், இன்னுந் தவசிகள்புசிக்கும் காட்டிலுண்டாகும் இனியஉணவுகள் ஆகிய எல்லாவற்றையுங் கொண்டுவந்து தங்களுக்குக்

இலக்குமணர் கருத்து.

கொடுப்பேன். தாங்களும் சீதையும் சந்தோஷமாகத் தாழ்வரைகளில் விளையாடலாம். தாங்கள் விழித்திருக்கும்பொழுதுந் தூங்கும்பொழுதும் தங்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் என் பேருகச் செய்வேன்" என்றனர்.

இராமர், இப்படி லக்ஷ்மணர் சொன்னதைக் கேட்டு வெகு சந்தோஷமடைந்து, தமது தம்பியைப் பார்த்து, "லக்ஷ்மணு, சீக்கிரம் எல்லாநண்பர்களிடமும் விடைபெற்று என்னுடன் காட்டிற்கு வா. ஜனகமகாராஜர் யாகம்பண்ணினபொழுது வருணபகவான் எனக்குத் தாமாகவே கொடுத்த வெகு பயங்கரமானதோற்றமுள்ள திவ்விய விற்களிரண்டும், ஒருவராலும் பிளக்கக்கூடாத கவசங்களிரண்டும், வற்ருத அம்புக் கூடுகளிரண்டும், சூரியனைப்போல விளங்கும் பொன்னுற்செய்த வாள்களிரண்டும் கொடுத்தாரே; அவைகளை நமது குருவீட்டில் பூஜைசெய்து வைத்திருக்கிறேன்; விரைவில் அவைகளையும் எடுத்துக்கொண்டு வா" என்ருர். பிறகு வனவாசஞ்செய்ய நிச்சயித்துவிட்ட லக்ஷ்மணர், தமது அன்பர்களிடம் விடைபெற்று இக்ஷ்வாகுவம்சத்துக்குருவை வணங்கி, அவர் கட்டளையினுல், மாலை முதலியவைகளால் நன்ருக அலங்காரம் பண்ணப்பட்டிருக்கும் அவ்வாயுதங்களை எடுத்துக்கொண்டுவந்து இராமருக்குக் காட்டினுர். இராமர், இவ்வாறு வந்த லக்ஷ்மணரைப் பார்த்து வெகு சந்தோஷமடைந்து, "லக்ஷ்மணு, நான் உன்னை இப்பொழுதுதான் நினைத்தேன். நீயும் வந்துவிட்டாய். சத்துருக்களைத் தபிப்பிப்பவனே, நான் உன்னுடன்கூட இருந்து, என் பொருள்களையெல்லாம் தவசிகளான பிராமணர்களுக்குத் தானம்பண்ணக் கருதியிருக்கிறேன். தங்கள்குருக்களிடம் அதிக பக்தியுள்ள அநேக அந்தணர்கள் இருக்கின்ருர்கள்; அவர்களுக்கும் நம்மை

இராமர் கட்டளை.

இராமருடைய எண்ணம்.

யடுத்திருக்கிறவர்களுக்கும் நான் இன்றைக்கு நமது பொருள்களைத் தானம்பண்ணப்போகிறேன். நீ சீக்கிரமாகச் சென்று வசிஷ்டர்குமாரராயும் அந்தணத் தலைவராயுமிருக்கும் ஆர்யரான ஸுயஜ்ஞரை அழைத்து வா. நான் அவரையும் மற்றைப் பெரியோர்களான எல்லாப்பிராமணர்களையும் நன்றாகப் பூஜித்துவிட்டுக் காட்டுக்குச் செல்லப்போகின்றேன்" என்றனர்.

முப்பத்திரண்டாஞ் சருக்கம்:
இராமர் செய்த யாத்திராதானம்.

பின்பு, மங்களமாயும் விருப்பிற்கிடனாயுமுள்ள தமையனார்கட்டளையை அங்கிகரித்து, லக்ஷ்மணர், ஸுயஜ்ஞர் வீட்டுக்கு விரைவாகச் சென்றார். லக்ஷ்மணர், அக்கினிஹோத்திர சாலையிலிருக்கும் அவ்வந்தணரைக் கண்டு அவரை வணங்கி, "அன்பரே, ஒருவராலுஞ் செய்யவரிதானதொழிலைச் செய்யும் இராமருடையமாளிகைக்கு வாரும். அவருடைய தொழிலைப்பாரும்" என்றார்.

பிறகு ஸுயஜ்ஞரும், தமது சந்தியை முடித்துக்கொண்டு விரைவாக லக்ஷ்மணருடன் சென்று, இராமருடைய செல்வம்நிரம்பிய அழகியமாளிகையிற் புகுந்தார். கொழுந்துவிட்டெரியும் அக்கினிபோலப் பிரகாசிப்பவரும் வேதங்களை நன்றாக அறிந்தவருமான அவ்வந்தணர் அங்கு வந்தவுடன், அவரைச் சீதையோடுகூட இராமர் கைகூப்பிக்கொண்டு எதிர்கொண்டார். இராமர், பொன்னாற் செய்யப்பட்ட மிகச்சிறந்த அங்கதங்கள், அழகான குண்டலங்கள் பொன்வடத்திற்கோத்த மணிகள், கேயூரங்கள், வளைகள், இன்னும் அநேகவிதமான இரத்தினங்கள் ஆகிய இவைகளால் அவரைப் பூஜித்தார். அன்றியும், இராமர், சீதை

இராமருடைய தானம்.

யின் வேண்டுகோளால் ஸுயஜ்ஞரைப் பார்த்து, "நண்பரே, ஸௌம்யரே, இந்த முக்தாகாரத்தையும் பொன்சரட்டையும் மேகலையையும் சீதை கொடுக்க விரும்புகின்றாள். இவைகளைத் தாங்கள் மனைவிக்கு அனுப்புங்கள். காட்டுக்குப் போகுஞ் சீதை, தங்கள்மனைவி அணிந்துகொள்ளும் பொருட்டு விசித்திரமான அங்கதங்களையும் அழகிய கேயூரங்களையும் தங்களுக்குத் தானம் பண்ணுகின்றாள். மிகச் சிறந்த மேல்விரிகளுடன் கூடியதும் உயர்ந்த இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான இந்தக் கட்டிலைத் தங்களுக்குச் சீதை தானம்பண்ண விரும்புகின்றாள். பிராமணோத்தமரே, எனக்கு என் மாமனார் கொடுத்த 'சத்துருஞ்சயன்' என்ற யானையை இன்னும் ஆயிரம் யானைகளுடன் நான் தங்களுக்குக் கொடுக்கிறேன்" என்றார்.

இராமர் இவ்வாறு வேண்டிக்கொடுக்க, ஸுயஜ்ஞரும் அவைகளை யெல்லாம் பெற்றுக்கொண்டு, இராமர் சீதை லக்ஷ்மணர் இம்மூவர்க்கும் சுபமான வாழ்த்துக்களைக் கூறினார். அதன் பிறகு, நான்முகக்கடவுள் தேவேந்திரனைப் பார்த்துக் கூறுவதுபோல, விருப்பமுண்டாகும்படி பேசும் இராமர், தமக்கு இஷ்டரான லக்ஷ்மணரைப் பார்த்துச் சொல்லலானார்:—"சுமித்திரையின் குமாரனே நீ, அந்தணர்களுள் உத்தமரான அகஸ்தியரையும் விசுவாமித்திரரையும் அழைத்துவந்து, பயிருக்கு நிரம்ப நீர்கட்டுவதுபோல, அம்முனிவர்களை இரத்தினங்களால் பூஜை செய்வாய். தோள்வலியால் பகைவரின் மானத்தை யழிப்பவனே, ஆயிரக்கணக்கான பசுக்களாலும், பொன் வெள்ளி இவைகளினாலும், மிகவிலைபெறும் அநேக ஆபரணங்களினாலும் அவர்களை மனமகிழச்செய். நமது தாயான கௌசல்யையிடம் இருந்துகொண்டு, நித்தியமாக ஆசீர்வாதங்களை அவர்க்குச் செய்பவரும் பண்டிதரும் வேதவித்தும் தைத்திரீயசாகையை யோதுபவர்க்கு உபாத்தியாயருமான அவ்வந்தணர்க்கு மகிழ்ச்சியுண்டாகிறவரை

இராமர் லக்ஷ்மணருக்கு இட்ட கட்டளை.

யில், வாகனங்கள் பணிப்பெண்கள் வெண்பட்டுக்கள் இவைகளைக் கொடுப்பாய். நம்மிடத்தில் வெகுநாளாக வசிப்பவரும் மந்திரியும் இரதத்தை யோட்டுபவரும் மிகப்பெரியவருமான சித்திரரதருக்கு, மனத்திற் சந்தோஷமுண்டாகுமாறு, நல்ல விலையுயர்ந்த ரத்நங்களையும், வஸ்திரங்களையும், பொருள்களையும், அநேகவித மிருகங்களையும், ஆயிரக்கணக்கான பசுக்களையும் தானஞ்செய்வாயாக. லக்ஷமணா, கடசாகையையும் கலாபிசாகையையும் அத்யயனம்பண்ணுகிறவர்களாய்க்கொண்டு கையில்தண்டந்தரித்தவர்களாயிருக்கும் மற்றைய இவ்வந்தணர்கள், தமது காலமெல்லாவற்றையும் வேதமோதுவதிலேயே கழித்துவிடுகிறபடியால், இவர்களுக்கு வேறு வேலைசெய்ய அவகாசமில்லை; அன்றியும் வேறுதொழில் செய்யச் சோம்பலு முடையவர்கள்; ருசியுள்ள பண்டங்களில் விருப்பமுள்ளவர்கள்; பெரியவர்களால் நன்குமதிக்கப்பட்டவர்கள்; இவர்களுக்கு, சுமக்குமளவு இரத்தினபாரத்தைச்சுமந்த எண்பது ஒட்டகங்கள், செந்நெலைச் சுமந்துகொண்டிருக்கும் உழவல்ல ஆயிரம் எருதுகள், இருநூறு ரிஷபங்கள், பால் தயிர் நெய் முதலியவைகளுக்காக ஆயிரம்பசுக்கள் ஆகிய இவற்றையெல்லாங்கொடுப்பாய். நமது தாயான கௌசலையிடம், மௌஞ்சியைக் கட்டிக்கொண்டிருக்கும் பிரமசாரிகளின் பெரிய கூட்டம் வந்திருக்கின்றது; அதிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஆயிரம்பசுக்கள் கொடுப்பாய். நமதுதாயான கௌசல்யை மனங்களிக்கும்வண்ணம் அவர்கட்குத் தட்சிணைகொடுப்பாய்" என்றார்.

தருமசுவரூபியான தமது தமையனார் இப்படிக் கட்டளையிட, புருஷசிங்கமான லக்ஷ்மணர், குபேரனைப்போல அவர் கட்டளையின்வண்ணம் எல்லாப்பிராமணோத்தமர்களுக்குந் தானங்கொடுத்தார். இராமர், தமக்குச்சமீபத்தில் அழுதுகொண்டுநிற்குந் தம்மையடுத்தவர்களுக்கு யதேஷ்டமாகப் பொருள்களைக் கொடுத்து, அவர்களை நோக்கி,

"நானும் லக்ஷ்மணனும் திரும்பி வருகிறவரையில் எங்களுடைய மாளிகைகள் ஒவ்வொன்றையும் சூனியமாகாமலிருக்கும்படி, அதில் நீங்கள் வாழ்ந்துகொண்டிருங்கள்" என்றார். இராமர் துக்கப்பட்டிருக்கும் ஜனங்களிடம் இவ்வாறு சொல்லி, அதன்பிறகு, அவர், தமது பொக்கிஷக்காரனைப் பார்த்து, தமது பொருள்களையெல்லாம் அங்குக்கொண்டு வந்து சேர்க்கும்படி கட்டளையிட்டார். உடனே வேலைக்காரர்கள், இராமருடைய பொருள்களையெல்லாம் அங்குக் கொண்டுவந்து பார்த்தற்கு வெகு ரமணீயமாக இருக்கும்படி குவியலாகக் குவித்தார்கள். இராமர், லக்ஷ்மணருடன், பிராமணர் குழந்தைகள் முதியவர் ஏழைகள் ஆகிய இவர்களுக்கு அப்பொருள்களைக் கொடுப்பித்தார்.

திரிஜடமுனிவர் இராமரிடத்துப் பசுப்பொருள் பெறுதல்.

அச்சமயத்தில், தினந்தோறும் காட்டில் உஞ்சவிருத்தி செய்பவரும் கோடரிமுதலிய பிளத்தற்குரிய கருவிகளையும் மண்வெட்டியையும் கலப்பையையும் வைத்துக்கொண்டிருப்பவரும் கறுத்தமேனியையுடையவரும் கார்க்கியவம்சத்திற் பிறந்தவரும், திரிஜடர் என்றபேரை யுடையவருமான ஒரு வறிய அந்தணர், அயோத்திநகருக்கு வந்து சேர்ந்தார். அவரோ வயசுசென்றவர்; அவர் மனைவியோ சிறுபெண்; அவர்களுக்குக் குழந்தைகள் பல; தரித்திரத்தின் கொடுமையைப் பொறுக்கமுடியாமல் அவர்மனைவி, தனது கணவரைப் பார்த்து, "நான் சொல்லுவதைக் கேளுங்கள். தாங்கள், தங்கள்கோடரியையும் மண்வெட்டியையும் தூரத்தில் எறிந்துவிட்டு, பார்யா புத்ரசமேதராய், தருமபிரபுவான இராமரைப் போய்க் காணுங்கள். ஏதாவது கிடைக்கும்" என்றாள். அவள்சொற்படியே அந்தத் திரிஜடமுனிவரும், பிருகுரிஷியோ அங்கிரஸமுனியோ என்று சொல்லும்படியாகக் காந்தியால் விளங்குந் தமதுமேனியைக் கந்தைத்துணியால் வெகுகஷ்டப்பட்டுமூடிக்கொண்டு, இரா

மர்மாளிகையைநோக்கிப்பரபரப்பாகநடந்து, ஜனக்கூட்டத்தில் ஒருவராலுந் தடுக்கப்படாதவராய், ஐந்துகட்டையுங் கடந்து, இராகவர்முன் வந்துநின்று, அவரைப் பார்த்து, "மிக்க புகழையுடையவரே, சக்கரவர்த்தி திருமகரே, நான் ஒரு வறியவேதியன்; எனக்குக் குழந்தைகள் பல; நான் தினந்தோறுங் காட்டில் உஞ்சவிருத்திசெய்து பிழைக்கிறேன்; என்மேல் கருணைபுரியவேண்டும்" என்றார். இராமர், அவரைப்பார்த்துப் புன்னகைசெய்து, "ஐயா, நான் ஆயிரமாயிரமாயிருக்கும் பசுக்களில் ஒன்றுகூடக் கொடுக்கவில்லை; தங்கள்கையில் வைத்திருக்குங் கோலை வீசியெறிய அது எவ்வளவுதூரம்போய்விழுகின்றதோ, அவ்வளவுபரப்புவரையி லிருக்கும் பசுக்களையெல்லாம் தாங்களே எடுத்துக்கொள்ளுங்கள்" என்றார். இதைக்கேட்ட அவ்வந்தணர், பரபரப்புடன் தமதுவேஷ்டியை இடுப்பில் இழுத்துக்கட்டி, வேகத்தோடு கோலைக் கையில் எடுத்துத் தமது முழுவலியுடன்பிடித்துத் தமது முழுவன்மையுடன் எறிந்தார். அக்கோலும் சரயூநதிக் கரையை யடைந்து, அநேகமாயிரம் பசுக்களையுடைய எருதுகளின்முன் விழுந்தது. தருமபிரபுவாகிய இராமர், அதைக்கண்டு அவ்வெல்லைவரையில் நின்ற மாடுகளை யெல்லாம் இடையர்களைக்கொண்டு திரிஜடருடைய ஆச்சிரமத்துக்கு ஓட்டி யனுப்பிவிட்டு, அவரைக் கட்டிக்கொண்டு அவர்மனங்குளிரப் பின்வருமாறு சொல்லலானார்:—"நான் தண்டத்தை யெறிந்து பசுக்களைக் கொண்டுபோகும்படி தங்களிடத்தில் விநோதமாகச் சொன்னதைப்பற்றி, என்மீது கோபங் கொள்ளவேண்டாம். தங்களுடைய மிக்க தபோபலத்தைக் கண்டறிந்துகொள்ள நான் இவ்வாறு சொன்னேன். இன்னும் தங்களுக்கு வேண்டியவற்றைக் கேளுங்கள்; தங்களுக்குச் சிறிதேனுந் தடையில்லை; நான் உண்மையாகச் சொல்லுகிறேன். எனதுபொருள்களெல்லாம் அந்தணர்களுக்கென்றேயிருக்கின்றன. நான்

சம்பாதித்த பொருள்களெல்லாம் தங்களைப்போன்றவர்களுக்குக் கொடுத்தால்தான் புகழையும் மனமகிழ்ச்சியையும் உண்டாக்கும்" என்றார். இராமர் இவ்வாறு சொன்னதைக் கேட்டு, பார்யையுடன்கூடிய அவ்வந்தணத் தலைவர், பசுக் கூட்டங்களையடைந்து, சந்தோஷித்து, தமக்கு அவ்வளவு தானஞ் செய்த மகாத்துமாவுக்குப் புகழிலும் பலத்திலும் அன்பும், இன்பமும் வளருமாறு ஆசிகூறித் தமது இருப்பிடஞ் சென்றார். அதன்மேல், இராமர், மனத்தில பிரீதியோடு தமது பலத்தால் நல்ல வழியில்தேடியடைந்தமிக்க பொருள் முழுவதையும், அவரவர்களின் தகுதிக்கேற்றபடி சம்மானன வாக்கியத்தோடு தமது அன்பர்களுக்குக் கொடுத்தார். அக்காலத்தில் இராமர்செய்த சம்மானத்தோடு கூடின தானத்தால் பிராமணர் சினேகிதர் சேவகர் வறியோர் ஆகிய இவர்களில் திருப்தியடையாதவர் ஒருவருமில்லை.

மூப்பத்துமூன்றுஞ் சருக்கம் :

இராமர் தமது மனைவியுடனும் தம்பியுடனும் விடைபெறத் தசரதர் மாளிகைக்குச் செல்லுதல்.

இராமலக்ஷ்மணரிருவரும், இவ்வாறு மிக்கபொருள்களை அந்தணர்களுக்குத் தானஞ்செய்துவிட்டு, சீதாதேவியால் மாலைகள்முதலியன இட்டு அலங்கரிக்கப்பெற்றனவும் ஒளியால் கண்களைக் கூசச் செய்வனவுமான ஆயுதங்களை மாத்திரம் கையிலெடுத்துக்கொண்டு, சீதாதேவியுடன் தங்கள்தந்தையைப் பார்க்கச் சென்றார்கள். அப்போது மிக்க செல்வத்தையுடையவர்களானஜனங்கள், கோயில்களிலும், தனிகர்களின் வீடுகளிலும், விமானசிகரங்களிலும் ஏறி, உதாசீனர்களாய்ப் பார்த்தார்கள். துயரக்கடலில் முழுகிய ஜனங்கள், தெருக்களில் நிற்கவு மிடமில்லாமல் கூட்டமா யிருந்தபடியால், எளிமையோடு, உயர்ச்சியையுடைய இடங்களில் ஏறி இராமரைப் பார்த்தார்கள். இரா

மர், தமது தம்பி பின்வர, பிடித்துக்கொள்ள ஒருகுடைகூட இல்லாமற் சீதாதேவியுடன் கால்நடையாக வீதியில் நடப்பதை, அந்நகரத்துச்சனங்கள் கண்டு, சோகத்தால்மனந்தடுமாறிப் பலவாறு சொல்லலானார்கள். "எவரொருவர் புறப்பட்டால் நால்வகைச் சேனைகளும் பின் தொடர்ந்து செல்லுமோ, அந்த இராமர், லக்ஷ்மணரொருவரால் தொடரப்பட்டுத் தம்மனைவியான சீதையுடன் தனியாகச் செல்லுகிறார்! பல

ஜனங்களின் துயரம்.

வகைச் சம்பத்துக்கள் பொருந்தியும் எல்லாருடைய மனோரதத்தையும் நிறைவேற்றிவைக்குந் திறமையமைந்துமிருக்கும் இராமர், தருமத்தின் மேல்வைத்திருக்குங் கௌரவத்தால் தமது தந்தையாரைப் பொய்யராக்க விரும்பவில்லை. எவள், முன்பு ஆகாசத்திற் சஞ்சரிக்கும் பிராணிகளாலும் பார்க்க முடியாதவளோ, அச்சீதை, இராஜவீதியில் நிற்கும் ஜனங்களால் இப்பொழுது பார்க்கப்படுகின்றாள்! மழையும் வெயிலும் குளிரும், வாசனைத்திரவியங்களைப்பூசிக்கொள்ள உரியவளும் செஞ்சந்தனத்தையணிந்தவளுமான சீதாதேவியின் உருவத்தை இனி விரைவில் மாற்றும். இப்பொழுது, தசரதமன்னவரைப் பேய்பிடித்திருக்கின்றதென்பது நிச்சயம்; இல்லாவிடின், தம் அன்பனானபுதல்வனை அவர் இப்படிக் காட்டுக்கு ஓட்டுவரோ? ஒருதந்தைகுணமில்லாத மகனைக்கூட வீட்டைவிட்டு ஓட்டானே; அப்படியிருக்க, தமது நன்னடக்கையால் எல்லாருடைய மனங்களையுங் கவர்ந்த ஒரு சத்குமாரனைப்பற்றிச் சொல்லவேண்டுமோ? கொல்லாமை, தயை, கேள்வி, சீலம், ஐம்பொறியின்வெற்றி, மனமடக்கல் என்ற இவ்வாறு குணங்களும் புருஷோத்தமராகிய இராமரை விளக்குகின்றன; ஆகையால், வெயிற்காலத்தில் நீர் வற்றிப்போய்விட்டால் ஜலஜந்துக்கள்வருந்துவதுபோல, இவர்க்குச் சிறிதுதுன்பம் நேரிடினும், ஜனங்கள் மிகவும்வருந்துவார்கள். புஷ்பங்களுடனும் பழங்களுடனும் விளங்கும் விருக்ஷம், வேரை வெட்டுதலால்

வாடிச்சாய்ந்துவிழுவதுபோல், இந்தப்பூமிபதிக்கு நேரிடுந் துன்பத்தால் உலகமெல்லாம் துன்பப்படும். வெகுகாந்தி யையுடையவரும் தருமத்தையே மேற்கொண்டவருமான இராமர், பிராணிகளுக்கெல்லாம் வேர்போல ஆதாரமாக விருக்கிறார். மற்றைப் பிராணிகள், இவர்க்குப் புஷ்பங் களையும் பழங்களையும் இலைகளையும் கிளை களையும் போன்றுளார். ஆகையால், நாமும், நமது பெண்டுகள் பந்துக்கள் இவர்களோடு லக்ஷ்மணரைப்போல இராமர்போகிறவழி யைத்தொடர்ந்து விரைவாகப் போவோம். நமக்குத் தோட்டங்கள் கழனிகள் வீடுகள் ஒன்றும் வேண்டாம்; தருமபிரபுவாகிய இராமருக்கு வருஞ் சுகதுக்கங்களை உட னிருந்து அநுபவித்துக்கொண்டு அவர்பின் நடந்து செல் வோம். வெட்டியெடுக்கப்பட்ட புதையல்களை யுடையன வும், அழிந்த முற்றங்களை யுடையனவும், எடுக்கப்பட்ட தன தானியங்களை யுடையனவும், சிறந்த பொருள்களை யிழந்தனவும், புழுதிகளால் படியப் பெற்றனவும், தேவ தைகளால் விடப்பட்டனவும், பகலில் இங்குமங்கும் ஓடிக்கொண்டிருக்கும் எலிகளுடைய வளைகளால் நிறைந்த னவும், மெழுகுதலற்றனவும், நீர்தெளித்தலும் தூபமண மும் இல்லாதனவும், அலகிடுதலை நீங்கினவும், பலியாகம் மந்திரம் ஹோமம் ஜபம் இவைகளை யொழிந்தனவும், 'கெட்டகாலம்நேரும்' என்பதை முன்னே அறிவித்தற்குப் போல் இடிந்துள்ளனவும், உடைந்துள்ள பாத்திரங்களை யுடையனவும், நம்மால் விடப்பட்டனவுமான வீடுகளைக் கைகேயி யடையட்டும். இராமர்போவதால், காடுகள் நகரங் களாகட்டும். நாம் விட்டோடின இந்நகரம் காடாகட்டும். சர்ப்பம் முதலிய கோரப்பற்களையுடைய பிராணிகள் நம்மைப்பார்த்தலா லுண்டாகும் பயத்தால் தாங்கள் தங்கி யிருக்கும் புற்றுக்களை விட்டும், மிருகங்களும் பட்சி களும் தாங்களிருக்கும் தாழ்வரைகளை நீங்கியும், யானை

ஜனங்களின் கருத்து.

களும் சிங்கங்களும் தாங்கள் வசிக்குங் காடுகளை விட்டும், நம்மால் கைவிடப்படும் இந்நகரத்தில் வந்து குடியேறட்டும். புல்லைத் தின்பனவும் மாம்சத்தைப் புஜிப்பனவும் பழங்களை நுகர்வனவுமான கொடியமிருகங்களும் பக்ஷிகளும் வசிக்கப்போவதாகிய இத்தலத்தில், கைகேயி, தனது சுற்றத்தார்களுடனும் மித்திரர்களுடனும் வசிக்கட்டும். நாமெல்லோரும், இராமர்பின் சென்று சுகமாகக் காட்டில் வாசஞ்செய்வோம்'' என்றார்கள்.

இவ்வண்ணம் பலர் பலவாறாகச் சொல்லிக்கொண்டிருந்தவற்றை யெல்லாங்கேட்டும், இராமருடைய மனம் கொஞ்சமேனுங் கலங்கவில்லை. மதயானை போன்ற பராக்கிரமத்தை யுடைய தருமாத்துமாவான இராமர், வெகு தூரத்திலிருந்து, கைலாயமலையின் சிகரம்போல் விளங்கும் தமதுதந்தையின்மாளிகையை நோக்கி நடந்தார். இராமர், வணக்கமுள்ள வீரர்பலர் தங்கியிருக்கும் அரசமாளிகையிற் புகுந்து, வாட்டமடைந்திருக்குஞ் சுமந்திரரைச் சிறிது தூரத்திற் கண்டார். இராமர், தமது தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவதில் ஊக்கம் வைத்தவராய், அவ்விடத்தில் ஜனங்கள் வெகுபரிதாபத்தோடிருக்கக்கண்டும் சிறிதேனும் மனத்தளர்ச்சி யடையாமல், வெகு சந்தோஷமாகத் தமது தந்தையைப் பார்த்தற்காகப் போனார். இக்ஷ்வாகுகுலத்திலுதித்தவரான இராமர், மிகவுந் துக்கத்திற்கு இடமான காட்டிற்குப் பயணப்பட்டுப் போகின்றவராய், பிதாவினிடத்தில் தமது வருகையைத் தெரிவித்தற்குச் சுமந்திரரருகிற் சென்றார். தருமத்தை யநுஷ்டிப்பதில் இஷ்டமுள்ளவராயும் பிதாவின்கட்டளையால் வனம் புகுதற்கு உறுதிகொண்டவராயு மிருக்கும் அவ்விராமர், சுமந்திரரைப் பார்த்து 'எனது வரவை அரசர்க்கு அறிவியும்' என்று சொன்னார்.

இராமர் அரண்மனையில் சுமந்திரரைக் கிட்டுதல்.

முப்பத்துநான்காஞ் சருக்கம்:
இராமர் காட்டுக்குச்செல்ல விடைபெறுதல்.

தாமரையிதழையொத்த கண்களைப் பெற்றவரும் கருநிறம் பொருந்தியவரும் சிறுத்த இடையை யுடையவருமான இராமர், தமது தந்தையின் மாளிகை சேர்ந்தவுடன், அங்கிருந்த சுமந்திரரைப்பார்த்து, "நான் வந்திருப்பதை என்து பிதாவினிடந் தெரிவியும்" என்றார். இவ்வண்ணம் இராமர் சொல்ல, சோகத்தாற் கலங்கின மனத்தையுடைய சுமந்திரர், அம்மாளிகையினுள் விரைவிற்சென்று பெருமூச்சுஎறிந்துகொண்டு, தசரதமன்னவர்வீற்றிருப்பதைக் கண்டார். அச்சமயத்தில், தசரதமன்னவர், அரவின்வாய்ப்பட்ட சூரியன்போலவும், நீறுபூத்த நெருப்புப்போலவும், நீரற்ற குளம்போலவும் காணப்பட்டார். மிக்க அறிவையுடைய சுமந்திரர், இராமரைப் பற்றியே தபித்துக்கொண்டு மனங்கலங்கியிருக்கும் அத்தசரதர்சமீபத்தில் தமது கைகளைக்கூப்பிக்கொண்டுநின்று, 'வெற்றி பெறுக' என ஆசிகூறி, பின்பு வெகு பயத்துடன் நாக்குளற, "வேந்தே, தங்கள் குமாரராயும் புருஷசிங்கமாயும் உண்மைதவறாதவராயுமிருக்கும் இராமர், வாயிலில் வந்து காத்திருக்கிறார். அவர், அந்தணர்களுக்கும் தம்மை யடுத்தவர்களுக்கும் தம்பொருள்களையெல்லாம் தானம் பண்ணிவிட்டுத் தமது மித்திரர்களிடம் விடைபெற்றுக்கொண்டு, தங்களைக் கண்டு விடைபெற்றுப்போக வந்திருக்கின்றார். சூரியபகவான் தனது கிரணங்களுடன் கூடியிருப்பதுபோல எல்லாவித ராஜகுணங்களுடனுங் கூடி விளங்கிக்கொண்டிருக்கும் தங்கள்

இராமர் தாம் வந்ததைத் தசரதருக்குத் தெரிவிக்கச்சொல்லல்.

சுமந்திரர் இராமர்வரவை மன்னர்க்கு அறிவித்தல்.

குமாரரைக் காட்டுக்குப்போகும்முன் தாங்கள் பாருங்கள். தங்களுக்கு மங்களமுண்டாகுக" என்றார்.

வெகு சத்தியமும் தருமமும் பொருந்தியவரும், ஆழ்ந்திருப்பதால் கடலுக்கு ஒப்பானவரும், ஆகாசம்போல் மாசற்றவருமான அரசர், அவரைப்பார்த்து, "சுமந்திரரே, சீக்கிரஞ்சென்று எனது மனைவிமாரெல்லாரையும் அழைத்துவாரும். தருமத்தின் வடிவாகிய என் குமாரனை எனது எல்லா மனைவிமார்களோடும் கூடிப் பார்க்க ஆசைப்படுகிறேன்" என்றார்.

தசரதமன்னவர் கட்டளை.

இதைக் கேட்டுச் சுமந்திரர், அந்தப்புரத்தினுட் சென்று மாதரார்களைநோக்கி, "நற்குணமுடையவர்களே, அரசர் உங்களெல்லாரையுங் கூப்பிடுகிறார்; சீக்கிரம் வாருங்கள். விளம்பம் வேண்டாம்" என்றார். இராமர் காட்டுக்குப் போவதா லுண்டான அழுகையாற் சிவந்த கண்களையுடையவர்களும் விரதங்களை மேற்கொண்டவர்களுமான முந்நூற்றைம்பது பெண்டுகள், இதைக் கேட்டு, அரசர்கட்டளைப்படி கௌசலையைச் சூழ்ந்துகொண்டு அரசர்வீட்டைநோக்கிச் சென்றார்கள். தசரதர், இவர்கள்வந்ததைப்பார்த்து, தமது தேர்ப்பாகரான சுமந்திரரை நோக்கி, "சுமந்திரரே, எனது குழந்தையை அழைத்துவாரும்" என்றார். அவரும், அப்படியேசென்று, இராமர் லக்ஷ்மணர் சீதை இம்மூவரையும் அங்கு அரசர்சமீபத்தில் விரைவில் அழைத்துவந்தார்.

சுமந்திரர், கட்டளையைத் தெரிவித்தல்.

மீண்டும் மன்னவரிட்ட கட்டளை.

மிக்க துக்கத்தை யுடையவராயும் மனைவியராற் சூழப்பட்டவராயு மிருக்குந் தசரதர், தூரத்திலிருந்தே கைகளைக் கூப்பிக்கொண்டுவரும் தமது குமாரரைக் கண்டு, தமது ஆசனத்தினின்று விரைவாக எழுந்திருந்து, அவருக்கு

எதிரே துரிதமாய் ஓடினர்; தமது அறிவு தப்பி மிக்க சோகத்தை அடைந்தவராய்ப் பூமியில் மூர்ச்சித்து விழுந்தார். இராமரும் மகாரதரான லக்ஷ்மணரும், துக்கத்தால் அறிவு சிறிதுமில்லாமல் வீழ்ந்துகிடக்கும் அவரைத் தூக்குதற்கு அதிகவேகமாக ஓடி வந்தார்கள். அக்காலத்தில், அந்தப்புரத்தில் 'ஹா! ஹா!! ராம' என்ற சத்தம் ஸ்திரீகளின் பூஷணத்வநிகளோடு சேர்ந்து மிகுதியாக உண்டாயிற்று. இவர்களிருவரும் சீதையும், மன்னவரைக் கைகளால் மெதுவாகத் தூக்கி ஒரு கட்டிலின்மேல் இருக்கவைத்தார்கள். பின்பு இராமர், ஒரு முகூர்த்தத்தில் பிரஜ்ஞையடைந்த தசரதரைப் பார்த்து, அஞ்சலி பந்தம் பண்ணிக்கொண்டு, "எல்லார்க்கும் ராஜாவான எங்கள்மகாராஜரே, தங்களிடம் தண்டகாரணியத்துக்குப்போக விடை பெற வந்தேன். எங்களை அழகியகண்ணுற் கடாக்ஷிக்க வேண்டும். லக்ஷ்மணனும் சீதையும் என்னுடன்கூடவே காட்டுக்குவர விடை யளிக்கவேண்டும். 'காட்டுக்கு வர வேண்டாம்' என்று அநேகவிதமாக அவர்களுக்குச் சொல்லியும் அவர்கள் அவ்வாறிருக்க விரும்பவில்லை. பகைவர்களின் மானத்தை யழிப்பவரே, பிரமன் மக்களுக்கு அநுமதி கொடுப்பதுபோல், லக்ஷ்மணன் நான் சீதை ஆகிய எல்லோருக்கும், சோகப்படாமல் அநுமதி கொடுத்து அனுப்பும்" என்றார். தசரதர், இவ்விதமாகத் தமது குமாரர் காட்டுக்குச் செல்ல விடைபெறக் காத்திருப்பதைப் பார்த்து, "இராகவா, நான், கைகேயிக்கு வரத்தைக் கொடுத்ததால் வஞ்சிக்கப்பட்டேன். அதனால், என்னை நீ மறுத்து அயோத்திமாநகருக்கு மன்னனாகுவாய்" என்றார்.

தசரதர் மூர்ச்சை.

இராமர் விடை கேட்டல்.

தசரதர் மறுமொழி.

இங்ஙனம் தசரதர் சொல்ல, தருமத்தில் நிலைநின்றவரும் பேசவல்லவருமான இராமர், அஞ்சலிபந்தம் பண்ணிக்

இராமர் மறு மொழி.

கொண்டு, மன்னவரை நோக்கி, "அரசரே, தாங்கள் அநேகமாயிரம்வருஷமாகப் பூமிக்கு அரசரா யிருக்கின்றீர்கள். இப்படிப்பட்ட தங்களை நான் பொய்யராகச் செய்யக்கூடாது; ஆகையால், நான் காட்டில் வசிக்கின்றேன். நான், அரணியத்தில் பதினான்குவருஷம் விளையாடித் தங்கள் வாக்கைக் காப்பாற்றி, அதன்பிறகு, தங்கள்யாதங்களை யடைவேன்" என்றார்.

எளிமையாகத் துக்கிக்கும் அரசர், கைகேயியின் வலையி லகப்பட்டுச் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவராய், அருமைக் குழந்தையான இராமரை நோக்கி, ஏகாந்தத்தில் பின் வருமாறு சொல்லலுற்றார்:—"குழந்தாய், இம்மையிலும் மறுமையிலும் நன்மையுண்டாவதற்கும் மறுபடி திரும்பிவருவதற்கும், சுபமாயும் அச்சமற்றதாயுமிருக்கும் வழியில், ஜாக்கிரதையுடையவனாய்ப் போ. நீ, உண்மையின் வடிவாக இருக்கிறாய். உன்னுடைய சிந்தையோ தருமத்தை நிறைவேற்றுவதை நோன்பாகக் கொண்டது. இப்படிப்பட்ட உன்னுடைய புத்தியைத் தடுக்க எவ்வாறு முடியும்? ஆனால், இன்றை இராத்திரி நீ ஒருபடியாலும் புறப்படவேண்டாம். ஒரு தினம் உன்னைப் பார்த்தலினாலேனும் நான் சுகமாகச் சஞ்சரிக்கிறேன். நீ, இன்றிரவு என்னையும் உன் தாயாரையும் பார்த்துக்கொண்டு இங்குத் தங்கியிரு. நீ, உனது எல்லா விருப்பங்களாலும் திருப்தி செய்யப்பட்டவனாய், நாளைக் காலையிற் புறப்பட்டுப் போவாய். இராம, நீ, எனக்கு விருப்பைச் செய்வதற்காக உன் நண்பர்களையெல்லாங் கைவிட்டு, மனிதசஞ்சாரமற்ற காட்டுக்குப்போகின்றாயே! உன்னைப்போல், எல்லாப்படியாலுஞ் செய்யவரிய தொழிலை மேற்கொள்ளுகிறவர்களும் உண்டோ? புதல்வ, இவ்வண்ணம் உன்னைக் காட்டுக்கு அனுப்புவ

தசரதர் விடை கொடுத்தல்.

தில் எனக்கு மனமேயில்லை. இராகவ, சத்தியமாகச் சொல்லுகிறேன்; நீறுபூத்த நெருப்புப் போன்ற கெட்ட எண்ணத்தை யுள்ளேகொண்ட கைகேயியால் மோசம்போனேன். குலத்தைக் கெடுக்கவந்த கைகேயியின் ஏவலால், அவள் எனக்குச்செய்த வஞ்சனையையுங் கடக்க விரும்புகின்றாயே! புதல்வ, அன்றி, நீ மூத்த குமாரனாகையால் பிதாவை மெய்யனாக்க இஷ்டப்படுகிறாயென்பதில் ஆச்சரியம் என்ன?'' என்று சொன்னார்.

இவ்வாறு வெகு துக்கத்தோடு சொல்லுந் தகப்பனார் பேச்சைக்கேட்டு இராமர், வெகுவணக்கமாக லக்ஷ்மணருடன்கூடப் பின்வருமாறு சொல்லலானார்:—"இன்றைத்தினமே நான் இவ்விடம்விட்டுப் புறப்பட்டுப் போவதனா லுண்டாகும் நன்மையைவிட உயர்ந்த நன்மையை எனக்குக் கொடுக்க யாரால் முடியும்? ஆகையால், எனது முழுவிருப்பங்களினாலும் இப்பொழுதே அரணியத்துக்குப் போகஎண்ணுகிறேன். தாங்கள், தேசங்களுடனும் ஜனங்களுடனும் தனதானியங்களுடனும் பொருந்தியுள்ளதும் என்னால் விடப்பட்டதுமான இப்பூமியைப் பரதன் அரசாளக் கொடுக்க வேண்டும். வனவாசஞ்செய்ய உறுதிகொண்ட என் புத்தியை இனிமாற்றமுடியாது. கேட்போர்களின் மனத்தை நிறைவிக்கும் வேந்தே, தாங்கள், கைகேயிக்குக் கொடுத்த வரத்தை வெகு சந்தோஷமாக முடித்து, 'சத்தியசந்தர்' எனப் பெயர் பெறுங்கள். நான், தங்களுடைய கட்டளைச் சொல்லைக் காப்பாற்றிக்கொண்டு, வனத்தில் வசிப்பவர்களுடன், பதினான்கு வருஷம் வனத்தில் வாசம்பண்ணுகிறேன்; தங்களுக்கு விசாரமே வேண்டாம். பரதனுக்குப் பூதலத்தைக் கொடுங்கள். இரகுகுலம் விளங்கும்படி தோன்றியவரே, நான், 'தங்களது ஆணை' என்ற காரணத்தினால்தான் பட்டங்கட்டிக்கொள்ள உடன்பட்டேன்; எனது மனத்தில் விருப்பமுற்றேனும், இன்பத்தை

இராமருடைய வணக்கச் சொல்.

எண்ணியேனும் இராச்சியத்தை நான் அங்கீகரிக்கவில்லை. எல்லாச்சனங்களுக்குந் தைரியஞ் சொல்லவேண்டிய தாங்கள் என்ன இப்படித் துக்கப்படுகிறீர்கள்? சோகத்தை விட்டிடுங்கள்; கண்ணீர் வடிக்கவேண்டாம். பிறரால் வெல்லமுடியாத பராக்கிரமமுடையவரே, மகாநதிகளுக்கெல்லாம் பதியாக விளங்குஞ் சமுத்திரம் கலக்கமடையுமோ? புருஷசிரேஷ்டரே, எனக்கு நாடு வேண்டாம்; சுகம் வேண்டாம்; சீதையும் வேண்டாம்; ஒருவிதமான சம்பத்தும் வேண்டாம்; சுவர்க்கம் வேண்டாம்; பிராணனும் வேண்டாம்; நான் தங்களைச் சத்தியமுடையவராகவிருக்க வேண்டுகிறேன்; பொய்யராகவிருக்க வேண்டேன். நான், ப்ரத்யக்ஷதெய்வமான தங்கள்முன்பு, சத்தியத்தின்மீதும் புண்ணியத்தின்மீதும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். பிரபுவே, இனி ஒரு கணப்பொழுது கூட இங்கிருக்க என்னால் முடியாது. தாங்கள் துக்கத்தை விட்டிடவேண்டும். நான் கொண்ட உறுதி நடவாதிராது. எனது தாயாகிய கைகேயி, எப்பொழுது "இராகவ, நீ காட்டிற்குச் செல்லுவாய்" என்று கூறினாரோ, அப்பொழுதே நான், "அம்மா, அப்படியே போகின்றேன்" என்றேன்; அச்சத்தியத்தை நான் நிறைவேற்றுகிறேன். தேவ, தாங்கள் வருத்தத்தால் அடிக்கடி எங்களை நினைக்க வேண்டாம். சாதுக்களான மான்கள் நிரம்பியும் நானாவித பட்சிகள் ஒலித்துக்கொண்டுமிருக்கும் அரணியத்தில் நாங்கள் மனங் களித்து விளையாடப் போகின்றோம். தந்தையே, "தந்தை, தெய்வங்களுக்கெல்லாம் மேலான தெய்வம்" என்றன்றோ சாஸ்திரங்களுங் கூறுகின்றன; புருஷசிரேஷ்டரே, ஆகையால், நான், தங்கள் சொல்லை 'தெய்வத்தின் கட்டளை' என நினைத்தே நிறைவேற்றுகின்றேன். பதினான்குவருஷம் முடிந்தவுடன், நான் இங்கு வரத் தாங்கள் என்னைப் பார்ப்பீர்கள்; இத்துக்கத்தை விட்டிடுங்கள். அழுதுகொண்டிருக்கும்

பூமி முழுவதையும் விட்டிட்டேன். இவைகளைத் தாங்கள் பரதனுக்குக் கொடுங்கள். நான், தங்கள்சொல்லைக் காப்பாற்றக் காட்டுக்குப் போகிறேன். தங்களை மீண்டுஞ் சேவிக்க வெகுகாலஞ் செல்லும். மலைகளின் கூட்டங்களை யுடையதும், அநேக பட்டணங்களுடன் கூடியதும், நாநாவித வனங்கள் வாய்ந்ததும், அழகிய எல்லைகள் பொருந்தியதும், என்னால் விடப்பட்டதுமான பூமியைப் பரதன் ஆளட்டும். அரசரே, தாங்கள் எவ்வாறு மொழிந்தீர்களோ, அது அவ்வாறே நடக்கட்டும். குற்றமற்ற அரசரே, பெரியோர்களால் மதிக்கப்படும் உங்களது ஆணையை முடித்தலில் எனக்கு எவ்வளவு விருப்பமுள்ளதோ, அவ்வளவு விருப்பம், உலகத்தில் மனோகரமாகவிளங்கும்பொருள்களிலும் இஷ்டமானபொருள்களிலும் இல்லை. என் பொருட்டுச் சோகப்பட வேண்டாம். தங்களை மெய்யராகச் செய்வதற்காக, என்றுமழியாத இராச்சியத்தையும், விரும்பத்தகும் பொருள்களையும், சுகத்தையும், சீதையையும், பிராணனையும் விரும்பேன். தங்களது விரதம் உண்மையை யுடையதாகட்டும். நான், நாநாவித மரங்களை யுடைய அரணியத்திற் புகுந்து, பழங்களையும் மூலங்களையும் புசித்தும் மலைகளையும் நதிகளையும் ஓடைகளையும் தரிசித்தும் வெகு சௌக்கியமாகச் சஞ்சரிப்பேன்; தாங்கள் சுகமாகவிருங்கள்" என்றார்.

அந்தப்புரத்தின் துயரம்.

இவ்வண்ணம் தமது குமாரர் சொல்ல அரசர், விசனத்தால் கவரப்பட்டுச் சோகத்தால் வாட்டமடைந்தவராய், இராமரை அணைத்து, அறிவற்றவராய், மோகமடைந்து, சிறிதும் அசைவின்றி யிருந்தார். கைகேயி ஒருத்தி தவிர, மற்ற எல்லாத் தேவிமார்களுங் கதறினார்கள். சுமந்திரரும் அழுதுகொண்டே மூர்ச்சையடைந்தார். அவ்விடமெங்கும் 'ஹா! ஹா!' என்ற ஒருசத்தமே கேட்டுக்கொண்டிருந்தது.

முப்பத்தைந்தாஞ் சருக்கம்:
சுமந்திரர் கைகேயியின்மனத்தைத் திருப்ப முயலுதல்.

அதன்பிறகு, சுமந்திரர், தமது தலையை யாட்டிக் கொண்டும், அடிக்கடி பெருமூச்சுவிட்டும், தமது ஒரு கையை மற்றொரு கையாற் பிசைந்தும், தமது பற்களைக் கடகடவென்று கடித்தும், கண்கள் சிவந்து உருவம் மாறியும் நிற்கும்படி மிகக் கொடிய சந்தாபத்தை யடைந்து, தசரதருடைய கருத்தைக் கண்டு, கைகேயியினுடைய மனத்தை நடுங்கச்செய்கிறவர் போலவும், கூரிய சொல்லம்புகளாலும் வாக்கியங்களாகிற இணையற்ற வஜ்ராயுதங்களாலும் கைகேயியின் மருமங்களை விளங்கச்செய்கிறவர் போலவும் பின்வருமாறு பேச ஆரம்பித்தார்:—"இப்பூதலத்துக்கு ரக்ஷகரா யிருந்துகொண்டு இதனுள் அடங்கியிருக்கும் அசையும்பொருள் அசையாப்பொருள் எல்லாவற்றையும் பாதுகாக்கின்ற உமதுகணவராகிய தசரதமன்னரைக் கைவிட்ட இத்தொழிலினும், உம்மால் செய்யக்கூடிய கெட்ட காரியம் ஒன்றுமில்லை. நான், உம்மை 'கணவரைக் கொல்பவள்' என்றும், 'குலத்தையே வேரோடு அழியச்செய்பவள்' என்றும் எண்ணுகிறேன்; ஏனெனில், இந்திரபகவானைப்போல வெல்ல முடியாமலும், மலைபோல் அசைக்கக் கூடாமலும், சமுத்திரம்போற் கலக்க வொண்ணாமலுமிருக்கும் தசரதமகாராஜரையும் உமது தொழில்களால் தபிக்கும்படி செய்தீரன்றோ! வரத்தைக் கொடுப்பவராயும், எல்லோர்க்குந் தலைவராயும், உமக்குக் கணவராயுமிருக்குந் தசரதமகாராஜரை அவமதிக்கவேண்டாம். ஒரு பெண்பிள்ளைக்குக் கோடிகுமாரர்களைப் பெறுவதைக் காட்டிலும், தனதுகணவன்இஷ்டப்படி நடப்பதே சிறந்தது.

சுமந்திரருடைய நிந்தை.

இராஜகுமாரர்கள் பிராயத்தின் முறைப்படி பட்டத்துக்கு வருவதை, இக்ஷ்வாகுவம்சத்திற் பிறந்த தசரதர் இருக்கும்பொழுதே நீர் மாற்ற விரும்புகின்றீர்! உமது குமாரரான பரதர் அரசராகட்டும்; இப்பூமியை ஆளட்டும்; நாங்கள் இராமர் எங்குப் போகிறாரோ, அங்குப் போகிறோம். உமது இராச்சியத்தில் ஒரு அந்தணனும் வசித்தல் தக்கதன்று; ஏனெனில், நீர் இவ்வளவு வரம்பிகந்த தொழிலைச் செய்ய விரும்புகின்றீரன்றோ! நீர் இவ்வாறான காரியத்தைச் செய்துகொண்டிருக்கும்போது இருநிலம் பிளக்கவில்லையென்பதை ஆச்சரியத்துடன் பார்க்கிறேன். வசிஷ்டர் முதலிய பிரமரிஷிகளாற் சொல்லப்படுவனவும் கொடியனவும் பயங்கரமாகத் தோன்றுவனவுமான நிந்தைமொழிகள், 'இராமரைக் காட்டுக்கு ஓட்டவேணும்' என்று பிடிவாதங்கொண்ட உம்மை ஏன் இம்சிக்கவில்லை? மாமரத்தைக் கோடரியால் வெட்டி, அது இருந்த இடத்தில் வேம்பைப் பாத்திகட்டல் முதலியவற்றால் உபசரித்துப் பாலூற்றி வளர்த்தாலும் அது தித்திக்குமோ? உமது தாயின் தன்மை எப்படியோ, அப்படித்தான் உமது தன்மையும். "வேம்பிலிருந்து தேன்பெருகாது" என்று பழமொழியும் இருக்கின்றதன்றோ! உமது தாயாருடைய கெட்டகுணத்தைப் பற்றி நாங்கள் நன்றாக விசாரித்து அறிந்திருக்கிறோம். ஒரு கந்தருவன் உமது தந்தைக்கு ஒரு வரங் கொடுத்திருந்தான். அதன்மகிமையால் அவர் எல்லாப்பிராணிகளின்பேச்சையும் அறிந்துகொள்ளுந் திறமையை யடைந்திருந்தார்; அதனால், விலங்குகளின்பேச்சும் அவருக்கு நன்றாகத் தெரியும்; அதனால் மிக்க காந்திமானான அவர், இரவில் தமது படுக்கையிற் படுத்திருந்தபொழுது ஜிரும்பமென்னும் எறும்பின் ஒலியால், அதன் பொருளை யறிந்து மிகச் சிரித்தார். அதைக் கண்டு உமது தாயார், கோபமடைந்து, மரணத்தை யடைய விருப்பங்கொண்டவராய்,

"அரசரே, நீங்கள் என்ன காரணத்துக்காகச் சிரித்தீர்கள்? அதைச் சொல்லுங்கள்" என்றார். அதற்கு அரசர், "தேவி, அதை நான் வெளியிட்டால் உடனே மாண்டுவிடுவேன்; சந்தேக மில்லை" என்றார். உமது தாயாரோ, தமது கணவரைப் பார்த்து, "எனக்கு இதன் காரணத்தைச் சொல்லவேண்டும்; தாங்கள் இருந்தாலுஞ் சரி; மாண்டாலுஞ் சரி; என்னை அவமதியாததை யான் அறிந்துகொள்வேன்" என்றார். அவள் இப்படிச் சொன்ன தன்மேல் உம்முடைய பிதாவும், தமக்கு வரமளித்த பெரியவரிடத்தில், நடந்ததை உண்மையாகச் சொன்னார். அந்தச் சாதுவானவர், அதைக்கேட்டு, அரசரைப் பார்த்து, "வேந்தே, நீங்கள் இதை வெளியிடவேண்டாம். அவள் மாண்டாலுஞ் சரி; உங்களை விட்டாலுஞ் சரி" என்றார். அரசர், கலக்கமற்றமனத்தையுடைய அவரது சொல்லைக் கேட்டு, உமது தாயைத் தள்ளிவிட்டுக் குபேரன் போலச் சௌக்கியமாக வாழ்ந்துவந்தார். தாய்போலக் கெட்ட வழியில் நடக்கும் நீரும், பாவத்துக்குத் துணிந்து, அரசரை மோசம்பண்ணி, அவரைக் கெட்டவழிக்கு உள்ளாக்கி விட்டீர். 'தகப்பனைப்போற் பிள்ளையும், தாயைப்போற் பெண்ணும் பிறக்கின்றார்கள்' என்ற லோகவசனம் வெகு சத்தியம். வீணைக் கெட்டுப்போகவேண்டாம்; அரசர் சொன்ன மொழியை நிறைவேற்ற உறுதிகொள்ளும்; அரசருடைய கருத்துக்கு இசைந்து நடவும்; இங்குள்ள சனங்களுக்கு இப்பொழுது தஞ்சமாக இரும்; உம்முடைய கெட்ட நடக்கையால், இந்திரனையொத்த உலகவேந்தாகிய உம்முடையகணவரைக் கெட்டவழியில் நடக்க ஏவ வேண்டாம். தேவி, வெகு தருமிஷ்டராயும் செந்தாமரைக் கண்ணராயும் ஸ்ரீமானுயு மிருக்குந் தசரதர், உமக்குக் கொடுத்த வரத்தைப் பொய்யாகச் செய்யமாட்டார். மூத்தகுமாரரும், கொடையாளியும், நல்லொழுக்கத்தை விடாதவரும், தமது தருமத்தைப் போற்றுபவரும்,

எல்லாரையும் பாதுகாப்பவரும், பலசாலியுமான இராமருக்குப் பட்டாபிஷேகம் நடக்கட்டும். இராமர் தமது தந்தையான தசரதமன்னவரை விட்டுக் காட்டுக்குச் சென்றுவிட்டால், உமக்கு இவ்வுலகத்தில் பெரிய அபவாதம் வந்துவிடுமே! ஆகையால், இராமர் இந்த இராச்சியத்தில் அரசு புரியட்டும்; நீர் சந்தோஷமாக இரும். உம்முடைய இப்பட்டணத்தில் இராமரைவிட்டுஇருப்பவன் ஒருவனுமில்லை. இராமர் சிங்காசனத்தில் வீற்றிருக்க; பிறகு தசரதர், தம் கையில் விற்பிடித்துக் குலமுறையாக வந்த ஒழுக்கத்தை யெண்ணி, வானபிரஸ்தராகக் காட்டுக்குச் செல்வார்'' என இவ்வண்ணமாகச் சுமந்திரர், தசரதருடைய முன்னிலையில் அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு பலவாறு நல்வார்த்தையாலும் நிந்தைமொழியாலும் கைகேயியின்மனத்தைத் திருப்ப முயன்றார். அப்பொழுது அவளோ ஒன்றுக்கும் அசையவேயில்லை; வருத்தப்படவு மில்லை; அவள்முகம் கொஞ்சமேனும் தனதுநிறம் மாறுதலடையவில்லை.

முப்பத்தாறுஞ் சருக்கம்:
சித்தார்த்தர் கைகேயியை நிந்தித்தல்.

அதன்பிறகு, தாம் கொடுத்த வரத்தின்விஷயமாகச் செய்த பிரதிஜ்ஞையால் பீடிக்கப்பட்ட இக்ஷ்வாகுவம்சத்து மன்னவர், பெருமூச்சுஎறிந்துகொண்டு, சுமந்திரரைப் பார்த்துப்பின்வருமாறு அடிக்கடிசொல்லலானார்:—"சூதரத்நமே, இராமனைப் பின்தொடர்ந்து செல்லச் சதுரங்கங்களால் நிறைந்துள்ள சைனியங்களைச் சீக்கிரங் கட்டளையிடும். வேசியைகளும், பேசவல்லவர்களும், மிகப்பணக்காரர்களான வியாபாரிகளும், தமது தொழில்களைச் செய்துகொண்டு எனதுபுதல்வன்சேனை

தசரதர் கட்டளை.

யைக் கூடாரத்தில் விளங்கச்செய்யட்டும். இராமனை யடுத்திருக்கிறவர்களுக்கும் இராமனால் கொண்டாடப் படும் பராக்கிரமமுள்ளவர்களுக்கும் வேண்டுமளவு பொருள்கொடுத்து, அவர்களையுஞ் சேனையுடன் இருக்கச் செய்யும். முக்கியமான சகலவித ஆயுதங்கள், நகரத்தார்கள், வண்டிகள், காட்டை நன்றாகஅறிந்த வேடர்கள் ஆகிய எல்லாரும், இராமனைத் தொடர்ந்து செல்லட்டும். இப்படியிருந்தால் இராமன், மிருகங்களையும் யானைகளையும் கொன்றும், காட்டுத்தேனைக் குடித்தும், அநேக நதிகளைத் தரிசித்தும், நாட்டைப்பற்றி நினையாமற் சுகமாக இருப்பான். நமது தானியக்களஞ்சியமும் தனசாலையும் மநுஷ்யசஞ்சாரமற்ற காட்டுக்குச் செல்லும் இராமனுடன் போகட்டும். இராமன் புண்ணியக்ஷேத்திரங்களில் யாகம் பண்ணியும், விதிப்பிரகாரம் தக்ஷிணைகளைப் பிராமணர்களுக்குக் கொடுத்தும், அநேக ரிஷிகளைச் சந்தித்தும் காட்டிற் சுகமாக வசிப்பான். மகாபாகுவான பரதன், சுகமாக அயோத்தியில் ஆளப்போகின்றான்; ஸ்ரீமானான இராமன், எல்லா மனோரதங்களையும் அடையுமாறு காட்டிற்குச் செல்லட்டும்'' என்று இப்படித் தசரதர் சொல்லவே, கைகேயிக்குப் பயம் வந்துவிட்டது. அதனால் கைகேயி, தனது முகம் குன்றி, குரல் மாறி, உள்ளம் நடுங்கி, அரசரைப்பார்த்துத் துக்கத்துடன், "சாதுவே, மனிதரற்றதும், வேண்டிய சகலபோகங்களும் நீங்கியதும், பார்க்கவழங்காத ஸாரமற்ற மதுவைப் போன்றதுமான இராச்சியத்தைப் பரதன் அடையவேமாட்டான்'' என்றாள்.

அரசர்கட்டளையைக் கைகேயி மறுத்தல்.

இவ்வண்ணம் கைகேயி வெட்கத்தைவிட்டு வெகு கடினமாகப் பேசக் கேட்டுத் தசரதர், அவளை நோக்கி, "அநியாயகாரி, உனக்கு 'வரத்தைக் கொடுத்தமை' என்ற சுமையைச் சுமந்துகொண்டிருக்கும் என்னை ஏன் வருத்துகிறாய்? நீ, முதலில் வரங்கேட்கும்போது, 'ஒருவரும்

இராமனுடன் போகக்கூடாது' என்றுகேட்டுக்கொள்ளவில்லையே!'' என்றார். கோபத்துடன் கூடின அச்சொல்லைக் கேட்டுக் கைகேயி, அரசரிலும் இருமடங்கு கோபங்கொண்டவளாய், அவரைப்பார்த்து, "இதே தங்கள்வம்சத்தில் சகரர், தமது மூத்தகுமாரனான அஸமஞ்சனை ஓட்டிவிட்டார். அவ்விதமாக இராமனையும் ஓட்டிவிடுங்கள்'' என்றாள். இப்படி இவள் சொன்னவுடன், அரசர், "சீச்சீ'' என்ற ஒருசொல்லையே சொன்னார். அங்கிருந்த எல்லாரும் வெட்கப்பட்டார்கள். கைகேயியோ அதனை அறியவில்லை.

அச்சபையில், முதிர்ந்தவரும் பிரதானியும் அரசரால் நன்கு மதிக்கப்பட்டவரும் வெகு பரிசுத்தருமான சித்தார்த்தரென்பவர், கைகேயியைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்:—"கெட்ட புத்தியையுடைய அஸமஞ்சன், வழியில் விளையாடுகிற குழந்தைகளை யெடுத்துச் சரயூ ஜலத்திற் போட்டு, அவைகள் தத்தளிப்பதைக் கண்டு சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தான். அவன் அப்படிச் செய்யக் கண்டு நகரத்தவரெல்லாரும் கோபங்கொண்டவர்களாய் அரசரிடஞ் சென்று, "இராச்சியத்தின் நன்மையை வளர்ப்பவரே, தாங்கள் அஸமஞ்சனையாவது வைத்துக்கொள்ளுங்கள்; அல்லது எங்களித்தனைபேரையுமாவது வைத்துக்கொள்ளுங்கள்'' என்றார்கள். அவர்கள் அப்படிச்சொல்லவே, அரசர், அவர்களை நோக்கி, "அவனால் என்னபயம் உங்களுக்கு விளைகின்றது?'' என, அதற்கு ஜனங்கள், "அஸமஞ்சன், விளையாடும் எங்கள்குழந்தைகளைக் கலங்கினபுத்தியையுடையவனாய் மூர்க்கத்தன்மையோடு சரயூநதியிற்போட்டு, மிகவும் மகிழ்ச்சி யடைகிறான்'' என்றார்கள். ஜனங்கள் இவ்வாறு சொல்லக் கேட்டு, சகரர், அவர்களுக்கு நன்மைசெய்யக்கருதி, தமதுஅயோக்கியனான குமாரனை நீக்கிவிட்டார். சீக்கிரமாக ஒருவண்டி கொண்டுவரச்சொல்லி அதில், தமது

சித்தார்த்தர் நிந்தை.

மகனையும் அவன்மனைவியையும் வேண்டிய சாமக்கிரிக ளோடு இருக்கவைத்து, 'இவன் உயிருடனிருக்கிறவரை யில் நாட்டுக்குத் திரும்பிவரக் கூடாதவாறு செய்ய வேண்டும்' என்று தம்மைச்சேர்ந்தவர்களுக்குக் கட்டளை யிட்டார். அவ்விதமான பாவத்தொழிலைச் செய்த அஸ மஞ்சன், களைவெட்டையும் கூடையையும் எடுத்துக்கொண் டு, மலைக்காடுகளிற் சென்று, எல்லாத் திக்குக்களையும் தோண்டித்தின்று பிழைத்தான். வெகு தருமிஷ்டரான சகரமன்னர், அவ்வண்ணம் அவன் இருக்கவே அம்மகனைக் காட்டுக்கு அனுப்பினர். காட்டுக்குப்போம்படி இராமர் என்ன பாபம் பண்ணியிருக்கிறார்? அவரிடம் ஒருவித துர்க்குணமும் இருக்கிறதாக நாம் பார்க்கவில்லை. ஏதா வது இருப்பதாகத் தோன்றினல், அது, சந்திரனுக்குக் களங்கம்போல் இராமருக்கு அழகையே விளைக்கும். நீர், அவரிடத்துப் பெருங்குற்றத்தை யறிந்திருந்தால் அதை வெளியிடும்; அதனல், இராமரைக்காட்டுக்கு அனுப்பின லாவது சரியாக விருக்கும். நன்னெறியிலிருக்கும் உத்தம ரை அநியாயமாகக் கெடுத்தால், கேடுசெய்கிறவன் இந்திர பதவியி லிருந்தாலும் அவனை அந்தஅநியாயம் கெடுத்து விடுமே! ஆகையால், உமக்கு இராமர்விஷயமாக இந்தக் கொடியகருத்துவேண்டாம். உலகம் உம்மேல் ஒருவித அபவாதமுஞ் சொல்லாம லிருக்கவேண்டும்" என்றார்.

இவ்வாறு சித்தார்த்தர் சொல்லக் கேட்டுத் தசரதர், சோகத்தால் மிகப் பரிதபித்துக் கைகேயியைப்பார்த்து, "பாவத்தின் வடிவமே, உனக்குச் சித்தார்த்தர் சொன் னது சம்மதமாக வில்லையே! நீ, உனக்கும், எனக்கும் நன்மையானதை யறியவில்லை யே! இழிவான முறைமையைக் கைப் பற்றி நீ செய்வது நற்றொழிலன்று; நான், எனது இராச் சியம் சுகம் பொருள் என்ற எல்லாவற்றையும் விட்டு, இராமனுடன் புறப்பட்டுப் போய்விடுகிறேன். நீ, பரத

தசரதரின் வெறுப்புச் சொல்.

னுடன் இராச்சியத்தை விருப்பத்தின்படி இங்குச் சுகமாக வெகுகாலம் ஆண்டு வாழ்வாய்" என்று வெகு மெதுவான குரலாற் கூறினர்.

முப்பத்தேழாஞ் சருக்கம் :
இராமர்முதலியோர் மரவுரி தரித்தல்.

இராமர், இவ்விதமாகச் சித்தார்த்தரும் தமதுதந்தையும் சொன்னவற்றைக் கேட்டுத் தாம் மிக்கவணக்கமுள்ளவராகையால் வெகு மரியாதையாகப் பின்வருமாறு சொல்லலுற்ருர் :— "அரசரே, எல்லாவகைச் சுகங்களையும் விட்டுக் காட்டில் வனசரர்களோடு வசிப்பவனும் பற்றற்றவனுமான எனக்குப் பரிவாரங்களினுல் என்னபயன்? உத்தமரான அரசரே, சிலாக்கியமான யானையைக் கொடுத்துவிட்டு, யானைக் கழுத்திடுகயிற்றை விரும்பிவைத்திருப்பின், அதனுல் அவனுக்குத் தினையளவு பிரயோஜனமேனும் உண்டோ? அதுபோல, எனக்குப் பரிவாரங்களால் பயனில்லையன்ருே! நான், செய்யவேண்டிய காரியங்களெல்லாவற்றையும் அறிவேன். வேலைக்காரர்கள், பதினன்குவருஷகாலம் காட்டில் வசிக்கப்போகிற எனக்கு மரவுரிகளையும் மண்வெட்டியையும் கூடையும் கொண்டுவரப் போகட்டும்" என்ருர்.

இராமரின் நியாயம்.

இதைக்கேட்ட கைகேயி, வெட்கமேயில்லாமல் தானுகவே மரவுரியை அச்சனக்கூட்டத்தின் நடுவில் எடுத்துவந்து, இராமர்கையிற் கொடுத்து, "உடுத்துக்கொள்" என்ருள்.

புருஷசிங்கமான அந்த இராமர், கைகேயியினிடத்தினின்று இரண்டு மரவுரிகளைச் சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டு, தமதுமெல்லிய பட்டாடையைக் களைந்து, தவசிகளுக்குஉரிய அந்தஆடைகளைத் தரித்தார். லக்ஷ்மணரும், தகப்பனர் முன்னிலையிலேயே தமது விலையுயர்ந்த வஸ்திரங்களைக் களைந்து, தவ

மரவுரி யுடுத்தல்.

சிகளின்உடையை உடுத்துக்கொண்டார். மெல்லிய பட்டாடைகளை யுடுப்பவளான சீதை, தனக்கென்று கைகேயி கொண்டுவந்த மரவுரியைப் பார்த்தவுடன், வலையைக்கண்ட பெண்மான்போல் நடுங்கி, கைகேயியினிடத்திலிருந்து வெட்கப்பட்டவள்போல், தனக்காகக் கொண்டுவந்த தருப்பைமரவுரிகளை வாங்கிக்கொண்டாள். பதிவிரதாதருமத்தை யறிந்து அதனை அவ்வாறே அநுஷ்டித்துக் காண்பிப்பவளாயிருக்கும் உத்தமியாகிய அச்சீதை,கந்தருவராஜன் போலவிருக்குங் கணவரைநோக்கி, உடையை யுடுக்க அறியாதவளாய்க் கண்களில் நீர்ததும்ப, "எவ்வாறு தவசிகள் மரவுரியை உடுத்துக்கொள்ளுகிறார்கள் ?" என்று சொல்லி மனங்கலங்கினவளாய் அடிக்கடி மூர்ச்சித்தாள்; ஒரு மரவுரியைத் தனதுகழுத்தில் தரித்துக்கொண்டு, மற்றொரு மரவுரியைத் தனதுகைகளாலெடுத்து, கட்டிக்கொள்ளும் வகை தெரியாமல் நாணத்தை யடைந்து நின்றாள்; தருமநெறியிற் பிறழாது நடப்பவரிற் சிறந்தவரான இராமர், விரைந்து வந்து, சீதையின் பட்டுப்புடைவைமேல் தாமே மரவுரியைக் கட்டினார். இவ்வாறு இராமர் செய்ததைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களான அந்தப்புரத்தில்வசிக்கும் பெண்களெல்லாரும், தம்தம் கண்களிலிருந்து நீரைச் சொரிந்தார்கள். அன்றியும், அவர்கள், காந்தியால் விளங்கிக்கொண்டிருக்கும் இராமரைப்பார்த்து, "குழந்தாய், நன்மனத்தை யுடைய சீதையைக் காட்டுக்கு அழைத்துக் கொண்டுபோக வேண்டும்" என்று தகப்பனரால் கட்டளை கொடுக்கப்படவில்லையே; நீ தந்தைசொல்லைக் காப்பாற்றுவதற்காக மனிதசஞ்சாரமற்ற காட்டுக்குப் போய்த் திரும்பிவரும்வரையிலும், நாங்கள், இவள்முகத்தைப் பார்த்துப் பயன்பெறுகின்றோம். லக்ஷ்மணன் துணையாய் வர நீ காட்டுக்குப் போ. மிருதுத்தன்மையையுடைய இவள், தபஸ்விநியைப்போலக் காட்டில் வசிக்கத் தக்கவளல்லள்.

அந்தபுரத்துமாதர்கள்சீதையைக் காட்டுக்கு அழைத்துப்போகவேண்டாமென்றல்.

எங்கள்வேண்டுகோளின்படி நட; அழகிய சீதை, இவ்விடத்திலேயே யிருக்கட்டும். நீ என்றுந் தருமசிந்தையுள்ளவன்; ஆகையால், நீ காட்டிற்குப் போவதை நிறுத்திவிட விரும்பமாட்டாய்'' என்றார்கள். இப்படிப்பட்டவார்த்தைகளைக் கேட்டும், இராமர், தம்மைப்போன்ற சீலமும் பருவமும் ஒழுக்கமுமுள்ள சீதையினுடைய வேண்டுகோளால் மரவுரியைக் கட்டவேகட்டினார்.

வசிஷ்டர் கைகேயியைப்பார்த்துச் சீதைகாட்டிற்குப் போகவேண்டாமென்றுமறுத்தல்.

சீதை இவ்வாறு மரவுரி யுடுத்துக்கொண்டவளவில், அதைக்கண்டு, அரசருக்குக் குருவாகிய வசிஷ்டர், கைகேயியைப் பார்த்து, ''மரியாதை யற்ற மடந்தையே, கெட்ட புத்தி யுடையாய், குலத்தைக் கெடுக்கவந்தவளே, கைகேயி, நீ, அரசரை மோசம்பண்ணியும் மரியாதையைக் கடந்தே செல்லுகின்றாய். நன்னடக்கையற்றவளே, சீதை காட்டுக்குப் போகவேண்டியதில்லை. அவள், இராமர் இருக்கவேண்டிய சிங்காசனத்தில் இருக்கப்போகின்றாள். இல்லறவொழுக்கத்தினர்க்கு மனைவி ஆத்மா வன்றோ! ஆத்மா வென்ற காரணத்தால், இச்சீதை, இராமருடைய பூமியைக் காப்பாள். சீதை இராமருடன் காட்டுக்குச் சென்றுவிட்டால், நாங்களும் அவரைப் பின்தொடர்ந்து சென்றுவிடுவோம்; இந்நகரம்முழுவதும் காட்டுக்குப் போய்விடும்; இராச்சியமுனையில் நின்று காக்கும் தண்டநாயகர்களும், ஸ்தாவரஜங்கமரூபமான பொருள்களுடன், மனைவியுடன் வசிக்கும் இராமரை நாடிச் செல்வார்கள்; சத்துருக்கனரும் பரதரும், மரவுரி தரித்துக் காட்டுக்குச் சென்று, தமையனான இராமருடன் வசிக்கப்போகிறார்கள். மக்கட்குத் தீமையையே புரியுங் கெட்ட வொழுக்கமுள்ள நீ, ஜனங்களெல்லாரும் நீங்க மரம்மாத்திரம் மிகுந்திருக்குஞ் சூனியமான இந்தப் பூமியை ஒருத்தியாய் அரசாள்வாய். எவ்விடத்தில் இராமர் அரசாளவில்லையோ, அவ்விடம் நாடாக

மாட்டாது. எந்தக் காட்டில் இராமர் இருக்கிறாரோ, அக் காடுதான் நாடு. பரதர், தமது தந்தை மனமொத்துக் கொடுக்காத பூமியை ஆள்வதற்கும் உரியவரல்லர்; அவர், அரசருக்குப் பிறந்தவரானால், உன்னிடத்தில் புத்திரர்போல் வசிக்கவும் உரியவரல்லர். குலாசாரத்தை யறிந்தவரான பரதர், நீ இப்பூதலத்தைவிட்டு ஆகாசத்தை யடையக் கிளம்பினாலும், வேறுவிதமாகச் செய்யவேமாட்டார். ஆகையால், புத்ரவாத்ஸல்யமுள்ள நீ, கொடிய தீங்கை அப்பரதருக்குப் பண்ணிவைத்தாய்; இராமரிடத்தில் விசுவாசமில்லாதவராக ஒருவரும் இவ்வுலகத்திலே யில்லை. காட்டுக்குப் போகும் இராமருடன், பசுக்கள், துஷ்டப்பிராணிகள், மிருகங்கள், பட்சிகள் எல்லாம் தொடர்ந்து செல்வதை இன்றைத்தினமே பார்க்கப்போகிறாய்; மரங்களும் இராமரிடத்தில் அன்புவைத்திருப்பதைப் பார்க்கப் போகின்றாய். தேவி, நீ, சீதை கட்டிக்கொண்டிருக்கும் மரவுரியை அவிழ்த்து, மருமகளான அவளுக்கு நல்ல ஆபரணங்களைக் கொடு. மரவுரி, இவளுக்குத் தகுந்த ஆடையன்று" என்று சீதையுடுக்கும் அத்துகிலைத் தடுத்துச் சொன்னார். அவர், மீட்டும் அவளைப் பார்த்து, "கைகேயி, நீ கேட்டுக்கொண்டது இராமர் வனவாசம் பண்ணவேண்டுமென்றன்றோ! எப்போதும் அலங்கரித்துக் கொள்ளத் தக்க சீதை, சிங்காரித்துக்கொண்டு இராமருடன் வனத்தில் வசிக்கட்டும். இராஜகுமாரியான இவள், அழகான வாகனங்களையும் பரிசாரகர்களையும் அழைத்துக்கொண்டு, விவிதவஸ்திரங்களோடும் வேண்டிய சாமக்கிரிகளோடும் காட்டுக்குப் போகட்டும். நீ வரங்கேட்கும்பொழுது சீதைக்கு ஒன்றுங் கூடாதென்னு மிதைக் கேட்கவில்லையே" என்றார்.

நிகரற்ற மேன்மையை யுடைய அரசரதுகுலகுருவாகிய வசிஷ்டர் இவ்வாறு சொல்லியும், இஷ்டரான தமது

கணவர்போல் நடக்க விரும்பிய சீதை, மரவுரியை யுடுக்கும் எண்ணத்தை மாற்றவில்லை.

முப்பத்தெட்டாஞ் சருக்கம்:
தசரதர் கைகேயியை நிந்தித்தல்.

ஜனங்களெல்லாரும், சீதை தனது கணவரிருக்கும் பொழுதே கணவனில்லாதபெண்ணைப்போல் மரவுரியைக் கட்டிக்கொண்டு நின்றதைப் பார்த்து, "தசரதரே, சீச்சீ என்ன காரியம் பண்ணினீர்?" என்று சொல்ல, அதனால் அவ்விடத்து உண்டான பெருஞ் சத்தத்தால், தசரதர், வெகுதுக்கமடைந்து, தம்முடைய பிராணன் தருமம் கீர்த்தி இவைகளின்மேலிருந்த ஆதரத்தை யொழித்தார். இக்ஷ்வாகு குலக்கொழுந்தாகிய அவ்வரசர், பெருமூச்சு எறிந்து, தமது பார்யையாகிய கைகேயியை நோக்கி, "கைகேயி, சீதை தருப்பைமரவுரியை யுடுத்துக்கொண்டு செல்லத்தக்கவ ளல்லள். சுகுமாரியாயும், இளம்பருவ முடையவளாயும், எப்பொழுதுஞ் சுகத்திலேயே யிருப்பவளாயுமிருக்கும் இவள், காட்டில் வசிக்க வுரியவளல்லளென்று எனது குருவான வசிஷ்டர் உண்மையாகச் சொல்லுகிறார். பதிவிரதாதருமத்திற்கு உரிய தவத்தை மேற்கொண்டவளும் அரசசிங்கத்தின்கன்னிகையுமான இவள், யாருக்கு என்ன அபகாரம் பண்ணியிருக்கிறாள்? இவள், மரவுரியை யுடுத்து, அறிவிழந்து, தபஸ்விநியைப்போல் ஜனங்களின் நடுவிலிருக்கின்றாளே! ஜானகியானவள், மரவுரியைக் களையட்டும். இதைப்பற்றி நான் முன்பு வரங்கொடுக்கவில்லையே. இவள், எல்லாவித அலங்காரங்களாலும் நிறைந்தவளாய்ச் சிறந்த எல்லாவஸ்துக்களோடும் காட்டுக்குச் சுகமாகப் போகட்டும். பிழைக்கும் வகையறியாத நான், மிகக்

மன்னவர் கைகேயியைத் தூற்றுதல்.

கொடிய பிரதிஜ்ஞையைச் சபதத்தோடு செய்துவிட்டேன்! நீயோ அப்பிரதிஜ்ஞையை மூர்க்கத்தனத்தால் இவ்வாறு நிச்சயித்தாய். நான் செய்த இந்தப் பிரதிஜ்ஞை, மூங்கிலை அதன் பூப்போல என்னை எரித்துவிடும். பாபத்தொழிலுடையவளே, உனக்கு இராமன் சிறிது அபகாரஞ் செய்திருக்கட்டும்; தாழ்ந்தவளே, சீதை என்ன அபகாரஞ் செய்தாள்? பெண்மான்போன்றவளும், மலர்ந்த கண்களை யுடையவளும், மிருதுத் தன்மையைப் பூண்டவளும், பதிவிரதாதருமத்தை மேற்கொண்டவளுமான சீதை, இங்கு உனக்கு என்ன அபராதம் பண்ணுகிறாள்? பாவி, நீ இராமனைக் காட்டுக்கு அனுப்புவதே உலகமுள்ளளவளவும் நரகில் வாழ்வதற்குப் போதுமே; சொல்லுதற்கரிய துயரத்தைக் கொடுக்கும் பாதகத்தொழிலை மேன்மேலும் ஏன் புரிகின்றாய்? பட்டாபிஷேகத்தின்பொருட்டு இங்குவந்த இராமனைக் காட்டுக்கு ஓட்ட வரத்தைக் கேட்டாய்; அவ்வரத்தை நானும் கொடுத்தேன். அப்பிரதிஜ்ஞையையுங் கடந்து ஏன் நரகத்தையடைய விரும்புகின்றாய்? சீதையையும் மரவுரியைத் தரித்தவளா யிருக்கப் பார்க்க விரும்புகின்றாயே!" என்று இவ்விதமாகப் பலவாறு பரிதபித்துக்கொண்டு, துக்கத்தின் கரையைச் சிறிதேனுங் காணுமற் பீடிக்கப்பட்டவராய், புத்திரசோகத்தில் மூழ்கிப் பூமியில் விழுந்தார்.

இராமர், இவ்விதஞ்சொல்லித் தலைவணக்கிக்கொண்டிருக்கும் தமது தந்தையைப்பார்த்து, காட்டுக்குப்போகச் சித்தராய்ப் பின்வருமாறு சொல்லலுற்றார்:—"தருமத்தில் தவறாது நடப்பவரே, எனது தாயான கௌசல்யை, வெகுகீர்த்தி பெற்றவர்; முதுமைப்பருவ மடைந்தவர்; நன்னடக்கையுள்ள உத்தமி; தங்களை யொருபோதும் பழிக்கின்றவரல்லர்; வரத்தை யளிப்பவரே, என்னை விட்டுப்பிரிந்து என்று மறியாத வெகு துயரத்தை யடைந்து பரிதபிக்கும்

இராமருடைய வேண்டுகோள்.

அவரை, புத்திரசோகத்தை யடையாதவண்ணம் முன்னினும் மிகுதியாகச் சம்மானிக்கவேண்டும். அவர், என்னைப் பற்றியெண்ணிக் கவலை யுற்றாலும், தங்களது சம்மானத்தாற் பிழைத்திருப்பர். இந்திரபகவானை யொத்தவரே, நான் காட்டிலிருக்கும்பொழுது, என்வரவையே எதிர் பார்த்து விரும்பியிருக்கும் எனது தாய், சோகத்தால் வாடித் தன்னுயிரைவிட்டு யமலோகஞ் சேராதவண்ணம், அவரைத் தாங்கள் வெகுஅன்புடன் ஆதரிக்கவேண்டும்" என்று வேண்டினர்.

முப்பத்தொன்பதாஞ் சருக்கம்:
இராமரும் சீதாதேவியும் கௌசலை முதலியவர்களிடத்து விடைகேட்டல்.

தசரதர், இராமர் சொன்ன சொற்களைக் கேட்டு, தவ வேஷம்பூண்ட அவரைப் பார்த்து, தமது மனைவிமார்களோடு மோகமடைந்தார். அரசருடையமனத்தில் சோகம் பொங்கிக்கொண்டிருந்தபடியால், அவரால் இராகவரைப் பார்க்க முடியவில்லை. அவருடைய மனங் கலங்கியிருந்தபடியால், அவர் பார்த்துப் பதில்சொல்லவு மில்லை. மகாபாகுவான தசரதர், சிறிதுநேரஞ் சோகத்தால் மயக்கமடைந்து இராமரைக் குறித்தே சிந்தித்தவராய்ப் புலம்பலானர். "நான் முன் ஜன்மத்தில் அநேக பசுக்களைக் கன்றுகளினின்று பிரித்திருப்பேன்; அல்லது, அநேக பிராணிகளை இம்சித்திருப்பேன்; அதனால்தான் இப்பொழுது நான் இவ்விதமான அவஸ்தைக்கு உள்ளானேன். காலம் வந்தாலொழியத் தேகத்தைவிட்டுப் பிராணன் போகமாட்டாதென்பது நிச்சயம்; ஏனெனில், கைகேயியால் இவ்வளவு வேதனையை

தசரதர் புலம்பல்.

யநுபவிக்கும் எனக்கு மரணம் வரவில்லையன்றோ! நான், என்மகன் மெல்லிய ஆடைகளைத் துறந்து அக்கினிபோல் ஜ்வலித்துக்கொண்டு முனிவரின் துகிலை யுடுத்து என் முன் நிற்கப் பார்க்கிறேனே! கொடுங்குணத்தை மேற்கொண்டு தன் காரியத்திற்காக இவ்வாறு முயல்கிற இக்கைகேயி யொருத்தியினிமித்தம் இத்தனைஜனம் தவிக்கும்படி யாயிற்றே!'' என்று இவ்வாறு சொல்லி, நீரால் மறைந்த கண்களை யுடையவராய், "இராம'' என்று ஒருதரங் கூவி, அதன் பிறகு, வாய்திறக்கத் திறனற்றவரானார். தசரதர், ஒரு முகூர்த்தகாலம் அறிவற்றிருந்து, பின்பு மூர்ச்சை தெளிந்து, நீர்நிறைந்த கண்களை யுடையவராய், சுமந்திரரைநோக்கி, "சிறந்த குதிரைகள் பூட்டியதும் அரசர்களுக்கு உரியதுமான இரதத்தைப் பூட்டிக்கொண்டு வாரும். மகாபாக்கியவானான இராமனை, நாட்டை விட்டுக் காட்டிற் கொண்டுபோய் விடும். அடக்க முடையவனும் வீரனுமான இராமன் மாதாபிதாக்களால் கானகத்திற்கு ஓட்டப்படுவதால், குணத்தையுடையவரது பண்பின் பயன் விபரீதமாக விளைகின்றதென்று நான் எண்ணுகிறேன்'' என்றார்.

சுமந்திரர், அரசர் கட்டளையைப் பெற்று, விரைவாகத்தேரில் குதிரைகள் பூட்டி, அதை நன்றாக அலங்கரித்துக் கொண்டுவந்தார். அவர், அரசகுமாரரான இராமரிடம் வந்து அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு தேர் சித்தமாக இருப்பதைத் தெரிவித்தார். உடனே அரசர், காலம் இடம் இவைகளை நன்றாக அறிந்தும் பொருளிருப்பைத் தெரிந்தும் எப்பொழுதும் பரிசுத்தனாயும் விளங்கும் தமது தனசாலைத் தலைவனை விரைவாகக் கூப்பிட்டு, அவனை நோக்கி, "சீதைக்குப் பதினான்குவருஷத்திற்கு வேண்டுவனவாகிய விலையுயர்ந்த ஆடையாபரணங்களைச் சடிதியிற் கொண்டுவா'' என்று சொல்லினர். அரசரால் ஏவப்பட்ட அவனும்

திரவியசாலைத் தலைவனுக்குத் தசரதர் இட்ட கட்டளை.

அந்தப்படியே ஏககாலத்தில் கொண்டுவந்து கொடுக்க, வெகுபரிசுத்தமானபிறப்பினையுடைய சீதை, காட்டுக்குப் புறப்பட்டவளாய், விசித்திரமான அவ்வாபரணங்களைக் கொண்டு, சாமுத்திரிகலக்ஷணப்படி யுள்ள தன் மேனியை அலங்கரித்தாள். உயர்ந்த ஆபரணங்களை யணிந்த சீதை, விடியற் காலத்தில் தனது கிரணங்களோடு உதிக்குஞ் சூரியபகவானுடைய காந்தி ஆகாயத்தை விளங்கச் செய்வதுபோல் அவ்வீட்டை விளங்கச் செய்தாள்.

சீதையின் அலங்காரம்.

சீதையின் மாமியாராகிய கௌசல்யை, பழிக்குந் தொழிலைச் செய்யாதவளான அவளைக் கைகளால் அணைத்துக்கொண்டு உச்சிமோந்து, "தம் தம் பர்த்தாவினால் எக்காலத்திலும் கொண்டாடப்பட்டிருப்பினும் அவன் ஆபத்தை யடைந்தகாலத்தில் அவனை மதியாமலிருக்கும் மாதர்கள், எல்லா வுலகத்திலும் "அபிஸாரிகைகள்" எனப் பழிக்கப் படுகின்றனர். முதலில் சுக மநுபவிப்பதும், அற்பமான கஷ்டம் நேரிடினும் கணவனை நிந்திப்பதும், அவனைக் கைவிடுவதும் ஸ்திரீகளின் இயற்கை. அத்தன்மையரான பெண்கள், பொய்பேசுபவராயும் மாறும் இயல்பு உள்ளவராயும் கெட்டநெறியில் ஒழுகுபவராயும் எப்பொழுதும் ஒன்றையுங் கவனியாதவராயும் கற்பில்லாதவராயும் கெட்ட எண்ணமுடையவராயும் ஒரு நொடிப்பொழுதில் அன்பு நீங்குபவராயும் இருக்கின்றனர். நற்குடிப்பிறப்பு, உபகாரம், வித்தை, தகப்பன் முதலானோர் கொடுத்த ஆபரணாதிகள், அக்கினிசாட்சிகமாகச்செய்த பாணிக்கிரகணம் ஆகிய இவற்றில் ஒன்றும், இப்படிப்பட்டவர்களுடைய மனத்தைப் பற்றுகின்றதில்லை; ஏனெனில், அவர்கள்மனம் சஞ்சலமன்றோ! குலத்துக்குத் தக்க ஆசாரத்தையுடையவர்களும் உண்மைபேசுபவர்களும் மரியாதையையுடையவர்களுமான பதிவிரதைகளுக்கு, பரிசுத்தி செய்பவனான கண

கௌசலை சீதைக்குச் செய்த உபதேசம்.

வனொருவனே விசேஷமானவன். ஆகையால், காட்டுக்குப் போகின்ற என்குமாரனான இராமனை நீ அலட்சியம் பண்ணாதே. கணவன் செல்வம் படைத்தவனாக இருந்தாலும் பணமற்றவனாக இருந்தாலும், அவன்தான் உனக்குத் தெய்வம்'' என்றாள்.

இவ்வாறு தனது மாமியார் சொன்ன அறத்தோடும் அருத்தத்தோடுங் கூடிய சொற்களைக் கேட்டுச் சீதை, கைகளைக் கூப்பிக்கொண்டு தனது எதிரேநிற்கும் மாமியாரை நோக்கி, "தங்கள் உத்தரவுப்படியே எல்லாவற்றையுஞ் செய்கிறேன். நான் கணவரிடத்தில் நடந்து கொள்ளவேண்டிய விதத்தைத் தெரிந்திருக்கிறேன்; இப்பொழுது தங்களிடமிருந்து அதைக்கேட்டு மிருக்கிறேன். என்னைக் கெட்ட பெண்பிள்ளைகளோடு ஒத்தவளாக எண்ணவே வேண்டாம். சந்திரனை விட்டு நிலவு நீங்காததுபோல, நான் நன்னெறியை விட்டு நீங்கேன். நரம்பில்லாத வீணையும் சக்கரமில்லாத தேரும் விளங்காததுபோல், நூறு பிள்ளைகளைப் பெற்றிருந்தபோதிலும் கணவனற்றவள் சுகத்தை யடையமாட்டாள்; ஏனெனில், மனைவிக்கு, அவளுடைய தந்தை கொடுப்பதும் அளவாகத்தான் இருக்கும்; அப்படியே தாய் கொடுப்பதும் பிள்ளைகொடுப்பதும் அளவாகத்தான் இருக்கும்; ஆகையால் அளவில்லாமற் கொடுக்கும் பர்த்தாவை எவள்தான் பூஜிக்கமாட்டாள்? ஆர்யே, இவ்வாறான பதிவிரதா தருமத்தை மேற்கொண்டிருப்பவளும் பெரியவர்களிடமிருந்து கேட்டறிந்த சாமானியவிசேஷரூபமாகவுள்ள பதிவிரதாதருமத்தை யுடையவளுமான நான், என்னவென்று எனதுபர்த்தாவை அவமதிப்பேன்? பெண்பாலார்க்குத் தெய்வம் கணவனன்றோ?'' என்று இவ்வாறு மொழிந்த மனோகரமான சொற்களைக் கேட்டு அக்கௌசலை, வெகு சுத்தமான குணமுள்ளவளாகையால் உடனே துக்கத்தாலும் சந்தோஷத்தாலும் கண்ணீரை வடித்தாள்.

சீதையின் உடன்பாட்டுச் சொல்.

மிக்க தருமாத்துமாவாகிய இராமர், அஞ்சலி பந்தம் பண்ணியவராய், மிகவுங் கௌரவிக்கப்பட்டுத் தமது தாய்மார்களின் மத்தியிலிருக்குங் கௌசலையைப் பிரதக்ஷிணஞ்செய்து சொல்லலுற்றார் :—" அம்மா, நீங்கள் அதிக துக்கத்தால் என் தந்தையை அலட்சியம் பண்ணாம லிருக்கவேண்டும். நான் அரணியவாசம் பண்ணவேண்டிய காலம் சீக்கிரமாக முடிந்துவிடும். ஒரு தூக்கம் தூங்கி விழிக்குமளவிற்குள் நீங்கள் இப்பதினான்குவருஷகாலமும் ஓடிப்போக, தந்தையுள்ளத்தை நிறைவேற்றி வந்த என்னை, எனது அன்பர்களின்மத்தியில் காண்பீர்கள் " என்றார்.

இராமரின் வேண்டுகோள்.

இராமர், இவ்விதமாகத் தம் மனத்தில் நிச்சயித்ததைத் தம் தாயிடஞ் சொல்லி, கௌசலையைப்போலவே துயரப்பட்டுக்கொண்டிருக்கும் தமதுமுந்நூற்றைம்பது தாய்மார்களிடத்திலுஞ் சொல்லவேண்டிய விஷயத்தையாய்ந்துபார்த்து, அவர்களை நோக்கி, கூப்பிய கையராய், தருமநெறியிற் பிறழாத தமது வாக்கினால், "நீங்கள், மிக்க பழக்கத்தாலாவது அறியாமையாலாவது நான் கடிந்துபேசியிருப்பதைப் பொறுத்தருளவேண்டும். நான், உங்களிடத்திற் செல்ல விடைகேட்டுக்கொள்ளுகின்றேன்" என்றார். அங்குச் சோகத்தில் முழுகியவர்களாய்க் கிடந்த எல்லாரும், இராமர் சொல்லியவும் நற்பொருள்சேர்ந்தனவுமான வெகுதருமச்சொற்களைக் கேட்டு, பெண்கிரௌஞ்சப்பறவைகளை யொத்திருக்குமாறு கதறினார்கள். எந்தத் தசரதமன்னவருடையமாளிகையில் எப்பொழுதும் மிருதங்கம் குழல் முதலான வாத்தியங்கள் மேகத்தைப்போலக் கோஷித்துக்கொண்டிருந்தனவோ, அம்மாளிகை, இராமருடைய நற்குணத்தையும் கைகேயியின் தீக்குணத்தையும் சொல்லும் பெண்டுகளின் சொற்களாலும் அழுகையின் சத்தத்தாலும் துக்கம் விளங்கும்படியாக இருந்தது.

இராமர் எல்லாத் தாய்மார்களிடத்தும் விடைகேட்டல்.

நாற்பதாஞ் சருக்கம்:

இராமர் முதலிய மூவரும் வனத்துக்குப் புறப்படுதல்.

அதன்பிறகு, இராமர் லக்ஷ்மணர் சீதை இம்மூவரும், தசரதரடைந்த நிலைமையைக் கண்டு பரிதபித்து, கூப்பிய கையையுடையவர்களாய், அவருடைய தாள்களில் வணங்கி அவரை வலம்வந்தார்கள். தருமப்பிரபுவாகிய இராமர், அவரிடம் விடை பெற்றுக்கொண்டு, துக்கக் கடலில் முழுகினவராய், சீதையுடன், தமது தாயான கௌசலையை அபிவாதனஞ்செய்து நின்றார். அவர் வணங்கினபின்பு, லக்ஷ்மணர் கௌசலையை அபிவாதனஞ்செய்து, பின்பு, தமது தாயான சுமித்திரையின் பாதங்களில் நமஸ்காரஞ் செய்தார். சுமித்திரை, வணங்காநின்றவரும் மகாபாகுவுமான அந்த லக்ஷ்மணரைப் பார்த்து, அழுதுகொண்டே உச்சிமோந்து, அவருடைய நன்மையின் பொருட்டுப் பின்வருமாறு சொல்லலானாள் :—"புதல்வனே, நான் உன்னைக் காட்டில் வசிக்கும்பொருட்டே பெற்றேன். புதல்வனே, நண்பர்களிடத்து மிக்க அன்புள்ள நீ, உனது தமையனான இராமன் செல்லும்பொழுது அஜாக்கிரதையாக இராதே. மாசற்றவனே, மிக்க துன்பத்தை அநுபவித்துக்கொண்டிருந்தாலும் மிக்க இன்பத்தை அநுபவித்துக்கொண்டிருந்தாலும், இந்த இராமனே உனக்குக் கதி; மூத்தோர்க்குக் கீழ்ப்படிந்து நடப்பதே உலகத்தில் சத்புருஷர்களின் தருமம். மூத்தோர்க்குக் கீழ்ப்படிதல், தானம், யாகதீக்ஷை, போரில்உடலைவிடுதல் ஆகிய இவை, இக்குலத்தில் வெகுநாளாக நடந்துவந்த உசிதமான ஒழுக்கங்களாம்" என்று உரைத்து, இராமரிடத்தில் மிக்க

சுமித்திரை லக்ஷ்மணருக்கு உபதேசித்தல்.

அன்புள்ளவரும் காட்டுக்குப் போக வுறுதியுடன் இருப்பவருமான லக்ஷ்மணரைநோக்கி, சுமித்திரை, மீண்டும் மீண்டும் "போ போ" என்று உரைத்து, மறுபடியும் "இராமனைத் தசரதராகவும், சீதையை நானாகவும், அரணியத்தை அயோத்திமாநகராகவும் கருதுவாய்; குழந்தாய், சுகமாகப் போய்வா" என்றாள்.

அதன்பிறகு, வெகு வணக்கத்தையுடையவராயும் விநயத்தை யறிந்தவராயு மிருக்குஞ் சுமந்திரர், இராமரைப் பார்த்து, அஞ்சலியுடன் கூடியவராய், இந்திரனை நோக்கி மாதலி சொல்லுவதுபோல், விளம்பலானார்.

சுமந்திரர் வனத்திற்குப் போகத் தேரிலேற அழைத்தல்.

"இராஜகுமாரரே, மிகு புகழ் படைத்தவரே, இராமரே, இரதத்தில் ஏறுங்கள்; உங்களுக்கு க்ஷேம முண்டாகுக; எங்குப் போகவேண்டுமென்று எனக்குக் கட்டளையிடுகிறீர்களோ, அங்கு ஒரு நொடியில் நான் கொண்டு போய்விடுகின்றேன். நீங்கள் பதினான்கு வருஷகாலம் பண்ணவேண்டிய அரணியவாசத்தை இன்று முதற்கொண்டே ஆரம்பிக்கவேண்டும்; கைகேயிதேவியார், "இப்பொழுதே காட்டிற்குச் செல்லவேண்டும்" என்று கட்டளையிட்டாரன்றோ?" என்று சொன்னவுடன், தனது மேனியை அலங்கரித்துக்கொண்டவளான சீதை, சூரியன்போற் பிரகாசிக்கும் அந்த இரதத்தின்மேல் வெகு குதூகலத்துடன் முதலில் ஏறினாள்.

தேரிலேறுதல்.

உடன்பிறந்தவர்களான ராமலக்ஷ்மணர்கள், பொன் அணிகளால் அலங்கரிக்கப்பெற்று அக்கினிபோல்விளங்கும் அழகிய அந்த இரதத்தில் விரைவாக ஏறினார்கள். இராமர் லக்ஷ்மணர் இவ்விருவரும், தனது நாயகனுடன் காட்டுக்குப்போகிற சீதைக்கு வனவாசம்பண்ணவேண்டிய காலத்தைக் கணக்கிட்டு வேண்டியவளவு தசரதர் கொடுத்த ஆடையாபரணங்களையும், உடன்பிறந்தவர்களான தம்மிரு

வர்க்குங்கொடுத்த ஆயுதக்கூட்டங்களையும், கவசங்களையும், தோலாற் கட்டப்பட்ட கூடை மண்வெட்டி இவைகளையும் இரதத்தின்மத்தியில் வைத்திட்டுச் சீதை யுடன் இரதத்தில் வீற்றிருந்ததைச் சுமந்திரர் பார்த்து, வாயுவேகமாகப் போகுஞ் சிறந்த குதிரைகளை வேகமாக ஓட்டினர்.

புறப்படுதல்.

இராமர், நீண்டகாலம் வனத்தில் வாசம்பண்ணப் புறப்பட்ட பொழுது, அயோத்திமாநகரிலிருந்த மனிதர்களும் சதுர்விதசேனைகளும் உற்சவத்திற்காகவந்த நாட்டுச்சனங்களும் மூர்ச்சை யடைந்தார்கள். உள்ளும் புறமும் கலங்கியதும், துக்கத்தின்மிகுதியாற் கோபங்கொண்ட மதயானைகளை யுடையதும், பரிதாபாதிசயத்தால் இங்குமங்கும் அலையுங் குதிரைகளின் ஆபரணகோஷத்தை யுடையதுமான அங்நகரம், பேரொலி பெற்றிருந்தது. முதுவேனிற் பருவத்தால் மெலிந்தவர் புனலை நாடி ஓடுவதுபோல, இராமவிரஹதுக்கத்தால் மிகத்துயரமடைந்த பாலரையும் முதியவரையு முடைய அங்நகரம், இராமரை நாடி ஓடத்தலைப்பட்டது. இராமருடைய முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் இரதத்தின்ஏகதேசத்தைப் பிடித்துக்கொண்டிருந்த ஜனங்கள், மிக்க பரிதாபத்துடன் இராமரையே பார்த்துக்கொண்டு, இரதத்தை யோட்டுஞ் சுமந்திரரை நோக்கி, கூக்குரலுடன், "சாரதியே, குதிரையின் கடிவாளக்கயிற்றை இழுத்துப்பிடியுங்கள்; இரதத்தை மெல்ல நடத்துங்கள். நாங்கள் இராமர்முகத்தைப் பார்க்கவேண்டும். இனி நாங்கள் அவருடைய முகத்தை எங்குக் காணப்போகிறோம்?" எனவும், "இராமருடைய தாயின் மனம் இரும்பே; ஏனெனில், தேவகுமாரனை யொத்தவரான இராமர் காட்டுக்குப் போவதைக்கண்டும் அவர்மனம் பிளவுபடவில்லையன்றோ! சூரியபகவானுடைய காந்தி மேருமலையை

ஜனங்களின் துயரம்.

விட்டு நீங்காமல் எப்பொழுதும் விளங்குவதுபோல், தனது நாயகரை எப்பொழுதும் விட்டு நீங்காமல் தருமத்திலேயே ஊன்றி நின்று, அவருடைய நிழல்போல் அவரைத் தொடர்ந்து காட்டுக்குப் போகுஞ் சீதையன்றோ செய்ய வேண்டிய தொழிலைச் செய்தவள். அஹோ! லக்ஷ்மணரே, உங்களது பாக்கியமே பாக்கியம்; நீங்கள், கடவுளுக்கு ஒப்பானவரும் எப்பொழுதும் பிரியத்தையே சொல்லுபவருமான தமையனுருக்குப் பணிவிடை செய்யப் போகின்றீர்களன்றோ! இது ஒன்றே உங்களுக்குப் பெருஞ் சித்தியாம். இதுதான் உங்களுக்கு நல்லக்ஷேமம். இவரைப் பின்தொடர்ந்து செல்லுகின்றீர்களென்பது யாதொன்றுண்டு, அந்த இதுவே சுவர்க்கத்துக்குப் போகும் வழியாம்" எனவும் இவ்வாறாகச் சொல்லிக்கொண்டே இக்ஷ்வாகுகுலக்கொழுந்தாகிய இராமருடைய பின்னே போகுபவர்களாய், தங்கள்கண்களிலிருந்து வெளிவரும் நீரை யடக்கச் சமர்த்தர்களாகவில்லை.

புத்திரரைக் காணத் தசரதர் வெளிப்படல்.

பின்பு, சோகத்தால் வருந்தும் தசரதர், தம்மைப்போலப் பரிதபிக்கும் மனைவிமார்களுடன் கூடியவராய், "இஷ்டனான புதல்வனைப் பார்ப்பேன்" என்று தம்மாளிகையை விட்டுப் புறப்பட்டார். பெரிய ஒரு ஆண் யானை கட்டுப்படுவதைக் கண்டு பெண்யானைகள் வீரிடுவதுபோல் புலம்புகின்ற பெண்டுகளுடைய பேரொலி, முன்பாகத்தில் கேட்கப்பட்டது. ஸ்ரீமானும் ககுத்ஸ்தவம்சத்திற்பிறந்தவரும் இராமரதுதந்தையாருமான தசரத மன்னவர், பருவகாலத்தில் கிரகணத்தால் மெலிவடைந்த பூர்ணசந்திரனைப்போலத் தமது ஒளி முற்றிலும் நீங்கப் பெற்றார்.

ஒருவராலும் அறியவொண்ணாத தன்மையை யுடையவரும் தசரதபுத்திரருமான இராமர், வேகமாகக் குதி

ரைகளை யோட்டச் சுமந்திரருக்குக் கட்டளையிட்டார். 'குதிரைகளை யோட்டுங்கள்' என்று இராமரும், 'குதிரைகளை நிறுத்துங்கள்' என்று ஜனங்களும் மார்க்கத்திற் கூற, சுமந்திரர், அவ்விரண்டையுங் கேட்டு ஒன்றையுஞ் செய்ய முடியாது திகைத்தார். மகாபாகுவான இராமர், பட்டணத்தை விட்டு வெளிப்பட்டபொழுது, பூமியில் விழுந்ததான ஜனங்களின் கண்ணீர், பூமியின் தூளியை யடக்கிற்று. அப்பட்டணம், இராமர் காட்டுக்குப் பிரயாணப்பட்டபொழுது, கண்ணீர் மிகப்பெருக வாட்டமடைந்து, எங்குப் பார்த்தாலும் ஹா! ஹா! என்ற சத்தமெழத் துக்கத்தால் தத்தளித்ததாய், அறிவிழந்துநின்றது. மீன்கள் சலிப்பதால் அசைந்த தாமரைமலரிலிருந்து மகரந்தங்கள் பெருகுவதுபோல், சோகத்தால் அந்நகரத்துப் பெண்களுடைய கண்களிலிருந்து ஜலங்கள் வெளிப்பட்டன. இவ்விதமாய் அந்நகரத்தாரெல்லாரும், ஒரே விதமான மனத்தோடு துக்கத்தில் முழுகியிருப்பதைக் கண்ட ஸ்ரீமானன தசரதமன்னர், வேரில் வெட்டுண்ட மரம்போல் துயரத்தால் கீழே விழுந்திட்டார். இராமர் பின்புறத்தி லிருந்த ஜனங்கள், மன்னவர் பெருந்துக்கத்தால் வாடிக் கீழ்விழக் கண்டு, "ஹல! ஹல!" என்று பெருஞ்சத்த மிட்டார்கள். "ஹா! ராம!!" என்று சிலரும் "ஹா! ராமனைப்பெற்ற தாயே!!' என்று மற்றுச் சிலரும் புலம்பினர்கள். அந்தப்புரத்தி லுள்ளாரும் அவ்வாறே கதறினர்கள். இராமர், தமது தாய்தந்தையர் துக்கத்தாற் குழம்பிய மனத்துடன் தம்வழியைத் தொடர்ந்து வருவதைக் கண்டார். தருமம் என்ற கயிற்றினற் கட்டுண்ட இராமர், கயிற்றினற் கட்டப்பட்ட குதிரைக்குட்டி தனதுதாயைப் பார்ப்பதுபோல், தாயைக் கடைக்கண்ணுற் பார்த்தார். அந்த

நகரத்தின் நிலை.

தசரதர் அந்தப்புரத்துடன் வருதலை இராமர் பார்த்தல்.

இராமர், வாகனங்களிலேயே எப்பொழுதும் போகின்றவர்களும் துக்கத்தை யனுபவிக்கத் தகாதவர்களும் வெகு சுகிகளுமான தமது தாய்தந்தையர்கள் காலால் நடந்துவருவதைப் பார்க்கச் சகிக்காமல், இரதத்தை வெகுவேகமாக ஓட்டும்படி சுமந்திரருக்குக் கட்டளையிட்டார். அங்குசத்தாற் குத்துண்ட மதயானை அவ்வங்குசத்தை எப்படிப் பார்க்கச் சகிக்காதோ, அப்படியே ஆண்புலியான அம்மகானும், துக்கத்தைத் தருபவர்களான தமதுதாய்தந்தையர்களைப் பார்க்கச் சகிக்கவேயில்லை. தொழுவத்திற் கட்டப்பட்டிருக்கும் தனதுகன்றைப் பார்க்க வெகுஆவல்கொண்ட பசு வீட்டைக் குறித்து வேகமாக ஓடுவதுபோல், கௌசலை, தேரை நோக்கி விரைந்து ஓடினாள். கூத்தாடுபவள்போன்றுள்ள கௌசல்யை, "ஹா! ராம, ஹா! சீதே, ஹா! லக்ஷ்மண" என்று கதறுபவளாய், இம்மூவர்கட்காகக் கண்ணீர் வடித்துக்கொண்டு இரதத்தை நாடி யோடிவருவதை, இராமர் அடிக்கடி பார்த்தார். தசரதர், "நிறுத்தும்" என்று சத்தமிட்டார். இராமரோ "ஓட்டுங்கள் ஓட்டுங்கள்" என்றார். சுமந்திரர், இவ்விருவரது பேச்சையுங் கேட்டுச் சக்கரத்தின்மத்தியில் அகப்பட்டுக்கொண்டவர் போலானார். இராமரும், அவரை நோக்கி, "ஆலோசியாமல் இரதத்தை ஓட்டுங்கள். தாங்கள் திரும்பிவந்தபின்பு, "என் சொற்படி ஏன் செய்யவில்லை?" என்று, தசரதர் பழித்தாலும் "தங்கள்பேச்சு எனக்குக் கேட்கவில்லை" என்று பதில் சொல்லுவீர்கள். இப்பொழுது அநுபவிக்குந் துக்கத்தை விளம்பித்தல் பொறுக்கமுடியாதன்றோ!" என்று சொன்னார். சுமந்திரர், அந்தப்புரஜனங்களுக்கு இராமரால் விடைகொடுப்பித்து, இராமர் கட்டளையிட்டபடியே இயல்பாகவே விரைந்தோடுங் குதிரைகளை

இராமர் தேரை விரைவாக நடத்தக் கட்டளையிடுதல்.

அக்காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள்.

அதிவேகமாகத்தூரத்தினர். இராமரைத் தொடர்ந்துவந்த அரசருடைய ஜனங்களும் மற்றுமுள்ள ஜனக்கூட்டங்களும், இராமரைவலஞ்செய்து, உள்ளமும் கண்ணீரும் திரும்பாமலிருந்தபோதிலும் தங்களுடையதேகத்தால் திரும்பின. அப்பொழுது தசரதருடைய அமைச்சர்கள், தசரத மன்னவரைப் பார்த்து, " 'ஒருவன் திரும்பி வரவேண்டும்' என்ற விருப்பம் இருந்தால் அவனை வெகுதூரம் தொடர்ந்து செல்லுதல் கூடாது" என்ற நூற்பொருளை எடுத்தோதினர்கள். தசரதர், அவ்வண்ணம் நியாயத்தை எடுத்துரைக்கும் மந்திரிகளுடைய சொற்களைக் கேட்டுத் தமது மெய்யெல்லாம் வேர்க்கத் துயரப்பட்டவராய், தமது மனைவியான கௌசலையுடன் இருந்த இடத்திலேயே எளிமையோடு தமதுகுமாரனைப் பார்த்துக்கொண்டே நின்றார்.

நாற்பத்தோராஞ் சருக்கம்:
இராமர் வனத்துக்குப் போனபின் அயோத்திமாநகரின் நிலைமை.

ஆண்புலியான அந்த இராமர் தமது கைகளைக் கூப்பிக்கொண்டு நகர்நீங்கினபொழுது, ஸ்திரீகளின் அந்தப்புரத்தில் வெகு பரிதாபமான பெரியசத்த முண்டாயிற்று. "அநாதர்களும் பலமில்லாதபேதைகளுமான எங்களுக்குக் கதியாகவும் சரணமாகவும் விளங்குகின்ற எங்கள் தலைவர் எங்கே போகின்றார்? நாம் வைதபோதிலும் கோபமடையாமலும் மக்கட்குக் கோபமுண்டாகுந் தொழில்களைப் புரியாமலு மிருந்துகொண்டு கோபிப்பவர்களெல்லாரையும் இனியசொல்லால் தேற்றும் இராமர், இந்நகரத்தினின்று நீங்கிவிட்டாரே! தமது தாயாரான கௌசலையிடம் எப்படி நடந்துகொள்ளுவரோ, அவ்வண்ணமே

நம்மெல்லாரிடத்திலும் நடந்துகொள்பவரும் மிக்க பராக்கிரமத்தை யுடையவருமான அந்த மகாத்மா, இன்றைக்கு எங்கே போகின்றார்? கைகேயியால் மிக வருத்தமடைந்த அரசர் காட்டுக்குப் போகும்படி கட்டளை யிட்டதால், எங்களுக்கும் இவ்வுலகத்துக்கும் ரக்ஷகரான இராமர், எங்குப் போகின்றார்? அந்தோ! அரசருக்குப் புத்தியில்லையே! உலகத்தால் மெச்சப்படுபவரும் தருமம் சத்தியம் இவைகளைக் கைப்பற்றியவருமான இராமரைக் காட்டுக்கு ஓட்டுகின்றாரே!'' என்று பலவிதமாக, தங்கள் கன்றுகளைக் காணுத பசுக்கள்போல, அந்தப்புரத்திலுள்ள பெண்டுகளெல்லாரும், புலம்பி, மிக்க துயரோடு கூக்குரலிட்டுக் கதறினார்கள். இம்மாதிரியாக அந்தப்புரத்திலிருந்துண்டாகும் கோரமான எளியபுலம்பல்களைப் புத்திரசோகத்தாற் பரிதபித்துக்கொண்டிருக்கும் தசரதர் கேட்டுப் பின்னும் அதிகமான சோகக்கடலில் முழுகி நின்றார். அப்பொழுது அங்கு அக்கினிஹோத்திரஞ் செய்யப்படவில்லை; கிருகஸ்தர்கள் சமையல் செய்யவுமில்லை; ஜனங்கள் தங்கள்காரியத்தைச் செய்யவுமில்லை; சூரியபகவானும் மறைந்துவிட்டான்; யானைகள் கவளங்களைக் கொள்ளவில்லை; பசுக்கள் கன்றுகளை ஊட்டவில்லை. தலைச்சனைப்பெற்ற தாயும் மகிழ்ச்சி யடையவில்லை; திரிசங்கு, அங்காரகன், பிரஹஸ்பதி, புதன் இக்கிரகங்களும் மற்றுமுள்ள கிரகங்களும் பயங்கரங்களாய்ச் சந்திரனுடன் சேர்ந்திருந்தன; நட்சத்திரங்கள் ஒளியற்றிருந்தன; கிரகங்களுக்குக் காந்தி போய்விட்டது; விசாக நட்சத்திரங்களும் கையால் மூடப்பட்டனவாய், விளங்கவில்லை; இராமர் வனம் புகுவதைக்கண்டு, அந்நகரம் மேகக்கூட்டங்களுடன் கூடிய காற்றின்வேகத்தால் எழுகின்ற சமுத்திரம்போல், அசைந்திட்டது. எல்லாத்திசைகளும் குழம்பினவாய்க் காரிருளால் மூடப்பட்டனபோல் தோன்றின. நட்சத்திரமாவது கிரகமாவது கொஞ்சமேனும் விளங்கவில்லை,

நகரத்துஜனங்களெல்லாரும் திடீரென்று மிக்க எளிமையை யடைந்தார்கள். ஆஹாரத்திலேனும் விளையாட்டிலேனும் ஒருவருடைய கருத்தும் போகவில்லை. சோகத்தால் வாட்டமடைந்த அந்நகரத்துச்சனங்கள், பெருமூச்சு எறிந்து கொண்டு, அரசராகிய தசரதரைக்குறித்து வருந்தினார்கள். கண்ணீரால் கலங்கிய முகத்தையுடைய இராஜமார்க்கத்திலிருந்த ஜனங்களில் ஒருவராவது மகிழ்ந்தவராய்க் காணப்படவில்லை; எல்லாருஞ் சோகக்கடலில் முழுகிக் கிடந்தார்கள். காற்றும் குளிர்ந்ததாக வீசவில்லை; சந்திரனும் மனோகரமான தோற்றமுடையவனாக விளங்கவில்லை; சூரியனும் உலகங்களைக் காயவில்லை; உலகமுழுவதும் கலங்கியே யிருந்தது; குழந்தை ஸ்தந்யத்தைவிரும்பவில்லை; கணவரும் மனைவிமாரை இச்சிக்கவில்லை; சோதரரும் ஒருவர்க்கொருவர் அன்புகொள்ளவில்லை; எல்லாரும் எல்லா ஆசையையும் நீக்கி, இராமர் ஒருவரையே நினைத்தார்கள். இராமருடைய அன்பர்களனைவரும் அறிவிழந்தவர்களாய்ச் சோகத்தின்மிகுதியால் படுக்கையிலேயே கிடந்தார்கள். மலைகளையுடைய மேதினி இந்திரனால் நடுங்கினதுபோல், கூட்டமானயானைகளையும் குதிரைகளையும் போர்வீரர்களையு முடைய இராமனால் விடப்பட்ட அயோத்திமாநகரம், துக்கத்தாலும் பயத்தாலும் பீடிக்கப்பட்டதாய் நடுநடுங்கிற்று; பேரொலியையுஞ் செய்தது.

நாற்பத்திரண்டாஞ் சருக்கம்:
தசரதருடைய வருத்தம்.

வெளிப்புறப்படும் இராமரா லுண்டான தூளிகள் எவ்வளவு காலம் வரையிற் புலப்பட்டனவோ, அவ்வளவு காலம் வரையில், தசரதர் தமதுகண்களைத் திருப்பவேயில்லை. தூளிகள், "மிக்க தார்மிகரும் விருப்பத்திற்கிட

மானவரும் புத்திரருமானஇராமரைத் தசரதர், என்னல் எவ்வளவுகாலம் பார்ப்பாரோ, அவ்வளவுகாலம் பிழைத்திருப்பார்'' என்றெண்ணி இராமரைத் தசரதர்காணும்பொருட்டுப் பூமியில் வளர்ந்தனபோலும். இராமர் போவதாலுண்டான தூளியுங் காணப்படாதபொழுது, தசரத மன்னவர், பீடையையடைந்த சரீரத்தோடு மிகவுந் துக்கித்தவராய்ப் பூமியில்விழுந்தார். விழுந்த அவரைத் தூக்குவதற்காகக் கௌசலை அவருடைய வலக்கையை அநுசரித்தாள்; பரதரிடம் விசுவாசம்வைத்த கைகேயி அவருடைய இடக்கையை அநுசரித்தாள். நியாயத்தையும்தருமத்தையும் வணக்கத்தையும் கைவிடாத தசரதமன்னவர், இராமவிரகத்தால் துன்புற்ற பொறியை யுடையவராய், கைகேயியைப்பார்த்து, "கைகேயி, நீ என்னுடைய அங்கங்களைத்தொடாதே. நீகெட்ட வொழுக்கமுடையவள். உன்னை நான் பார்க்க விரும்பவில்லை. நீ என் மனைவியுமல்லை; பந்துவு மன்று; உனக்கு அடிமை செய்வார்க்கும் நான் பிரபு அல்லேன்; அவர்கள் எனக்கு அடிமைகளு மல்லர். நான், பொருளொன்றையேவிரும்பி அறத்தைவிட்ட உன்னைக் கைவிடுகிறேன். உன்கையைப்பற்றி அக்கினியை வலம்வந்துமணந்ததனல்வந்த உன்சம்பந்தத்தா லுண்டாகும் இம்மைமறுமைப்பயன்களெல்லாவற்றையும் ஒழித்துவிடுகிறேன். பரதன், அழிவில்லாத இவ்விராச்சியத்தையடைந்துமகிழ்ந்தால், எனக்காக அவன் செய்யும் தர்ப்பணம் முதலிய சடங்குகள் என்னைச் சேரவேண்டா'' என்ருர்.

தசரதர் கைகேயியைக் கைவிட்டேனென்றல்.

அதன்பிறகு, துயரத்தால் வாட்டமடைந்த கௌசலை, அங்கமெல்லாம் புழுதி மண்டியிருக்கும் தமதுபர்த்தாவை எழுந்திருக்கச்செய்து அவருடன் சென்ருள். தருமாத்துமாவாகிய தசரதர், ஒன்றில் விருப்பினல் பிருமஹத்திசெய்தவர்போலவும், நெருப்பைக் கையால்

தொட்டவர்போலவும், தவவேஷம் பூண்டு சென்ற தமது அருமைக் குமாரனைப்பற்றித் தவித்தார். தேர் சென்ற வழியைத் திரும்பித்திரும்பிப்பார்த்து மிகவருந்தும் அரசருடைய உருவம், இராகுவாற் பீடிக்கப்பட்ட சூரியனது உருவம்போல் விளக்கமின்றி யிருந்தது. அவர், துயரத்தால் மெலிந்தவராய், தமக்கு அன்பரான புதல்வரை நினைத்துப் புலம்பினர். தசரதர், இராமர் ஊரைக் கடந்ததை யறிந்து, தமது புத்திரரைப் பற்றி, "எனது குழந்தையை யேற்றிக் கொண்டு செல்லும் வாகனங்களின் சுவடுகள் காணப்படுகின்றனவே! அம்மகாத்துமா மாத்திரங் காணப்படவில்லையே! ஐயோ! வாசனைச்சாந்து பூசிக் கொண்டு, மிருதுவான தலையணைமேல் தலைவைத்து, சிறந்தஸ்திரீகள் விசிறிகொண்டு வீசச் சுகமாகச் சயனிக்குமென் உத்தமகுமாரன், இப்பொழுது மரத்தினடியை யடைந்து மரக்கட்டைமேலோ கல்லின்மேலோ தலையைவைத்துக் கண்ணுறங்கப்போகின்ருனென்பது திண்ணம். மதயானை போல்பவனும் வந்திகள் முதலியோரில்லாமையால் மிக எளியனுய்த் தோன்றுபவனுமான இராமன், புழுதி மண்டிய தேகத்துடன், மலையருவியின் சமீபதேசத்தில் வெறுந் தரையிலிருந்து பெருமூச்சுவிட்டுக்கொண்டு எழுந்திருப்பானே! இவ்வுலகத்துக்கெல்லாம் நாதனும் மகாபாகுவுமான இராமன், அநாதன்போலக்காட்டிலெழுந்துநடக்கையில் வனசரர்கள் பார்ப்பார்களென்பது திண்ணம். ஜநகருடைய விருப்பத்திற்கு இடனுயும் எப்பொழுதுஞ் சுகத்தையே அநுபவிக்கத்தக்கவளாயுமுள்ள ஜானகி, இன்று முட்களை மிதிப்பதாற் களைத்தவளாய் நடப்பளே! இதுவரையில் காட்டைக்கண்டறியாதவளான அவள், மயிர்ச்சிலிர்ப்பை யுண்டாக்குவதும் கம்பீரமுமான காட்டுமிருகங்களுடைய சத்தத்தைக்கேட்டு அஞ்சுவளே! கைகேயி, உனது எண்ணத்தை அடைந்தவளாக இரு; விதவையாய்

தசரதரின் வருத்தம்.

இவ்வுலகத்தை நீயே ஆண்டுவா. அந்தப்புருஷசிரேஷ்டனை விட்டுநான் ஒருபொழுதும் பிராணனுடன் பிழைத்திருக்கவேமாட்டேன்" என இவ்வாறு அழுதுகொண்டு, ஜனங்களுடைய கூட்டத்தாற் சூழப்பட்டு, செத்தார்க்கு மூழ்கினவர் போன்றவராய், நன்மையற்ற தமது நகரத்திற் புகுந்தார்.

தசரதர்கௌசலையின் மாளிகையைச் சேர்ந்து வருந்தல்.

அத்தசரதமன்னவர், குடியற்றவீடு நாற்சந்தி இவைகளின் மத்தியாலும், மூடப்பட்ட கோயில்களாலும் கடைகளாலும், மிகவாடிப் பலமும் சந்தோஷமு மற்ற குடிகளாலும், கலகலப்பற்றபெருந்தெருக்களாலும் சோபையற்றிருந்த அந்தப்பட்டணம் முழுவதையும் பார்த்து, இராமரொருவர்மேலேயே சிந்தைவைத்தவராய், சூரியபகவான் நீர்கொண்ட மேகத்திற் புகுவதுபோலத் தமது மாளிகையிற் புகுந்தார். இராமரும் சீதையும் லக்ஷ்மணரும் இல்லாத அந்நகரம், கருடன் அபகரித்ததால்சர்ப்பங்களற்றதும் கலக்குதற்கு அரியதுமான ஒரு பெரிய மடுவிற்கு ஒப்பாயிருந்தது. பிறகு, கத்கத சப்தத்துடன் புலம்பும் மன்னவர், அற்பமான பொருளையுடைய வார்த்தையைக் குரலில்லாமல் மெல்லப் பின்வருமாறு எளிமையுடன் சொல்லலானார் :—"இராமனுடைய தாயாகிய கௌசலையின்வீட்டில் என்னை, விரைவிற் கொண்டுபோய்ச் சேருங்கள். என் உள்ளத்திற்கு வேறோரிடத்தில் தேறுதலுண்டாகமாட்டாது" என்றார். இப்படி அரசர்சொல்லவே, அங்கிருந்த துவாரபாலகர்கள், வணக்கத்துடன் அவரைக் கௌசலையின் வீட்டிற் கொண்டுபோய்ச் சேர்த்து அங்குத்தானே இருந்தார்கள். கௌசல்யையின்வீட்டிற் புகுந்து படுக்கையிற் படுத்தபின்பும் அத்தசரதருடைய மனம் கலங்கினதாகவேயிருந்தது. மன்னவர், இருபுத்திரரும் ஒருமருமகளுமற்ற அக்கிருகத்தைச் சந்திரனற்ற ஆகாயத்தைப்போற்

பார்த்தார். வீரத்தன்மையுடைய அம்மகாராஜர், அக்கிரு கத்தைப் பார்த்து, தமதுகையை உயரத் தூக்கிக்கொண்டு, பெருங்குரலுடன், "அந்தோ, இராகவா! என்னைக் கைவிடு கிறாயே!" என்றுகூவினார்; "எவர்கள், இராமன் திரும் பிவருகிறவரையில் ஜீவித்திருந்து, அவன் வரக் காண்பார் களோ, அவர்கள்தாம் இவ்வுலகத்தில் சுகத்தையடைந்தவர் களாய் இராமனைக் கட்டியணைப்பார்கள்" என்றார். பின்பு, தமக்குக் காளராத்திரி போன்ற அவ்விரவின் நடுப்பொழு தில் தசரதர், தமது மனைவியான கௌசலையை நோக்கி, "இராமனைத் தொடர்ந்துசென்ற எனதுகண்கள் இப் பொழுதும் திரும்புகின்றனவில்லை. கௌசலையே, நீ என் கண்களுக்குத் தெரியவில்லை; என்னை உன்கையால் நன் றாகத்தொடு" என்றார்.

மன்னவருடைய சமீபத்திலிருந்த கௌசலை, இராம ரொருவரையே நினைத்துக்கொண்டு படுக்கையில்கிடக்குந் தசரதரைக் கண்டு, மிக்க துயரங்கொண்டவளாய், நெட்டு யிர்த்து வெகுவருத்தத்துடன் பரிதபிக்கலானாள்.

நாற்பத்துமூன்றாஞ் சருக்கம்:
கௌசலை புலம்பல்.

அதன் பின்பு, புத்திரசோகத்தாற் பீடிக்கப்பட்ட கௌசலை, அரசர் சோகத்தாற் சுருண்டு படுக்கையில்பரித பிக்கக் கண்டு, அம்மன்னவரைநோக்கிப் பின்வருமாறு சொல்லலானாள்:—"கைகேயியானவள், மனிதப்புலியான இராமன்மீது கௌடில்யமாகிறவிஷத்தைக் கக்கி, தோ லுரித்த பெண்சர்ப்பம்போலச் சஞ்சரிக்கப்போகிறாள். இராமனைக் காட்டுக்கு ஓட்டிவிட்டுத் தனது மனோரதங்களை யடைந்து சிந்தையற்றமனத்தோடு நிற்பவளான அழகிய

கைகேயி, வீட்டினுட் சஞ்சரிக்குங் காலசர்ப்பம்போல, மீண்டும் என்னைப் பயப்படுத்தப்போகின்றாள். கைகேயியானவள், எனது சிறந்தபுத்திரனான இராமனுக்கு அன்னமிடாது அவனைப் பணிபுரிவோனாக வைத்துக்கொண்டாலும் எனக்கு இஷ்டமே; வனத்தில்வாசஞ்செய்வதினும், இவ்வாறு நாட்டில் வசித்தலே சிரேஷ்டமானது; ஏனெனில், அவன் பணிவிடையைச் செய்தபின்பு பிச்சையெடுத்துப் பிழைக்கலாமன்றோ! அரசரே, ஆகிதாக்கினியான ஒருவன் பருவகாலத்தில் தேவதைகளுக்கு அளிக்கவேண்டிய அவிர்ப்பாகத்தை ராக்ஷஸர்களுக்குத் தந்ததுபோல், இராமனை அவனுக்குக் கொடுக்கவேண்டிய இராச்சியத்தினின்று சுவேச்சையால் நீக்கிக் கைகேயிக்குக் கொடுத்தீர். யானையரசின்நடை வாய்ந்து, மிக்க தோள்வலிமையோடு விற்பிடித்துநிற்கும் என் வீரப்புதல்வன், தனது மனைவியுடனும் லக்ஷ்மணனுடனும் இப்பொழுது வனத்திற் புகுகிறானென்பது நிச்சயம். அவர்கள் அரணியத்தில்வசிப்பதன்கஷ்டத்தை இதுவரையிற் சற்றும் அறியார்களே! கைகேயியின் இஷ்டப்படி நடக்குந் தங்களால் ஓட்டிவிடப்பட்ட அம்மூவரும், காட்டில் என்ன பாடு படுவார்களோ? அவர்கள், சிரேஷ்டமான பொருள்களற்று, ஊரைவிட்டு ஓட்டப்பட்டவர்களாய், மிக்க எளிமையோடு காட்டில் கந்தமூலங்களைப் புசித்து எவ்வண்ணம் அலைந்து திரிவார்கள்? என் வீரச்சிங்கத்தைத் தன் மனைவியுடனும் தம்பியுடனும் எப்பொழுது இவ்விடத்திற் காண்பேனோ, எனது துயரத்தைப் போக்குவதும் மங்களகரமுமான அக்காலம் இன்றே வருமா? கனுப்போல், நகர சமீபத்தில் வந்த வீரர்கள், எப்பொழுது அயோத்திக்கு வரப்போகிறார்கள்? மிக்க புகழ்பெற்றதும், மகிழ்ந்த ஜனங்களையுடையதும், மேலெடுக்கப்பட்ட கொடிவரிசைகளை யுடையதுமான அயோத்திமாநகரம், வனத்தினின்று மீண்ட என் மனிதப்புலிகளைப் பார்த்து, சமுத்திரம் பருவகாலத்திற்

பொங்குவதுபோல, மகிழ்ச்சியாற் பொங்குவது எப்போது? ரிஷபம் பசுவைமுன்னிடுவதுபோல,மகாபாகுவான வீரன், இரதத்தில் சீதையை முன்னிட்டு இந்நகரத்தினுட் புகுவது எக்காலம்? நகரத்துறைவோரனைவரும், சத்துருக்களைத் துவம்சம்பண்ணுமவர்களும் பட்டணத்திற் புகுபவர்களுமான புதல்வர்களின் பொருட்டு, இராஜமார்க்கத்தில் பொரிகளை இறைப்பது என்று? அழகானகுண்டலங்களை யணிந்தும் வில்லையும் கத்தியையும் வைத்துக்கொண்டிருக்கும் என் அருமைக்குழந்தைகள்,சிகரங்களுடன் கூடிய இரண்டுகுன்றுகள்போல இந்நகரத்திற் புக, நான் எத்தினத்திற்காண்பேன்? பிராமணகன்னிகைகள், புஷ்பங்களையும் பழங்களையும்கொடுத்துக்கொண்டு சந்தோஷத்துடன் இந்நகரத்தை வலம்வருவது என்ஞான்று? புத்தியில் முதிர்ந்து காந்தியில் தேவர்க்கு ஒப்பாய் விளங்கும் தருமத்தை யறிந்தவனான இராமன், மும்மாரிபோல எல்லோர்க்கும் மகிழ்ச்சியை விளைத்துக்கொண்டு வருவது எச்சமயம்? கெட்டகுணமுடைய நான், முன்னொருகால், கன்றுகள் பாலுண்டதற்கு ஆவலுடனிருந்தசமயத்தில், அவைகளை, அவைகளின் தாய்களினுடையமடிகளைப் பிரியச் செய்தேனென்பது நிச்சயம். பிள்ளைமேலாசையை யுடைய நான், அந்தப்பாவத்தால்தான், இளையகன்றையுடைய பசு,சிங்கத்தால் தன்கன்றையிழந்த தாவதுபோல, கைகேயியால் மகனை யிழந்தவளானேன். ஒரேபுதல்வனையுடைய நான், நற்குணங்களெல்லாம்பொருந்தியும் எல்லாச் சாஸ்திரங்களிலும் தேர்ச்சியடைந்துமுள்ள அப்பிள்ளையை விட்டு உயிருடனிருக்கச்சகிக்கமாட்டேன். மகாபாகுவாயும்மிக்கபலமுள்ளவனையும் இஷ்டனையுமிருக்கும் புதல்வனைப் பாராமல் பிழைத்திருக்க என் உயிர்க்குச் சிறிதும் சாமர்த்தியமில்லை. முதுவேனிற் பருவத்துச் சூரியபகவான் தனது பூர்ணகிரணங்களால் மிக்ககாந்தியை யுடையனைப் இவ்வுலகத்தை

யெரிப்பதுபோல், புத்திரசோகத்தா லுண்டாகும் இந்தத் தீ என்னை யெரித்துக்கொண்டிருக்கிறது'' என்றாள்.

நாற்பத்துநான்காஞ் சருக்கம்:

கௌசலையின் துயரைச் சுமித்திரை ஆற்றுதல்.

மாதுசிரோமணியான கௌசல்யை இவ்வாறுபரிதபிக்கையில், நன்னெறியிலேயே நடக்குஞ் சுமித்திரை, வெகு தருமத்துடன் கூடிய சொற்களைப் பின்வருமாறு சொல்லலானாள்:— "ஆர்யே, சற்குணங்களுடன் கூடிய தங்கள் குமாரன் அந்தப்புருஷோத்தமனே; ஆகையால், அவனைக் குறித்து அரற்றி எளிமையுடன் இவ்வாறு துக்கப்படுவதாற் பயனென்ன? ஆர்யே, மிக்கபலமுடைய தங்கள்குமாரன், மறுமைச் சுகத்திற்கு ஏதுவாயும் எப்பொழுதும் பெரியோரால் அநுஷ்டிக்கப்படுவதாயு மிருக்கும் அறநெறியில் வழுவாது நின்று, கையில் கிடைத்த இராச்சியத்தையும் விட்டு, உண்மையாகநடக்கும் மகாத்துமாவான தந்தையாரின் கருத்தை முற்றுவிக்க வனத்திற்குச் சென்றான்; சிரேஷ்டனான அவனைக் குறித்துச் சோகித்தல் ஒரு பொழுதுந் தக்கதன்று. எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்புள்ள லக்ஷ்மணன், எப்பொழுதும் ஜாக்கிரதையை யுடையவனாய் அவனுக்குப் பணிவிடை செய்கிறான். இவ்வாறு கைங்கரியஞ்செய்தல் லக்ஷ்மணனுக்குப் பெரும்பேறன்றோ! எப்பொழுதுஞ் சுகத்துக்கே யுரியவளான சீதையும், அரணியத்தில் வசிப்பதன்கஷ்டங்களை நன்றாயறிந்திருந்தும், பதிவிரதைகளின் தருமத்தைத் தெரிந்திருப்பதால், தருமாத்துமாவாகிய தனது நாதனைப் பின்தொடர்ந்துசெல்லுகிறாள்; ஆகையால், அவளைக்

சுமித்திரையின் ஆசுவாசனம்.

குறித்தும் விசனப்படவேண்டியதில்லை. உலகமெங்கும் கீர்த்தியென்ற துவசத்தை விரிப்பவனும், தருமம் சத்தியம் விரதம் இவைகளைப் பொருளாகக்கொண்டவனுமான தங்கள்குமாரன் எந்த நன்மையைத்தான் அடைந்தவனுகான்? சூரியபகவான், இராமனுடைய பரிசுத்தத்தன்மையையும் உத்தமமான மாகாத்மியத்தையுங் கண்டு, அவன் தேகத்தைத் தனது உஷ்ணகிரணங்களால் தாபமடையச் செய்யான். எல்லாக் காலங்களிலும், அரணியத்திலிருந்து மனோகரமாக வுண்டாகும் மங்களகரமான காற்று, அவனுக்குச் சுகமாகவிருக்கும்படி சீதோஷ்ணமாக வீசியுபசரிக்கும். அவன் இரவில் சயனித்திருக்கும்பொழுது, சந்திரபகவான், தந்தையைப்போன்று தனது கிரணங்களினுல் மாசற்றவனுன அந்த இராமனைத் தொட்டு அணைத்து மனத்தில் மகிழ்ச்சிகூரச் செய்வான். ஒரு காலத்தில் சம்பராசுரனதுபுத்திரனுகிய அசுரேசனைப் போரிற் கொன்றதனுல் மகிழ்ந்து பிரமதேவரளித்த திவ்யமான அஸ்திரங்களைப் பெற்றவனும், மிக்க வல்லமையையும் புஜபலத்தையு முடையவனும், ஆண்புலியுமான இராகவன், காட்டில் வசித்தபோதிலும் தன் தோள்வலியை நம்பிப் பயமற்று, வீட்டில் வசிப்பதுபோலச் சுகமாக வசிப்பான். யாவனொருவனுடைய பாணத்திற்கு இலக்காக நின்று சத்துருக்களெல்லாரும் நாசமாய் விடுகிறுர்களோ, அவனுடைய கட்டளையில் இப்பூதலம் ஏன் நிற்கமாட்டாது? சகலலக்ஷணங்களிலும் குறைவின்றி நிறைந்துள்ள மேனியின் சோபையையும், சௌரியத்தையும், ஒப்பில்லாப் பலத்தையுமுடைய இராமன், காட்டிற் கழிக்கவேண்டிய நாள்களைப்போக்கி விரைவில் இராச்சியத்தை யடையப்போகிறுன். இராமன், சூரியபகவானுக்கு ஒரு சூரியன்; அக்கினிக்கு ஒரு அக்கினி; பிரமதேவனுக்கு ஒரு பிரமதேவன்; ஸ்ரீமகாலக்ஷ்மிக்கு ஒரு ஸ்ரீமகாலக்ஷ்மி; கீர்த்திக்கு ஒரு கீர்த்தி; பொறுமைக்கு ஒரு பொறுமை;

தெய்வங்களுக்கு ஒருதெய்வம்; பூதங்களுக்கு ஒரு உத்தமமானபூதம். தேவி, இவ்வாறுள்ள அந்த இராமனுக்குக் காட்டிலும் நாட்டிலும் மாறுக இருப்பவன் யாவன்? புருஷசிரேஷ்டனுன இராமன், பூதலமடந்தை வைதேகி லக்ஷ்மி ஆகிய இம்மூவருடன் விரைவில் அபிஷேகஞ் செய்துகொள்ளப்போகிருன். அயோத்திமாநகரிலிருக்கும் எல்லாச்சனங்களும், ஒருவராலும் வெல்லப்படாத எந்த இராமன் புல்மரவுரி யணிந்து காட்டுக்குப் போவதைப் பார்த்துத் தங்களுடைய துக்கவேகத்தைச் சகிக்கமுடியாமல் சோகத்தால் கண்ணீர் சொரிகின்ருர்களோ, எவனை இலட்சுமிதேவி தொடர்ந்துசெல்வது போலச் சீதாதேவி தொடர்ந்து சென்ருளோ, அவனுல் எதுதான் பெறுதற்கு அரியது? எவன்முன், வில்லாளிகளுள் முதன்மைபெற்ற லக்ஷ்மணன், பாணம் சத்தி அஸ்திரம் இவைகளைத் தானே எடுத்துக்கொண்டு நடக்கிருனே, அவனுக்கு எதுதான் துர்லபம்? தேவி, தாங்கள், தங்கள்புதல்வன் வெகு சீக்கிரமாகத் தனது வனவாசத்தை நிறைவேற்றித் திரும்பிவரக் காண்பீர்கள்; ஆகையால், துயரத்தையும் மோகத்தையும்விட்டிடுங்கள்; நான் சொல்லுவது உண்மை. பழிப்பற்றவரே, உதித்த சந்திரன்போன்ற தங்கள்புத்திரன் தங்களுடைய பாதங்களில் தலையால் வணங்கிநிற்கத் தாங்கள் மீண்டும் பார்ப்பீர்கள்; இராமன் மறுபடி இந்நகரத்திற் புகுந்து பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு மிக்க சம்பத்தோடு வாழ்ந்திருக்கையில், அவனைக் கண்ட கண்களிலிருந்து ஆனந்தபாஷ்பங்களை விரைவாகச் சொரியப்போகிறீர்கள்; ஆகையால், தேவி, புலம்பலும் மனச்சங்கடப்படுதலும் தங்களுக்கு வேண்டாம்; இராமனிடத்தில் தீங்கென்பது அணுகவே மாட்டாது. தாங்கள், அவன் சீக்கிரம் சீதையுடனும் லக்ஷ்மணனுடனும் திரும்பிவரக் காண்பீர்கள். குற்றமற்றவரே, தாங்கள், இச்சமயத்தில் எல்லாச்சனங்களுக்கும் தேறுதல் சொல்லவேண்

டியிருக்கத் தபிக்கின்றீர்களே, இதென்ன? தேவி, தாங்கள் துக்கிக்கத் தக்கவரல்லீர்; தங்கட்கு இராகவனன்றே புதல்வன். இவ்வுலகத்தில் நன்னெறியிலிருப்பவன் இராமனைத் தவிர வேறொருவனுண்டோ? அவன் தனது அன்பர்களுடன் வந்து தங்களை வணங்கிநிற்க, அதைக் கண்டு, கார்காலத்துமேகம் மழைபொழிவதுபோல், தாங்கள் ஆனந்தபாஷ்பத்தைப் பொழியப்போகின்றீர்கள். வரத்தைக் கொடுக்கும் தங்கள்குமாரன், சீக்கிரமாக அயோத்திக்குத் திரும்பிவந்து, தங்களுடைய சரணங்களைத் தனது பருத்த மெல்லிய பூங்கைகளால் தொட்டு வணங்கி நிற்கப்போகிறான். தாங்கள், தனது அன்பர்களுடன் அபிவாதனத்தோடு நமஸ்காரம்பண்ணுஞ் சூரனான தங்கள்புத்திரனை, மேகசமூகம் மலையை நனைப்பதுபோல, ஆனந்தபாஷ்பத்தால் நனைக்கப்போகின்றீர்கள்" என்றாள்.

கௌசலை சிறிது துயரமாறுதல்.

குற்றமற்றவளும் உத்தமியும் பேசுவதில் வல்லவளுமான சுமித்திராதேவி, பலவாறான மொழிகளால், இராமருடையதாயாகிய கௌசலையை இவ்வாறு ஆசுவாசனம்பண்ணி நின்றாள். இராமருடைய தாயும் ராஜபத்தினியுமான கௌசலை, இலட்சுமணருடைய தாய் இவ்வாறு சொன்னசொல்லைக் கேட்டு, சரத்காலத்தில் தோன்றும் மேகம் தன்னிடமிருக்குஞ் சுவல்பநீரை வெளிவிடாமல் தனக்குள்ளேயே அடக்கிக்கொள்ளுவதுபோல, தனது சோகத்தைத் தனது சரீரத்திலேயே அடக்கிக்கொண்டாள்.

நாற்பத்தைந்தாஞ் சருக்கம்:
ஜனங்கள் இராமரைக் கெஞ்சுதல்.

ஜனங்கள், சத்தியவிரதத்தைக் கைக்கொண்டிருந்த மகாத்மாவான இராமரிடம் மிக்க அபிமானம் வைத்தவர்

ஜனங்கள் இராமருடன் செல்லுதல்.

களாய், அவர் அரணியவாசஞ் செய்யப் போகும்பொழுது கூடவே சென்றார்கள். இராமருடைய இரதத்துடன் சென்று கொண்டிருந்தவர்கள், நண்பரது கூட்டமும் தசரதரும் வலியத்திரும்பின பின்பும், திரும்பவில்லை; ஏனெனில், பெருங்கீர்த்திபெற்றவரும், சிறந்த குணங்களை யுடையவருமான இராமர், அயோத்திமாநகரில் வசிக்கும் புருஷர்களுக்குப் பூர்ணசந்திரன்போல் இஷ்டரா யிருந்தார். அப்பொழுது, அந்த இராமர், ஜனங்களாற் பிரார்த்திக்கப்பட்டபோதிலும், தமதுதந்தையை உண்மையுடையவராக்கும்பொருட்டுக் காட்டையே யடைந்தார். அவர், ஜனங்களைத் தமது கண்களாற் பானம்பண்ணுகிறவர் போல வெகு அன்புடன் பார்த்து, அவர்களைத் தமது மக்களைப்போல எண்ணிப் பின்வருமாறு அன்புடன் சொல்லலானார்:—"அயோத்தியில் வசிக்கும் நீங்கள், என்னைச் சந்தோஷப்படுத்துவதனிமித்தம் என்னிடத்து வைத்திருக்கும் பிரீதியையும் வெகுமதியையும் மிகுதியாகப் பரதனிடஞ் செலுத்தவேண்டும். கைகேயிக்குச் சந்தோஷத்தைப் பெருகப்பண்ணும் பரதன், குற்றமற்ற நடக்கை யுள்ளவனாகையால், உங்களெல்லோருக்கும் இஷ்டங்களையும் நன்மைகளையும் முறைதவறாது செய்வான். அவன், பருவத்திற் சிறுவனாயினும் அறிவால் முதிர்ந்தவன்; வெகு சாந்தகுணமுள்ளவனாயினும், வீரகுணங்கள் பொருந்தியவன்; அச்சங்களை யகற்றும் அந்தப் பரதன், உங்களுக்குச் சரியான அரசன். இராஜகுணங்களெல்லாம் பொருந்திய அவன், என் தந்தையாரால் இளவரசனாகப் பண்ணப்பட்டபடியால், யானும் மற்றெல்லோரும் உங்கள் தலைவனான அவன்கட்டளைப்படி நடக்கவேண்டும். நீங்களெல்லோரும், நான் காட்டிற்குப் போன பின்பு, எனக்கு மகிழ்ச்சியைச் செய்யவேண்டுமென்ற

இராமர் ஜனங்களுக்குச் செய்த உபதேசம்.

ஆசையால், மகாராஜர் வருத்தமடையாத வண்ணம் நடந்துகொள்ளவேண்டும்" என்றார்.

இராமர் தருமத்தில் எவ்வளவு உறுதியுள்ளவராக இருந்தாரோ, அவ்வளவு உறுதியுள்ளவராக இருந்தார்கள், இராமரைத் தலைவராகவிரும்புவதில் ஜனங்களும்; லக்ஷ்மணருடன்கூடிய இராமர், கண்ணீர் விட்டுப் பரிதபித்துநிற்கும் அப்பட்டணத்து ஜனங்களைத் தமது குணங்களினாற் கட்டியிழுத்தனர்போலும். பருவத்திலும், அறிவிலும், தவத்திலும் முதிர்ந்த அந்தணர்கள், கிழத்தன்மையால் நடுங்கிய தலையினராய்த் தூரத்திலே நின்று, பின்வருமாறு சொல்லலானார்கள்:—"ஓ! ஓ! விரைவுள்ள உத்தமஜாதிக் குதிரைகளே, இராமனை வகித்துக்கொண்டு போகாதேயுங்கள்: நில்லுங்கள்; தலைவனிடத்தில் நன்மைசெய்பவராக இருங்கள். எல்லாப் பிராணிகளுக்கும் காது உண்டு; குதிரைகளுக்கு இன்னும் விசேஷமானது; ஆகையால், நீங்கள், எங்கள் வேண்டுகோளுக்கு இரங்கி, உங்களுடைய ஓட்டத்தை விட்டிடுங்கள். நீங்கள், பரிசுத்தமூர்த்தியாயும் வீரராயும் திடமான நல்ல விரதத்தை யுடையவராயும் விளங்கும் உங்கள் தலைவரைத் தருமத்தால் பட்டணத்தருகிலேயே வகிக்கவேண்டும்; பட்டணத்திலிருந்து காட்டிற்கு வகித்துக்கொண்டு போதல் உங்களுக்குத் தக்கதன்று" என்றார்கள்.

முதிய பிராமணர்களின் அரற்றல்.

இராமர், இவ்வாறு பருவத்தில் முதிர்ந்த அந்தணர்களெல்லாம் வெகு பரிதாபமாக அரற்றக்கேட்டு, இரதத்தை விட்டுக் கீழிறங்கினார். அவர், லக்ஷ்மணருடனும் சீதையுடனும் வனவாசஞ் செய்யக்கருதிய எண்ணத்தை நீக்காது, மெல்லக் காலினாலேயே நடந்தார். நல்லொழுக்கத்தில் அன்புடையவரும் தயாளுவுமான இராமர், பதாதியாயிருக்கும் அந்தணர்களை, அந்தப்புரத்து ஜனங்களு

டன் கூடிய தசரதரைத் திரும்பச்செய்ததுபோல், தாம் இரதத்தில் இருந்தபடியே திரும்பச்செய்ய மனம் பொறுக்கவில்லை. அந்தணர்கள், இவ்வாறு கால்நடையாகச் செல்லும் இராமரைப் பார்த்து, மனம் திகைத்து, மிக்க துக்கத்துடன், "இந்த அந்தணக்கூட்டங்கள், அந்தணர்க்கு நன்மை செய்வதில் முயலும் உன்னைப் பின்தொடர்ந்து வருகின்றன. இந்த அக்கினிகளும், தோளில் ஏறினவைகளாய் உன்னைப் பின்தொடர்ந்து வருகின்றன. வாஜபேயத்தி லுயரவெடுத்தனவும் சரத்காலமேகங்களை நிகர்த்தனவுமான எங்களுடைய இக்குடைகள், நின் பின்னர்த் தொடர்ந்துவருவதைப் பார். குடையில்லாமல் வெயில் மேல்வீச நடக்கும் உனக்கு, வாஜபேய யாகஞ்செய்ததாற் பெறப்பட்ட எங்கள்குடைகளால் நிழலைச் செய்கிறோம். எப்பொழுதும் வேதமந்திரங்களிற் பிரவேசித்திருக்கும் எங்கள் புத்தி, குழந்தாய், உன்பொருட்டு வனவாசத்திற் பிரவேசித்திருக்கிறது. எங்களுக்குச் சிறந்த பொருளான வேதங்கள், எங்கள் மனத்தினுள்ளேயே யிருக்கின்றன. எங்கள்மனைவிமார்களும், அவரவர்களுடைய நல்லொழுக்கத்தாற் காக்கப்பட்டு வீட்டிலேயே வசிக்கப்போகின்றார்கள். நாங்கள், உன்னைத் திருப்பிக்கொண்டு போவதில் மதியை வைத்திருக்கிறோம். வனவாசஞ்செய்ய நீ நிச்சயிக்கக்கூடாது. நீ அந்தணர் மொழியைக் கேட்டலாகிய தருமத்தைத் தள்ளிவிட்டால், எந்தத் தருமந்தான் உன்னால் விரும்பப்பட்டதாகும்? அசைவின்றித் தருமத்திலேயே நடப்பவனே, அன்னப்பறவைபோல வெளுத்த மயிரையுடையனவும் மண்ணிற்புரளுவதால் அழுக்கடைந்தனவுமான எங்கள் தலைகளால் வேண்டப்பட்டவனாய், நீ ஊருக்குத் திரும்புவாய். இங்கு வந்திருக்கும் அந்தணர்கள் ஆரம்பித்திருக்கும் அநேக யாகங்கள் முடிதல், உன்னுடைய திரும்புகையின் அதீனமா யிருக்கின்றன.

(அந்தணர்கள் நகரத்திற்கு வர இராமரை வேண்டுதல்.)

இராம, அசையும்பொருளும் அசையாப்பொருளுமாகிய எல்லாப் பூதங்களும், உன்னிடம் விசுவாசத்தை வைத்திருக்கின்றனவே! உன்னை வேண்டும் இவைகளின் பக்தியை நீ திரும்பிவருவதாற் பயன்பெற்றதாகச் செய். வேர்களால் பின்தொடரச் சக்தியற்றவைகளாய் வேகங் குறைந்த உயர்ந்த மரங்கள், வாயுவேகத்தால் கதறுகின்றன போலும். அசைவற்று இரையெடுப்பதைவிட்டு விருக்ஷங்களின்மேலேயே தங்கியிருக்கும் பறவைகளும், எல்லாப் பிராணிகளிடமும் அன்புவைத்திருக்கும் உன்னைத் திரும்பும்படி வேண்டுகின்றன'' என்றார்கள். திரும்ப வேண்டுமென்று அந்தணர்கள் இவ்வாறு யாசித்திடும் பொழுது, தமசை என்ற நதியும், தடுப்பதுபோற் காணப்பட்டது. அந்நதிக்கரையைச் சேர்ந்தவளவில், சுமந்திரர், களைத்திருக்குங் குதிரைகளை இரதத்தைவிட்டுச் சடிதியிலவிழ்த்துவிட்டு அவற்றின் களைப்பைநீக்கி, அவைகளைத் தண்ணீர் குடிப்பித்து, நன்றாகக் குளிப்பாட்டி, அந்நதிக்கு அருகில் மேயவிட்டார்.

நாற்பத்தாறுஞ் சருக்கம்:

இராமர் நகரத்தவர்களை வஞ்சித்துப் போதல்.

இராமருடைய எண்ணம்.

இராமர், இரம்மியமான தமசைநதிக்கரையைச் சேர்ந்து, சீதையைப் பார்த்து, சௌமித்திரியை நோக்கி இவ்வாறு சொல்லலானார்:—"சுமித்திரையின்புதல்வனே, உனக்கு மங்களம் உண்டாகுக. இப்பொழுது வனவாசத்தில் இரவு அநேகமாய் வந்துவிட்டது. ஆகையால், நீ வீட்டுச் சுகத்தில் மனத்தைச் சிறிதும்வைக்கக்கூடாது. ஒளியற்றும், தம் தம் இடத்திற்குச் செல்லும் பறவைகளாலும் மிருகங்களாலும் நிறைந்துமுள்ள காடு, அழுவதுபோலத் தோன்று

கின்றது; நீ பார். என் பிதாவுக்கு இராஜதானியும், ஆண் பெண் இவர்களை யுடையதுமான அயோத்தி, காட்டிற்குச் சென்ற நம்மைக்குறித்து இப்பொழுது துயரப்படப் போகின்றது; சந்தேகமே யில்லை. புருஷசிரேஷ்டனே, ஜனங்கள், மிக்க குணங்களினால், மன்னவரையும் உன்னையும் என்னையும் பரதசத்துருக்கனர்களையும் விரும்புகின்றனர். தகப்பனாரைக் குறித்தும், புகழ்படைத்த தாயைக் குறித்தும், "இடைவிடாம லழும் அவர்கள் குருடுக ளாய்விடுவார்களோ!" என்று துக்கிக்கிறேன். பரதன், தருமாத்மா; ஏனெனில், தருமார்த்தகாமங்களுடன் கூடிய வாக்கியங்களினால் என்னுடைய தாய்தந்தையர்களைத் தேற்றுவானன்றோ! லக்ஷ்மணா, நான், அடிக்கடி பரதனுடைய கொடுமையின்மையை யெண்ணி, தாய்தந்தையர்களைப்பற்றி விசனப்படாம லிருக்கின்றேன். மனிதப்புலியே, என்னைப் பின்தொடர்ந்துவரும் உன்னால், செய்யவேண்டிய தொழில் செய்யப்பட்டது; ஏனெனில், சீதையைக் காப்பாற்றும்பொருட்டுத் துணை வேண்டுமன்றோ! நான் இன்றிரவில் தீர்த்தத்தை மாத்திரங் குடித்து இருக்கப்போகிறேன். அரணியத்தி லுண்டாகும் விவிதமான பொருள்க ளிருந்தபோதிலும் இதுதான் என் மனத்திற்கு இனியதாய்த் தோன்றுகிறது" என்று இலட்சுமணரிடத்திற் சொல்லி இராமர் சுமந்திரரைப் பார்த்து, "அடக்கமுள்ளவரே, குதிரைகளிடத்தில் ஜாக்கிரதை யுடையவராக இரும்" என்றார்.

இராமர் படுக்கை.

சூரியன் அஸ்தமித்தவளவில், அச்சுமந்திரர், குதிரைகளைக் கட்டி, வேண்டிய புல் போட்டுத் தம்முடைய எல்லாக்காரியங்களையும் முடித்துக்கொண்டு, மங்களமான சந்தியையை யுபாசித்து, இரவு வரப் பார்த்து இராமருக்குச் சயனிக்கு மிடத்தை லக்ஷ்மணருட னமைத்தார். இராமர், தமசைநதிக்கரையில் லக்ஷ்மணருடன் சுமந்திரரால் மரத்திலைகளைக்கொண்டு

அமைக்கப்பட்ட அப்படுக்கையைப் பார்த்துத் தமது மனைவியுடன் படுத்தார். லக்ஷ்மணர், மனைவியுடன் தூங்கின தமையனாரைப் பார்த்து, அவருடைய அநேகவிதமான குணங்களைச் சுமந்திரருக்குக் கூறலானார். அவ்விடத்தில் இரவில் லக்ஷ்மணர் கண் விழித்துச் சுமந்திரருக்கு இராம குணங்களைச் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே சூரியன் உதிக்க வாரம்பித்தான்.

இராமர் நகரத்தவரை வஞ்சிக்க வெண்ணுதல்.

பசுக்கூட்டங்கள் அதிகமாகத் தங்கியிருக்குங் கரையையுடைய தமசைநதியின் சமீபதேசத்தில் பட்டணத்து ஜனங்களுடன் இராமர் அவ்விரவு வசித்தார். மிக்க ஒளியையுடைய இராமர், எழுந்திருந்து, உறங்கும் பட்டணத்துச்சனங்களைப் பார்த்து, வெகு புண்ணிய லக்ஷணங்களுடன் கூடிய தம்பியான லக்ஷ்மணரை நோக்கி, "லக்ஷ்மணா, நம்மிடத்தில் மிக்க அன்புவைத்துக் காதலிகளிடத்திலும் அன்பு நீங்கியவர்களும், மரங்களினடிகளில் தூங்குபவர்களுமான இவர்களை இப்பொழுது பார். லக்ஷ்மணா, இவர்களெல்லாரும், என்னைக் காட்டுக்குப் போகாமல் ஊருக்குத் திருப்பி யழைத்துப்போகத் தீர்மானித்திருக்கிறார்கள். இவர்கள், பிராணனை விட்டாலும் விடுவார்களே யல்லது தங்களுடைய உறுதியைமட்டும் விடமாட்டார்கள். ஆகையால், நாம் இவர்கள் தூங்கும் பொழுதே மெல்ல எழுந்திருந்து இரதமேறி, அச்சமில்லாத வழியிற் செல்லுவோம். அப்படி நாம் செய்தால், என்னிடத்தி லன்புள்ளவர்களும் இக்ஷ்வாகுவம்சத்துப் பிந்தான நகரத்தவர்களுமான ஜனங்கள், இப்பொழுது மரத்தடிகளிற் படுத்துஉறங்குவதுபோல் இனிப் படுத்து உறங்கார்கள். நகரத்தவர்கள் ஒருவித கஷ்டத்தை ராஜகுமாரர்களுக்காக ஏற்றுக்கொண்டால் அவர்களை அதிலிருந்துநீக்குவது அக்குமாரர்களுடைய கடமை

யன்றி அக்கஷ்டத்தை அவர்களை யநுபவிக்கச் செய்வது இராஜகுமாரர்களுக்குத் தக்கதன்று" என்றார். இவ்வாறு இராமர் சொல்ல, தருமமே யுருவெடுத்து வந்தது போலிருக்கும் அவரை நோக்கி லக்ஷ்மணர், "எல்லாவற்றையும் நன்குணர்ந்தவரே, தாங்கள் சொல்லுவது எனக்கும் சரியாகத் தோன்றுகிறது. சடிதியில் இரத மேறுங்கள்" என்றார்.

லக்ஷ்மணருடைய உடன்பாடு.

பிறகு, செல்வவானான இராமர், சுமந்திரரைப் பார்த்து, "தலைவரே, காட்டுக்கு விரைவிற் போகவேண்டும். இங்கிருந்து சென்று இரதத்திற் குதிரையைப் பூட்டுங்கள்" என்றார். சுமந்திரர், சடிதியிற் சென்று, அந்தச் சிறந்த குதிரைகளை இரதத்திற் பூட்டி, அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு இராமரைப் பார்த்து, "இரதம் ஏறிப் போர்புரியும் வீரர்களிலுத்தமரே, இதோ இரதம் வந்து சித்தமாக விருக்கிறது. சீதையுடனும், லக்ஷ்மணருடனும் சடிதியி லேறுங்கள். உங்களுக்கு மங்களமுண்டாகுக" என்றார். இராமர், வில் கவசம் முதலியவைகளுடன் கூடியவராய், இரதத்திலேறி, சுழியையுடையதாய் வேகமாகவோடுந் தமசை நதியைக் கடந்தார். மகாபாகுவான இராமர், அந்த நதியைக் கடந்தவுடன் இரதத்தினின்று இறங்கி, தாள்களாலேயே நடந்து, முட்களில்லாததும் கொடிய மிருகங்களினிடத்தினின்று தோன்றும் அச்சமற்றதுமான பெருவழியை அடைந்தார். பின்பு, இராமர், பட்டணத்துச் சனங்களை வஞ்சிக்கக் கருதியவராய், சுமந்திரரைப் பார்த்து, "சாரதியே, நீங்கள், இரதமேறி, வடக்கு முகமாக ஒரு முகூர்த்தகாலம் வேகமாகச்சென்று, பிறகு இரதத்தைத் திருப்பிக்கொண்டு வாருங்கள். பட்டணத்துச்

இராமர் புறப்படுதல்.

இராமர் ஜனங்களை வஞ்சிக்கச் செய்த வுபாயம்.

சனங்கள் நான் போகும் வழியை அறியாவண்ணம் சாக்கிரதையுடன் செய்யுங்கள்" என்றார்.

சுமந்திரர், இராமர்சொன்னவண்ணஞ்செய்து, வேற்றுவழியால் இராமரிடந் திரும்பிவந்து, இரதங்கொணர்ந்து வந்ததை இராமருக்கு அறிவித்தார். பிறகு, இராமர் லக்ஷ்மணர் சீதை இம்மூவரும், பிரயாணத்தின் மங்களத்தின்பொருட்டு வடக்குமுகமாக நிறுத்தப்பட்ட இரதத்திலேற, சுமந்திரர் அந்தஇரதத்தைத் தவசிகள் வசிக்குங் காட்டை நோக்கி யோட்டினார்.

நாற்பத்தேழாஞ் சருக்கம்:
நகரத்தவர் இராமரைக் காணாது புலம்பல்.

இரவு கழிந்து பொழுது விடிந்தவளவில், நகரத்துச் சனங்கள், தூங்கியெழுந்து, இராமரைக் காணமற் சோகம் மேலிட்டதால் செய்தொழிலற்றவர்களாய், மனம் முறியப் பெற்றார்கள். அந்நகரத்தார், சோகத்தால் தோன்றிய கண்ணீருடன் மிகவும் வாட்டமடைந்து துக்கித்தவர்களாய், இராமரை அங்கங்குத் தேடிக் கண்டுபிடிக்கக்கூடிய அடையாளங்களையும் பெறவில்லை. நல்லமனத்தையுடைய அவர்கள், புத்திமானான இராமரை யிழந்த துக்கத்தால் முகம் வாட எளிமையை யடைந்தவர்களாய், எளிய வார்த்தைகளைப் பரஸ்பரஞ் சொல்லலானார்கள்.

நகரஜனங்களின் துயரம்.

"நம்முடைய தூக்கம் பழிக்கத்தக்கது; ஏனெனில், நாம் அத்தூக்கத்திற்கு வசப்பட்டபடியாலன்றோ, அகன்றமார்பையும் நீண்டகைகளையுமுடைய இராமரை இப்பொழுது பார்க்கமுடியாமற் போயிற்று. பிறருடைய மனங் கோணாமல் நடப்பவரும் மகாபாகுவுமாயிருக்கும் இராமர், தம்மிடத்தில் பக்தி வைத்திருக்கும் நம்மை விட்டிட்டு எப்படிக் காடுசென்றார்? வயிற்றிற் பிறந்த புதல்வனைத் தந்தை காப்பதுபோல் நம்மை

இவ்வளவு காலங் காத்துவந்த இரகுசிரேஷ்டர், நம்மைக் கைவிட்டு எவ்வாறு காட்டிற்குச் சென்றார்? இவ்விடத்தி லேயே நாம் இறந்துபடுவோம்; அல்லது, மரணத்துக்குத் தீக்ஷை செய்துகொண்டு வடதிசை நோக்கிச் செல்லுவ தாகிய மகாபிரஸ்தானஞ் செய்வோம். இராமரை விட்டுப் பிரிந்த நமக்கு, உயிரினால் யாது பயன்? அன்றி, உலர்ந்த பெரிய கட்டைகள் இங்கு மிகுதியாக இருக்கின்றன; அவைகளை யடுக்கி நெருப்பிட்டு எரித்து, அக்கினியோடு கூடிய அந்த ஈமவிறகில் எல்லாரும் புகுவோம். இவ்வாறு செய்யாது நாம் நகரத்திற்குப் போவோமேயானால், நம்மை யாரேனும் வினவினால் நாம் என்ன பதில் சொல்லுவோம்? நாங்கள், அசூயையில்லாதவரும் பிரியத்தைப் பேசுகின்ற வருமான இராமரைக் காட்டிற் கொண்டுபோய்ச் சேர்த் தோமென்று சொல்லுதல் தகுதியானதோ? இராமர் நீங் கியதால் ஏழைமையை யடைந்ததும், பெண்டிர் பாலர் முதியவர் ஆகிய இவர்களை யுடையதுமான அயோத்திமா நகரம், இராமரை விட்டு வந்த நம்மைப்பார்த்து மகிழ்ச்சி யற்றதாகப் போகின்றதே! ஐம்புலன்களை வென்றவராயும், வீரராயுமுள்ள இராமருடன் புறப்பட்ட நாம், அவரைப் பிரிந்தவர்களாய், மீண்டும் எப்படி அயோத்தியைப் பார்ப்போம்?" என்று இவ்வண்ணம் பலவகையாக அந் நகரத்துச் சனங்கள் சொல்லிக்கொண்டு, கைகளை உயர வெடுத்து, துக்கத்தால் எளிமை யடைந்தவர்களாய், கன் றுகளை யிழந்த பசுக்கள்போலப் புலம்பினார்கள். பிறகு, அவர்கள், இரதம் போன சுவட்டால் வழியைப் பிடித் துச் சென்று, இரதச்சுவடு மறைய, மீண்டும் மிக்க துயர மடைந்தவர்களாய், "இதென்ன? இவ்வண்ணமாயிற்றே! தெய்வத்தாற் கெடுக்கப்பட்ட நாம் என்ன செய்யமாட்டு வோம்?" என்று புலம்பினவர்களாய்த் திரும்பினார்கள். துக்கத்தால் வாடிய ஜனங்களெல்லோரும், நல்லவர்கள் மனம்வாடித் துடித்துக்கொண்டிருக்கும் அயோத்திமா

நகராஜனங்கள் நகரத்திற் புகுதல்.

நகருக்குப் போனவழியே திரும்பிவந்து சேர்ந்தார்கள். அவர்கள், அந்நகரத்தைப் பார்த்து, 'வீட்டிற்குப் போகலாமா; கூடாதா' என்ற சிந்தையாற் கலக்கமடைந்தமனத்தையுடையவர்களாய், கண்களிலிருந்து தாரை தாரையாக நீரை வடித்தார்கள். இராமரில்லாத அந்நகரம், மடுவில் கருடன் பாம்பைக் கவர்ந்ததால் அப்பாம்பு நீங்கின நதிபோல், விளக்கமற்றதாக இருந்தது. மனம் முறிந்த அவர்கள், ஆனந்த மற்றபடியால், சந்திரனில்லாத ஆகாசம்போலவும் ஜலமில்லாத சமுத்திரம்போலவுமுள்ள நகரத்தைக் கண்டார்கள். அவர்கள், ஆனந்த மற்றவர்களாய், விலையில்லாத மாளிகைகளில் கஷ்டப்பட்டுப் புகுந்தும் துயரத்தால் விவேக மற்றவர்களாய், தங்கள் வீடு இதுவென்றும் தங்கள் ஜனங்கள் இன்னாரென்றும் அறியவில்லை.

ஜனங்களின் தடுமாற்றம்.

நாற்பத்தெட்டாஞ் சருக்கம்:
அயோத்திமாநகரின் புலம்பல்.

அக்காலத்தில் அயோத்திமா நகரின் மாறுபாடு.

இவ்விதமாகத் துயரப்படுபவர்களும், அதிகமான மனச்சங்கடத்தை யடைந்தவர்களும், நீர் ததும்பிய கண்களையுடையவர்களும், உயிர் நீங்கினும் நன்றென்று கருதுபவர்களும், இராமருடன் சென்று திரும்பிவந்தவர்களும், தைரிய மற்றவர்களுமான நகரத்தவர்களின் உயிர்கள், உடம்பை விட்டு நீங்கினபோல் தோன்றின. அவர்கள், தம் தம் வீட்டை யடைந்து, பெண்டுகள் பிள்ளைகள் இவர்களாற் சூழப்பட்டு, நீர்நிறைந்த முகங்களை யுடையவர்களாய் அழுதார்கள். ஒருவரும், சினேகிதரைக் கண்ட

போதிலும் மகிழவில்லை; அபூர்வமான வஸ்துக்களை யடைந்தபோதிலுங் களிக்கவில்லை. வணிகர்கள், கடைகளில் விற்கும் பொருள்களைப் பரப்பவில்லை. புண்ணியத்தின் பயனாகிய மனைவி புதல்வர் முதலியவர்கள் விளக்கத்தை யடைந்திருக்கவில்லை. இல்லறத்தார்கள் வீட்டிற் சமைக்கவே யில்லை. முன்பு கெட்ட பொருளைப் பெற்றபோதிலும் ஒருவரும் அதற்காக மகிழ்ச்சி யடையவில்லை. மிகுதியாகப் பொருள் கிடைத்தபோதிலும் ஒருவரும் ஆனந்திக்கவில்லை. முதற்பிள்ளைபெற்ற தாயும், சந்தோஷமடையவில்லை. வீட்டுக்குத் திரும்பிவந்த தம் தம் கணவர்களை, மனைவியர் அழுதுகொண்டு, மாவெட்டிகளால் யானைகளைக் குத்துவதுபோல் கொடுஞ் சொற்களால் பழித்துப் பேசலானார்கள்:—"எவர்கள் இராகவரைப் பார்க்கவில்லையோ, அவர்களுக்கு, வீடுகளாலாவது மனைவியாலாவது பொருளாலாவது பிள்ளைகளாலாவது வேறுவகைச் சுகங்களாலாவது என்ன பயன்? இவ்வுலகத்தில் உத்தமபுருஷர் ஒருவரே; அவர் யாரெனில், சீதையுடன் இராமருக்குக் காட்டில் பணிவிடைசெய்துகொண்டு அவரைத் தொடர்ந்துசென்ற லக்ஷ்மணரே. இராமர் புகுந்து ஸ்நானஞ் செய்யும் நதிகளும், தாமரையோடைகளும், பொய்கைகளுமே புண்ணியஞ் செய்தவைகள். மிக அழகிய மரவரிசைகளையுடைய காடுகளும், நதிகளும், நீர்மிகுந்த நிலங்களும், தாழ்வரைகளுடன்கூடிய மலைகளும் இராமரை விளங்கச் செய்யப்போகின்றன. காடுகளையேனும் பருவதங்களையேனும் இராமர் அடைவர். அவைகள், இஷ்டமான விருந்தைப்போல் வந்த இராமரை அருச்சிக்க வல்லமையுடையவைகளே. விசித்திரமான பூக்களைத் தலையணியாகப் பெற்றனவாயும் அநேகவிதமான பூங்கொத்துக்களை யுடையனவாயும் வண்டுகளால் விளங்குவனவாயு முள்ள மரங்கள், இராமரைத் தங்களைக்காணச்செய்யும். மலைகள், கால

அயோத்திமாநகரத்துப் பெண்கள் சோகத்தாற் கூறிய வார்த்தை.

மல்லாக் காலத்திலும் தம்மிடத்து வந்த இராமருக்கு முக்கியமான பூக்களையும் பழங்களையும் அன்போடு காட்டும், பருவதங்கள், ஆச்சரியத்தை யுண்டாக்கும் அநேகவிதமான அருவிகளால், பரிசுத்த ஜலங்களை யுண்டாக்கப் போகின்றன. மலையுச்சிகளிலுள்ள விருக்ஷங்கள், தங்களுடைய அடிகளில் இறைந்துள்ள துளிர்கள் புஷ்பங்கள் இவைகளாலாகிய படுக்கைகளில், சீதையுடன் இராமரைக் கூடிக் கலந்துவிளையாடச்செய்யும். எங்கு இராம ரிருக்கின்றாரோ, அங்கு அச்சமுண்டாகாது; அவமானமு முண்டாகாது; மகாபாகுவாயும் தசரதருக்குப் புதல்வராயும் மகாநுபாவராயு மிருக்கும் அவர், சூரரன்றோ! அவர், நமக்குச் சமீபத்தி லிருப்பாராகையால், நாம் அவரைத் தொடர்ந்து செல்லுவோம். எல்லாரையுந் தாங்குந் தன்மை வாய்ந்த அம்மகானுடைய தாள்நிழல், நமக்கு வெகு சுகமாக இருக்கும். அவர்தாம், இந்த ஜனங்களுக்குத் தலைவர்; அவர்தாம், கதி; அவர்தாம், நம்மால் அடையத்தக்கவர். நாங்கள் சீதைக்குப் பணிவிடை செய்கிறோம்; நீங்கள் இராமருக்குப் பணிவிடை செய்யுங்கள்'' என்று இவ்வண்ணம் வெகு துயரத்துடன் அந்நகரத்துப் பெண்டிர்கள் தங்கள் கணவர்களை நோக்கிப்பேசியுந் துக்கந் தணியப்பெறாதவர்க ளானார்கள். அவர்கள், மீண்டும், "காட்டில் இராமர், உங்களுக்கு யோகக்ஷேமத்தைச் செய்வார். சீதை, பெண்டிராகிய எங்களுக்கு யோகக்ஷேமத்தைச் செய்வார். சிறப்பற்றதும், மனத்திற்குச் சங்கடத்தை நினைப்பிப்பதும், மனத்துக்குப் பிடியாததும், இதயத்தை முறியச்செய்வதுமான இந்நகரவாசத்தால் யார் தாம் மகிழ்வார்? இந்த இராச்சியம், கைகேயியினுடையதாகிவிட்டால் தருமமற்றதும் தலைவனற்றது மாய்விடும். ஆகையால், நமது உயிராற் பிரயோசனமில்லை. இதைப்பற்றியே இவ்வாறிருக்க, புத்திரர்களாலும் பொருள்களாலும்பயனில்லை யென்பதைப்பற்றிக் கேட்கவேண்டுமோ?

செல்வத்தின்பொருட்டுத் தனதுமகனையும் கணவனையும் கைவிட்டவளும் குலத்தைக் கெடுக்கவந்தவளுமான கைகேயி, வேறு யாரைத்தான் துயரத்தினின்று காப்பாள்? நாங்கள், பிழைத்திருக்குங் கைகேயியினுடைய இராச்சியத்தில், வேலைசெய்து பிழைப்பவர்களாய், ஒருபொழுதும் வசிக்கமாட்டோம். இவ்விஷயத்தில், எங்கள்பிள்ளைகளின் மேல் ஆணையிடுகின்றோம். எவளொருத்தி கருணையில்லாமல் மகாராஜாவினுடைய புத்திரரைக் காட்டுக்கு ஓட்டினளோ, அதருமவழியிற் செல்லும் அந்தத் துஷ்டையிடம் எவன்தான் சுகமாக வசிப்பான்? கைகேயியால் வருத்தப்பட்டதும் பிடிப்பற்றதும் நாதனில்லாததுமான இந்நாடு முழுவதும், அவள்நிமித்தமாக நாசமடையப்போகின்றது. அரசர் இராமரைவிட்டுப் பிழைத்திருக்கமாட்டார். தசரதர் மாண்டபிறகு, இராச்சியத்தில் நாசம்வருதல் நிச்சயம். புருஷர்களே, புண்ணியமற்றவர்களும் வறுமையையடைந்தவர்களுமான நீங்கள், இவ்விஷயத்தை நன்றாக ஆலோசித்து, எங்களுடன் கூடியவர்களாய், விஷத்தையாவது குடியுங்கள்; இராமரைத் தொடர்ந்து காட்டுக்காவது போங்கள்; அல்லது முகமறியாத தேசத்திற்காவது செல்லுங்கள். மன்னவர், பொய்யாக வரமொன்றைக் கற்பித்து, இராமரைச் சீதையுடனும் லக்ஷ்மணருடனும் அரணியத்திற்கு ஓட்டினர். கொலையாளியினிடம் பசுக்கள்போல், கைகேயியினுடைய அதீனத்திலிருக்கும் பரதரிடம் நாங்கள் அரசரால் வைக்கப்பட்டோம். லக்ஷ்மணருக்கு முன் தோன்றியவரான இராமர், பூர்ணசந்திரனுக்கொப்பான முகமும் கரியமேனியும் மறைந்ததோட்சந்தியும் சத்துருக்களைவெல்லும் பராக்கிரமமும் முழந்தாள்வரையில் நீண்டகைகளும் தாமரைமலர்போன்றகண்களும் உடையவர்; ஒருவரைக் கண்டவுடன் தாமே முன் பேசுபவர்; மதுரமான தன்மை வாய்ந்தவர்; உண்மையே யுரைப்பவர்; மிக்க பலமுள்ளவர்; எல்லாருடைய மனத்தையுங் கவர்பவர்;

சந்திரன்போல் அழகாக விளங்குபவர்; புருஷர்களிற் சிறந்தவர்; மதயானைபோல் நடப்பவர்; மகாரதர்; அவர் காட்டில் சஞ்சரியாநின்றுகொண்டு காட்டையே விளங்கச் செய்வார்" என இவ்வாறு அழுதுகொண்டு, யமனிடத்தினின்று பயத்தை யடைந்தவர்கள்போல் அலறினவர்களாய், துக்கத்தால் பரிதபித்துக் கதறினார்கள்.

இவ்விதமாகத் தங்கள்வீடுகளில் இராமரைக் குறித்து மாதர்கள் அழுதுகொண்டிருக்கையில், சூரியபகவான் அஸ்தமித்தான்; இரவும் வர ஆரம்பித்தது. ஹோமஞ் செய்ய அக்கினிகள் வளர்க்கப்படவில்லை; வேதாத்தியயனஞ் செய்யப்படவில்லை; புராணமும் படிக்கப்படவில்லை. அப்பொழுது அந்நகரம் இருளாற் பூசப்பட்டதுபோலிருந்தது. வணிகர்களுடைய கடைப்பொருள்களற்றதும் பற்றுக்கோடு நீங்கியதும் சந்தோஷமின்றி யிருப்பதுமான அயோத்திமாநகரம், நக்ஷத்திரங்களற்ற ஆகாயம்போல் விளக்கமின்றி யிருந்தது. நகரத்துப் பெண்டுகள், இராமரைத் தங்கள்புதல்வர்களைவிட விசேஷமாக எண்ணியிருந்தபடியால், அவரைக்குறித்து மிகவுந் துக்கித்தவர்களாய், பிள்ளையாவது சகோதரனாவது காட்டிற்குச் சென்றால் எவ்வாறு புலம்புவார்களோ, அவ்வாறு மிக எளிமையாக அறிவுகெட்டவர்களாய்ப் புலம்பினார்கள். ஆட்டம், பாட்டு, வாத்தியம் இவைகள் ஒழிந்ததும் மகிழ்ச்சியற்றதும் கடை திறக்கப்பெறாததுமான அயோத்திமாநகரம், அப்பொழுது, நீர்குன்றப்பெற்ற சமுத்திரம் போன்றிருந்தது.

நாற்பத்தொன்பதாஞ் சருக்கம்:
இராமர் கோசலநாட்டைக் கடத்தல்.

புருஷசிரேஷ்டரான இராமரும், தமது தந்தையின் கட்டளையை நினைத்துக்கொண்டு, நகரத்துச்சனங்களைவிட்ட

அவ்விராத்திரியின் மிகுதிப்பொழுதிலேயே வெகுதூரஞ் சென்றார். அவ்வாறு அவர் சென்றுகொண்டிருக்கும் பொழுது, சுபமாக இரவு கழிந்தது. தாம் செய்ய வேண்டிய சந்தியாவந்தனத்தை முடித்துக் கோசலைநாட்டின் தெற்கெல்லையை யடைந்தார். அவர், எல்லைவரையிலும் நன்றாக உழப்பட்ட கிராமங்களையும் புஷ்பித்திருக்குங் காடுகளையும் பார்த்துக்கொண்டு, கடந்ததை யறியாமல் சிறந்த குதிரைகளால் விரைவாகச் சென்றார்.

இராமர் கோசல நாட்டின் தெற்கெல்லையை யடைதல்.

கோசலதேசத்துத் தலைவரான இராமர், "காமனுக்கு ஆட்பட்டிருக்குந் தசரதமன்னரைப் பழிக்கவேணும். ஆ! கைகேயி கருணையற்றவள்; கெட்டவொழுக்க முடையவள்; பாவத்தொழிலையே செய்பவள்; கொடுந்தன்மை யுள்ளவள்; மரியாதையைக் கடந்தவள்; தீத்தொழில் புரிந்தாள்; தார்மிகரும், புத்திமானும், தயையுள்ளவரும் ஐம்புலங்களை யடக்கினவருமான அரசகுமாரரைக் காட்டுக்கு ஓட்டினாள்; மிக்கபாக்கியமுள்ளவளும் எப்பொழுதுஞ் சுகத்தை யநுபவித்தவளும் ஜனகராஜன்மகளுமான சீதை, எவ்வாறு துக்கத்தை அநுபவிக்கப்போகிறாள்! ஆச்சரியம்; தசரதராஜர், அன்பற்றவராய், ஜனங்களுக்குப் பிரியராயும் எல்லாருடைய விருப்பிற்கும்இடனாயுமுள்ள புதல்வரான இராமரை ஊரைவிட்டுத் துரத்தத் துணிந்தார்!" என்று இவ்வாறு கூறுபவர்களான கோசலநாட்டுக் கிராமங்களில் வசிக்கும் ஜனங்களுடைய வார்த்தைகளைக் கேளாநின்றுகொண்டு கோசலநாட்டைக் கடந்தார். அதன்பிறகு, இராமர், நல்ல நீரோடப்பெற்ற வேதசுருதி யென்ற நதியைக் கடந்து, அகஸ்தியமாமுனிவர் வசித்துக்கொண்டிருக்குந் தென்திசையை நோக்கிச் சென்றார். பின்பு விரைவாகச் செல்லுங் குதிரைகளால், நல்ல நீர் வாய்ந்ததும், பசுக்கள் மேய்ந்துகொண்டுள்ள ஜலங்கசியும் பக்கங்களையுடையதும், சமுத்திரத்தை

நாட்டார் இராமருக்குப் பரிதல்.

நோக்கிச் செல்வதுமாகிய கோமதி யென்ற நதியைத் தாண்டினர். அதன் பிறகு, அவர், அன்னங்களும் மயில்களும் ஒலித்துக்கொண்டிருக்குஞ் சியந்திகையென்ற ஆற்றைக் கடந்து சென்றார். பிற்பாடு, இராமர், முற்காலத்தில் மனுவென்பவரால் இக்ஷ்வாகுவின்பொருட்டுக் கொடுக்கப்பட்டதும் அநேக தேசங்களாற் சூழப்பட்டதுமாகிய மிகப்பெரிய கோசலநாட்டைச் சீதைக்குக் காட்டினர். மதித்த அன்னத்தின் குரல்போன்ற குரலையுடைய செல்வவானான இராமர், அடிக்கடி தமது சாரதியைப்பார்த்து, "சாரதியே, நான், திரும்பி வந்து, தாய் தந்தையர்களுடன் கூடியவனாய், மகிழ்ச்சியை விளைப்பதும் சிராத்தம் முதலிய காலங்களில் நல்லொழுக்க முடையவர்களா லங்கீகரிக்கப்படுவதும் வில்லாளிகளால் விரும்பப்படுவதுமான வேட்டையை, சரயூநதிக்கரையிலுள்ள பூத்திருக்குங் காட்டில் எப்பொழுது புரிவேன்? நான், ராஜர்ஷிகளுக்கு விருப்பமான ஒருகால்வேட்டையாடுதலை எப்பொழுதுஞ் செய்ய விரும்பேன்" என இவ்வாறான வார்த்தைகளை அவ்வவ் விஷயங்களைப்பற்றி மதுரமாகப் பேசாநின்றுகொண்டு அவ்வழியிற் சென்றார்.

இராமருடைய மனோரதம்.

ஐம்பதாஞ் சருக்கம்:

இராமர் கங்கைக்கரை சேர்ந்து குகரைச் சந்தித்தல்.

இராமர், விசாலமாயும் அழகியதாயுமுள்ள கோசலநாட்டைக் கடந்தபிறகு, கூப்பியகையராய், அயோத்தியையிருக்குந் திசையைநோக்கி, "ககுஸ்தவம்சத்து மன்னவர்களால் இரட்சிக்கப்படுமவளே, நகரங்களுட் சிறந்த

வளே, உன்னிடத்தில் நான் செலவு கேட்டுக்கொள்ளுகிறேன். உன்னுடைய நாலுமருங்கிலும் வசித்துக்கொண்டு உன்னைப் பாதுகாக்குந் தெய்வங்களிடத்திலும் நான் விடைகேட்டுக்கொள்ளுகிறேன்; நான், என் வனவாசத்தை நிறைவேற்றி, தந்தையார் சொல்லை மெய்யாகப் பண்ணுவதால் அவர்கடனைத்தீர்த்து, தாய்தந்தையர்களுடன் சேர்ந்தவனாய் மறுபடி உன்னைப் பார்ப்பேன்" என்றார். அதன்பிறகு, இராமர், இரத்தம்போற் சிவந்தனவும் நீரொழுகுகின்றனவுமான கண்களை யுடையவராய், வலதுபுஜத்தைத் தூக்கி, தம்மைப் பார்க்க வந்த நாட்டுச் சனங்களை நோக்கி, "உங்களால் விருப்பமும் தயையும் தக்கவாறு என்னிடத்துக் காட்டப்பட்டது. இனி வெகுகாலந் துக்கிப்பது அமங்களம். ஆகையால் நீங்கள், உங்கள்தொழிலைப் புரிதற்காகப் போகக்கடவீர்கள்" என்றார்.

இராமர் அயோத்திமாநகரிடத்து விடைகேட்டல்.

நாட்டார்க்கு விடையீதல்.

அவர்களெல்லாரும், இராமரை யபிவாதனம்பண்ணி, வலம்வந்து, துயரத்தாற் புலம்பினவர்களாய், இராமரைப் பார்ப்பதில் ஆசையால், விரைவாகச் செல்லவில்லை. இராமரைப்பார்ப்பதி லுண்டான அளவில்லாத பிரீதியை யுடைய அவர்கள் அழுதுகொண்டிருக்கையில், இராகவர், சாயங்காலத்திற் சூரியன்போல் கண்களுக்குத் தெரியாமல் மறைந்தார். ஆண்புலியான இராமர், மங்களங்களுக்கெல்லாம் இருப்பிடமும், தனதானியங்களை யுடையனவும், தானஞ்செய்யுங் குணமுள்ள ஜனங்களால் மலியப்பெற்றனவும், ஓரிடத்தினின்றும் பயமில்லாதனவும், அழகியனவும், கோயில்களாலும் யூபஸ்தம்பங்களாலுஞ் சூழப்பெற்றனவும், பூந்தோப்புக்களும் மாந்தோப்புக்களும் நிறைந்துள்ளனவும், புனல்நிரம்பியுள்ள தடாகங்களால் விளக்கமடைந்தனவும், செல்வவான்களாய் மகிழ்ச்சியடைந்துள்ள

ஜனங்களால் வாசஞ்செய்யப்பட்டனவும், ஆநிரைகள் நெருங்கப்பெற்றனவும், அரசர்களால் விரும்பிப் பார்க்கத்தக்க மேன்மையுடையனவும், வேதகோஷங்களால் எதிரொலி செய்யப்பட்டனவுமான கோசலநாட்டுக்கிராமங்களை இரதத்தாற் கடந்து சென்றார். தைரியவான்களுட் சிறந்தவரான இராமர், மகிழ்ச்சியை விளைவிப்பதும், மிக்க செல்வத்தை யுடையதும், அழகிய உத்தியானவனங்களுடன் சேர்ந்ததும், அரசர்களுக்குப் போக்கியமுமான இராச்சியத்தை விட்டுக் காட்டுவழியிற் சென்றார்.

கங்கையைக் காணுதல்.

கோசலதேசத்துக்குத் தென்திசையில், மகாபாகுவான இரகுநாதர், சுவர்க்க பூமி பாதாளங்களிற் செல்லுவதும், நிர்மலமான நீரையுடையதும், பாசி நீங்கியதும், புண்ணியமானதும், முனிவர்களாற் சூழப்பெற்றதுமான கங்கையைப் பார்த்தார். சமீபத்திலுள்ள அழகிய ஆச்சிரமங்களால் விளக்கப்பட்டதும், தக்க காலங்களில் அகமகிழ்ந்த தேவமாதர்களாற் சேவிக்கப்படும் நீருள்ள மடுக்களை யுடையதும்,

கங்கையின் வருணனை.

தேவர்கள் தானவர்கள் கந்தருவர்கள் கின்னரர்கள் இவர்களால் விளங்குவதும், அநேக கந்தருவபத்தினிகளாற் சேவிக்கப்படுவதும், எப்பொழுதும் மங்களமானதும், தேவர்கட்கே யுரிய செய்குன்றுகளுடன் சேர்ந்ததும், தேவர்களுக்கு யோக்கியமான பூந்தோட்டங்களுடன் கூடியதும், தேவதைகள் நிமித்தமாக ஆகாசத்தை யடைந்ததும், மிகவும் பிரசித்தமானதும், தேவர்கட்குரிய தாமரையுடன் கூடியதும், தண்ணீரின் மோதுதலாகிற பெருஞ்சிரிப்பாற் கொடுமையாகத் தோன்றுவதும், நுரையாகிற நிர்மலமான சிரிப்புடன் சேர்ந்ததும், சிலவிடத்திற் பின்னல்போல வோடும் ஜலத்தை யுடையதும், சிலவிடத்திற் சுழிகளுடன் கூடியதும், சிலவிடத்தி லசையாம லாழ்ந்திரு

ப்பதும், சிலவிடத்தில் வேகமாக ஓடும் ஜலத்தை யுடையதும், சிலவிடத்திற் கம்பீரமான சத்தத்துடன் கூடியதும், சிலவிடத்திற் பயங்கரமான வொலியுடன் சேர்ந்ததும், தேவர்கூட்டங்களால் ஸ்நாநம்பண்ணப்படும் ஜலத்தையுடையதும், அழகிய வெண்டாமரைகளாற் சோபிப்பதும், சிலவிடத்தில் விசாலமான மணல்மேடுகள் நிறையப்பெற்றதும், சிலவிடத்தில் அழகிய வெண்மணலையுடையதும், அன்னங்களுஞ் சாரசங்களுஞ் சத்தித்துக்கொண்டிருக்கப்பெற்றதும், சக்கரவாகங்கள் கூவப்பெற்றதும், எப்பொழுதுங் களித்துள்ள பறவைகளொலிக்கும் நடுத்தலத்தை யுடையதும், சிலவிடத்திற் கரையில் வளர்ந்திருக்கும் மாலைபோல்விளங்கும் மரங்களாற் சூழப்பட்டதும், சிலவிடத்தில் மலர்ந்த நீலோற்பலமலர்களால் மறைக்கப்பட்டதும், சிலவிடத்தில் தாமரைக்காடுகள் நிரம்பப்பெற்றதும், சிலவிடத்தில் ஆம்பல் செங்கழுநீர் முதலியவைகளின் மொட்டுக்கள் இவற்றினால் விளங்கிக்கொண்டிருப்பதும், சிலவிடத்திற் பலவகைப் புஷ்பதூளிகளாற் செந்நிறத்தை யடைந்திருப்பதால் மதம்பிடித்த மடந்தை போல்வதும், அழுக்கற்ற ஜலத்தால் வைடூரியமணி போல் நிர்மலமாகக் காணப்படுவதும், திக்கஜங்களாலும், காட்டியானைகளாலும், தேவர்களுடைய வாகனமாகிய மதம்பிடித்த அரசயானைகளாலும் ஒலியடைந்த காடுகளை இடையி லுடையதும், கனிகளாலும் பூக்களாலும் துளிர்களாலும் சூழப்பட்டிருப்பதால் சிறந்தஅணிகளாலலங்கரிக்கப்பட்ட மடந்தையை யொத்ததும், புதர்களும் பறவைகளும் நீர்க்குரங்குகளும் முதலைகளும் பாம்புகளும் நிறைந்திருக்கப் பெற்றதும், விஷ்ணுபகவானுடைய திருவடியிலிருந்து தோன்றியதும், பாபமற்றதும், தன்னில் மூழ்குபவரது பாவத்தைப் போக்குவதும், பகிரதனுடைய தவத்தின் மகிமையாற் சிவபெருமானது சடைமுடியிலிருந்து பெருகுவதும், நீர்ப்பறவைகள் ஒலித்துக்

கொண்டிருக்கப்பெற்றதும், சமுத்திரத்தின் பட்டமகி ஷியுமான அக்கங்கையை, சிருங்கபேரபுரத்தை நோக்கிச் செல்லும் இராமர் அடைந்தார்.

இராமர் தம் கருத்தை வெளியிடல்.

அந்த இராமர், அலைகளிற் சுழிகளைப்பெற்ற கங்கையை யருகிப் பார்த்தவுடன் சுமந்திரரை நோக்கி, "சாரதியே, நாம் இப்பொழுது இங்குத்தானே வசிப்போம். நதியின் சமீபத்தில், மிக்க பூக்களையும் துளிர்களையு முடையதும் மிகப் பெரியதுமான தவசிகளுக்குரிய இங்கண மரமொன்று இருக்கிறது; ஆகையால் இவ்விடத்திலேயே வசிப்போம். தேவர், தானவர், கந்தருவர், மனிதர், மிருகம், பறவை ஆகிய எல்லாராலும் நன்குமதிக்கப்பட்ட புனலையுடையதும் பரிசுத்தமானதும் எல்லாநதிகளினுஞ் சிறந்ததுமாகிய கங்கையைத் தரிசிப்போம்" என்றார். லக்ஷ்மணரும் சுமந்திரரும், "அப்படியே" என்றுசொல்லிக் குதிரைகளை அம்மரத்தண்டை செலுத்தினார்கள். இராமர், வெகு அழகாய் விளங்கும் இங்கணமரத்தை யடைந்தவுடன், சீதையுடனும் லக்ஷ்மணருடனும் இரதத்தினின்று கீழே யிறங்கினர். சுமந்திரரும் இரதத்தினின்று இறங்கிக் குதிரைகளை அவிழ்த்துவிட்டு, மரத்தினடியை யடைந்துள்ள இராமரைக் கூப்பியகையராய்க் கிட்டினர்.

குகர் இராமரை யெதிர்கொள்ளல்.

அவ்விடத்தில், இராமருக்கு உயிர்த்தோழராயும், அத்தலத்திற்கு அதிபராயும், குகர் என்ற பேரை யுடையவராயும், வேட்டுவஜாதியிற் பிறந்தவராயும், நால்வகைப் படையினையு முடையவராயும், வேட்டுவர்களுக்குத் தலைவராயும் ஒருவருண்டு; அவர், புருஷ சிரேஷ்டரான இராமர் தம்முடையநாட்டுக்கு வந்திருப்பதைக் கேள்விப்பட்டு, முதியவர்களுடனும் உறவினர்களுடனும் மந்திரிகளுடனும் கூடியவராய் இராமரைக் காண வந்தார்.

இராமர், வேடர்களின் மன்னவரான அவரைத் தூரத்தில் வரும்போதே பார்த்து, லக்ஷ்மணருடன் எதிர்சென்று சந்தித்தார். குகர், மரவுரியுடுத்துச் சடைதரித்துக்கொண்டிருந்த இராமரைக் கண்டு துக்கித்தவராய், அவரைக் கட்டியணைத்து, அவரைநோக்கி, "மகாபாகுவே, தங்களுக்கு அயோத்தியை எப்படியோ, அப்படியே இவ்வூர். நான் தங்களுக்குப் பணிவிடை செய்வேன். விருப்பத்திற்கு இடனான இப்படிப்பட்ட விருந்தை யார் பெறுவார்?" என்று கூறி, பிறகு, குணத்துடன்கூடிய வெவ்வேறுவிதமான அன்னம் முதலானவைகளையும் அர்க்கியத்தையுங் கொணர்ந்து வந்து, இராமரைநோக்கி, "மகாபாகுவே, தங்களுக்கு நல்வரவா? இக்காட்டுப்பூமிமுழுவதும் தங்களுடையது. நாங்கள் தங்களுக்கு வேலைக்காரர்கள்; தாங்கள், எங்களுக்குத் தலைவர்; தாங்கள் எங்களுடைய இராச்சியத்தை யாண்டு வரவேண்டும். உண்பனவும், தின்பனவும், நக்குவனவும், பருகுவனவுமாகிய பொருள்கள் இங்குக் கொணர்ந்துவரப்பட்டுள்ளன; படுக்கைகளும் வந்துள்ளன; தங்கள்குதிரைகளுக்குத் தீனியும் வந்திருக்கிறது" என்றார்.

குகருடைய உபசாரம்.

இவ்வாறு குகர் சொல்லிமுடிக்கவே, இராமர், அவரைப் பார்த்து, "நடந்துவந்து எங்களை யெதிர்கொண்டதனாலும், நட்பினைக் காட்டியதனாலும், நாங்கள் உங்களால் அருச்சிக்கவும் பட்டோம்; மகிழ்ச்சியையு மடைந்தோம்" என்றுகூறிப் பிறகு, குகரைப் பருத்த புஜங்களால் தழுவிக்கொண்டு, "குகரே, சுற்றத்தார்களுடன் உங்களை நோயற்றவர்களாகத் தெய்வாதீனமாய்ப் பார்க்கிறேன். நீங்கள் க்ஷேமமாக இருக்கின்றீர்களா? உங்களுடைய அன்பர்களும் இராச்சியமும் க்ஷேமமா? உங்களுக்குப் பொருள் குறைவின்றி யிருக்கின்றதா? நீங்கள் கொண்டுவந்த எல்லாப்பொருள்களையும் அன்பினாற் கண்டு

இராமர் குகரை க்ஷேமம் வினவி, கொணர்ந்துவந்ததை யேற்கக் கூடாதென்றல்.

அகமகிழ்கிறேன்; ஆயினும், நான் இவற்றை அங்கீகரிக்கக் கூடாது. ஏனெனில், நான் தருப்பத்தாற்செய்த பவித்திரமேகலைகளை யணிந்து, மரவுரியுடுத்து, மான்தோல் தரித்து, வனத்திற் கனிகளையும் கிழங்குகளையும் புசித்து, தருமமொன்றிலேயே கருத்தைச் செலுத்திக் காட்டில் வசிக்குந் தவசியாக இருக்கிறேன். ஆகையால், எனக்கு இப்பொழுது வேண்டுவது குதிரைகளுக்குப் புல்லொன்றுதான். மற்றவைகளிலொன்றும் எனக்கு வேண்டாம். இஃதொன்றைக் கொடுப்பதனாலேயே நீங்கள் என்னை நன்கு பூஜித்தவர்களாவீர்கள். இவைகளோ எங்கள் தந்தையாருடைய விருப்பிற்கு இடமான குதிரைகள். இவை நன்றாகப் போஷிக்கப்பட்டனவேயானால், யானும் அருச்சிக்கப்பட்டவனே'' என்றார். குகர், தமது வேலைக்காரர்களைப் பார்த்து, "சீக்கிரங் குதிரைகளுக்குத் தண்ணீர் காட்டித் தீனிபோடுங்கள்'' என்று கட்டளையிட்டார்.

பிறகு, இராமர், மரவுரியை உத்தரீயமாகப் பூண்டவராய், மாலைச்சந்தியையை யுபாசித்து, லக்ஷ்மணர் கொணர்ந்துவந்த ஜலத்தையே உணவாகக் கொண்டார். லக்ஷ்மணர், சீதையுடன் பூமியிற் படுத்திருக்கும் இராமருடைய பாதங்களைக் கழுவிவிட்டு, அவ்விடத்தினின்று குகரிருந்த இடத்தை நோக்கிச் சென்று மரத்தினடியிலிருந்தார். குகரும், சுமந்திரருடன் லக்ஷ்மணரிடத்தில் இராமகுணங்களைப்பற்றிப் பேசிக்கொண்டு கையில் விற்பிடித்து, இராமரைப் பாதுகாத்தற்காகக் கண்விழித்துக்கொண்டிருந்தார். பூமியிற் படுத்தவரும், புத்திமானும், புகழ்பெற்றவரும், தசரதகுமாரரும், மகாத்துமாவும், முன்னர் ஒருபொழுதுந் துக்கத்தை யநுபவியாதவரும், சுகத்துக்கே யுரியவருமான இராமருக்கு, இரவு மெல்லக் கழியலாயிற்று.

ஐம்பத்தோராஞ் சருக்கம்:
குகர் முன்னிலையில் லக்ஷ்மணர் துயரப்படுதல்.

குகர், நேர்மையால், தமது தமையனுருக்குப் பணிவிடைசெய்தலிற் கருத்தூன்றியவரான இலட்சுமணரைப் பார்த்துப் பரிதபித்துப் பின்வருமாறு சொல்லலுற்றார்:—

குகருடைய பெரு நட்பு.

"ஐயா, தாங்கள் படுத்து நித்திரை செய்ய இதோ சுகமான படுக்கை யேற்படுத்தப் பட்டிருக்கிறது; ராஜபுத்திரரே, இதிற் சுகமாகப்படுத்து இளைப்பாறுங்கள். காட்டில் வசிக்கும் நாங்களெல்லோரும் கஷ்டப்படத் தக்கவர்கள்; தாங்கள் சுகத்துக்கே யுரியவர்கள்; ஆகையால், நாங்கள் இராமரைப் பாதுகாப்பதற்காகக் கண் விழிப்போம். இவ்வுலகத்தில் இராமரைவிட அன்பரானவர் எனக்கு ஒருவருமில்லை. நான், இதை உண்மையாகச் சொல்லுகிறேன். தங்களுடைய முன்னிலையிற் சத்தியத்தின்மே லாணையிடுகின்றேன். இவருடைய அருளினால்தான் இவ்வுலகத்தில் நான் மிக்க புகழையும் தருமத்தையும் பொருளையும் அடைய வேண்டுகின்றேன். ஆகையால், நான், சீதாதேவியுடன் படுத்திருக்கும் உயிர்நண்பரான இராமரைக் கையில் விற்பிடித்தவனாய்ச் சுற்றத்தார்களுடன் எவ்விடத்திலும் பாதுகாப்பேன். எப்பொழுதும் இக்காட்டிற் சஞ்சரிக்குமென்னால் அறியப்படாதது ஒன்றுமில்லை. பகைவர்களுடைய பெரிய சதுரங்கசேனை வந்தபோதிலும் அதை நாங்கள் பொருது வென்றுவிடுவோம்" என்றார்.

குகர் இவ்வாறு சொல்லுமளவில், அரசகுமாரரும் மகாத்துமாவுமான லக்ஷ்மணர், அவரைப் பார்த்து, "மாசற்றவரே, தருமத்தையே கைப்பற்றி யிருக்குந் தங்களால் பாதுகாக்கப்படும் நாங்கள் எல்லோரும், அச்சத்தை யடைந்திலோம்;

லக்ஷ்மணருடைய துக்கம்.

ஸீதையுடன் பூமியில் இராமர் படுத்திருக்கையில், நான், நித்திரையையாவது பிராணனையாவது சுகத்தையாவது அடைதல் எவ்வாறு முடியும்? எவர் தேவாசுரர்களெல்லோராலும் யுத்தத்தில் எதிர்க்க முடியாதவரோ, அவர் ஸீதையுடன் புற்களிற் சுகமாகப் படுத்திருக்கிறார்! பாருங்கள். எவர் மந்திரம், தவம், வேள்வி முதலியவற்றால் தசரதருக்கு மூத்தபிள்ளையாகவும் முக்கியராகவும் தமக்குத் தக்க லக்ஷ்மணனை யுடையவராகவும் பிறந்தாரோ, அந்தஇராமர் காட்டுக்குப் போனபிறகு, அந்தத் தசரத மன்னவர் வெகுகாலம் பிழைத்திருக்கமாட்டார். விரைவில் பூமி நாதனற்றதாய்விடும்; நிச்சயம். ஸ்திரீகள், மிக்க ஒலியுண்டாக அழுது சிரமத்தால் ஓய்வார்கள்; அதனால் அரண்மனை ஒலியடங்கினதாகுமென்று எண்ணுகிறேன். இனி, கௌசலையும் தசரதரும் என்தாயும் பிழைத்திருப்பார்களென்று நான் நினைக்கவில்லை; ஒருகால் பிழைத்திருந்தால், இன்றிரவுமட்டும் பிழைத்திருப்பார்கள். என்தாயார், சத்துருக்கனனைப் பார்க்கவேண்டுமென்று ஒருவேளை பிழைத்திருப்பர். வீரப்புதல்வனைப் பெற்ற கௌசலை நிச்சயமாய் மாண்டுவிடுவ ரென்பதைப் பற்றி நான் துக்கிக்கிறேன். அன்புள்ள ஜனங்களை யுடையதும் அழகிய காட்சியால் இஷ்டத்தைச் செய்வதும் தசரதமன்னவருடைய மரணத்தால் விசனமடைந்ததுமான அந்த அயோத்தியாநகரம் அழிந்துவிடப்போகின்றதே! மகாத்துமாவும் அன்பரும் மூத்தகுமாரருமான இராமரைப் பாராத மகாத்துமாவான தசரதருடைய பிராணன் உடலில் எவ்வாறு தங்கும்? தசரதர் மாண்டவுடன் அவர்பின் கௌசலை மாண்டுபோவார். அதன் பிறகு, என் தாயும் நாசமடைவார். இராமரை இராச்சியத்தில்முடிசூட்டிவைக்காமல்,மேன்மேல்வளர்ந்துவந்த தமது கருத்துக் கைகழிந்துவிட்டதால், எனதுபிதா இறந்தேவிடுவார். அவர் இறந்தஅக்காலத்தில், பிரேதத்திற்குத் தொ

ழில்செய்யநேரிடும்பொழுது, இறந்தஅரசரைப் பாக்கியசாலிகள் ஸம்ஸ்காரஞ்செய்வார்கள். அழகான நாற்சந்திகளின் அமைப்பினைப் பெற்றதும், நன்ருக அமைந்த பெரியவீதிகள் பொருந்தியதும், மாடமாளிகைகள் நிறைந்ததும், ரதகஜதுரகங்களால் நெருக்க மடைந்ததும், வாத்தியகோஷங்கள் முழங்கப் பெற்றதும், எல்லாமங்களமும் அமைந்ததும், மகிழ்ந்த செல்வர்கள் வசிக்கப்பெற்றதும், தோப்புக்களும் தோட்டங்களும் மலிந்துள்ளதும், கூட்டங்கூடி நடத்தும் உத்ஸவங்களால் விளங்குவதுமான எனதுதந்தையாரது இராஜதானியாகிய அயோத்தியில் பரதர்முதலியோர் சுகமாக வாழப்போகிருர்கள். தசரதர் பிழைத்திருப்பாரா? இராமர் வனவாசத்தை நிறைவேற்றினபின்பு, மீண்டும் உண்மையில் நல்ல விரதத்தையுடைய தந்தையார் க்ஷேமமாயிருக்க நாங்கள் அயோத்தியிற் புகுவோமா? இந்த இராமர் வனவாசத்தை நிறைவேற்றினபிறகு, தமது சொல்உண்மையாகப்பெற்ற தசரதர் க்ஷேமத்துடனிருக்க அயோத்தியிற் புகுவோமா?" என இவ்வாறு துக்கத்தாற் பரிதபித்துக்கொண்டிருக்கும்போழுதே இரவு கழிந்தது. ஜனங்களுக்கு நன்மையைச் செய்பவரும் ராஜகுமாருமான லக்ஷ்மணர், இராமரிடத்துள்ள அன்பால் இவ்வாறு உண்மையாகக் குகரிடம் உரைக்க, அககுகர், ஜ்வரத்தால் வருந்தும் யானைபோல் துக்கத்தால் மிகவருந்தினவராய்க் கண்ணீர்விட்டார்.

ஐம்பத்திரண்டாஞ் சருக்கம்:

இராமர் ஜடைதரித்துக்கொண்டு கங்கையைக் கடத்தல்.

விசாலமான மார்பையுடையவரும் மிக்க கீர்த்தியையடைந்தவருமான இராமர், பொழுது விடியுஞ் சமயத்தில்,

சுபலக்ஷணங்கள் பொருந்தியவரும் சுமித்திரையின் புதல்வருமான லக்ஷ்மணரை நோக்கி, "காமத்தை விளைக்கும் இரவு பெரும்பாலுங் கழிந்தது. அருணனுதிக்குந் தருணமும் கிட்டிற்று. குழந்தாய், இதோ பரத்துவாஜ பக்ஷியும் குயிலும் கூவுகின்றன. வனத்திற் சத்திக்கும் மயில்களின் சத்தமும் கேட்கின்றது. யாகஞ்செய்ய வுரியவனே, சமுத்திரத்தை நாடி வேகமாகச் செல்லும் இக்கங்கையை நாம் கடப்போம்" என்றார். நண்பரை மகிழ்விப்பவரான லக்ஷ்மணர், இராமருடைய வார்த்தையின் கருத்தை யறிந்து, குகருக்கும் சுமந்திரருக்கும் இராமருடைய வார்த்தையின் பொருளை யறிவித்துத் தமது தமையனாரது முன்பே யிருந்தார். அக்குகர், இராமர் சொல்லியதைக் கேட்டு, அவர்கருத்தைச் சிரசால் வகித்துத் தமது மந்திரிகளை விரைவில் வரவழைத்து அவர்களை நோக்கி, "துடுப்புடன் கூடியதும் மீகாமனைப்பெற்றதும் விரைவில் கடக்கவல்லதும் உறுதியுள்ளதுமான மரக்கலத்தை இராமருக்காகத் துறையில் விரைவாகக் கொண்டுவாருங்கள்" என்றார்.

இராமர் கங்கையைக் கடப்போமென்றல்.

குகர் மரக்கலங் கொண்டுவரக் கட்டளையிடுதல்.

அக்கட்டளையைக்கேட்டுக் குகருடையமந்திரிமார், அழகிய மரக்கலத்தைக் கொண்டுவந்து, குகருக்குத் தெரிவித்தார்கள். பின்பு குகர், அஞ்சலியுடன் கூடியவராய், இராமர்முன் நின்று, அவரைநோக்கி, "தலைவரே, இதோ மரக்கலம் வந்திருக்கிறது. இன்னும் யான் யாதுசெய்யவேண்டும்? தேவகுமாரருக்கு ஒப்பானவரே, புருஷசிங்கமே, சமுத்திரத்தை நாடிச் செல்லும் இந்நதியைக் கடக்கத்தக்க மரக்கலம் வந்திருக்கிறது. அழகியவிரதத்தை யுடையவரே, தாங்கள் இதில் வீற்றிருக்கலாம்" என்றார்.

மரக்கலம் சித்தமானது.

பின்பு, மிக்க காந்தியால் விளங்குமவரான இராமர், குகரை நோக்கி, "உங்களால் நான் என்னுடைய இஷ்டத்

தைப் பெற்றேன். மண்வெட்டி கூடை முயலிய உபகரணங்களைச் சீக்கிரம் மரக்கலத்தி லேற்றுங்கள்" என்றார். அதன் பிறகு ராமலக்ஷ்மணர்கள், கவசமணிந்து தூணிகளையுங் கத்திகளையுந் தரித்துக்கொண்டு வில்லாளிகளாய், சீதையுடன், கங்கையை யடையும் வழியாகச் சென்றார்கள்.

இராமர் மரக்கலமேறப் புறப்படுதல்.

சுமந்திரர், தருமத்தை யுணர்ந்தவரான இராமரை வணக்கத்துடன் கிட்டிக் கூப்பியகையராய், "எனக்கு என்ன கட்டளை யிடுகிறீர்கள்?" என்று கேட்க, இராமர், வலக்கரத்தால் அவரைத் தட்வாநின்று கொண்டு, "உத்தமரானசுமந்திரரே, சீக்கிரமே அரசருடைய சமீபத்திற் சென்று முன்போலவே இனிமேலும் அங்கு ஜாகரூகராகவிருங்கள். கங்கைக்கரை வரையில் நீங்கள் இரதமோட்டி வந்தீர்களன்றோ! இனி, இரதத்தை விட்டுக் கால்களினாற் பெருங் காட்டிற்போவேன்; ஆகையால் நீங்கள் திரும்பிவிடலாம்" என்று கூறினர்.

இராமர் சுமந்திரருக்கு விடைகொடுத்தல்.

சாரதியான சுமந்திரர், இராமர் தமக்கு விடையளித்ததைக் கேட்டுத் துயரமடைந்தவராய், ஆண்புலியான அவரைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானர்:—

"மனைவியுடனுந் தம்பியுடனுங் கூடிய தாங்கள், எளியவன் போலக் காட்டில்வசித்தல் உலகத்தில் ஒருவராலும் அங்கீகரிக்கப் படவில்லை. பிரமசரியம், அத்தியயனம், மென்மை, நேர்மை ஆகிய இவைகளையுடைய தங்களுக்கும் விசனம் நேரிட்டதனல், நான், இனி, பிரமசரியத்திலாவது அத்தியயனத்திலாவது மென்மையிலாவது நேர்மையிலாவது பிரயோஜநமிருக்கிறதென்று கருதமாட்டேன். இராகவரே, வீரரே, தாங்கள், தம்பியோடும் ஜாநகியாரோடுங் காட்டில் வசித்தவர்களாய், விஷ்ணுவைப்போல் ஒப்பில்லாத புகழையடையப்போகிறீர்கள். நாங்களோ உம்மால் வஞ்சிக்கப்பட்

சுமந்திரருடைய புலம்பல்.

டவர்களாய்க் கெடுக்கப்பட்டோம்; துக்கத்தை யடைந்தவர்களாய், பாபத்தையே யெப்பொழுதுங் கருதுமவளான கைகேயியின்வசத்தி லாகப்போகின்றோம்" எனஇவ்வாறு கூறுநின்ற சாரதியான சுமந்திரர், உயிருக்கு ஒப்பானவரும் வெகுதூரஞ் செல்ல நிற்பவருமான இராமரை நோக்கி, மிக்கதுயரமடைந்தவராய் வெகுநேரம் அழுதார்.

இராமர், அழுது ஓய்ந்தபிறகு ஆசமனஞ்செய்து பரிசுத்தராய்நின்ற சுமந்திரரை நோக்கி, வெகு மதுரமாக "இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த அரசர்களுக்கு, உங்களைப்போன்ற நண்பர் ஒருவருமில்லை; தசரதமன்னவர் என்னைக் குறித்துத் துயரப்படாதவண்ணம் நீங்கள் செய்யவேண்டும். மன்னவர் புத்திரசோகத்தால் மாழ்கின மன முடையவர்; முதுமைப்பருவ மடைந்தவர்; மன்மதனுக்கு அடிமைப்பட்டிருக்கின்றார்; ஆகையால்தான் இதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மகாத்மாவானமன்னவர், கைகேயியம்மாவின் இஷ்டத்தைச் செய்வதன்நிமித்தம் எவ்வெவற்றைக் கட்டளையிடுகிறாரோ, அவ்வவற்றை அநாதரியாமற்செய்து முடிக்கவேண்டும். மன்னவர்கள், எல்லாத் தொழில்களும் தங்கள்கருத்தின்படி நிறைவேறுவதால்தான், இராச்சியத்தைப் பாதுகாக்கின்றார்கள். சுமந்திரரே, அந்த மகாராஜர் அநிஷ்ட மடையாமலும் துக்கத்தால்வாடாமலுமிருக்கும்படி அவருடைய காரியத்தைச் செய்யுங்கள். நீங்கள், துக்கத்தையறியாதவரும் பிராயத்தில்முதியவரும் ஐம்புலங்களை வென்றவருமாகிய மகாராஜாவை என் பொருட்டு வணங்கி, "நானும் லக்ஷ்மணனும் சீதையும், அயோத்தியை விட்டுவந்து துயரப்படாது காட்டில் வசிக்கிறோம். பதினான்குவருஷங் கழிந்தவுடனே வரும் லக்ஷ்மணனையும் என்னையும் சீதையையும் அடிக்கடி பார்க்கப் போகிறீர்கள்" என இவ்வாறு அவரிடத்திற் சொல்லி,

இராமர் சுமந்திரருக்கு இட்ட கட்டளை.

இராமர் அயோத்திக்குச் செய்தி சொல்லி யனுப்புதல்.

மாதாவுக்கும் கைகேயியம்மாவுக்கும் தாயின் அருகிலிருக்கும் மற்றைத்தேவிமார்களுக்கும் என்னுடைய க்ஷேமத்தைச் சொல்லுங்கள். அன்றியும், கௌசலையிடத்தும் மகாராஜரிடத்தும், சீதை நான் வித்துவானுனலக்ஷ்மணன் ஆகிய நாங்கள் சொன்னதாக வணக்கத்தையுஞ் சொல்ல வேண்டும். அங்குப் போய்ச் சேர்ந்தவுடனே நீங்கள், பரதனை வரவழைத்து, அவனுக்கு இளவரசு பட்டாபிஷேகம் பண்ணிவைக்கவேண்டும். பரதனுக்குப் பட்டாபிஷேகம்பண்ணி அவனைக் கட்டியணைத்துக்கொண்ட பின்பு, எங்களுடைய பிரிவாலுண்டான துக்கம் உங்களை வருத்தாது. பரதனிடத்திலும், "நீ, உன் தகப்பனுரிடத்தில் எவ்விதமாக நடந்துகொள்ளுகிறுயோ, அதேவிதமாக உன்னுடைய எல்லாத் தாய்மார்களிடமும் வித்தியாசமில்லாமல் நடந்துகொள்ள வேண்டும். உனக்குக் கைகேயியும் சுமித்திரையும் எவ்வாறு சிறந்தவர்களோ, அவ்வாறே என் தாயான கௌசலையுஞ் சிறந்தவள். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதால் இளவரசுபட்டத்தை யங்கீகரித்த உன்னால், இம்மை மறுமைச் சுகங்களைப் பெறலாகும்" என்று சொல்லவேண்டும்" என்றுர்.

இவ்வாறு இராமரால் விடைகொடுக்கப்பட்டவரும் துக்கத்தால் மெலிபவருமான சுமந்திரர், அவ்வார்த்தையைக் கேட்டு அன்பினுல் பின்வருமாறு சொல்லலானுர்:—

சுமந்திரர் உடனிருக்க வேண்டிக்கொள்ளுதல்.

"நான் தைரியத்துடன் எவ்வார்த்தையைச் சொல்வனே, அது உபசாரத்தினுலன்றி அன்பினுற் சொல்வதாகும்; அவ்வார்த்தை முழுவதையும், இவன் பக்திமானென்று எண்ணித் தாங்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும். நான், தங்களுடைய பிரிவால், புத்திரசோகத்தை யடைந்ததுபோலுள்ள அந்நகரத்தைத் தங்களுடனல்லாமல் எவ்வாறு சென்று சேர்வேன்? முன்பு, இராமருடன் கூடிய இரதத்

லதைப் பார்த்து, இப்பொழுது இராமரில்லாமற் செல்லும் இரதத்தைப் பார்க்கும் ஜனங்களும் அயோத்திநகரும் பிளந்துவிடுமே! போரிற் கொல்லப்பட்ட வீரனை யுடைய சேனையைப்போல, தங்களை யின்றிச் சாரதியோடு மாத்திர மிருக்குஞ் சூனியமானதேரைக் கண்டு, அயோத்திமாநக ரம் எளிமையை யடையுமே! ஜனங்கள், தாங்கள் வெகு தூரத்தில் வசிப்பினும், பாவனையால் கண்ணுக்கு எதிரில் நிற்குந் தங்களைக் கண்டு, உணவிலும் விருப்பமற்றவர்களா யிருப்பார்க ளென்பது திண்ணம். இராகவரே, தங்களு டைய பிரிவில், தங்கள்விஷயமான துக்கத்தால் வாடிய மனத்தையுடைய ஜனங்களின்கலக்கத்தைத்தாங்கள்பார்த் தீர்களன்றோ! பட்டணத்துச் சனங்கள், இரதத்துடன் கூடிய என்னைக் கண்டமாத்திரத்தில், தங்களுடைய பிரி விற்செய்த அழுகையினும் நூறுமடங்கு அதிகமாகப் புலம் புவார்களே! நான் தங்கள்தாயாரிடம் என்ன சொல்லு வேன்? "நான் தங்களுடைய குழந்தையை மாமன்வீட் டில் விட்டு வந்தேன்; ஆகையால் வருந்தவேண்டாம்" என்று சொல்லலாமென்றால், நான் இவ்வாறு பொய் வார்த்தைசொல்வதில்லை. "காட்டில் விட்டுவந்தேன்" என்ற கேட்கமுடியாத உண்மைச்சொல்லை எவ்வாறு சொல்லு வேன்? தங்களையும் சீதாலக்ஷ்மணர்களையும் சுமப்பனவும் என்னுடைய அதீனத்திலிருப்பனவுமான உயர்ந்த குதி ரைகள், தங்களையின்றி யிருக்கும் இரதத்தை எவ்வாறு சுமக்கும்? ஆகையால், மாசற்றவரே, தங்களை விட்டிட்டு நான் அயோத்திக்குப்போக வல்லமை யுடையவனல்லன். தங்களுடன் காட்டுக்குவர எனக்கு அநுமதி யளிக்கவேண் டும். இவ்விதமாக இரக்கும் என்னைக் கைவிடுவீர்களே யானால், நான் அந்தக்ஷணமே இரதத்துடன் அக்கினியில் விழுந்துவிடுவேன். உடன் வர எனக்கு அநுமதிகொடுத் தால், நான், வனத்தில் தங்களுடைய தவத்துக்கு இடை

யூறு செய்யும் பிராணிகளை இரதத்தாற் போக்குவேன். பட்டாபிஷேகமான தங்களுக்குத் தேரோட்டுதலா லுண்டாகுஞ் சுகம், பாக்கியவீனனான என்னு லடையப்படவில்லை; தங்களுடைய உதவியால், வனவாசத்தா லுண்டாகுஞ் சுகத்தையாவது அடைய விரும்புகின்றேன். கருணை புரியுங்கள்; அரணியத்தில் தங்களுடைய சமீபத்தி லிருக்க விரும்புகிறேன். தாங்கள் என்மேல் அன்பு கூர்ந்து "என் சமீபத்தில் வசிப்பவனாக இரு" என்று சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். வீரரே, இக்குதிரைகளும், காட்டில் வசிக்குந் தங்களுக்குத் தொண்டு புரிந்துவந்தால், உத்தமமான கதியை யடையும். நான், காட்டில் வசித்துக்கொண்டு தங்களுக்குப் பணிவிடையைத் தலையாற் செய்வேன்; அயோத்தியையும் தேவலோகத்தையும் எல்லாப்படியாலும் கைவிடுகிறேன்; தேவேந்திரனுடைய இராஜதானியில், பாவத்தொழிலையுடையவனால் எவ்வண்ணம் புகுதல் முடியாதோ, அவ்வண்ணம் தங்களை யின்றி யிருக்கும் என்னால் அயோத்தியிற் புகுதல் முடியாது. வனவாசம் முடிந்தவுடன் மீண்டும் இந்த இரதத்தினாலேயே பட்டணத்திற்குத் தங்களைச் சுமந்து செல்வே னென்பது என்னுடைய கருத்து. காட்டில் தங்களுடனிருக்கு மெனக்குப் பதினான்குவருஷமும் ஒருக்ஷணமாய்க் கழிந்துவிடும்; அதுவே, தங்கள் பிரிவில் நூறு மடங்கு அதிகமாகும். வேலைக்காரர்களிடத்தில் அன்பு வைத்தவரே, யஜமானனுடைய புதல்வரான தாங்கள் செல்லுங் காட்டில் உடன்வர உறுதிகொண்டிருப்பவனும், தங்களிடத்தில் பக்தியையுடையவனும், தங்களுடைய வேலைக்காரனும், மரியாதையைக் கடந்து செல்லாதவனுமான என்னைத் தாங்கள் கைவிடுதல் தக்கதன்று" என்றார்.

வேலைக்காரர்களிடம் அன்புவைத்த இராமர், இவ்வாறு எளிமையுடன் பலவகையாக அடிக்கடி யாசிக்குஞ் சுமந்திர

சுமந்திரர் திரும்ப வேண்டியதற்குக் காரணம்.

ரைப்பார்த்துப் பின்வருமாறு மொழிய லானார்:— "யஜமானனிடத்தில் அன்புள்ள சுமந்திரரே, நான், உங்களுக்கு என்மீதுள்ள சிறந்தபக்தியை அறிவேன். இங்கிருந்து பட்டணத்திற்கு உங்களை யனுப்புங் காரணத்தைக் கேளுங்கள். என்னுடைய சிறியதாயாரான கைகேயியம்மா, பட்டணத்தை யடைந்த உங்களைப் பார்த்து, "இராமன் காட்டை யடைந்தான்" என்று விசுவாசமடைவர்; அத்தேவியார், வனவாசத்தை யான் அடைந்ததால் மகிழ்ந்து, தார்மிகரான அரசர்மீது உள்ள "பொய்சொல்லுகிறவர்" என்ற சந்தேகம் நீங்குவர். என்னுடைய சிறிய தாயார், தம் புதல்வனுன பரதனுல் எம்மருங்கும் பாதுகாக்கப்படும் வளமுள்ள இராச்சியத்தாற் சுகமடைவர். இது தான் முக்கியமான பிரயோஜனம். நீங்கள், என்னுடைய விருப்பத்திற்காகவும், தந்தையாருடையவிருப்பத்திற்காகவும், இரதத்துடன் கூடியவராய், ஊரை யடையுங்கள். நான் எவரெவர்க்கு எவ்வெவற்றைச் சொல்லும்படி சொன்னேனே, அவ்வவற்றை அவரவர்களிடஞ் சொல்லவேண்டும்" என்றூர்.

இராமர் ஆலம்பால் கொண்டுவரக் கட்டளையிடல்.

தைரியவானுன இராமர், இவ்வாறு சுமந்திரரிடத்திற் கூறி அடிக்கடி நல்லவார்த்தை சொல்லி, பின்பு குகரை நோக்கி, காரணங்களுடன் கூடிய வார்த்தையைச்சொல்லலானுர்:—"குகரே, ஜனங்களுடன்கூடிய காட்டில் வசித்தல் எனக்கு யோக்கியமன்று. இப்பொழுது ஆச்சிரமத்தில் வசித்தலே தக்கது. ஆகையால், ஆச்சிரமவாசத்துக்குத் தக்க ஜடைதரித்தல் முதலியவை செய்யவேண்டும். கைகேயியால் பதினன்குவருஷங் காட்டில் வசிக்கும்படி கட்டளையிடப்பட்ட நான், தந்தை சீதை லக்ஷ்மணன் என்ற இவர்களுக்கு இதத்தைச் செய்ய விருப்பமுடையவனாய், தவசிக

ளுக்கு உரியனவான காட்டுணவைப்புஜித்தல் தரையிற்படுத்தல் முதலிய நியமங்களைக் கைக்கொண்டு, ஜடைதரித்துக்கொண்டு போகப்போகின்றேன்; அதற்காக ஆலம்பாலைக் கொண்டுவாருங்கள்" என்றார். உடனே குகரும், அந்தப்பாலை இராமர்பொருட்டுச் சடிதியிற் கொண்டுவந்தார். அந்தோ! அதனால் இராமர் தமக்கும் லக்ஷ்மணருக்கும் ஜடைசெய்தார்!! நீண்ட கைகளையுடைய ஆண்புலியான இராமர், ஜடையுடையவரானார்!! மரவுரிகளை யுடுத்துக்கொண்டிருப்பவர்களும் ஜடாமண்டலதாரிகளும் ரிஷிகளையொத்தவர்களுமாய், இராமலட்சுமணராகிய அவ்விரண்டு உடன்பிறந்தவர்களும் விளங்கினார்கள்.

ஜடைதரித்தல்.

பின்பு, வானப்ரஸ்தர்களுக்குரிய தருமத்தை மேற்கொண்டு பிரமசரியம் முதலிய விரதத்தை யுடையவரான லக்ஷ்மணருடன்கூடிய இராமர், நண்பரான குகரைப் பார்த்து, "குகரே, சதுரங்கபலத்திலும், பொருளிலும், அரணிலும், நாட்டிலும் ஜாக்கிரதை யுடையவராக இருங்கள்; இராச்சியம் நான்கு பக்கத்திலும் மிகவும் வருந்திக் காக்கத் தக்கதன்றோ!" என்றார். இக்ஷ்வாகு வம்சத்தை மகிழ்விக்கப் பிறந்தவரான இராமர், இவ்வாறு குகருக்கு விடையளித்து, சிறிதும் மனங்கலங்காமல், சீதையுடனும் இலட்சுமணருடனும் சீக்கிரம் போகலானார்.

இராமர்குகருக்கு விடையளித்தல்.

அந்த இராமர், நதிக்கரையில் மரக்கலத்தைக் கண்டு, வேகமாகச்செல்லுங் கங்காநதியைக் கடக்க விரும்பினவராய், லக்ஷ்மணரைப் பார்த்து, "ஆண்புலியே, இங்கிருக்கும் மரக்கலத்தைப் பிடித்துக்கொண்டு நன்மனத்தையுடைய சீதையை யேற்றுவாய்; உடனே நீயும் ஏறுவாய்" என்றார். இராமருடைய கருத்தையறிந்தவரான இலட்சுமணர், தமது தமையனருடைய

மரக்கலமேறினது.

கட்டளையைக் கேட்டு, அதனை நிறைவேற்றுபவராய், சீதையை முதலில் ஏற்றிப் பிறகு தாம் ஏறினர். பின்பு, பராக்கிரமமுடையவரும் இலட்சுமணருக்குத் தமையனுமான இராமர், தாமே மரக்கலமேறினர். அதன் பிறகு, வேடத்தலைவராகிய குகர், தமது சுற்றத்தாரை நோக்கி "கரையிற்கொண்டுபோய்விடுங்கள்" என்று ஏவினர். மிக்க தேஜஸ்வியான இராமர், அந்த மரக்கலத்தில் ஏறினபிறகு, பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்குந் தக்கதும் தமக்கு நன்மை தருவதுமான மந்திரத்தை ஜபித்தார். பின்பு, இராமர், சாஸ்திர முறைப்படி ஆசமனம் பண்ணிச் சீதையுடன் சந்தோஷமாகக் கங்கையை வணங்கினர். மிக்க காந்தியையுடைய இலட்சுமணரும் வணங்கினர். இராமர், சுமந்திரருக்கும் தமதுபரிவாரங்களுடன்கூடிய அக்குகருக்கும் விடைகொடுத்துவிட்டு, மரக்கலத்தில் வீற்றிருந்தவராய், அதனைச் செலுத்தும்படி நாவிகர்களுக்குக் கட்டளையிட்டார்.

பின்பு, அவர்களால் தள்ளப்பட்டதும் ஜாக்கிரதையையுடைய நாவிகர்களையுடையதும் அழகியதுடுப்புக்களால் விரைவாகச்செல்வதுமான அம்மரக்கலம், விரைவில் ஜலத்தைக் கடக்கச் சென்றது. அது கங்கையின் நடுவை யடைந்தவுடன், குற்றமற்ற சீதை, கங்கையை நோக்கி, "கங்கையே, மகாராஜராயும் புத்திமானுயுமிருக்குந் தசரதருக்குப் புதல்வரான இவர், உன்னுல் ரக்ஷிக்கப்பட்டு, பூர்ணமாகப் பதினான்குவருஷங் காட்டில் வசித்து, தமது தந்தையாருடைய வாக்கைத் தடையில்லாமல் நிறைவேற்றித் தம்பியாருடனும் என்னுடனும் மீண்டுந் திரும்பி எப்பொழுது வருவாரோ, அதன் பிறகு, க்ஷேமமாகத் திரும்பினநான், கீர்த்தியை யுடையவளே, எல்லாவிருப்பங்களுங் கைகூடப் பெற்றவளே, தேவீ, உன்னைச் சந்தோஷமாகப்

சீதைகங்காதேவியைப் பிரார்த்தித்தது.

பூஜிப்பேன். தேவீ, மூன்று பிரிவாகப் பிரிந்து மூன்று வழியிலோடுகின்ற நீ, பிரமலோகத்தினின்று தோன்றினாய்; இவ்வுலகத்தில், சமுத்திரராஜனுடைய பார்யையாகவுங் காணப்படுகின்றாய். அழகியே, தேவீ, இவ்வாறு புகழ்பெற்ற உன்னை நான் நமஸ்கரிக்கிறேன்; துதிக்கிறேன். ஆண்புலியான இராமர், மங்களமாகத் திரும்பி வந்து இராச்சியத்தை யடைந்தபொழுது, உனக்கு விருப்பத்தைச் செய்யும்பொருட்டு, அந்தணர்களுக்கு, நூறாயிரம் பசுக்களையும் வஸ்திரங்களையும் மனோஜ்ஞமான அன்னத்தையுங் கொடுப்பேன். தேவீ, நகரத்தை மீண்டுமடைந்த நான், நியமத்தை யுடையவளாய், ஆயிரங் கள்ளுக்குடங்களாலும் மாம்சமாகிற உணவினாலும் உன்னைப் பூஜிப்பேன். உன் நதிக்கரையி லிருக்குந் தேவதைகளெல்லாரையும் புண்ணியதீர்த்தங்களையுங் கோயில்களையும் பூஜிக்கிறேன். குற்றமற்றவளே, மாசற்ற என்கணவர், என்னுடனும் தமதுதம்பியுடனும் கூடியவராய், வனவாசத்தை முடித்து மீண்டும் அயோத்திக்குத் திரும்பட்டும்" என்றாள்.

மரக்கலத்தினின்று இறங்குதல்.

இவ்வாறு கங்காதேவியை நோக்கிச் சொல்லிக்கொண்டிருப்பவளும் குற்றமற்றவளும் சாமர்த்தியமுடையவளுமான சீதை, தென்கரையைச் சீக்கிரமாக அடைந்தாள். ஆணேறும் பகைவரைத் தபிக்கும்படிசெய்பவராயு மிருக்கும் இராமர், தென்கரையை யடைந்து, தமது தம்பியுடனும் சீதையுடனும் அதைவிட்டு இறங்கி நடக்கலானார்.

இராமர் லக்ஷ்மணருக்கு இட்ட கட்டளை.

பின்பு மகாபாகுவான இராமர், லக்ஷ்மணரைப் பார்த்து, "நீ, ஜனங்களிருக்குமிடத்திலும் ஜனங்களில்லாதஇடத்திலும்பாதுகாப்பவனாக இருக்கவேண்டும். இதற்குமுன் பார்த்திராததும் ஜனங்களற்றதுமான காட்டிற் பாதுகாப்பு அவ

சியஞ் செய்யத்தக்கது. லக்ஷ்மண, நீ முன்நட; உன் பின்னே சீதை வருகிருள். நான் உன்னையும் சீதையையும் பாதுகாத்துக்கொண்டு உங்களிருவர்க்கும் பின்னே வருகிறேன். ஆணைறே, இக்காட்டில் நம்மில் ஒருவரையொருவர்தாம் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். ஒருசெய்கை நடந்தபின்பு மீண்டும் அதனைச்சேர்த்தல் முடியாதன்றே! சீதை, ஜனசங்கமற்றதும், கழனி தோட்டம் ஆகிய இவையில்லாததும், மேடுபள்ளமான இடங்கள் சேரப்பெற்றதும், பெரும் பள்ளங்களை யுடையதுமான வனத்தைப் பார்ப்பதால், இனித்தான் வநவாச துக்கத்தை யறிவள்" என்றுர்.

இப்படி இராமர் சொல்ல, அதைக் கேட்டு லக்ஷ்மணர் முன்னே நடக்கலானுர்; இரகுகுலம் மகிழவந்த இராமரும் சீதைக்குப் பின் நடக்கலானுர். சுமந்திரர், சடிதியிற் கங்கையின் அக்கரையை யடைந்த இராமரைப் பார்த்துக் கொண்டு நின்று, அவர்கள் வெகுதூரஞ் சென்றதால் திரும்பின பார்வையை யுடையவராய், துக்கத்தாற் பரிதாபமடைந்து கண்ணீர் வடித்தார்.

உலகபாலர்போன்றவரும், காந்தியுள்ள மகாத்துமாவுமான அந்த இராமர், மகாநதியாகிய கங்கையைக் கடந்த பிறகு, வளமுள்ளதும் பயிர்களின்வரிசையை யுடையதும் எப்பொழுதும் மகிழ்ச்சியுட னிருப்பதுமான வத்ஸம் என்றநாட்டையடைந்தார். சாயங்காலமானவுடன் பசியையுடைய அவ்விருவரும், சீதையை ஒரு மரத்தினடியில் இருக்க வைத்து, பன்றி, ரிசியம் பிருஷதம் ருரு என்ற மூன்றுவித மான்கள் ஆகிய பரிசுத்தங்களான இந்நான்கு பெரிய மிருகங்களை விரைவிற் கொன்றெடுத்துக்கொண்டு, வசிப்பதற்காகச் சீதையை விட்ட அம்மரத்தையே நாடியடைந்தனர்.

வத்ஸதேசஞ் சேர்தல்.

ஐம்பத்துமூன்ருஞ் சருக்கம்:

முதல்நாளிரவில் அச்சமின்றிச் சயனித்தல்.

எல்லாருள்ளங்களையும் மகிழ்விப்பவர்களிற் சிறந்தவரான இராமர், அம்மரத்தை யடைந்து, சாயங்காலசந்தியாவந்தனத்தைச் செய்தபிறகு, லக்ஷ்மணரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானர் :—"இப்பொழுது, காட்டில் நமக்குச் சுமந்திரரின்றி யிருக்கும் முதலிரவு வந்தது. இவ்விரவில் நீ வருந்துதல் தக்கதன்று. லக்ஷ்மண, இன்றுமுதல் இரவுகளில் நாமிருவரும் சோம்பலின்றிக் கண்விழித்திருக்கவேண்டும்; ஏனெனில், சீதையின் யோகக்ஷேமம் நம்முடைய அதீனத்தி லிருக்கின்றதன்றோ! சுமித்திரையின் புதல்வனே, இவ்விரவைக் கஷ்டப்பட்டே கழிப்போம்; நாமே தேடிக்கொண்டுவந்த புற்களையும் இலைகளையும் பூமியிற் பரப்பி அதிற் படுப்போம்" என்று இவ்விதமாகச் சொல்லி, சிறந்த படுக்கையிற் படுக்கத்தக்க இராமர், வெறுந்தரையில் படுக்கையைச் சித்தஞ்செய்தபிறகு, வீற்றிருந்து, லக்ஷ்மணரைப் பார்த்து, அழகிய இவ்வார்த்தைகளைச் சொல்லலானர் :—"லக்ஷ்மண, மகாராஜர் இப்பொழுது துயரத்துடன் தூங்குவார்; நிச்சயம். *மனோரதங்கள் கைகூடப்பெற்ற கைகேயி, சந்தோஷமடைய வுரியர். தேவியான அக்கைகேயியார், ஊரினின்று வந்த பரதனைப் பார்த்து, அவனுக்கு இராச்சியம் நிலைப்படும்பொருட்டு, மகாராஜருடைய வுயிரை வாங்காமலிருப்பாரா?

காட்டில் முதலிரவு கழித்தல்.

இராமர் தமது தந்தைதாயரை நினைத்துத் துக்கப்படுதல்.

---

* இராமர் தமது இலாபத்தையுத்தேசித்துக்கூறுவதுபோன்ற தசரதர் கைகேயி இவர்களுடையநிந்தை மேல் லக்ஷ்மணரைநோக்கி "நீ இங்கிருந்து காலையில் அயோத்திக்குப்போவாய்" என்று கூறுவதால் அதற்கு இணங்க லக்ஷ்மணரின்கருத்தை யநுசரித்துச் சொல்லப்பட்டதாம்.

அநாதரும், முதியவரும், என்னுலும் பிரியப்பெற்ற வரும், காமனுக்கு ஆட்பட்டவரும், கைகேயியின் அதீ நத்தி லிருப்பவருமான தந்தையார், என்ன செய்வார்! நாம் காட்டிற்படும் இத்துக்கத்தையும், அரசருடைய புத்திமயக்கத்தையும் ஆலோசித்துப்பார்த்து, "அர்த் தம் தருமம் இவைகளைவிட, காமமே அதிக பலமுள் ளது" என்ற புத்தி எனக்கு உண்டாகின்றது. லக்ஷ் மணு, என்னை என் தந்தை கைவிட்டதுபோல், எந்த மூடமனிதன் தன் இஷ்டப்படி நடக்கும் புதல்வனை ஒரு ஸ்திரீயின்பொருட்டுக் கைவிடுவான்? கைகேயியின் புதல்வனுன பரதன், தன் மனைவியோடு கூடியவனுய், சந்தோஷத்தை யடைந்துள்ள கோசலநாட்டை மகாரா ஜாவைப்போல் தான் ஒருவனுய்ச் சுகமாக அநுபவிக்கப் போகிறுனே! என் தந்தை பிராயஞ்சென்றவரா யிருக்க, நானும் காட்டில் வசித்திருக்கையில், அப்பரதனே எல்லா இராச்சியத்துக்கும் பிரதானனுவான். எவன் தருமார்த்தங்களைக் கைவிட்டுக் காமத்தைப் பற்றுகிறு னே, அவன், தசரதமன்னவரைப்போல் விரைவில் ஆபத்தை யடைகிறுன். யாகஞ்செய்ய வுரியவனே, தச ரதருடைய மரணத்திற்கும் என்னைக் காட்டுக்கு ஓட்டு தற்கும் பரதனுக்கு இராச்சியத்தைக் கொடுப்பதற்குமே கைகேயி வந்தாரென்று எண்ணுகிறேன். செல்வச்செருக் கினுல் மோகமடைந்த கைகேயி, என்பொருட்டுக் கோச லையையும் சுமித்திரையையும் வருத்தாதிருப்பரா? லக்ஷ் மணு, என் பொருட்டுச் சுமித்திராதேவியார், துயரப் படவேண்டாம்; நீ இங்கிருந்து அயோத்திக்குக் காலை யிலேயே ஏகுவாய். நான் ஒருத்தனுகவே சீதையுடன் தண்டகாரணியத்துக்குப் போகிறேன்; அநாதையான கௌசலைக்கு நீ தலைவனுவாய். அற்பத்தொழிலையுடைய கைகேயியார், பகைமையால் அநியாயஞ் செய்வாரன்றே! ஆகையால், தருமத்தை யுணர்ந்தவனுன பரதனிடத்தில்

என்னுடைய தாயை அடைக்கலமாகக் கொடுப்பாய். சுமித்திரையின் குமாரனே, முற்பிறப்பில், என்தாய், அநேக மாதர்களைத் தம்தம் புதல்வரிடமிருந்து பிரித்தாரென்பது நிச்சயம்; அதனால்தான் இவ்வாறு விளைந்தது. வெகுகாலமாகப் போஷிக்கப்பட்டவனும், வருந்தி வளர்க்கப்பட்டவனுமான என்னால், பயன் விளையும் பருவத்தில் கௌசலை பிரியப்பட்டார்; இவ்வாறான நான் பழிக்கத்தக்கவன். சுமித்திரையின் பிள்ளாய், தாய்க்கு மிகத் துக்கத்தைத் தரும் என்னைப்போன்ற பிள்ளையை ஒரு ஸ்திரீயும் பெறவேண்டாம். லக்ஷ்மணா, தாயால் வளர்க்கப்பட்ட பெண்கிளி, என்னிலும் அவருக்கு அதிக மகிழ்ச்சியை விளைக்கும்; ஏனென்றால், அப்பெண்கிளி, பழக்கத்தால், தனது அருகிலிருக்கும் ஆண்கிளியைப் பார்த்து, "சுகமே, சத்துருவின் காலைக் கடி" என்றுசொல்லும் வார்த்தையைக் கேட்பாரன்றோ! பகைவரைக் கொல்லும் வலியுடையோய், அல்ப பாக்கியமுடையவராயும் புத்திரனாற் பெரும்பயனைப் பெறாதவராயும் எப்பொழுதுந் துக்கிப்பவராயுமிருக்குந் தாய்க்குச் சிறிதும் உபகாரஞ்செய்யாத புதல்வனான என்னால் என்ன பயன்? என்னைவிட்டுப் பிரிந்தவராயும் என்னுடைய அன்னையாயு மிருக்கும் கோசலை அற்பபாக்கியமுடையவர்; ஏனெனில், அவர் சோக சாகரத்தில் முழுகினவராய், மிக்க துன்பத்தால் மெலிந்து படுப்பாரன்றோ! லக்ஷ்மணா, கோபங்கொண்டுவிட்டால், நானொருவனே, பாணங்களால் அயோத்தியையும் உலகம்முழுவதையும் ஆக்கிரமிப்பேன்; ஆயினும், தருமமல்லாத தொழிலில் பராக்கிரமத்தைச் சாதனமாகக்கொள்ளக்கூடாதன்றோ! மாசற்றவனே, அதருமத்தாலுண்டாகும் லோகாபவாதத்திற்கு அஞ்சின நான், மறுமைக்கு அஞ்சுவதால், இப்பொழுது என்னைப் பட்டாபிஷேகம் பண்ணிவைத்துக் கொள்ளவில்லை" எனப் பலவாறு ஜனங்களற்ற காட்டில் எளிமையாகப் புலம்பி,

கண்ணீர் நிரம்பிய முகத்தை யுடையவராய், இரவில் மௌனத்தோடு இருந்தார். ஜ்வாலையற்ற அக்கினியையொத்தவரும், வேகமற்ற சமுத்திரம்போன்றவரும், புலம்பி ஓய்ந்தவருமான இராமருக்கு, லக்ஷ்மணர், பின்வருமாறு தேறுதல் சொல்லலானார்:—“சூரரே, தாங்கள் வெளிப்பட்ட பின்பு இப்பொழுது அயோத்திமாநகரம் சந்திரனற்ற இரவுபோல் ஒளியற்றதாய் விடும். இராமரே, தாங்கள் புலம்புவது உசிதமன்று; ஆணேறே, சீதையையும் என்னையும் துன்பமுறச் செய்கின்றீர். இராகவரே, தங்களைவிட்டுப் பிரிந்த சீதை பிழைத்திருக்க மாட்டார்; அவ்வாறே நானும் பிழைத்திருக்க மாட்டேன்; ஒருவேளை பிழைத்திருப்பின், நீரிலிருந்து எடுக்கப்பட்ட மீன்போல் ஒரு முகூர்த்தகாலந்தான் பிழைத்திருப்போம். சத்துருக்களைத் தவிக்கச்செய்பவரே, நான், தங்களைவிட்டு இப்பொழுது தந்தையையாவது சத்துருக்கனனையாவது சுமித்திரையையாவது பார்க்க விரும்பேன்; சுவர்க்கத்தைப் பார்க்கவும் விரும்பேன்” என்றார்.

லக்ஷ்மணர் இராமரைத் தேற்றுதல்.

பிறகு, தாம் உண்ட அவ்விடத்தில்சுகமாக இருப்பவர்களும் தருமத்தில் அன்புள்ளவர்களுமான சீதா ராமர்கள், சமீபத்திலுள்ள ஆலமரத்தடியில் லக்ஷ்மணரால் நன்கு அமைக்கப்பட்ட அப்படுக்கையைப்பார்த்து அதை அடைந்தார்கள். சத்துருக்களைத் தவிக்கச்செய்பவரான அந்த இராமர், அன்பைத் தெரிவிப்பதும் பொருள் நிறைந்ததுமான லக்ஷ்மணருடைய இவ்வாறானவார்த்தையை விருப்பத்துடன் கேட்டு, தரையிற் படுத்தல்முதலிய வாநப்ரஸ்த தருமத்தை அங்கீகரித்து, வனவாசம் பண்ண வேண்டிய வருஷம் முழுவதையும் லக்ஷ்மணரோடு கழிக்க விரும்பினார். அதன்பின்பு, ஜனமற்ற காட்டில் அப்பொழுது, மிக்க பலமுள்ளவர்களும் தசரதவம்சத்தை மகிழச்

செய்பவர்களுமான அவ்விருவரும், பருவத குகையில் வசிக்குஞ் சிங்கம்போல் அச்சத்தையும் கலக்கத்தையு மடையவில்லை.

ஐம்பத்துநான்காஞ் சருக்கம்:
ஸ்ரீராமர் பரத்துவாஜாசிரமஞ் சேர்தல்.

அவர்கள் நல்ல இரவில் அந்தப்பெரிய மரத்தடியில் வசித்து, சூரியன் நன்முக உதித்தபோது அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார்கள். அங்கங்கு இதற்குமுன் பார்த்திராத பலவகையான வனப்பிரதேசங்களையும், அழகிய வத்ஸதேசத்து உள் நாடுகளையும் பார்த்துக்கொண்டு போகுபவர்களான கீர்த்தியையுடைய அவர்கள், கங்கையை யமுனைவந்து கூடுமிடத்தை யடைவதற்காகப் பெரிய காட்டிற் புகுந்து நடந்தார்கள். க்ஷேமத்தைக்கொடுப்பதான அவதானத்தை விடாது அநேகவித மரங்களைப் பார்த்துக்கொண்டுசெல்லும் இராமர், பகல்திரும்பினவளவில் லக்ஷ்மணரைநோக்கிச்சொல்லலானுர்: "சுமித்திரையின்குமாரனே, பிரயாகையின் நாலுபக்கத்திலும், அக்கினிபகவானுக்குக் கொடியான புகையைப் பார்; அதனுல் பரத்துவாஜமுனிவர் கிட்டியிருக்கின்ருரென்று எண்ணுகிறேன். கங்கையமுனைகளின்சங்கமத்துறையை அடைந்தோமென்பது நிச்சயம்; ஏனெனில், ஜலத்துடன் ஜலம் மோதுதலா லுண்டாகும் சத்தம் நம்மால் கேட்கப்படுகின்றதன்ருே! அன்றியும், காட்டுப்பொருள்களை விற்றுப் பிழைப்பவர்கள் வெட்டின கட்டைகளும் காணப்படுகின்றன. பரத்துவாஜருடைய ஆச்சிரமத்தில், இதோ பலவகைமரங்களும் காணப்படுகின்றன" என்ருர். அவ்வில்லாளிகளிருவரும் சுகமாகநடந்து, சூரியன் அஸ்தமயமாகும்

பிரயாகையை நோக்கிச்செல் லுதல்.

வேளையில், கங்கையும்யமுனையுஞ் சந்திக்குமிடத்துக்குச்சமீபத்திலிருக்கும் பரத்துவாஜமுனிவருடைய ஆச்சிரமத்தின் அருகை யடைந்தார்கள். இராமர், ஆச்சிரமத்தை யடைந்து, அபூர்வமான உருவத்தைப் பார்த்தலால் மிருகங்களையும் பறவைகளையும் அச்சமடைந்தனவாகச் செய்துகொண்டு, முகூர்த்தகாலஞ் செல்லத்தக்க வழியைக் கடந்து, பரத்துவாஜரின் சமீபத்தை யடைந்தார்.

பரத்துவாஜரைச் சேருதல்.

பரத்துவாஜரின் தரிசனத்தை விரும்பினவர்களும் சீதையால் தொடரப்பட்டவர்களும் வீரர்களுமான இராமலக்ஷ்மணர்கள், ஆச்சிரமத்தை யடைந்து, அக்கினிஹோத்திரம் முடியுஞ்சமயத்தை எதிர்பார்த்தவர்களாய், பர்ணசாலைக்குத் தூரத்திலேயே இருந்தார்கள். தைவாதீனமாய் வெளியில் வந்த சீடர்முகமாக அக்கினிஹோத்திரம்முடிந்ததையறிந்து, இராமர், லக்ஷ்மணருடனும் சீதையுடனும் கூடியவராய், மகாத்மாவும், சிஷ்யர்களின்கூட்டத்தால் சூழப்பட்டவரும், கொடியவிரதத்தையுடையவரும், தியானத்தில் கருத்தூன்றியவரும், தபோபலத்தால்முக்காலத்து வரலாற்றினையறியும் உணர்ச்சியையுடையவரும், அக்கினிஹோத்திரத்தை முடித்தவரும், மகாபாக்கியவானுமான பரத்துவாஜ முனிவரைக்கண்டவுடன், கூப்பியகையராய் அபிவாதனம் பண்ணினர். இராமர், அம்முனிவரிடத்தில் தங்களைப்பற்றி, "பகவானே! நாங்களிருவரும் தசரதருடைய பிள்ளைகள். இராமன் என்றும் லக்ஷ்மணன் என்றும் எங்களுடைய பேர். இவள் என் மனைவி. விதேக வம்சத்தில் பிறந்தவள்; பதிவிரதை; ஜனகமகாராஜாவினுடைய மகள்; குற்றமற்ற இவள், ஜனங்களற்ற தபோவனத்தில் என்னைப்பற்றி வந்திருக்கிறாள். சுமித்திரையின் புதல்வனும் என்னிடத்து விருப்புள்ளவனும் உறுதியான விரதத்தையுடையவனுமான இவன், என்

இராமர் பரத்துவாஜரிடத்தில் தம்மைப்பற்றித் தெரிவித்தல்.

தந்தையாரால் காட்டுக்கு அனுப்பப்பட்ட என்னை அநுசரித்துக் காட்டையே யடைந்தான். பகவானே! பிதாவினல் கட்டளையிடப்பட்ட நாங்கள் தபோவனத்தில் புகுவோம்; அங்கு, காய்கிழங்குகளை உணவாகக்கொண்டு அறத்தையே புரிவோம்" என்று தெரியப்படுத்தினர்.

மிக்கதவஞ்செய்தவரும் மகாத்மாவுமான பரத்துவாஜர், இராஜபுத்திரரும் வெகு புத்திமானுமான இராமருடைய அவ்வார்த்தையைக்கேட்டு, மதுபர்க்கத்துக்கு உறுப்பான பெரியபசுவையும், பூஜைக்கு உறுப்பான கந்தம் முதலியவைகளையும், ஜலத்தையும், பலவகையாயுள்ளவைகளும் காட்டிலுண்டாகும் பழம் கிழங்கு இவைகளிலிருப்பனவுமான உண்ணத்தக்க ரஸங்களையும் கொணர்ந்து வந்து அவர்களுக்குக் கொடுத்தார்; தங்கியிருக்க ஒரு இடமும் ஏற்படுத்தினர். பின்பு, அப்பரத்துவாஜர் மிருகங்களுடனும் பட்சிகளுடனும் முனிவர்களுடனும் வீற்றிருந்து, அதிதியாகவந்த இராமரைப்பூஜித்து, அந்த இராமருடைய நல்வரவைக் கேட்டார். மற்றும், பரத்துவாஜர், அப்பூஜையை யங்கீகரித்து வீற்றிருந்த இராமரை நோக்கி, தருமத்துடன்கூடிய இவ்வார்த்தையைச்சொன்னர்: "ககுஸ்தகுலத்தில் உதித்தவரே, ஐம்பொறிகளாலும் அறியவொண்ணுத தங்களை எப்பொழுதும் தியானித்துக்கொண்டிருக்கும் யான், வெகுகாலத்திற்குப் பின்பு இங்கு என் கண்முன்பே வரக்காண்கிறேன்! தாங்கள் காரணமின்றிக் காட்டுக்குஓட்டப்பட்டதைக் கேள்விப்பட்டேன். மகாநதிகளின் சங்கமத்துறையிலுள்ளதும் புண்ணியமானதும் அழகியதுமான இந்த இடம் ஏகாந்தமாக இருக்கிறது; இங்குத் தாங்கள் சுகமாக வசியுங்கள்" என இவ்வாறு பரத்துவாஜர் சொன்னதை, எல்லாருக்கும் நன்மைசெய்வதில் மனம் வைத்தவரான இராகவர், கேட்டு, அழகாக மறுமொழியுரைக்கலுற்றுர்.

பரத்துவாஜர் செய்த உபசாரம்.

"பகவானே, இவ்வாச்சிரமத்துக்குச் சமீபத்தில் வசிக்கும் நாட்டுஜனங்கள், நகரஜனங்கள், என்னைச் சுலபமாகக் காணத்தக்கவனாக அறிந்து, எங்களைப் பார்த்தற்காக இவ்வாச்சிரமத்துக்கு வருவார்களென்று நான் எண்ணுகிறேன்; இக்காரணத்தால், நான், இங்குவசிப்பதை விரும்பவில்லை. சுகத்தையே அநுபவிக்கத்தக்கவளும் விதேகவம்சத்தில் பிறந்தவளுமான ஜானகி, எங்கிருந்தால் மனம் மகிழ்வளோ, அப்படிப்பட்ட ஏகாந்தமும் உத்தமமுமான ஆச்சிரமஸ்தானத்தை ஆலோசித்துப் பாருங்கள்" என்றார்.

இராமர், வாசத்துக்குத்தக்க இடத்தைச் சொல்லும்படி பரத்துவாஜரைக் கேட்டல்.

இராமருடைய அழகியவார்த்தையைக் கேட்டு, பரத்துவாஜமாமுனிவர், பின்பு, "ரகுகுலக்கொழுந்தே, நீங்கள் எங்குவசிக்கப் போகின்றீர்களோ, அம்மலை, இங்கிருந்து பத்துக்குரோசதூரத்திலிருக்கிறது. அது மகாரிஷிகளால் நிறைந்தது; எங்கே பார்த்தாலும் அழகான தோற்றத்தை யுடையது; முசுக்கள் நடையாடப்பெற்றது; குரங்குகளாலும் கரடிகளாலும் வாசஞ்செய்யப்பெற்றது; கந்தமாதனம் என்ற பருவதத்தை யொத்தது; சித்திரகூடம் என்று பிரசித்திபெற்றது; ஒருவன், அதன் சிகரங்களைத் தூரத்திலே காணினும், புண்ணியத்தையே செய்கிறான். அவனுடைய மனம், பாவத்தை எண்ணாது. அவ்விடத்தில் அநேக ரிஷிகள், விளையாட்டாக நூறுவருஷகாலம் தவம் புரிந்து, சரீரத்தோடு சுவர்க்கஞ் சென்றார்கள். அது தங்களுடைய சுகத்துக்குத் தக்க ஏகாந்தமான இடமென்று எண்ணுகிறேன். அங்காவது இங்கு என்னுடனாவது வனவாசகாலத்தைக் கழிக்க வசியுங்கள்" என்றார். பின்பு, தருமத்தை யறிந்தவரும் எல்லாரையும் மகிழ்விப்பவருமான அப்பரத்துவாஜ முனிவர், அதிதியும், பார்யையுடனும் சகோதரருடனும் இருப்

முனிவர் வசிப்பதற்குத் தக்க இடங் கூறுதல்.

பவருமான அந்த இராமரை, அதிதிகளுக்குத் தக்க சத்காரங்களினால் உபசரித்தார். இராமர் பிரயாகையில் அம்மகர்ஷியைக் கிட்டி, அநேக விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, நல்ல இரவு வந்தது. சீதையை மூன்றாவளாக உடையவரும், ககுஸ்தவம்சத்தில் தோன்றியவரும், சிரமத்தை யடைந்தவரும், சுகத்தையே அநுபவிக்கத்தக்கவருமான இராமர், மிக அழகிய அப்பரத்துவாஜாச்சிரமத்தில் அவ்விரவில் சுகமாக வசித்தார். இரவு விடிந்தபொழுது, ஆண்புலியான இராமர், ஜ்வலிக்கும் ஒளியை யுடைய பரத்துவாஜமுனிவரை யடைந்து, அவரைநோக்கி, "பகவானே, உண்மையை இயல்பாக உடையவரே, தங்களுடைய ஆச்சிரமத்தில் நாங்கள், இவ்விரவைக் கழித்தோம். இனி, சித்திரகூடமலையில் வசிக்க எங்களுக்கு விடை கொடுங்கள்" என்றார். இரவு நன்றாக விடிந்தவளவில், பரத்துவாஜர், இராமரை நோக்கி,

பரத்துவாசர், சித்திரகூடத்துக்குச் செல்ல விடை கொடுத்தல்.

"தேன், கிழங்கு, பழம் இவைகள் பொருந்திய சித்திரகூடத்திற்குச் செல்லுங்கள். இராமரே, மகாபலம் பொருந்திய வீரா, அம்மலை, நாநாவிதமான மரக்கூட்டங்கள் அடரப்பெற்றது. கின்னரர் உரகர் இவர்களால் சேவிக்கப்பட்டது; மயில்களின் சத்தத்தால் ஒலிபெற்றது; அரசயானைகளால் நிறைந்திருப்பது; அவ்விடத்தில் வசித்தல் தங்களுக்குத் தக்கது. மிகப்பிரசித்திபெற்றதும், புண்ணியமானதும், அழகியதும், பலவகையான கிழங்குகள் பழங்கள் நிரம்பியதுமான அச்சித்திரகூட மலைக்குத் தாங்கள் செல்லுங்கள். இராகவரே, அங்குள்ள வனமத்தியில், நான்கு பக்கத்திலும் சஞ்சரிக்கின்ற யானைக்கூட்டங்களையும், மான்கூட்டங்களையும், நதிகளையும், அருவிகளையும், தாழ்வரைகளையும், கற்கள் கூடுமிடங்களையும், குகைகளையும், பிளந்த கற்களின் சந்திகளையும் காண்பீர்கள்; அவைகளெல்லாம் சீதையுடன் சஞ்சரிக்கும் தங்க

ளுடைய மனத்தை மகிழ்விக்கும். மகிழ்ச்சியை யடைந்தனவான ஊர்க்குருவி, குயில் இவைகளின் ஒலிகளால் ஒலிபெற்றதும் அழகியதுமான அம்மலையை யடைந்து, மான்களாலும் மதித்த அநேக யானைகளாலும் நிறைந்த அழகிய ஆச்சிரமத்தில் வசியுங்கள்'' என்றார்.

ஐம்பத்தைந்தாஞ் சருக்கம்:

ஸ்ரீராமர் யமுனையென்னும்நதியைக் கடந்து அவ்வாற்றுக்கடுத்த வனத்தை யடைதல்.

சத்துருக்களின் செருக்கையொழிப்பவர்களான அந்த இராஜகுமாரர்கள், இரவை அவ்வாச்சிரமத்திற் போக்கிப் பின்பு, பரத்துவாஜமகாரிஷியை வணங்கி அம்மலையைக்குறித்துப்போகச் சித்தரானார்கள். போவதற்குச்சித்தராய் நின்ற அவர்களுக்கு அம்மகாரிஷி ஸ்வஸ்தியயனம் பண்ணினார்! அவர், தந்தை புதல்வரைத் தொடர்ந்து செல்வதுபோல, புறப்பட்ட அவர்களைத் தொடர்ந்து சென்றார்!! மிக்க ஒளியையுடைய பரத்துவாஜமாமுனிவர், உண்மையில் உறுதியையுடைய இராமரைநோக்கி, "புருஷசிரேஷ்டர்களான நீங்கள், கங்கையும் யமுனையும் சந்திக்குமிடத்தையடைந்து, பின்பு கங்கையின் ஜலத்தினுடைய வேகத்தாற் சிறிது மேற்குமுகமாகச் செல்லும் யமுனாநதியை யடையுங்கள். சீக்கிரமாகச் செல்லும் பிரவாகத்தையுடைய யமுனாநதியை யடைந்து அதனுடைய போக்குவரவால் பழகிய துறையைப் பார்த்து, அங்கு நீங்கள் தெப்பங்கட்டி அதன்மீதேறிச் சூரியபகவானுடைய குமாரியாகிய அவ் யமுனாநதியைத் தாண்டுங்கள். அதன் பிறகு, பசுமையான இலைகளையுடையதும், அநேக விருக்ஷங்களுடன் வளர்ந்ததும், சித்தர்களால் நாடியடையப்படுவதும்

சித்திரகூடத்துக்குச் செல்லுதல்.

'சியாமம்' என்ற பெயரையுடையதுமான பெரிய ஆலமரத்தை யடையுங்கள். சீதை, அம்மரத்தைப் பார்த்துக் கைகளைக்கூப்பித் தனது மனோரதங்களைப் பிரார்த்திக்கவேண்டும். அவள், சிரமத்தை யடைந்திருந்தால் சிறிதுநேரம் அங்கு வசிக்கலாம்; இல்லாவிடின் அதைக்கடந்து செல்லலாம். அதன்பின்பு, நீங்கள் குரோசதூரஞ் சென்றால், பலாசம் இலந்தை இவைகளுடன் கூடியதும், யமுனைக்கரையிலுண்டான மூங்கில்களால் அழகியதுமான பசியகாட்டைக் காண்பீர்கள். அக்காடுதான் சித்திரகூடத்துக்குப் போகும் வழி. அழகியதும், சிறியமணலை யுடைமையால் மிருதுவானதும், காட்டுத்தீ யற்றதுமான அவ்வழியில் அநேகதரம் யான் சென்றிருக்கிறேன்" என இவ்விதமாக வழியைப்பற்றிப் பரத்துவாஜமகர்ஷி சொல்ல, இராமர் "அப்படியே" என்று மொழிந்து, "ஆச்சிரமத்தை நோக்கிச் செல்லுங்கள்" என்று விடைகொடுக்க, அம்மகர்ஷியுந் திரும்பினர். அம்முனிவர் திரும்பினவளவில் இராமர், லட்சுமணரை நோக்கி, "சுமித்திராகுமாரனே, நாம் புண்ணியஞ் செய்தவர்களே; ஏனெனில், நம்மிடத்துப் பரத்துவாஜமுனிவர் அருள்புரிகின்றாரன்றோ!" என்றார். நல்லமனமுடையவர்களும் ஆண்புலிகளுமான அவ்விருவரும், இவ்வாறு பேசிக்கொண்டு, சீதை முன்புறத்திற் செல்ல யமுனாநதியைக் குறித்துச் சென்றார்கள்.

யமுனையைக் கடக்கப் புணை கட்டுதல்.

பின்பு யமுனையில் வேகமாக ஓடுமிடம் வந்துசேர்ந்து அவர்களெல்லாரும், 'எவ்வாறு அதைக்கடக்கிறது?' என்று சிந்தையடைந்தார்கள். பின்பு அவர்கள், உலர்ந்த மூங்கில்கள் பரப்பியும், வெட்டிவேரால் மூடியும், மரக்கட்டைகளால் இவ்வாறு பெரியபுணை செய்தபின்பு, பராக்கிரமத்தையுடையவரான இலட்சுமணர், நீர்வஞ்சிக்கொடிகளையும் நாவல்மரத்துக்கிளைகளையும் பிடுங்கியும் வெட்டியும் கொண்டுவந்து, அவைகளால் சீதை வீற்றிருப்பதற்குச் சுகமான

ஆசனத்தை அப்புணையின்மீது அமைத்தார். தசரதரின் புதல்வரான இராமர், எண்ணமுடியாத அழகை யுடையவளும், லட்சுமியைப் போல்பவளும், கொஞ்சம் வெட்கப்படுபவளும், தமது காதலியுமான சீதாதேவியை அப்புணையில் ஏற்றினர். வீரர்களும் தசரதருடைய பிள்ளைகளுமான அவ்விருவரும், அச்சீதையின் பக்கத்தில் அப்புணையில், வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் மண்வெட்டியையும் கூடையையும் ஆயுதங்களையும் வைத்தனர். முதலில் சீதையை ஏற்றி, பின்பு தாங்களும் ஏறி, முயற்சியுடன் அப்புணையைத் தள்ளலானார்கள்.

அப்புணை யமுனையின்நடுவையடைந்தபொழுது, சீதை அந்த யமுனையைத் துதிக்கலானாள்: "தேவி, உனக்கு மங்களமுண்டாகுக; நான் உன்னைக் கடக்கின்றேன். என்னுடைய கணவர், பதினன்கு வருஷங்காட்டில்வசித்தலாகிற விரதத்தை முடிக்கவேண்டும்; அவர் இக்ஷ்வாகுமன்னவரால் பாதுகாக்கப்பட்ட அயோத்தியாபட்டணத்துக்குத் திரும்பிவருவரேயானல் பின்பு நான் ஆயிரம் பசுக்களாலும் நூறுகுடங்கள்ளினாலும் உன்னைப் பூஜிக்கிறேன்" என இவ்வாறு ஸ்திரீகளுள் உத்தமையான சீதை, யமுனையை நோக்கிக் கூப்பிய கையளாய்ப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கும்பொழுதே தெப்பம் தென்கரை சேர்ந்தது. அவர்கள், வரிசைவரிசையாக அலைகள் வாய்ந்ததும் சூரியபகவானுடைய பெண்ணும் கரைகளில் அநேகமரங்களை யுடையதும் விரைவாகச் செல்வதுமான காளிந்திநதியைப் புணையால்தாண்டி, அப்புணையைவிட்டு, யமுனாநதியோரமாக விருந்த காட்டின்வழியே புறப்பட்டுச் சென்று, குளிர்ந்த இடத்தை யுடையதும் பசியஇலைகளைப் பெற்றதும் 'சியாமம்' என்ற பெயரையுடையதுமான ஆலமரத்தை யடைந்தார்கள்.

யமுனையைச்சீதை பிரார்த்தித்தல்.

சீதை, அந்த ஆலமரத்தை யடைந்து பின்வருமாறு சொல்லலானாள் :—"மகாவிருக்ஷமே, உனக்கு நமஸ்காரம்; என்பர்த்தா, தமது வனவாசத்தை முடிக்கவேண்டும்; நான், புகழ் பெற்றவர்களான கௌசலையையும் சுமித்திரையையும் பார்க்கவேண்டும்" என்று சொல்லிக் கைகளைக் கூப்பிக்கொண்டு அம்மரத்தை வலம்வந்தாள். பின்பு, இராமர், குற்றமற்றவளும் அன்பிற்கு இடமானவளும் சுவாதீனையும் இவ்வாறு பிரார்த்திப்பவளுமான சீதையைப்பார்த்து லக்ஷ்மணரை நோக்கி, "பரதரைத் தமையனாக வுடையவனே, மனிதரிற் சிறந்தவனே, நீ, சீதை பின்வர அவளுக்கு முன்னே நடப்பாய். நான் ஆயுதபாணியாய்ப் பின்னே நடந்துவருகிறேன்; அவள் எந்தெந்தப் பழத்தை வேண்டுகின்றாளோ, எந்தெந்த மலரை விரும்புகின்றாளோ, எவ்வெவற்றில் அவளுடைய மனஞ் செல்லுகின்றதோ, அவ்வப்பொருளைக் கொடுப்பாய்" என்று கூறினார். இரண்டுயானைகளினிடையி லிருக்கும் அழகிய ஒருபெண்யானைபோல், செல்பவர்களான அவ்விருவர்களின் நடுவில் சீதை யிருந்தாள்.

சீதை சியாமம் என்ற வனஸ்பதிக்குச் செய்த பூஜை.

அம்மடந்தை தான் இதுவரையில் கண்டிராத மரத்தையும் புதரையும் கொடியையுங் கண்டு, இராமரை ஒவ்வொன்றின் நாமதேயத்தையுங் கேட்டாள். லக்ஷ்மணர், சீதையின் வசனத்தால் விரைந்தவராய், அழகியனவும் புஷ்பங்களால் நிரம்பப்பெற்றனவுமான பலவகை மரங்களினுடைய பூங்கொத்துகளைக் கொண்டுவந்தார். ஜாநகியானவள், விசித்திரமான மணலில் ஜலத்தையுடையதும், ஹம்ஸம் ஸாரஸம் இவைகளால் ஒலிக்கப்பெற்றதுமான நதியைப் பார்த்து, அப்பொழுது மனமகிழ்ந்தாள். பின்பு, சகோதரர்களான ராமலக்ஷ்மணர்கள், குரோசதூரஞ் சென்று, உண்ணுதற்குரிய பலமிருகங்களைக் கொன்று, அவற்றை யமுனைக்

யமுனைக்கரையிலுள்ள வனத்தில் தங்குதல்.

கரையிலுள்ளவனத்தில் உண்டார்கள். கம்பீரமான தோற்றத்தையுடைய அவர்கள், மயில்களின்கூட்டங்கள் ஒலிக்கப்பெற்றதும், குரங்கு யானை இவைகளுடன் கூடியதும், அழகியதுமான அவ்வனத்தில் விளையாடி, மேடுபள்ளமற்றதான யமுனைக்கரையை யடைந்து, சீதைக்கு இஷ்டமான வசிக்குமிடத்தை நாடி யடைந்தார்கள்.

ஐம்பத்தாறுஞ் சருக்கம்:

இராமர் முதலியோர் சித்திரகூடமடைந்து பர்ணசாலையிற் புகுதல்.

பின்பு, இரவு கழிந்தவளவில், இராமர், தாம் கண் விழித்தபிறகும் சிறிது தூக்கங்கொண்டிருந்த லக்ஷ்மணரை மெல்லஎழுப்பலானார்:—"சௌமித்திரியே, மனோகரமாகக்கூவுவனவும் காட்டில் வசிப்பனவுமான பறவைகளின் ஒலியைக் கேள். சத்துருக்களைத் தவிக்கச்செய்பவனே, புறப்படுஞ்சமயம்வந்துவிட்டது; ஆகையால்போவோம்" என்றார். விழிக்கும் வேளையில் தூங்கிக்கொண்டிருந்த லக்ஷ்மணர், தமையனரால் எழுப்பப்பட்டு, தமது நித்திரையையும், சோம்பலையும், வழிநடந்ததாலுண்டான சிரமத்தையும் விட்டார். அதன்பின்பு, அவர்களெல்லாரும் எழுந்து யமுனாநதியினுடைய புண்ணியமான தீர்த்தத்தில் நீராடி, பரத்துவாஜமகர்ஷியால் சொல்லப்பட்ட சித்திரகூடத்தின் வழியை நோக்கிச் சென்றார்கள். புறப்படவேண்டியகாலத்தில் லக்ஷ்மணருடன்புறப்பட்ட இராமர், பின்பு, தாமரையிதழ்போன்ற கண்களையுடைய சீதையைப் பார்த்து, பின்வருமாறு சொல்லலுற்றார்:—"விதேக குலத்திற் பிறந்தவளே, வசந்தகாலத்தில் எல்லாப் பக்கத்திலும் தமது பூக்கள் பூத்திருக்கப் பெற்றனவும்,

சித்திரகூடமடைதல்.

ஜ்வலிப்பன போலவும் மாலைகளை யணிந்தன போலவு மிருப்பனவுமான பலாசமரங்களைப் பார். மலர்ந்த பூக்களையுடையனவும், மனிதர்களால் கிட்டப்படாதனவும், பழங்களாலும் இலைகளாலும் வணங்கியனவுமான செராமரங்களைப் பார். இவைகளைப் பார்த்தால், நான் துக்கத்தை மறந்து பிழைத்திருப்பேன் என்பது திண்ணம். லக்ஷ்மணா, தேனீக்களால் கட்டப்பட்டனவும், பதக்களவு தேனுள்ளனவும், மரந்தோறுந் தொங்குவனவுமான தேன்கூடுகளைப் பார். மலர்ப் பரப்பால் நெருக்கமடைந்துள்ள வனத்தில் இதோ நச்சுக்குருவி கூவுகின்றது; மயில் அதற்கு மாறு கூவுகின்றது. யானைக்கூட்டங்களால் வசிக்கப்பெற்றதும், பறவைக் கூட்டங்களால் ஒலிபெற்றதும், உயர்ந்தசிகரத்தை யுடையதுமான இச்சித்திரகூடபருவதத்தைப் பார். தம்பி, மேடுபள்ளத்தாக்கற்ற பூமிப்பிரதேசத்தை யுடையதும், அழகியதும், பலமரங்களால் சூழப்பட்டதும், புண்ணியத்தைக் கொடுப்பதுமான சித்திரகூட வனத்தில் மனமகிழ்வோம்'' என்றனர். பின்பு, சீதையுடன் நடந்துசெல்லும் அவர்கள், அழகியதும், மனத்தைக் கவர்வதுமான சித்திரகூடமலையைச் சேர்ந்தார்கள். இராமர், லக்ஷ்மணர், சீதை ஆகிய இவர்கள் பலவகைப் பறவைக்கூட்டங்களைப் பெற்றதும், அநேகமான பழம், கிழங்கு இவைகளை யுடையதும், பலவளங்களும் பொருந்தியதும், நல்ல சுவையையுடைய நீர் நிறைந்ததுமான அம்மலையை யடைந்து, "அழகிய நாநாவிதமான மரம் கொடி இவைகளால் பொருந்தப்பெற்றதும், அநேகவிதமான கிழங்கு பழம் இவைகளையுடையதும், மனத்தைக்கவர்வதும், அழகியதுமான இம்மலை, சுலபமாகப் பிழைப்பைத் தரும்'' என்று நிச்சயித்தார்கள். "பின்பு, இராமர், லக்ஷ்மணரைநோக்கி, சௌமியனே, மகாத்மாக்களான ரிஷிகளும் இம்மலையில் வசிக்கிறார்கள். இம்மலை நமக்கு வசிக்கத்தக்க இடமாம். இதில் நாம் மகிழ்

வோம்" என்றுசொல்லி, பிறகு, அம்மூவரும், கூப்பிய கையர்களாய், வால்மீகியின் ஆச்சிரமத்தை யடைந்து, அம்மாமுனிவரை அபிவாதனம் பண்ணினார்கள். அறத்தை யறிந்தவரான அம்மகர்ஷி, மகிழ்ச்சியடைந்தவராய் அவர்களைப் பூஜித்து, "வீற்றிருக்கலாம்" என்று கூறி, நல்வரவை வினவினார். மகாபாகுவான இராமர், தம்மை முறைமைப்படி வால்மீகிக்கு அறிவித்து, லக்ஷ்மணரைப் பார்த்து, "ஸௌம்ய, லக்ஷ்மணா, உறுதியாயும், சிறந்தனவாயு மிருக்கும் மரப்பலகைகளைக் கொண்டுவா; வசிக்குமிடத்தைச் செய். இங்கு வசிக்கவேண்டுமென்று என்மனம் விரும்புகின்றது" என்று கூறினார்.

வால்மீகி ஆச்சிரமம்.

பகைவரைக் கொல்லுமவரான லக்ஷ்மணர், இராமருடைய அச்சொல்லைக் கேட்டு அனேகவிதமான மரங்களைக் கொண்டுவந்து, பின்பு பர்ணசாலையை நிருமித்தார். இராமர், காற்று முதலியவைகளால் அசைக்க முடியாததும் கதவு அமைக்கப்பட்டதும் அழகியதுமான பர்ணசாலையைப் பார்த்து, பின்பு, "இதற்குமேல் என்ன ஆஜ்ஞாபிப்பரோ?" என்று ஜாக்கிரதையுட னிருப்பவரும் பணிவிடைசெய்பவருமான தம்பியைப் பார்த்து, "சுமித்திரையின் புதல்வனே, நாம் மானினுடைய மாமிசத்தைக் கொண்டுவந்து, பர்ணசாலையின் அதிதேவதைகளைக் குறித்து யாகஞ்செய்யப்போகிறோம்; நெடுநாள்வாழ விருப்பமுள்ளவர்களால் வாஸ்துசாந்தி செய்யத்தக்கது. அழகிய கண்களுடையாய், லக்ஷ்மணா, அதற்காக, மிருகத்தைக் கொன்று சீக்கிரங் கொண்டு வா; நூல்களிற்கூறிய தொழில் செய்யத்தக்கதன்றோ! தருமத்தை நினைத்துப் பார்?" என்றார்.

லக்ஷ்மணர் பர்ணசாலை கட்டியது.

பகைவீரரைக் கொல்லுமவரான லக்ஷ்மணர், தமைய ஞருடைய சொல்லை யெண்ணி, அவர் சொ ன்னவண்ணமே செய்தார். அவரைப் பார்த்து இராமர் மறுபடியும் சொல்லலா ஞர்:—"இந்த மானிறைச்சியை நீ சமை. நாம் பர்ணசாலை யின் அதிதேவதைகளைப் பூஜிப்போம். ஸௌம்யனே, விரைவாய்; இந்தத்தினம் நல்ல திதி நட்சத்திரங்களை யு டையது; ஸ்திரவாஸரம்" என்ருர். சுமித்திரையின் குமா ரரும் பிரதாபத்தையுடையவருமான லக்ஷ்மணர், கொன்று கொணர்ந்த பரிசுத்தமான கிருஷ்ணமிருகத்தை நன்ருக வளர்க்கப்பட்ட அக்கினியில் இட்டார். அது பக்குவமும் சுட்டதும் இரத்தமற்றது மானதை, அவர் அறிந்து, பின்பு ஆண்புலியான இராகவரைப் பார்த்து, "தெய் வத்துக்கு ஒப்பானவரே, நிறைந்த மேனியையுடையதும் நன்ருகச் சமைக்கப்பட்டதுமான இந்தக் கிருஷ்ணமிருகம், சமைப்பதற்குமுன்னிருந்ததுபோலவே இருக்கின்றது. தே வதைகளுக்குப் பூஜைசெய்வதில் சமர்த்தரா யிருக்கின்றீ ரன்ருே! பூஜைசெய்யும்" என்ருர். ஐம்பொறியடக்கல் முத லிய குணங்களை யுடையவரும், ஜபிக்கத்தக்க மந்திரங்களை நன்குஉணர்ந்தவருமான இராமர், ஸ்நாநஞ்செய்து நியமத் துடன்கூடியவராய், வாஸ்துசாந்தி முடிவதற்கு எவ்வளவு மந்திரங்களை ஜபிக்கவேண்டுமோ, அவ்வளவு மந்திரங்களை யும் ஜபித்தார். இராமர், பரிசுத்தராய் வாஸ்து தேவ தைகளைப் பூஜித்து, வசிக்கக் கட்டின இடத்திற் புகுந் தார்; மிக்கபராக்கிரமத்தையுடைய இராமருக்கு மனத்தில் மகிழ்ச்சி உண்டாயிற்று. அவர் வைசுவதேவபலியைப் பண்ணி, உருத்திரமூர்த்தியைத் தேவதையாகக்கொண்ட யாகத்தையும் மகாவிஷ்ணுமூர்த்தியைத் தேவதையாகக் கொண்ட யாகத்தையும், வீட்டின் பீடையைப் போக்கும் மங்களங்களையுஞ் செய்து, முறைப்படி ஜபத்தையும் நதியில்

பர்ணசாலையிற் புகுதல்.

முறைமைப்படி ஸ்நாநத்தையுஞ் செய்து, கொடிய பூதங்களைப்போக்குஞ் சிறந்த பலியையுஞ் செய்தார். இராகவர், ஆச்சிரமத்துக்குத் தக்கபடி பலியிடும் வேதிகளையும், தேவாலயங்களையும், அக்கினியைக்காக்கும் மனைகளையும் இயற்றுவித்தார். அப்பொழுது, நல்ல லக்ஷணங்கள் பொருந்தியவர்களும் இரகுகுலகுமாரர்களுமான அவ்விருவரும், சீதையுடன், காட்டிலுண்டான மாலைகளாலும், பழங்களாலும், வேர்களாலும், முறைப்படி சமைத்த மாமிசங்களாலும், தீர்த்தங்களாலும், வேதத்திற் கூறியபடியான ஜபங்களாலும், தர்ப்பை ஸமித்து குசம் இவைகளாலும் பூதங்களைத் திருப்திசெய்வித்து, மிக அழகிய பர்ணசாலையிற் புகுந்தார்கள். தேவர்கள் 'சுதர்மை' என்னும் சபையிற் புகுவதுபோல், மர இலைகளால் மூடப்பட்டதும், மனத்தைக் கவர்வதும், நூல்முறைமைப்படி அவ்வவைகட்குஉரிய இடத்தில் அவ்வவைகள் அமையப்பெற்றதும், வேண்டியவளவு காற்றையுடையதுமான அப்பர்ணசாலையில் எல்லோரும் வசிப்பதற்காகப் பிரவேசித்தார்கள். ஐம்புலனை வென்ற அவர்கள், நானுவித பட்சிகளும் மிருகங்களும் நிறைந்ததும், விசித்திரங்களான பூங்கொத்துக்களையுடைய மரங்களுடன் கூடியதும், கொடிய மிருகங்களால் ஒலிபெற்றதுமான சிறந்த வனத்தில், அப்பொழுது சுகமாக விளையாடினார்கள். இராமர், மிகவும் அழகியதான சித்திரகூடத்தை யடைந்து, மிருகங்களாலும் பறவைகளாலும் சூழப்பெற்றதும் நல்ல ஜலம்பொருந்தியதுமான மாலியவதிநதியையுஞ்சேர்ந்து, மனக்கிளர்ச்சி யடைந்து மகிழ்ந்தார்; நகரத்தைவிட்டுப்பிரிந்ததா லுண்டான துயரத்தை மறந்தார்.

ஐம்பத்தேழாஞ் சருக்கம் :

சுமந்திரர் அயோத்திக்குத் திரும்பிவந்தது.

குகர், ஸ்ரீராமர் கங்கையின்தென்கரை சேர்ந்த வளவில் மிக்க துயரமடைந்து, இராமர் கண்ணுக்கு எட்டாத தூரஞ் செல்லுமளவும் நெடுநேரம் அங்கே நின்று சுமந்திரருடன் இராமருடைய குணங்களைச் சொல்லிக்கொண்டிருந்து, அவருடன் தமது வீட்டுக்குச் சென்றார். சுமந்திரர், இராமர் பரத்துவாஜரை யடைந்ததையும், பிரயாகையில் பரத்துவாஜருடன் இருந்ததையும், சித்திரகூடபருவதம் வரையிற் போனதையும், குகருடைய ஒற்றர்களால் நன்றாக அறிந்தார். பின்பு சுமந்திரர், குகரிடம் விடைபெற்று, சிறந்த குதிரைகளை இரதத்திற் பூட்டி, மனத்தில் வெகு துயரத்துடன் அயோத்திமாநகருக்கே பிரயாணப்பட்டார். அவர், நல்லமணம்வீசுங் காடுகளையும் ஆறுகளையும் பொய்கைகளையும் பார்த்துக்கொண்டு, கிராமங்களையும் நகரங்களையும் விரைவிற் கடந்தார். பின்பு அவர், சிருங்கிபேரபுரத்தை விட்டுப் புறப்பட்ட மூன்றாம்நாள் மாலைப் பொழுதில் அயோத்தியை யடைந்து, அது ஆனந்தமற்றிருப்பதைக் கண்டார். சாரதியான அச்சுமந்திரர், அப்பட்டணம் சூனியமானதுபோல் சத்தமு மில்லாமலிருப்பதைக் கண்டு, மிக்க துயரமடைந்த மனத்தை யுடையவராய், சோகாவேகத்தால் அடியுண்டு, "யானைகளையும் குதிரைகளையும் ஜனங்களையும் அரசரையுமுடைய பட்டணம், சந்தாபத்தை யுண்டாக்கும் இராமர்விஷயமான துக்கத்தால் தோன்றிய சோகாக்கினியால் எரிக்கப்படாமலிருக்குமோ?" என்று எண்ணி, விரைவாகச் செல்லுங் குதிரைகளால் நகரத்தின்வாயிலை யடைந்து அதில்விரைந்து நுழை

சுமந்திரர் அயோத்திக்குத் திரும்பல்.

அயோத்தியின் துயரம்.

ந்தார். நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவுமுள்ள ஜனங்கள், வந்துகொண்டிருக்குந் தேர்ப்பாகரான சுமந்திரரைப்பார்த்து, "இராமர்எங்கே?"என்றுகேட்டுக்கொண்டு அவருக்கு எதிர்முகமாக ஓடிவந்தார்கள். அவர்களுக்குச் சுமந்திரர், "கங்கைக்கரையில், இராகவரைச் செலவுகேட்டுக்கொண்டு, தார்மிகரும் மகாத்மாவுமான அந்த இராமரால் அநுமதிபண்ணப்பெற்றவனாய்த் திரும்பினேன்" என்று பதில்கூறினார். அந்த ஜனங்கள், "இராமர் லக்ஷ்மணர் சீதை ஆகிய அவர்கள், கங்கையைக் கடந்தார்கள்" என்று தெரிந்துகொண்டு, கண்ணீர் நிரம்பிய முகத்தையுடையவர்களாய், "அந்தோ! நம்மைப் பழிக்கவேணும்!" என்று பெருமூச்சு எறிந்து, "ஹா!! ராம!" என்று கதறத் தலைப்பட்டார்கள். அன்றியும், கூட்டங் கூட்டமாக இருக்கும் ஜனங்களுடைய சொற்கள், "இந்தத்தேரில் இராமரைக்காணாததால் நாம் கெட்டோம். தானத்திலும் யஜ்ஞத்திலும் விவாகத்திலும் நடுவில், தருமநெறியில் தவறாது நடக்கும் இராமரை மீண்டும் காணமாட்டோமோ? 'இந்த ஜனங்களுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பது எது? விருப்பமானது எது? சுகத்தைக் கொடுப்பது எது?' என்று விசாரித்து, இந்த நகரத்தை இராமர் தந்தையைப்போல் காப்பாற்றினார்" என எவ்விடத்தும் நிகழ்ந்தன. கடைகளின் நடுவிற் செல்லுஞ் சுமந்திரர், இராமருடைய சோகத்தால் மிக்கதாபமடைந்தவர்களும் பலகணிகளைச் சேர்ந்திருந்தவர்களுமான பெண்டுகளுடைய புலம்பலைக் கேட்டார்.

அச்சுமந்திரர், முகத்தைமூடிக்கொண்டு, ராஜமார்க்கத்தின் நடுவால், தசரதமன்னவரிருந்த மனையை யடைந்தார். அச்சுமந்திரர், தேரினின்று விரைவாக இறங்கி, அரண்மனையிற் புகுந்து, மஹாஜனங்கள் நிரம்பிய ஏழுகட்டுக்களையுங் கடந்தார். செல்வர்களுடைய வீடுகளிலும் ஏழுநிலைமாடங்

சுமந்திரர் தசரதரிடஞ் செல்லல்.

களிலும் கோயில்களிலு மிருந்த மாதர்கள், இராமரை விட்டுவந்த சுமந்திரரைப் பார்த்து, இராமரைக் காணுத தால் மிகமெலிந்தவர்களாய், ஹா ஹா காரஞ் செய்தார் கள். மிகவுந் துயரமடைந்த ஸ்திரீகள், நீர் ததும்பப்பெற் றனவும் விசாலமாயும் விமலமாயுமுள்ளனவுமான நீர் பெருகியகண்களால் ஒருவரை யொருவர் நன்றுகப்பார்க்க முடியாதவரானுர்கள். பின்பு சுமந்திரர், இராமர் விஷய மான துக்கத்தால் தாபமடைந்தவர்களும் உபரிகையில் நின்று தம்மைக் கண்டதால் இறங்கி வந்தவர்களுமான தசரதருடைய ஸ்திரீகள் "இராமனுடன் சென்று இராமனை விட்டு வந்த சுமந்திரர், துயரப்படுங் கௌசலை யாருக்கு என்ன பதில் சொல்லுவார்? நம்முடைய உயிர் எவ்வாறு கஷ்டப்பட்டுப் பிழைத்திருக்க முடியுமோ, அவ்வாறு, புத்திரன் காட்டுக்குச் சென்றபின்பு, கௌசலை பொறுத்துப் பிழைத்திருப்பது சுலபமன்றென்பது நிச்ச யம்" என இவ்வாறு அங்கங்கு மெல்லச் சொல்லிய உண் மையான வாக்கியத்தைக் கேட்டுக்கொண்டே, சோகத் தால் ஜ்வலிப்பதுபோன்றுள்ள எட்டாவது கட்டில் வெளுத்த அந்தஇடத்தில், வருந்துபவரும் எளியவரும் புத்திரசோகத்தால் வாட்டமடைந்தவருமான அரசரைப் பார்த்தார். அச்சுமந்திரர், வீற்றிருந்த தசரதமன்னவரை யணுகி, அவரை வணங்கி, இராமருடைய சொல்லை அவர் சொன்னவண்ணமே தெரிவித்தார்.

தசரதர் மூர்ச் சை யடைந்தது.

தசரதர், அதை மௌனத்தோடு கேட்டு, குழப்பம டைந்த மனமுடையவராய், இராமர்விஷய மான சோகத்தாற் பீடிக்கப்பட்டு, மூர்ச் சையடைந்து பூமியில் விழுந்தார். அரசர் மூர்ச்சையடைந்து பூமியில்விழுந்த வளவில், அந்தப்புரம், துக்கத்தால் அடியுண்டதாய், கைகளைத் தூக்கிக்கொண்டு கூக்குரலிட்டது. அப்பொழுது, சுமித்திரையுடன் கூடி யவளாய்க் கௌசலை, பூமியில் விழுந்த தனது கணவரை

எடுத்து, மகாராஜரான அவரைநோக்கி, "மகாபாக்கியமுள் ளவரே, வனவாசத்தினின்று திரும்பி வந்தவரும், செய்யவரிய தொழிலைச் செய் யும் அந்த இராமனுடைய நாதருமான இவருக்குப் பதில் ஏன் சொல்லவில்லை? இரகுகுலத் திற் பிறந்தவரே, இந்த அநியாயத்தைச் செய்து இப் பொழுது ஏன் வெட்கப்படுகின்றீர்கள்? எழுந்திருங்கள்; தங்களுக்கு மங்களம் உண்டாகுக. சோகத்தில் மனம் வைக்கவேண்டாம். தலைவரே, எவளுக்காகப் பயந்து இராமனைப்பற்றிப் பேசாமலிருக்கின்றீர்களோ, அக் கை கேயி, இங்கில்லை; சங்கையில்லாமற் சொல்லலாம்" என இவ்வாறு கண்ணீரால் பேச்சுத் தழுதழுக்கச் சொல்லி, சோகத்தாற் பரிதபித்தவளாய் விரைவிற் பூமியில் விழுந்தாள். தசரதரின் மனைவிமார்களான பெண்களெல் லாரும், இப்படிப் புலம்பிப் பூமியில் விழுந்த கௌ சலையையும் தங்களுடைய கணவரையும் பார்த்துப் பெருங் குரலாற் கதறினார்கள். பின்பு, அந்தப்புரத்திலிருந்து எழு ந்த அந்தச் சத்தத்தைக் கேட்டு, நான்கு பக்கங்களிலும் முதியவர்களும் இளையவர்களுமான புருஷர்களும் ஸ்திரீ களும் எல்லாரும் புலம்பினார்கள். மறுபடியும் அப்பட்ட ணம், இராமர் சென்றகாலத்தில் வருந்தினதுபோல் வருந் திற்று.

கௌசலை துக்கித்தல்.

ஐம்பத்தெட்டாஞ் சருக்கம்:

சுமந்திரர், தசரதரிடம்

இராமரது விருத்தாந்தத்தைத் தெரிவித்தல்.

அரசர், உபசாரங்களினால் மூர்ச்சைதெளிந்தவராய்ப் பின்பு, இராமரிடத்தினின்றுவந்தவரான அச்சுமந்திரரை,

தசரதர் இராமரைப்பற்றிச்சுமந்திரரை விசாரித்தல்.

இராமவிருத்தாந்தத்தைக் கேட்பதற்காகக் கூப்பிட்டார். பின்பு சுமந்திரர், கூப்பிய கையராய், இராமரைப் பற்றியே புலம்பிக் கொண்டும், துக்கத்தாலும் சோகத்தாலும் சேரப்பெற்றும், பிராயஞ்சென்றும், புதிதாகப் பிடிக்கப்பட்ட யானைபோல மிகப் பரிதபித்துக்கொண்டும், உடம்பு சௌக்கியமில்லாத யானைபோல நினைத்துநினைத்துப் பெருமூச்சுவிட்டுக்கொண்டுமிருக்கும் அரசரைக் கிட்டினர். அரசர், தம்மைக் கிட்டினவரும் புழுதிபடிந்தசரீரமுடையவரும் கண்ணீர்நிரம்பிய முகத்தினரும் எளியவருமான சுமந்திரரைப் பார்த்து மிகஎளியவராய், "எனது தருமாத்துமாவாகிய இராமன் எந்த மரத்தினடியை யடைந்து வசிக்கிறான்? ஸூதரே, மிகவுஞ் சுகியான அந்த இராகவன், எதை உண்கிறான்? துக்கத்தை அநுபவிக்கத் தகாதவனும் சிறந்தபடுக்கையிற் படுக்க உரியவனுமான அரசகுமாரன், அநாதன்போல், துயரத்துடன் பூமியில் எவ்வாறு படுப்பான்! எவன் புறப்பட்டால், காலாட்களும் தேரும் குதிரையும் கூடப்புறப்பட்டனவோ, அப்படிப்பட்ட இராமன், மனிதசஞ்சாரமற்ற காட்டில் எப்படி வசிக்கிறான்!! மலைப்பாம்புமுதலியவைகளும் புலி யானை முதலிய கொடியமிருகங்களுந் தங்கப்பெற்றதும், கருநாகங்கள்பொருந்தியதுமானகாட்டை, என்னுடைய குமாரர்கள் சீதையுடன் எவ்விதமாக அடைந்தார்கள்! சுமந்திரரே, என் இருகுமாரர்களும், சுகுமாரியும் நல்ல ஒழுக்கமுடையவளுமான சீதையுடன், இரதத்தைவிட்டு இறங்கி எவ்வாறு காலால் நடந்துசென்றார்கள்!! சுமந்திரரே, நீரன்றோ பாக்கியசாலி; ஏனெனில், அசுவினிதேவதைகள் மந்தரமலையிற் புகுவதுபோல் என் இருகுமாரர்களும் அரண்ணியத்தினுள் புகப் பார்த்துவந்தீரன்றோ! இராமன் என்ன சொன்னான்? லக்ஷ்மணன் என்ன சொன்னான்? வனத்தை யடைந்து சீதை என்ன சொன்னாள்? இராமன் இருந்த

தையும் உறங்கினதையும் உண்டதையும்பற்றிச் சொல்லும். யயாதி, சரீரத்துடன் சுவர்க்கஞ்சென்றதால் இந்திரபகவானால் தள்ளப்பட்டு விழுபவனாய், "நல்லவர்களிடத்தில் தள்ளவேண்டும்" என்று இந்திரபகவானைப் பிரார்த்தித்து நல்லவர்களிடத்தில்விழுந்ததுபோல், இராச்சியத்தினின்று தள்ளப்பட்டுச் சாதுக்களுடைய ஆச்சிரமத்தையடைந்த இராமருடைய உணவு முதலியவற்றைப்பற்றி நீர் சொல்லக் கேட்டுப் பிழைத்திருப்பேன்" என்றார்.

சுமந்திரர் இராமசமாசாரம் தெரிவித்தல்.

இவ்வாறு அரசரால் ஏவப்பட்ட சுமந்திரர், கண்ணீரால் தழுதழுத்துத் தடையை யடையுஞ் சொல்லாற் கூறத் தொடங்கினார்: "மகாராஜாவே, இராமர், தருமத்தையே பார்த்தவராய், "சுமந்திரரே, வணங்கத் தக்கவராயும் மகாத்துமாவாயும் புகழ்பெற்றவராயு மிருக்குந் தந்தையாருடைய திருவடிகள், அஞ்சலி பண்ணி என்னுடையவார்த்தையால் தலையால் வணங்கத்தக்கவை; அந்தப்புரத்தி லிருக்கும் எல்லோரும், முறைப்படி என் வணக்கத்தையும் என் க்ஷேமத்தையுஞ் சொல்லவுரியர். என்னுடைய நமஸ்காரத்தையும் க்ஷேமத்தையும் ஜாக்கிரதையையும் என்தாயாராகிய கௌசலையிடத்திற் சொல்லி அதன்பின்பு, "தாங்கள் எப்பொழுதும் தருமத்தைத் தவறில்லாமல் நடத்திக்கொண்டு, கருத்தூன்றியவராய் ஹோமாக்கினியை வைக்கும் அறையில் ஜாக்கிரதையுடையவராக இரும். தேவி, தலைவருடைய திருவடிகளைத் தெய்வத்தின் திருவடிகளாகக் கருதி அவைகளை ஆராதித்து, எனது மற்றைத்தாய்மார்கள் விஷயத்தில், குலாபிமானத்தையும் அகங்காரத்தையுங் கைவிட்டு நடந்துவாரும். அரசரையும், கொண்டாடத்தக்கவளான கைகேயியையும் ஒப்ப அநுசரித்து நடவும். அரசரிடத்தில் நடந்துகொள்வதுபோல், புதல்வனான பரதனிடத்திலும் நடந்துகொள்ளவேண்டும்; ஏனெனில், அரசர்கள்பொருளாற் பெரியவர்களன்றோ! ராஜ

தருமத்தை நினைத்துப்பாரும்" என்ற இந்தச் சொல்லையுஞ் சொல்லவேண்டும். பரதனுக்கு என்க்ஷேமத்தைச் சொல்லிப் பின்பு அவனிடத்தில், "எல்லாத் தாய்மார்களிடத்திலும் முறைப்படியே நடப்பாய்" என்று நான் சொன்னேனென்று சொல்லவேண்டும். அன்றியும், இக்ஷ்வாகு வம்சத்தை விளங்கவைப்பவனும் மகாபாகுவுமான அவனிடம், "நீ இளவரசனாக இருந்துகொண்டு, இராச்சியத்திலிருக்கும்மன்னவரைப் பாதுகாப்பாய். அரசர், பிராயஞ் சென்றவர்; ஆகையால் அவரை வருத்தாதே. நீ, அவர் கட்டளைப்படி நடந்துகொண்டு இளவரசபோகத்தைஅநுபவிப்பாய்" என்றுசொல்லுங்கள்" என்று கூறி மீண்டும் என்னைநோக்கிக் கண்ணீர் பெருக, "'புத்திரனிடத்தில் அதிக அன்புவைத்திருக்கும் என்தாயை உன்தாயான கைகேயியைப்போல் பார்த்துக்கொள்ளவேண்டும்' என்று பரதனிடஞ் சொல்லுங்கள்" என்று சொன்னார். மகாராஜரே இவ்வாறு சொல்லிக்கொண்டே செந்தாமரைக் கண்ணரான இராமர் மிகக் கண்ணீர்வடித்தார்.

லக்ஷ்மணரோ மிகச்சினந்தவராய்ப் பெருமூச்செறிந்துகொண்டு, சொல்லலானார்:—"அரசகுமாரரான இந்த இராமர், எந்த அபராதத்தினால் நாட்டிலிருந்து ஓட்டப்பட்டார்?

லக்ஷ்மணர் அனுப்பிய செய்தி.

அரசர், கைகேயியினுடைய பழிக்கத்தக்க கட்டளையால், நாங்கள் வருந்தும்படியான செய்யக்கூடாத தொழிலையே செய்தார். இராமரைக் காட்டிற்குத் துரத்தினது, கைகேயி லோபகுணத்தால் அரசரைக்கொண்டு செய்ததாகவாவது இருக்கட்டும்; அரசர் வரத்தைக் கொடுத்ததனாலாவது இருக்கட்டும்; எப்படி யிருந்தாலும் செய்யத்தகாததைச் செய்ததேயாம். அரசர், இராமரைக் காட்டுக்கு ஓட்டினது, நூல்முறையைப் பாராது, தெய்வத்தின் செயலால்தான் செய்தது; ஏனெனில், இராமரைக் கைவிடுவதில் காரணம் காணவில்லையன்றோ. அரசர் புத்தியின்

மையால் ஆலோசனையில்லாமல் இராமரைக் காட்டுக்கனுப்பினரென்ற தகாத செய்கையானது, அவருக்கே பழியை விளைக்கப் போகிறது. நானோ, மகாராஜரிடத்தில் தகப்பன் முறைமையைக் காணவில்லை; எனக்குச் சகோதரரும், தலைவரும், தகப்பனரும், சுற்றமும் இராகவரே. எல்லாருக்கும் அன்பராயும், எல்லோர்க்கும் நன்மைபுரிவதில் விருப்பமுள்ளவராயு மிருக்கும் இராகவரைக் கைவிட்டு, இப்படிச் செய்யத்தகாத தொழிலைச் செய்யுந் தங்கள்மீது எல்லா உலகமும் எவ்வாறு அன்புவைக்கும்? தாங்கள், அனைவர்களுடைய மனத்தையுங் கவர்ந்து தருமத்தைத் தவறுது நடத்திக்கொண்டுவந்த இராமரைக் கைவிட்டு, இவ்வாறு எல்லாரையும் பகைத்து, எவ்வாறு அரசராக இருப்பீர்கள்?" என்றார்.

மகாராஜரே, ஜாநகியும், துக்கத்தால் எளிமையையடைந்து பெருமூச்சுவிட்டுப் பேய்பிடித்தவள்போலத் திகைத்து அசையாது நின்றாள். ராஜபுத்திரியாயும் புகழ்படைத்தவளாய மிருக்கும் அவள் இதற்குமுன்னே துக்கத்தைப் பாராதவளாகையால், அத்துக்கத்தாற் புலம்பினவளாய் என்னிடத்தில் ஒன்றுஞ் சொல்லவில்லை. வாட்டமடைந்தமுகத்துடன், அவள், தனது கணவரையும் புறப்படும்என்னையும் பார்த்துக் கண்ணீர்விட்டாள். லக்ஷ்மணருடையகைகளால் பாதுகாக்கப்படுபவரும் காட்டில் வசிப்பவருமான இராமரும், அப்படியே கண்ணீர் வடித்தவராய்க் கைகளைக் கூப்பிக்கொண்டிருந்தார். அப்படியே துக்கத்தால் எளிமையையடைந்த சீதையும் அழுதுகொண்டு கூப்பினகையளாய் என்னையும் இரதத்தையும் பார்த்துக்கொண்டிருந்தாள்" என்றார்.

சீதையின் நிலைமை.

ஐம்பத்தொன்பதாஞ் சருக்கம்.

'இராமரைக் காட்டுக்கனுப்பினது அநியாயந் தான்' என்று சுமந்திரர் சொல்லுதல்.

அரசர், இவ்வாறு கூறியவரும் மந்திரிகளிற் சிறந்தவருமான சுமந்திரரை நோக்கி, "மற்றதையுஞ் சொல்லும்" என்று கூறினர். அரசருடைய அவ்வார்த்தையைக் கேட்டுச் சுமந்திரர் கண்ணீர்பெருக மிகத்தளர்ந்தவராய், மீண்டும் இராமரைப்பற்றின சங்கதிகளைப் பின் வருமாறு சொல்லலானர்:— "மகாராஜரே, வீரர்களான அவர்கள், ஜடை பூண்டு மரவுரியாடைகளைத் தரித்தவர்களாய், கங்கையைக் கடந்து, பிரயாகையை நோக்கிச் சென்றார்கள். செல்லுமளவில், முதலில் இலக்குமணர், இராகவரைப் பாதுகாத்துக்கொண்டு சென்றார்; அவர்பின்பு சீதாதேவியும், அவள்பின்பு இரகுகுலங்களிக்கவந்தவரான இராமருஞ் சென்றார்கள். நான், அவ்வாறு செல்லுமவர்களைப் பார்த்து, அப்போது பரவசனாய்த் திரும்பினேன். இராமர் காட்டை நோக்கிச் சென்றவளவில், திரும்பின என்னுடைய குதிரைகள் உஷ்ணமாகக் கண்ணீர்விட்டுக்கொண்டு வழியில் நடக்கவேயில்லை. அந்த இரண்டு அரசகுமாரர்களுக்கும் அஞ்சலிசெய்துவிட்டுத் தேரேறிப் புறப்பட்ட நான், அவர்களைப் பிரிந்ததனாலாகிய துக்கத்தைப் பொறுத்துக்கொண்டு, "என்னை மறுபடியும் இராமர் ஒருகால் அழைக்கக்கூடும்" என்ற ஆசையால் குகருடன் வெகுநாள் அங்கேயேயிருந்தேன். மகாராஜாவே, தங்களுடைய இராச்சியத்தில் மரங்களும், இராமருக்கு வந்த வருத்தத்தினால் மெலிவடைந்து பூக்கள் முளைகள் மொட்டுக்கள் இவைகளுடன் வாடின. நதிகளும், குளங்களும், பொய்கைகளும் வெப்பமடைந்த நீரையுடையனவாயின. பெருவனங்களும் உத்

(இராச்சியமுழுதும் இராமருக்காகத் துக்கித்தல்.)

தியானவனங்களும், உலர்ந்த இலைகளை யுடையன வாயின. ஜந்துக்கள், அசையவில்லை; துஷ்ட மிருகங்கள் தங்கள் உணவுக்காகவும் வெளிச்செல்லவில்லை. இராமர் சென்ற காடு, அவருடைய சோகத்தாற் பீடிக்கப்பட்ட.தாய்ச் சத்தமேயில்லாததாயிற்று. மனிதர்களுக்குத் தலைவரே, துக்கத்தால் தாமரையிலைகள் மறைந்திருக்கப்பெற்ற தாமரையோடைகள், தெளிவில்லாத நீரையுடையனவும், வெப்பமடைந்த தாமரைப் பூக்களையுடையனவும், மறைந்த மீன்களையும் நீர்ப்பறவைகளையு முடையனவு மாயின. நீர்ப்பூக்களும் நிலப்பூக்களும், இப்பொழுது தம்தம்வாசனையை யிழந்ததால் விளங்கவில்லை; பழங்களும் தங்களுடையமணத்தை யிழந்து, முன்போல விளங்கவில்லை. இந்நாட்டிலும் பூந்தோட்டங்கள், சூனியங்களாகக் காணப்படுகின்றன; மறைந்துள்ள பறவைகளையு முடையனவா யிருக்கின்றன. ஆணேறே, உத்தியானங்கள் பார்ப்பதற்கு அழகாகவே யில்லை. அயோத்தியிற் புகும் என்னை ஒருவருங் கொண்டாடவில்லை; நகரத்து மனிதர்கள், இராமரைக் காணாதவர்களாய், அடிக்கடி பெருமூச்சு எறிகிறார்கள். அரசரே, ராஜமார்க்கத்தை யடைந்த ஜனங்கள், இராமரை விட்டு வந்திருக்கும் இரதத்தைப் பார்த்து, துக்கத்தால் கண்ணீர் வடிகிற முகத்தை யுடையவர்களா யிருக்கிறார்கள். பெண்கள், மேன்மாளிகையிலிருந்தும் ஏழுநிலைமாடங்களிலிருந்தும் கோயில்களிலிருந்தும், திரும்பிவந்த இரதத்தைப் பார்த்து, இராமரைக் காணாததால் மெலிவடைந்தவர்களாய், ஹா ஹாகாரஞ் செய்கின்றார்கள்; நீண்டனவாயும் நின்மலங்களாயும் கண்ணீர்ததும்பப்பெற்றனவாயுமிருக்குங் கண்களால், ஸ்திரீகள், ஒருவரை யொருவர் அஸ்பஷ்டமாகப் பார்க்கின்றார்கள். பகைவர் நண்பர் நொதுமல் என முத்திறத்தார்க்கும், இராமருடைய பிரிவாலுண்டான துக்கத்தில் வேற்றுமையை நான் தெளியவில்லை. மகாராஜரே, மகிழ்ச்சியடையாத மனிதர்களை

யுடையதும், எளிமையை யடைந்த யானை குதிரை இவை களையுடையதும், எளிய குரலால் வாட்டமடைந்ததும், மூச்சுக்காற்றின் ஒலியை யுடையதும், ஆனந்த மற்றதுமான அயோத்தி, தனது மகனை யிழந்த கௌசலையைப்போல் எனக்குத் தோன்றுகின்றது" என்றார்.

இவ்வாறு சுமந்திரர் சொன்னதைக் கேட்டுத் தசரதர், கண்ணீரால் தழுதழுத்ததாயும் மிகவும்எளிமையை யுடையதாயு மிருக்கும் வாக்கினால், சுமந்திரரை நோக்கிப் பின்வருமாறு மொழியலானார்:— "குல முறையாக வந்த கொடியஎண்ணத்தை யுடைய கைகேயியால் ஏவப்பட்ட நான், ஆலோசனையில் வல்லவர்களான பெரியவர்களுடன் சேர்ந்து எண்ணினேனில்லை. சிநேகிதர், மந்திரிமார், நகரத்தவர் இவர்களுடன் சேர்ந்து ஆலோசியாமல், மோகபரவசனாய், ஸ்திரீக்காக, இத்தொழிலைச் சாகசமாய்ச் செய்துவிட்டேன். இவ்வாறன்றி, இவ்விசனம், இக்குலத்தை யழிப்பதற்காகக் காரணங்கூறமுடியாத விதியால் விளைந்ததே. சுமந்திரரே, நான் முன்பு உமக்கு உபகாரஞ் செய்திருந்தால் நீர் என்னை இப்பொழுதே இராமனிடத்திற் கொண்டுபோய் விடும்; பிராணன் என்னைவிட்டுப் போக விரும்புகின்றது. அப்படியில்லாவிடில், இந்த ஆபத்திலும் என்னுடைய கட்டளை செல்லுகின்றதேயானால், இராமனைத் திருப்பிக்கொண்டு வாரும்; இராமனையின்றி ஒரு முகூர்த்தமும் என்னால் பிழைத்திருக்க முடியாது. இல்லாவிடின், இராமன் வெகுதூரம் போயிருப்பானென்றால், என்னைச் சீக்கிரமாக இரதத்தின்மே லேற்றிக்கொண்டுபோய் இராமனுக்குக் காட்டும். குருக்கத்தியரும்பு போன்ற அழகான பற்களையுடையவனும் விற்பிடித்தவனும் லக்ஷ்மணனுக்குத் தமையனுமான இராமன் எங்கே? அந்த இராமன் சீதையுடனிருக்க, அவனை நான் நன்றாகக் காண்பேனானால்

இராமனிடத்துக் குத் தன்னை யழைத்துப்போகத்தசரதர் வேண்டுதல்.

பிழைத்திருப்பேன். சிவந்த கண்ணும் நீண்டகையுமுடைய வனும் காதுகளில் தொங்கும் அழகான குண்டலங்களை யணிந்தவனுமான இராமனைக் காணுவிடில், நான், யமன் வீட்டை அடைவேன். "இந்த நிலைமையை யடைந்த நான், இக்ஷ்வாகுவம்சத்தை மகிழ்விக்குமவனான இராமனை இங்குக் காணவில்லை" என்ற இத்துக்கத்தை விட அதிகமான துக்கம் எனக்கு எதுதான்? ஹா ராம! ஹா லக்ஷ்மண! ஹா பதிவிரதாதருமத்தைக் கைவிடாத சீதையே! துக்கத்தால் நாதனற்றவன்போல் மாளும் என்னை நீங்கள் அறிகின்றிலீர்கள்!!" எனப் பலவாறு பிரலாபித்தனர். துக்கம் நிரம்பிய மனத்தையுடைய அத் தசரதர், ஒருபொழுதும் கடக்கவரிய்தான சோக சாகரத்தில் மூழ்கினவராய்ப் பின்வருமாறு மறுபடியுஞ் சொல்லலானார்:— "இராமசோகமாகிய மிக்க விசாலத்தை யடைந்ததும், சீதையின் பிரிவாகிற கரையுடன் சேர்ந்ததும், பெருமூச்சுக்களாகிய பெரிய சுழல்களுடன் கூடியதும், கண்ணீராகிய நுரைப்புனலைப் பெற்றதும், கைகளாகிய துள்ளும் மீன்களையுடையதும், என் கதறலாகிய மிக்க ஒலியுடன் பொருந்தியதும், விரிந்த கூந்தலாகிய பாசிகளைப் பெற்றதும், கைகேயியாகிற வடவைத்தீயின் முகத்தை யுடையதும், என்னுடைய கண்ணீர்ப்பெருக்குக்குக் காரணமும், கூனியாகிற பெருமுதலையையுடையதும், கொடிய கைகேயியின் வரமாகிய ஜலத்தின் பொங்குதலை யுடையதுமான இராமனைப் பிரிதலாகிற பெரிய இந்தக்கடலில், கௌசலாய், இராமனில்லாம லிருக்கையில் விழுந்துவிட்டேன்! தேவி, உயிருடன் பிழைத்திருக்கும் என்னால் இக்கடல் கடக்கவரியதா யிருக்கின்றதே!! நான் "'லக்ஷ்மணனுடன் இராமனையுங் காணவேண்டும்' என்று விரும்பினவனாய், அவ்வாறு பெறவில்லை' என்ற இது, சுபமானதன்று" என்றாற்போலப் புலம்பிப் புகழ்பெற்ற அவ்வரசர் பரிதபித்துக்கொண்டு மூர்ச்சையடைந்து தமது

படுக்கையில் விழுந்தார். இவ்வண்ணம் இராமர்விஷய மாய்த் துக்கத்துடன் அதிகமாகப் புலம்பும் மன்னவர் மூர்ச்சை யடைந்தவளவில், இராமனுடைய தாயான தேவி, அவ்வார்த்தையைக்கேட்டு மீண்டும் அச்ச மடைந்தாள்.

அறுபதாஞ் சருக்கம்.

சுமந்திரர் கோசலையைத் தேற்றுதல்.

கௌசல்யை இராமரிடம் போய்ச் சேர வேண்டுதல்.

அதன்பிறகு, பேய்பிடித்தவள்போல மிகப் புரளுபவளும் உயிர்போனவள் போன்றவளுமான கௌசல்யை, பூமியில் விழுந்து சுமந்திரரைப் பார்த்து, "எங்கு இராமன் இருக்கிறானோ, எங்குச் சீதை இருக்கிறாளோ, எங்கு லக்ஷ்மணன் இருக்கிறானோ, அங்கு, என்னை யழைத்துச் செல்லும். நான், அவர்களைவிட்டு இங்கு நொடிப்பொழுதும் பிழைத்திருக்கப் பொறேன். இரதத்தைச் சீக்கிரந் திருப்பும்; என்னையும் தண்டகைக்கு அழைத்துச் செல்லும். நான் அங்குப் போகாவிடில், யமன்மனையைச் சேர்வேன்" என்றாள். இப்படி அவள் சொன்னதைக் கேட்டுச் சுமந்திரர், கௌசல்யையைப் பார்த்து, கண்ணீர் பெருகுவதால் தடைப்பட்டதாயும் தழுதழுத்ததாயுமுள்ள வாக்கினால், அஞ்சலிபந்தம்பண்ணிப் பின்வருமாறு சொல்லலுற்றார் :—

சுமந்திரர் தேற்றுதல்.

"இராமர் துயரத்தை லக்ஷயம்பண்ணாமல் தள்ளிவிட்டு வனத்தில் வசிப்பதால், தாங்கள், சோகத்தையும், "இராமருக்கு என் நேருமோ?" என்று எண்ணிக் குழப்பத்தையும், அறிவிழத்தலையும், சோகத்தினாலுண்டாகுஞ் சம்பிர

மத்தையும் அகற்றுங்கள். தருமத்தை யறிந்தவரும் ஐம்புலனை வென்றவருமான லக்ஷ்மணரும், காட்டில் இராமருடைய பாதங்களில் பணிவிடைசெய்பவராய் மறுமையைச் சாதிக்கிறார். சீதை, ஜனங்களற்ற காட்டிலும் வீட்டிலிருப்பதுபோல் வாசத்தை யடைந்து, இராமரிடத்தில் உள்ளத்தைச்செலுத்தி, பயமற்றவளாய் மகிழ்ச்சி யடைகின்றாள். வனவாசத்தால் தோன்றிய எளிமை, இவளிடத்திற் கொஞ்சமேனும் நுண்ணியதாகவுங் காணப்படவில்லை. சீதை, காட்டில்வசிப்பதாலுண்டாகும் வருத்தத்திற் பழகினவள்போல் தோன்றுகிறாள். சீதை அயோத்திமாநகரத்தின் உத்தியானவனத்தையடைந்து எவ்வாறு மகிழ்ந்தாளோ, அவ்வாறே ஜனங்களற்ற காட்டிலும் மகிழ்கிறாள். பூர்ண சந்திரனையொத்த முகத்தையுடையவளும் பதிவிரதையுமான சீதை, இராமரிடத்தில் மனத்தை வைத்தவளாய், ஜனங்களற்ற காட்டிலும் பெண்குழந்தைபோல் விளையாடுகிறாள். அவளுள்ளமும் இராமரை யடைந்திருக்கின்றது; அவளுடைய பிராணனும் அவருடைய அதீனத்திலுள்ளது; ஆகையால் அவளுக்கு வனமும் அயோத்திமாநகரேயாம். இராமரின்றியிருக்கும் அயோத்தியும் காடேயாம். சீதை, நகரங்களையும் கிராமங்களையும் நதிகளின் ஓட்டத்தையும் பலவகையானமரங்களையும் பார்த்து, அவைகளைப்பற்றி இராமரையாவது லக்ஷ்மணரையாவது நோக்கி வினவுகின்றாள்; அவர்களிடத்திலிருந்து அவற்றை அறிந்துகொள்ளுகின்றாள். அவள் அயோத்தியின் ஒரு குரோசதூரத்திலிருக்கும் பூந்தோட்டத்தி லிருப்பதுபோல் இருக்கிறாள். இவளுடைய சம்பந்தமாக இவ்வளவுதான் நினைவுக்கு வருகிறது; கைகேயியைப்பற்றிச் சொன்ன சொல் இப்பொழுது எனக்குத் தோன்றவில்லை" என்றார். அஜாக்கிரதையால் முதலில் வாயில்வந்த அக் கடைசியிற்கூறிய வாக்கியத்தை யடக்கிச்

மதுரமாகப் பேசலுற்ருர் :—"சந்திரகாந்திக்கு ஒப்பான சீதையின் காந்தி, வழிநடப்பதா லாவது, காற்றின் கொடுமையா லாவது, கொடிய மிருகங்களைக் காணுதலா லுண்டாகும் மனக்கலக்கத்தா லாவது, வெயிலா லாவது வேறுபடவில்லை. நூற்றிதழ்த் தாமரையையும், பூர்ணசந் திரனையு மொத்ததான இனியபேச்சையுடைய அவள் முகம், தனது இயற்கையான அழகைக் கைவிடவேயில்லை. செம்பஞ்சுக்குழம்பு ஊட்டப்பெறுத அவளுடைய பாதங் கள், செம்பஞ்சு ஊட்டப்பெற்றனபோற் செந்நிறத்தை யும் தாமரையையொத்த காந்தியையு முடையனவாயி ருக்கின்றன. சீதை, இராமரிடத்து அன்பினுல் சிலம்பை யணியாதிருந்தும், சிலம்பை அணிந்ததனுலுண்டான விலாஸத்தை யுடையவள்போல் அழகாகச் செல்லுகின் ருள். காட்டில் வசிப்பவளும் இராமருடையகைகளை யடைந்தவளுமான அவள், யானையையாவது சிங்கத் தையாவது புலியையாவது பார்த்து, பயத்தை ஏறிட்டுக் கொள்ளுகிறது மில்லை. அவர்களைப் பற்றியும் நம்மைப் பற்றியும் அரசரைப்பற்றியும் துக்கிக்க வேண்டியதில்லை; 'பித்ருவசன பரிபாலநம்' என்ற இச்சரிதம் உலகத்தில் சாசுவதமாக நிலைநிற்கப் போகின்றதன்ருே! அவர்கள், துக்கத்தை ஒரு பொருளாக எண்ணுமல் தள்ளிவிட்டு, மகிழ்ச்சியையடைந்த மனமுடையவர்களாய், மகாரிஷி கள் நடந்த நன்னெறியில் உறுதியுட னிருந்துகொண்டு, காட்டில் காய் கிழங்குகளைப் புசித்து மகிழ்ந்தவர்களாய், தந்தையினுடைய அழகிய கீர்த்தியைப் பரிபாலிப்பார் கள்" என்ருர். புத்திரசோகத்தால் மெலிவடைந்த கௌசலாதேவி, இவ்வாறு மிகப்பொருத்தமாகக் கூறுஞ் சுமந்திரரால் தேற்றப்பட்டாலும், "இஷ்டனே, புதல் வனே, இராகவனே" என்று கூக்குரலிடுவதைத் தவிர வில்லை.